# காதல் 'செக்'

எண்டமூரி வீரேந்திரநாத்

தமிழில்: கௌரி கிருபானந்தன்



அல்லயன்ஸ்

# காதல் செக்

## எண்டமூரி வீரேந்திரநாத்

*தமிழில்*

கௌரி கிருபாநந்தன்

**அல்லயன்ஸ்**

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)

உரிமைப் பதிப்பு

முதற் பதிப்பு : 2002
இரண்டாம் பதிப்பு : 2010
மூன்றாம் பதிப்பு : 2014

© ஆசிரியருக்கு

**விலை : ரூ.135.00**

அல்லயன்ஸ் கம்பெனி
ப.எண். 244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
தபால்பெட்டி எண்: 617
மயிலாப்பூர், சென்னை - 600 004.
தொலைபேசி : 24641314
இணைய தளம் : www.alliancebook.com
தொலை நகல் : books@alliancebook.com

Typesetting Image DTP, Chennai - 17
Printed by Sree Durga Printers, Chennai - 117

# முன்னுரை

திரு.எண்டமூரி வீரேந்திரநாத் அவர்கள் எழுதிய "வென்னெல்லோ ஆடபில்லா" என்ற புதினத்தைத் தமிழாக்கம் செய்து காதல் 'செக்' ஆக வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த நாவல் ஏறத்தாழ இருபது வருடங்களுக்கு முன் எழுதப்பட்டது என்பதால் அந்தக் காலத்தில் தொலைபேசி இலாகா இயங்கிய விதம், தற்போது இன்டர்நெட் யுகத்தில் வாழும் வாசகர்களுக்கு வித்தியா சமாகத் தோன்றலாம்.

உலகில் என்றும் அழியாத உணர்வு ஒன்று இருக்கிறதென்றால் அது காதல் தான்.

கடைசி வரையில் தான் காதலித்த பெண்ணை சந்திக்காமலே அவளை தன் நினைவுகளில் போற்றும் கதாநாயகன் ரேவந்த்...

காதலியின் தொலைபேசி எண்ணைக் கண்டு பிடிக்க அவன் படும்பாடு ஆக்ஸ்போர்டில் படித்த பெண்ணுக்கும் சதுரங்க சாம்பியனுக்கும் இடையே நிகழ்ந்த வினோதமான போராட்டம்.

பந்தயத்தில் வெற்றி பெற்றது அவனா இல்லை அவளா? கடைசி வரையில் விடுபடாத புதிர்.

மொழி மாற்றத்திற்கு அனுமதியளித்த திரு.எண்டமூரி வீரேந்திரநாத் அவர்களுக்கும், புத்தகமாக வெளியிட்ட அல்லயன்ஸ் நிறுவனத் தாருக்கும் எனது நன்றி.

கௌரி கிருபாநந்தன்

# பதிப்புரை

புத்தகங்களை படிப்பதே பொழுது போக்குவதற்கு மட்டும்தான் என்று நினைத்தால் அது அறியாமையைப் புலப்படுத்தும். "10 பைசா கொடுத்து வேர்கடலை வாங்கினால் கூட, சாப்பிட்ட பிறகு அந்தக் காகிதத்தைப் பிரித்து பார்க்க வேண்டும்" என்று கவிஞர் கண்ணதாசன் கூறுவாராம். ஏனென்றால் அதில் கூட ஏதாவது நல்ல செய்தி கண்ணில்படும் என்பதற்காக. அதே போல நாம் புத்தகங்களை படிக்கப் படிக்க நமது மேதா விலாசம் வளர வேண்டும். அப்படிப்பட்ட நூல்களை நாம் தேடிப் போக வேண்டும். சில சமயம் உங்களைத் தேடியும் அவை வரும்.

எண்டமூரி வீரேந்திரநாத் எழுதிய நூல்களும் அப்படிப்பட்டது தான். தன்னுடைய ஒவ்வொரு நாவலிலும் ஏதாவது ஒரு கருப் பொருளை எடுத்து அதை விளக்கும் போது வாசகர்களுக்கு வேண்டிய அளவு தகவல்களைத் தந்து விடுவார். இது இவர் சமூகத்திற்குச் செய்யும் ஒரு தொண்டு என்றுதான் நாம் எண்ண வேண்டும்.

இந்த நாவலில் கதாநாயகன் ரேவந்த் ஒரு சதுரங்க ஆட்டக்காரனாகவும், கதாநாயகி ரம்யா ஒரு புத்திசாலியாகவும் பாத்திரங்களைப் படைத்து அவர்கள் மூலம் சில அருமையான புத்திசாலித்தனமான விஷயங்களை எழுதியுள்ளார். இதுபோல இன்னும் பல நூல்களை எண்டமூரி வீரேந்திரநாத் எழுதி திருமதி கௌரி கிருபாநந்தன் மொழிபெயர்க்க வேண்டும் என்பது நமது விருப்பம்.

—பதிப்பகத்தார்.

# 1

# காதல் 'செக்'

*உஸ்பெகிஸ்தான்.....*

*நேரம் மாலை ஐந்தரை மணி.*

*விசாலமான அறை. அவ்வறையில் மனிதர்கள் இருப்பது போன்ற சத்தமே இருக்கவில்லை. ஆனால் நூற்றுக் கணக்கான மக்கள் வளைவாக அமைக்கப்பட்ட காலரி படிகளின் மீது அமர்ந்துகொண்டு மூச்சை அடக்கி பார்த்துக் கொண்டிருந்தார்கள். இரண்டு டி.வி. கேமிராக்கள் நிசப்தமாக இயங்கிக் கொண்டிருந்தன. சிலர் தொலைவில் நின்றபடி லென்ஸ் உதவியோடு புகைப்படங்களை எடுத்துக் கொண்டிருந்தார்கள்.*

*போலன்ஸ்கீ சற்று முன்னால் குனிந்து எதிரே இருந்த மேஜையை கவனமாக பார்த்துக் கொண்டிருந்தான். மேஜையின் மீது வெள்ளை கறுப்பு வண்ணத்தில் சதுரங்க கட்டங்கள் மனித வாழ்க்கையின் வெற்றி தோல்விகளைப் போல் பிணைந்திருந்தன.*

*காயை நகர்த்த வேண்டிய முறை போலன்ஸ்கீயுடையது. அவனுடைய மந்திரி எதிரிகளுக்கு நடுவில் எட்டுப் பக்கமும் சிறைப்பட்டிருந்தான். மோவாயைத் தடவிக் கொண்டே யோசனையில் ஆழ்ந்திருந்தான்.*

*சதுரங்க மேஜையின் மீது காய்கள் இருந்த நிலையை உயரே இருந்த எலக்ட்ரானிக் பலகை எடுத்துக்காட்டிக்*

கொண்டிருந்தது. அதை ஆதாரமாக வைத்துக்கொண்டு பார்வையாளர்களில் சிலர் தங்களுக்கு முன்னால் இருந்த பலகையின் மீது அதே ஆட்டத்தை ஆடியபடி குறிப்பெடுத்துக் கொண்டிருந்தார்கள். இத்தனையும் மிக நிசப்தமாக யாருடைய கவனத்திற்கும் இடையூறு ஏற்படாத வகையில் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

போலன்ஸ்கீ மந்திரியை பின்னால் எடுத்து வந்து ராஜாவின் பக்கத்தில் நிறுத்திவிட்டு எதிராளியைப் பார்த்து சிரித்தான்.

ஏஷியன் சாம்பியன்ஷிப் போட்டி அது. அதுதான் இறுதி ஆட்டம்.

ரஷியர்கள் சதுரங்க ஆட்டத்தில் கை தேர்ந்தவர்கள். சதுரங்க ஆட்டம் மூளையின் திறமையை விரிவடையச் செய்ய உதவும் என்பதை உணர்ந்து அதனை பாடத் திட்டத்தில் சேர்த்திருந்தார்கள். பாபிஃபிஷர் போன்ற ஏதோ ஓரிருவரைத் தவிர சதுரங்கத்தில் ரஷியர்களைத் தோற்கடித்து உலக சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியவர்கள் யாருமே கிடையாது. அதிலும் கடந்த பத்தாண்டுகளாக போலன்ஸ்கீ முடிசூடா மன்னனாக ஆட்சி செலுத்தி வந்தான். இந்தச் சின்ன ஏஷியன் சாம்பியன்ஷிப் போட்டி அவனுக்கு ஒரு பொருட்டல்ல.

தன்னுடைய மந்திரியை எதிரியின் காய்களிடமிருந்து மீட்டுக்கொண்டதோடு அல்லாமல் "நைட்" மூலம் "செக்" சொன்னதில் போலன்ஸ்கீயின் புத்தி சாதுரியம் வெளிப்பட்டது. திடீரென்று இப்பொழுது இந்திய ஆட்டக்காரன் மீது 'பிரஷர்' அதிகமாயிற்று.

ஆட்டத்தைப் பார்க்க வந்த ரஷியர்கள் குறுகுறுவென்று நகைத்துக் கொண்டிருந்தார்கள். இந்திய ஆட்டக்காரன் என்னதான் செய்து விடப் போகிறான் என்று ஏளனம் கலந்த பார்வையுடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதிலும் பெண்களைப் பற்றி சொல்லவே வேண்டியதில்லை.

கம்பளிக் கோட்டுகளை அணிந்து கொண்டு சிரிப்புக் கலந்த பார்வையுடன் நோக்கிக் கொண்டிருந்தார்கள்.

இந்திய தூதர் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு தன்னுடைய நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரன் என்ன செய்யப் போகிறானோ என்று பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்கு சதுரங்க ஆட்டத்தில் ஈடுபாடு உண்டு. இந்தப் போட்டியின் 'சீஃப் கெஸ்ட்' அவர்தான். வெற்றி பெற்றவருக்கு பரிசளிக்க வந்திருந்தவரே அந்த விளையாட்டு வீரர்களை விட அதிக பதட்டத்தில் இருந்தார்.

வெளியே பனி பெய்து கொண்டிருந்தது. ஜன்னல் வழியாய் வெண் பஞ்சுத் துகள்களாக காட்சியளித்தது.

அவ்வளவு குளிரிலும் ரேவந்த் நெற்றியில் வியர்வை அரும்பியது. அவன் மூளையில் யோசனைகள் வேகமாய் உருண்டோடிக் கொண்டிருந்தன. ஒரு விளையாட்டு வீரன் என்ற முறையில் இது தனக்கு உயிர்ப் போராட்டம் என்று அவனுக்குத் தெரியும். நினைவு தெரிந்த நாள் முதல் தான் ஆடிய ஆட்டங்கள், படித்த புத்தகங்கள், எடுத்துக் கொண்ட குறிப்புகள் கண்முன்னால் தோன்றின. நடுநடுவில் கைகடியாரத்தை பார்த்துக் கொண்டிருந்தான்.

நேரம் 'ரன்அவுட்' ஆகிக் கொண்டிருந்தது. சதுரங்க ஆட்டத்தில் காய்களை நகர்த்துவதற்கு ஆட்டக்காரன் அதிக நேரம் எடுத்துக் கொள்ளக் கூடாது. ஒரு மணி நேரத்திற்குள் பதினாறு முறை காய்களை நகர்த்தியாக வேண்டும்.

ரேவந்த், போலன்ஸ்கீக்கு இடையில் இருந்த மேஜையின் மீது இரண்டு ஸ்டாப் கடியாரங்கள் இருந்தன. காயை நகர்த்தியதும் விளையாட்டு வீரன் தன்னுடைய கடியாரத்தை நிறுத்தி விடவேண்டும். உடனே அடுத்த கடியாரம் தானாக இயங்கத் தொடங்கிவிடும். அடுத்த ஆட்டக்காரன் காயை நகர்த்தி அதை நிறுத்தும் வரையில் இயங்கிக்கொண்டே இருக்கும். காயை நகர்த்திய பிறகு கடியாரத்தை நிறுத்த மறந்துபோய் தோல்வி அடைந்தவர்களும் உண்டு.

ஒவ்வொருவரின் கடியாரமும் ஒரு மணி நேரம் ஆனதைக் காட்டி முடிப்பதற்குள் பதினாறுமுறை காய்களை நகர்த்தவில்லை என்றால் தோற்றுவிட்டது போல்தான். நேரத்திற்குள் விளையாட்டை முடிக்க முடியாமல் அந்த பதட்டத்தில் தவறாக காய்களை நகர்த்தி தோற்றுப் போனவர்களும் இருக்கிறார்கள்.

ரேவந்த் இப்பொழுது அதே நிலையில்தான் இருந்தான். இன்னும் ஐந்து நிமிடங்களுக்குள் நான்கு முறை காய்களை நகர்த்தியாக வேண்டும்.

கடியாரத்தில் முள் வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. மக்கள் கைத்தட்டுவதற்காக காத்திருந்தார்கள். தோற்றுப் போகும் நிலையில் இருந்த ரேவந்தின் முக பாவங்களை படம் பிடிக்க டி.வி.கேமிராமேன் லென்ஸை ஜூம் செய்தவாறே சற்று முன்னால் வந்தான்.

போலன்ஸ்கீ நாற்காலியில் சாய்ந்து மேற்கூரையை பார்த்தவாறு ரிலாக்ஸ்ட் ஆக அமர்ந்திருந்தான். 'இனி உன் கதை முடிந்துவிட்டது' என்று மனரீதியில் எதிராளியை தளரச் செய்யும் முயற்சி அது. போலன்ஸ்கீக்கு இன்னும் பதினைந்து நிமிடங்கள் இருந்தன. எவ்வளவு நிதானமாக ஆடினாலும் பரவாயில்லை. ஆனால் ரேவந்திற்கு அப்படி இல்லை. ஐந்து நிமிடங்களில்...அதற்குள் அரை நிமிடம் கழிந்து விட்டது.

ரேவந்த் ஆள் காட்டி விரலால் காயை நகர்த்தினான். போலன்ஸ்கீ சட்டென்று "நைட்டை" முன்னால் கொண்டு வந்தான்.

ரேவந்த் சிப்பாயை நகர்த்தினான். அவன் ரொம்ப பதட்டத்தில் இருப்பது பார்வையாளர்களுக்கு புரிந்துவிட்டது. இன்னும் இரண்டு நிமிடங்கள்தான் இருந்தன.

போலன்ஸ்கீ அனாயாசமாக காயை நகர்த்தி ரேவந்தின் சிப்பாயை பலி வாங்கினான்.

அதற்காகவே காத்திருந்தது போல் ரேவந்த் மூலையிலிருந்த தன்னுடைய யானையை நடுவில் கொண்டு வந்து "செக்" என்றான். ஒரு நிமிடம் வரையில் போலன்கீக்கும் சரி, பார்வையாளர்களுக்கும் சரி, நடந்தது என்னவென்று புரியவில்லை. கண்மூடி திறப்பதற்குள் நடந்துவிட்டாற்போலிருந்தது. அத்தனை பெரிய ஹாலில் எல்லோரும் வியப்புடன், குழப்பத்துடன் நிசப்தமாக இருந்து விட்டார்கள். ஒரு நிமிடத்திற்குப் பிறகு மடைதிறந்த வெள்ளம் போல் பார்வையாளர்கள் கைகளை தட்டிக் கொண்டே முன்னோக்கி ஓடி வந்தார்கள்.

போலன்ஸ்கீ இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. பதட்டமாக இருப்பது போல் ரேவந்த் காட்டிக் கொண்டதில் வெற்றி நிச்சயம் என்ற மமதையில் தான் அலட்சியமாக காயை நகர்த்தி தோல்வியைத் தழுவியது புரிந்தது. தலையை உயர்த்தி ரேவந்த் பக்கம் பார்த்தான்.

மக்கள் கும்பலாக ரேவந்தைச் சூழ்ந்து விட்டதில் மூச்சுத் திணறிக் கொண்டிருந்தான். இளம் பெண்கள் மேலே விழாத குறையாக ஆட்டோ கிராப் வாங்கிக் கொண்டிருந்தார்கள். நிருபர்கள் கேள்விக்கணைகளை தொடுத்துக் கொண்டிருந் தார்கள். கேமராக்கள் விடாமல் மின்னிக் கொண்டிருந்தன. டி.வி. கேமராமேன் விதவிதமான கோணங்களில் படம்பிடிக்க அங்கும் இங்கும் ஓடிக் கொண்டிருந்தான். இந்திய நாட்டு தூதர் தன்னுடைய ஹோதாவையும் மறந்து ரேவந்தை காற்றில் உயரே தூக்கிக் கொண்டு தன்னுடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

சாதித்தது குறைந்த வெற்றி ஒன்றும் இல்லை. தோற்கடித்தது போலன்ஸ்கீயை. பத்து வருடங்களாய் முடிசூடா மன்னனாக பவனிவந்த உலகப் புகழ்பெற்ற விளையாட்டு வீரனை.

உலக சாம்பியன் அனாடலிகார்போவ், ஸ்வீடிஷ் கிராண்ட் மாஸ்டர் ஆண்டர்ஸனை போன்றவர்கள் கூட

போலன்ஸ்கீயுடன் விளையாடுவதற்கு சற்று தயங்குவார்கள். அப்படிப்பட்டவனை இருபத்தி ஐந்து வயது இளைஞன் ஒருவன் கடைசி நிமிடத்தில் தோல்வியுறச் செய்தான் என்றால் அது சாதாரண விஷயம் இல்லை.

அதற்குப் பின்னால் பல வருடங்களின் கடின உழைப்பும், பிடிவாதமும் இருந்தால் தவிர இது சாத்தியமில்லை. ஏதோ கடைசியில் எதிராளியை திணறச் செய்து வெற்றி பெறும் சமாசாரம் இல்லை. தன்னுடைய ஆட்சிமுடிந்து விட்டதென்றும் தன் இடத்தை பிடித்துக் கொள்ள அடுத்த தலைமுறை வந்து விட்டதென்று போலன்ஸ்கீ உணர்ந்து கொண்டு விட்டான்.

இளம் பெண் ஒருத்தி ரேவந்திடமிருந்து உள்ளங்கையில் ஆட்டோ கிராஃப் பெற்றுக் கொண்டிருந்தாள். பன்னிரெண்டு வயது பையன் ஒருவன் ரேவந்தை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான். கிழவர் ஒருவர் ரேவந்த் தோளில் அன்புடன் தட்டிக் கொடுத்தார்.

எல்லோருடன் சேர்ந்து ரேவந்த் அறையை விட்டு வெளியேறினான். தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பு செய்ததால் செய்தி வெளியில் பரவிவிட்டது. மக்கள் கும்பலாக சேரத் தொடங்கினார்கள். சதுரங்க விளையாட்டில் ரஷியர்களுக்கு இருக்கும் ஈடுபாடு வேறு யாருக்கும் கிடையாது.

எல்லோரும் சூழ்ந்து கொண்டதில் ரேவந்திற்கு வியர்த்துக் கொட்டியது. சட்டைப் பையில் இருந்த கைக்குட்டையை காணவில்லை. விளையாடிய இடத்தில் கைத் தவறி கீழே விழுந்திருக்கக்கூடும்.

அதற்குள் ஏதோ அறிவிப்பு கேட்கத் தொடங்கியது. மக்கள் கவனம் அந்தப் பக்கம் திரும்பியது. ரேவந்த் கும்பலுக்கு நடுவில் எப்படியோ வழியை ஏற்படுத்திக் கொண்டு மறுபடியும் ஹாலை நோக்கிப் போனான்.

வராண்டாவின் வழியாக நடந்து வாசலைத் தாண்டி ஹாலுக்குள் நுழையப் போனவன் கற்சிலையாக நின்று விட்டான். விசாலமான ஹால் ஆளரவமற்று இருந்தது. ஹாலுக்கு நடுவில் சதுரங்க மேஜை அப்படியே இருந்தது. மேஜைக்கு எதிரே இருந்த நாற்காலியில் போலன்ஸ்கீ சற்று முன்னால் குனிந்த நிலையில் முகத்தை இரு கைகளிலும் புதைத்துக் கொண்டு தனிமையில் அழுது கொண்டிருந் தான்.

ரேவந்த சலனமற்று அவனையே பார்த்துக் கொண்டு நின்று விட்டான்.

உலகப் புகழ் பெற்ற ஒரு விளையாட்டு வீரன் வெளியேறுவதை அவனுடைய இடத்தை கைப்பற்றிய மற்றொரு விளையாட்டு வீரன் வேதனையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

ரேவந்த்க்கு "ஸ்டீக்" என்ற கதை நினைவுக்கு வந்தது. இன்னொரு பத்து வருடங்கள் வரையில் தான் ஆட்சி செலுத்துவானாய் இருக்கும். பிறகு இதே போல் தான் வேதனையில் ஆழ்ந்து போனவனாய் வெளியேறும்போது மற்றொரு இளைஞன் தன்னை இதே போல் இரக்கத்துடன் நோக்குவான்.

ரேவந்த் சத்தம் போடாமல் அங்கிருந்து வெளியேறி விட்டான். வரும் போது நினைத்துக் கொண்டான்.

"வெற்றியே வெற்றியே!
வரும் போது சிகரத்தின் உச்சியில்
அமர வைப்பாய்...
போகும் போது பாதாளத்தில்
தள்ளிவிட்டுச் செல்வாய்
இது உனக்கு நியாயமா?"

# 2

"கங்கிராட்சுலேஷன்ஸ்."

"தாங்க்யூ."

"ஹாய் ரேவந்த்! வாழ்த்துக்கள்."

"நன்றி."

"கங்கிராட்ஸ் மிஸ்டர் ரேவந்த்".

"தாங்க்யூ சார்."

ரேவந்த் தலையைக் குனிந்து படிகளை ஏறிக்கொண்டே வாழ்த்துக்களை தெரிவித்தவர்களுக்கு பதில் சொல்லிக் கொண்டிருந்தான்.

பெனின்சுலா பிராடக்ட்ஸ் அலுவலகம் நாலாவது மாடியில் இருந்தது. அதில்தான் அவன் டெபுடி சீஃப் எக்ஸ்க்யூடிவ் ஆக பணி புரிந்து வருகிறான். அவன் தன்னுடைய அறைக்கு வந்த போது மேனேஜிங் டைரக்டர் அழைத்ததாகச் செய்தி வந்தது. கிளம்பிப் போனான்.

"கங்கிராட்சுலேஷன்ஸ். காலையில் பேப்பரில் பார்த்தேன்." சொன்னார் அவர்.

ரேவந்த் நன்றியைத் தெரிவித்தான்.

"உன்னால் கம்பெனிக்கு நல்ல விளம்பரம் கிடைக்கப் போகிறது" என்றார்.

ரேவந்த் பதில் சொல்லவில்லை. மிக உயர்ந்த அளவில் நடந்த போட்டியில் தன் கம்பெனியில் பணிபுரியும் நபர் சாதித்த வெற்றியைக் கூட வியாபார நோக்குடன் பார்க்கும் அவருடைய திறமையை மனதிலேயே பர்ராட்டினான். அவர்

மட்டுமே வியாபாரத்தை விட்டு விட்டு சதுரங்க விளையாட்டில் ஈடுபட்டிருந்தால் எப்போதோ உலக சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியிருப்பார்.

அவரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு கிளம்பிய ரேவந்த் நேராக ஜெனரல் மேனேஜரிடம் சென்றான். அவரிடம் ரேவந்துக்கு உரிமை அதிகம். எப்போதும் பரபரப்புடன் இருப்பது அவருடைய சுபாவம். வேலையைத் தவிர வேறு எந்த விஷயமும் அவருக்குத் தெரியாது.

"வாப்பா வா. எதிலேயோ பரிசு கிடைத்ததாக கேள்விப் பட்டேன். எதில் கிடைத்தது? காரம் போர்டா?" பைலை பார்த்துக் கொண்டே கேட்டார்.

"இல்லை சார் — சதுரங்கம்."

"ஓஹோ. வெரிகுட். உன் பெயர் பெரிய எழுத்துக்களில் போட்டிருந்தார்களே. டீம் கேப்டன் நீதானா?"

"இல்லை சார். சதுரங்கங்களில் இரண்டு பேர் மட்டுமே விளையாடுவார்கள்."

"அப்படியா. யாருடன் ஆடி ஜெயித்தாய்?"

"போலன்ஸ்கீ என்ற உலக சாம்பியன்." ரேவந்தின் குரலில் பெருமை கலந்திருந்தது.

"அவன் இங்கே எதற்காக வந்தான்?"

"அவன் வரவில்லை சார். நான் தான் போனேன்."

"எங்கே?"

"ரஷ்யாவுக்கு".

"வ்வாட்! எப்போ போனாய்?"

"நீங்கதானே சார் எனக்கு லீவ் கொடுத்தீங்க போனவாரம்."

"ஆமாம். ஆமாம். எதற்காக ரஷ்யாவுக்குப் போயிருந் தாய்?"

"சதுரங்கம் டோர்னமென்டில் கலந்து கொள்ள."

"டோர்னமென்டா! நல்லது, நல்லது. உங்க டீம் வெற்றி பெற்று விட்டது இல்லையா. வெரிகுட்."

ரேவந்திற்கு தன் மீதே இரக்கம் ஏற்பட்டது. இனி அவருடன் பேசி பிரயோஜனம் இல்லையென்று நினைத்தவனாய் எழுந்து கொண்டான். வெளியில் வரும் போது "ஹாலில் நிறையபேர் இருக்கிறார்களே? என்ன விஷயம்?" என்று கேட்டார்.

"இன்னிக்கு இண்டர்வ்யூ இருக்கு சார்." ரேவந்த் நினைவுப்படுத்தினான்.

"அடடா...அந்த விஷயத்தையே மறந்து விட்டேன். பதினோரு மணிக்கு மீட்டிங் வேறு இருக்கு. என்ன செய்வது?" அவர் தனக்குள் சொல்லிக் கொள்வது போல் சொன்னார்.

ரேவந்த் பதில் பேசாமல் வெளியே வந்து விட்டான். அவன் தன்னுடைய அறைக்கு வந்தபோது அங்கே அமர்ந்திருந்த ஜேம்ஸ் அவனைப் பார்த்து முறுவலித்தான். அவர்களுக்கு இடையே சாதாரணமாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளும் நட்பை விட அதிகமான நெருக்கம் இருந்தது. ஜேம்ஸ் பெனின்சுலா பிராடக்ட் கம்பெனியில் மார்கெடிங் மேனேஜராக இருந்தான்.

ஜேம்ஸ் ஐந்தரை அடி உயரம் இருந்தான். உயரத்திற்கு ஏற்ற பருமன். நிறம் கருப்புதான் என்றாலும் களையான முகம். அலட்சியமான பார்வை. அவனுக்கு பத்து வயது இருக்கும் போது தாய் யாருடனோ ஓடிப் போய் விட்டதால் அந்த அலட்சியப் போக்கு தோன்றியது. குடிகார தந்தை

மகனைப் பற்றி அக்கரை எடுத்துக் கொள்ளாததால் அது மேலும் வளர்ந்து விட்டது. பெண்கள் என்றால் அவனுக்கு மதிப்பும் மரியாதையும் கிடையாது. அது அவனுடைய தவறு இல்லை. இது நாள் வரையில் யாருமே அவன் மனதைத் தொட்டது கிடையாது. பற்றற்றத்தன்மை அவன் மனதிலிருந்த மென்மையான உணர்வுகளை அழித்து விட்டது. குடிக்கத் தொடங்கினால் இரவு முழுதும் குடித்துக் கொண்டே இருப்பான். இல்லையா நான்கு மாதங்கள் வரை தொடவே மாட்டான்.

சிலர் நல்லவர்களாக இல்லாவிட்டாலும் மற்றவர்கள் முன்னால் ரொம்ப நல்லவர்களைப் போல் நடிக்க முயற்சி செய்வார்கள். அதற்கு நேர் மாறாக ஜேம்ஸ் வேலை மெனக்கெட்டு கெட்டவனாக தன்னை பறைச்சாற்றிக் கொள்வான். அதிலும் பெண்களிடம் இந்த பட்டத்தை எளிதாக நிலை நாட்டிவிட்டான். ஆனால் மனதை ஊடுருவி பார்க்க முடிந்தால் ரொம்ப நல்லவன். அவ்வளவு பொறுமை யாருக்கு இருக்கிறது? வாழ்க்கையை ஒரு பார்வையாளனாக அனுபவித்து வந்ததால் அலட்சியம் கலந்த ஏளனம் அவன் சுபாவத்தில் பிரதிபலிக்கும். சில சமயம் கேலிச் சித்திரங்களை வரைந்து தன் உணர்வுகளை வெளிப்படுத்துவான். ஒழுங்காக உழைத்திருந்தால் நல்ல கார்டூனிஸ்ட் ஆகியிருப்பான். அப்படியும் சில பத்திரிகைகள் அவனுடைய கார்ட்டூன்களை வெளியிடுவது உண்டு. பெனின்சுலா கம்பெனியில் வேலை பார்க்கும் எட்டு பெண்களில் ஏழு பேருக்கு அவனைக் கண்டால் ஆகாது. எஞ்சியிருக்கும் பெண் சிறு வயதிலேயே கணவனை இழந்தவள்.

ரேவந்த் இதற்கு நேர் எதிர். ஓவியன் ஒருவன் பொறுமையாக வரைந்த ஓவியம் போன்றது அவனுடைய வாழ்க்கை. ஒழுக்கங்களும், கட்டுப்பாடுகளும் நிறைந்தது. விடியற்காலையிலேயே எழுந்துகொண்டு ஐந்துமணி நேரம் சதுரங்கம் விளையாடுவான். உயரம் ஐந்து அடி ஆறு

அங்குலம். நீல வானம் போன்ற தெளிவான மனம். கதாநாயகனைப் போன்ற தோற்றம். எதிர் துருவங்கள் பரஸ்பரம் ஈர்க்கப்படுவது போல் அவ்விருவரும் நண்பர்கள் ஆனார்கள்.

"ஏர்போர்ட்டுக்கு வந்தேன். ஆனால் நான் போய்ச் சேருவதற்குள் விமானம் வந்து ரொம்ப நேரமாகி விட்டதாம்" என்றான் ஜேம்ஸ்.

"ரொம்ப சிரமப்பட்டு விட்டாய் பாவம்." முறுவலுடன் சொன்னான் ரேவந்த்.

"வெற்றிக்கொடியை கைப்பற்றி வருபவனுக்கு இது கூட செய்யாவிட்டால் எப்படி?"

ரேவந்த் முகத்தில் முறுவல் மறைந்து வேதனையின் நிழல் படிந்தது. தாழ்ந்த குரலில் சொன்னான். "பிளேனை விட்டு இறங்கியதும் என் கண்கள் தேடின. நான் சாதித்தது குறைவான வெற்றி இல்லை என்று எனக்குத் தெரியும். ரசிகர்கள் கும்பலாக வந்து பூமாலைகளோடு பெரிய வரவேற்பு அளிக்க வேண்டும் என்று நான் எதிர்பார்க்க வில்லை. ஆனால் ஒரு விஷயம் தெரியுமா ஜேம்ஸ்! குறைந்த பட்சம் விளையாட்டுத்துறையின் மாவட்ட செயலாளர் கூட வரவில்லை."

"நீ கிரிக்கெட் ஆட்டக்காரனாக இல்லாமல் சதுரங்க ஆட்டக்காரனாய் இருப்பது காரணமாக இருக்கலாம்."

"இல்லை. தமிழனாக இருப்பது." நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு ரேவந்தின் குரல் வேதனையோடு ஒலித்தது. "ஜேம்ஸ்! நீயும் ஒரு கலைஞன். உனக்குத் தெரியாதது என்ன இருக்கு? விளையாட்டு வீரனும், இளைஞனும் சின்னக் குழந்தைப் போன்றவர்கள். சின்ன பாராட்டு கிடைத்தால் போதும் உற்சாகத்துடன் பொங்கிப் போய்விடுவார்கள். உங்கள் வெற்றியை நாங்கள் கவனித்து வருகிறோமே என்று

யாராவது அபிமானம் காட்டினால் இருமடங்கு உற்சாகத்துடன் மேலும் மேலும் தீவிரமாக முயற்சி செய்வார்கள். சமீப காலத்தில் அந்த ஊக்கம்தான் குறைந்து வருகிறது."

அதற்குள் போன்மணி ஒலித்தது. ரேவந்த் போனை எடுத்து தன்னுடைய இயல்பான வியாபார தோரணையில் "ஹலோ" என்றான்.

மறுமுனையிலிருந்து உடனே பதில் வரவில்லை. அவன் மறுபடியும் "ஹலோ" என்றான்.

"ஹ...ஹலோ!" கொஞ்சம் மிரட்சி... கொஞ்சமே பரபரப்பு ... கொஞ்சம் குறும்புத்தனம்... எல்லாம் கலந்த அழகான பெண் குரல் மறுமுனையிலிருந்து கேட்டதும் ரேவந்த் சட்டென்று நாற்காலியில் அசைந்து கொண்டே "யாரு?" என்றான்.

"நான்...நான் உங்களுடைய விசிறி. உங்களுக்கு வாழ்த்துக்களை தெரிவிக்க வேண்டுமென்று போன் செய்தேன்."

"தாங்க்ஸ். உங்கள் பெயர்?" ரேவந்த் கேட்டான். முன்பின் தெரியாதவர்கள் போன் செய்து வாழ்த்துக்களை சொல்வது அவனுக்கு புதிது. அதிலும் ஒரு பெண் போன் செய்து சொல்வது முற்றிலும் புதிய விஷயம்.

"பெயர் எதற்கு?" என்றாள் அந்தப்பெண்.

ரேவந்த் வியப்புடன் "ஏன்? பெயரைச் சொன்னால் என்ன நஷ்டம் வந்து விடப் போகிறது?" என்றான்.

"பெயரைச் சொன்னால் உங்களுக்கு வரப் போகும் லாபம்தான் என்ன? உங்களுக்குத் தெரிய வேண்டிய தெல்லாம் ஒரு ரசிகை உங்க வெற்றியை பாராட்டி வாழ்த்துக்களை தெரிவிக்கிறாள் என்பது மட்டும் தானே."

"ஆனால் பெயரைச் சொன்னால் எனக்குக் கொஞ்சம் மகிழ்ச்சியாக இருக்கும். மறுபடியும் எப்போதாவது நினைவு படுத்திக் கொண்டால் இந்தப் பெயருடைய பெண் போன் செய்தாள் என்று ஊகித்துக் கொள்ள வசதியாக இருக்குமே." ரேவந்த் சமாளிக்க முயன்றான்.

ரேவந்த் படும் அவஸ்தையை கவனித்து விட்டு "என்ன விஷயம்?" என்று கேட்டான் ஜேம்ஸ்.

ரேவந்த் மௌத்பீஸை கையால் மூடிவிட்டு "யாரோ ஒரு பெண் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறாள்" என்று சொல்லி விட்டு மறுபடியும் போனில், "என்ன? என்னுடைய வாதம் சரிதானே?" என்றான்.

"என் பெயர்..." என்று சொல்லப்போனவள் பாதியிலேயே நிறுத்திவிட்டு, "என் பெயரின் முதல் எழுத்து ஆங்கிலத்தில் 'ஆர்.' இதை வைத்துக் கொண்டு கண்டு பிடியுங்கள் பார்ப்போம்" என்றாள்.

அவன் திகைத்துப் போய் விட்டான். "எப்படிக் கண்டு பிடிப்பது?" என்று கேட்டான்.

"பெரிய செஸ் பிளேயர் இல்லையா? இது கூடக் கண்டுபிடிக்க முடியாதா? 'ஆர்' என்ற எழுத்தில் தொடங்கும் தமிழ்நாட்டுப் பெண்களின் பெயர்கள் எவ்வளவு இருந்து விடப் போகிறது?" என்று சிரித்துவிட்டு "அரை மணிக்கு பிறகு போன் செய்கிறேன். அதற்குள் முடிந்த வரையிலும் பெயர்களை நோட் பண்ணி வைத்துக் கொள்ளுங்கள்" என்று போனை வைத்து விட்டாள்.

இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு பார்த்தால் நண்பர்கள் இருவரும் பேப்பர், பேனாவுடன் மல்லுக்கு நின்று கொண்டிருந்தார்கள்.

ராதா...ராதிகா...ரமணி என்று மூன்று பெயர்கள் கிடைத்தன. ரேவந்த் தலையை உதறிக்கொண்டே "ஊஹூம்.

இதெல்லாம் பிரயோஜனப் படாது" என்றான். அதற்குள் ஐந்து நிமிடங்கள் கழிந்து விட்டன. அந்தச் சமயம் பார்த்து ஜெனரல் மேனேஜர் அழைப்பதாக ப்யூன் வந்து சொன்னான்.

ரேவந்த் ஜெனரல் மேனேஜரின் அறைக்குள் அடியெடுத்து வைக்கும் போது அவர் தன்னுடைய பி.ஏ.வின் மீது எரிந்து விழுந்து கொண்டிருந்தார். இன்னும் ஒரு மணி நேரத்தில் மீட்டிங்கை வைத்துக் கொண்டு இண்டர்வ்யூவுக்கு எப்படி ஏற்பாடு செய்தாய்?" என்று கடிந்து கொண்டிருந்தார். ரேவந்த் போய் நின்றதும் "பார்த்தாயா ரேவந்த்! பதினாறு பேரை இண்டர்வ்யூ பண்ணணுமாம், ஒரு மணி நேரத்திற்குள் நடக்கிற காரியமா இது?" என்றார்.

ரேவந்த் பதில் பேசவில்லை.

மேலும் அவரே சொன்னார். "இப்பொ எது செய்தாலும் சரியாக வரப் போவதில்லை. ரேவந்த்! கமிட்டி அறையில் உட்கார்ந்து கொண்டு நான்கு பேரை நீ செலக்ட் செய்து வை. இதெல்லாம் அரை மணியில் முடிந்து போய் விட வேண்டும். அப்புறமாக அந்த நால்வரையும் நான் ஃபைனல் இண்டர்வ்யூ செய்கிறேன். க்விக் பதினோரு மணிக்கு எனக்கு மீட்டிங் இருக்கு என்று சொல்லிவிட்டு பைலை படிப்பதில் மூழ்கி விட்டார்.

ரேவந்தும், பி.ஏ.வும் வெளியே வந்தார்கள். அவரால் ஒரு மணி நேரத்தில் செய்ய முடியாதது தான் அரை மணிக்குள் எப்படி செய்ய முடியும் என்று அவனுக்குப் புரிய வில்லை. போகட்டும்! அந்த ஒரு மணி நேரத்தையும் தனக்கே ஒதுக்கிவிட்டு யாராவது ஒருவரை தேர்வு செய்யச் சொல்லலாம் இல்லையா. ஊஹூம். ஃபைனல் அத்தாரிடி தன் கையில்தான் வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு. அவனுக்கு சிரிப்புதான் வந்தது.

வராண்டாவில் நாற்காலிகளிலும், சோபாவிலுமாக இண்டர்வ்யூவுக்கு வந்திருந்தவர்கள் அமர்ந்திருந்தார்கள். எட்டு ஆண்களும்... எட்டு பெண்களும். எல்லோரும் புத்திசாலிகளாகத்தான் தென்பட்டார்கள்.

அவர்களைப் பார்த்ததுமே ரேவந்த் மூளையில் மின்னல் போன்ற யோசனை வந்தது.

போய் கமிட்டி அறைக்குள் உட்கார்ந்து கொண்டு செகரட்ரியிடம் அவர்களை அனுப்பச் சொன்னான்.

“ஒவ்வொருத்தராக அனுப்பட்டுமா?” செகரெட்ரி கேட்டான்.

“வேண்டாம். எல்லோரையும் சேர்த்து அனுப்பு.”

செகரட்ரி அவனை வினோதமாக பார்த்தான். ரேவந்த் அவன் சந்தேகத்தை உணர்ந்தவனாய், “ஒவ்வொருவரையும் தனித்தனியாக இண்டர்வ்யூ செய்வதென்றால் அரைமணி நேரம் போறாது. அதான் மாஸ் இண்டர்வ்யூ செய்து விடலாம்” என்றான்.

செகரட்ரி வெளியில் சென்ற அடுத்த நிமிடமே பிலுபிலுவென்று எல்லோரும் உள்ளே வந்தார்கள்.

“உட்கார்ந்து கொள்ளுங்கள்” என்றான் ரேவந்த். நடுவில் மேஜை இருந்தது. சுற்றிலும் இருந்த நாற்காலிகளில் எல்லோரும் அமர்ந்துகொண்டார்கள்.

ரேவந்த் எழுந்து நின்று கொண்டு தொண்டையை கணைத்துக் கொண்டு சொற்பொழிவு ஆற்றத் தொடங்கினான்.

“சமீபகாலத்தில் வேலைக்கு தேர்வு செய்ய பலவிதமான விஞ்ஞான முறைகள் வந்துவிட்டன. வரலாறு, பூகோளம் இவற்றில் கேள்விகளை கேட்பது பழைய முறை. அறிவுக் கூர்மையை பரிசோதிப்பதற்கு ஒரு புதியவழி

இண்டெலிஜென்ஸ் டெஸ்ட். அதாவது ஐ.க்யூ டெஸ்ட். இப்பொழுது உங்களுக்கு அந்தப் பரீட்சையை வைத்து உங்களில் நால்வரை செலக்ட் செய்து ஃபைனல் இண்டர்வ்யூவுக்கு ஜெனரல் மேனேஜரிடம் அனுப்பி வைக்கும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது." மூச்சு எடுத்துக் கொள்வதற்காக சற்று நிறுத்தினான்.

எல்லோரும் அவன் என்ன சொல்லப் போகிறானோ என்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவன் மேலும் சொல்லத் தொடங்கினான்.

"ஐ.க்யூ. டெஸ்டில் எது வேண்டுமானாலும் கேட்கலாம். கணக்குப் பாடம், வண்ணங்களில் சேர்க்கை இது போன்றவற்றையும் கேட்கலாம். ஆனால் பெனின்சுலா கம்பெனியின் தயாரிப்புகள் தமிழர்களுக்கு விருப்பமானவை. முக்கியமாக தமிழ்ப் பெண்களுக்கு. அதனால் உங்களுக்கு ஒரு பரீட்சை வைக்கப் போகிறேன். உங்களுக்குத் தெரிந்த தமிழ் பெண்களின் பெயர்களை எத்தனை முடியுமோ அத்தனை எழுதுங்கள். ஆனால் ஒரு நிபந்தனை. பெயரின் முதல் எழுத்து "ஆர்" என்று தொடங்க வேண்டும். உங்களுக்கு பதினைந்து நிமிடம் அவகாசம் தருகிறேன். அதற்குள் அதிகமாக பெயர்களை எழுதிய நால்வரை ஃபைனல் இண்டர்வ்யூவுக்கு அனுப்பப்படுவார்கள்."

அதற்குள் இரண்டு மூன்று பேர் எழுதத் தொடங்கி விட்டதால் அவன் பேச்சை நிறுத்திக்கொண்டான். சிலருக்கு விஷயம் சட்டென்று புரியவில்லை. ஒரு நிமிடம் கழித்து மூளை வேலை செய்யத் தொடங்கியதும் மளமளவென்று எழுதத் தொடங்கினார்கள்.

முதல் ஐந்து நிமிடங்கள் வரை எல்லோரும் குனிந்த தலை நிமிராமல் எழுதிக் கொண்டே இருந்தார்கள். பிறகு நிமிர்ந்து மேற் கூரையைப் பார்ப்பதும், நகத்தைக் கடித்துக் கொண்டே யோசிப்பதுமாக இருந்தார்கள். சிலர் ஓரக்

கண்ணால் அடுத்தவரின் பேப்பரை பார்க்கத் தொடங்கி விட்டார்கள். ஒரே ஒரு பெண் மட்டும் நிறைய பெயர்களை எழுதியிருந்தாள். நிறைய பேர் பத்து பதினோரு பெயர்களுக்கு மேல் எழுதவில்லை. சிலர் கிருஸ்துவ, முஸ்லீம் பெயர்களையும் எழுதிவிட்டார்கள்.

எல்லோரையும் விட அதிகமாக எழுதியிருந்த நால்வரை செலக்ட் செய்து ஜெனரல் மேனேஜரிடம் ஃபைனல் செலக்ஷனுக்காக அனுப்பிவிட்டு அந்த பேப்பர்களை எடுத்துக் கொண்டு தன்னுடைய அறைக்கு வந்தான். அந்தப் பெண்ணிடமிருந்து போன் வருவதற்கு இன்னும் பத்து நிமிடங்கள் இருந்தன.

அறையில் உட்கார்ந்திருந்த ஜேம்ஸ் "இத்தனை நேரமாகி விட்டதே ஏன்?" என்று கேட்டான்.

ரேவந்த் தான் செய்த வேலையைப் பற்றிச் சொன்னான். ஜேம்ஸ் அதிர்ச்சியடைந்தவனாய் "குட்! உண்மையிலேயே உனக்கு சதுரங்க மூளைதான்" என்றான்.

ரேவந்த் முறுவலித்தான். "சூழ்நிலையும் ஒத்துழைத்தது" என்றான், கையிலிருந்த பேப்பர்களை பார்த்துக் கொண்டே.

பிறகு அந்தப் பெயர்களை எல்லாம் வரிசைப்படுத்தி பொதுவான பெயர்களை எடுத்துவிட்டு ஃபைனல் லிஸ்ட் எழுதி முடிக்கும் போது பத்து நிமிடங்கள் ஆகி விட்டது. மேலும் ஐந்து நிமிடங்கள் கழித்து போன் மணி ஒலித்தது. அதற்காகவே காத்திருந்தது போல் ரேவந்த் சட்டென்று போனை எடுத்தான்.

"என்ன? கண்டுபிடித்து விட்டீர்களா?" மறுமுனையிலிருந்து மெல்லிய சிரிப்புடன் அந்தப் பெண் கேட்டாள்.

"நிறைய பெயர்கள் கைவசம் இருக்கு."

"சொல்லுங்கள். அதில் என் பெயர் இருந்தால் இன்றே உங்க ஆபீசுக்கு வந்து நேரில் பாராட்டுகிறேன். சதுரங்கத்தில் ஜெயித்ததற்கு இல்லை. நான் வைத்த போட்டியில் ஜெயித்ததற்கு."

ரேவந்த் முகம் ரோஷத்தினால் சிவந்து விட்டது. "அத்தனை கஷ்டமாக இருக்காது என்று நினைக்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. உங்களுடைய முழுப் பெயரையும் என்னால் சொல்ல முடியாமல் போகலாம். உதாரணமாய் உங்க பெயர் "ரமணி ப்ரியா" என்று வைத்துக் கொள்ளுங்கள். நான் "ரமணி" என்று சொன்னாலும் அது கரெக்ட்தான் என்றான்.

"ஓ.கே."

ரேவந்த் பெயர்களை எழுதியிருந்த பேப்பரை எடுத்து படிக்கத் தொடங்கினான்.

"ராதா."

"இல்லை."

"ரஜனி".

"இல்லை."

ஜேம்ஸ் மூச்சை அடக்கிக் கேட்டுக்கொண்டு இருந்தான்.

"ராஜலக்ஷ்மி... ரோஜா."

மறுமுனையில் சிரிப்பு கேட்டது. "என்னுடைய சாதாரணமான தமிழ் பெயர் இல்லை. இலக்கியப் பற்று இருப்பவர்களுக்கு பிடித்தமான பெயர்."

"ராக்கம்மா...ரெளடி ராக்கம்மா." வெறுப்போடு சொன்னான்.

மறுமுனையிலிருந்து தாங்க முடியாத சிரிப்பொலி கேட்டது.

"இல்லை" என்றாள் அந்தப் பெண்.

அவன் மளமளவென்று படிக்கத் தொடங்கினான்.

"ராஜேஸ்வரி... ராமலக்ஷ்மி... ராகிணி... ரமாபிரபா... ராஜசுலோசனா... ரத்னபிரபா... ரத்னகுமாரி... ரவளி...

"ஊஹூம். இதில் எதுவும் இல்லை."

ரேவந்த்திற்கு கோபம் வந்தது. "ராக்காயி... ருத்ரம்மா... ராமபத்ரம்மா" என்றான்.

"சினிமா நடிகையின் பெயரோ? ராகி... ரேகா..."

"ஊஹூம்."

"ஆயுர்வேத மருந்துகளின் பெயர்கள்?

ரத்னாவளி... ராஜரத்னா... ராஜீஷா,"

"ஹோமியோபதி முயற்சி செய்யுங்களேன்."

ரேவந்த் இதழ்களை இறுக்கி "ரஸ்னா... ரைனா... ரஸ்மோ" என்றான். அதற்குள் பக்கத்திலிருந்த ஜேம்ஸ் "ரசிக பிரியா" என்று எடுத்துக் கொடுத்தான்.

"ரசிக பிரியா...ரமணி...ரதி" என்றான் ரேவந்த். மறுமுனையில் போன் கட் ஆகிவிட்டது.

ரேவந்த் ஏமாற்றத்துடன் "அந்தப் பெண்ணுக்கு கோபம் வந்து விட்டது போலிருக்கு. வராமல் எப்படி இருக்கும்? ஏதோ பாராட்டுவோம் என்று போன் செய்தவளிடம் ரதி...ராத்திரி என்று சொன்னால் யாருக்குத்தான் கோபம் வராது" என்று நொந்து கொண்டான்.

அதற்குள் வெளியே கதவு தட்டிய ஓசை கேட்டது.

"மே ஐ கமின் சார்?"

"யெஸ் ப்ளீஸ்."

இண்டர்வ்யூவில் எல்லோரையும் விட அதிகமான பெயர்களை எழுதிய பெண் உள்ளே வந்தாள். அவள் முகம் சந்தோஷத்தால் மலர்ந்திருந்தது. "நான் செலக்ட் ஆகி விட்டேன் சார்" என்றாள்.

ரேவந்த் முறுவலித்தான். "கங்கிராட்ஸ்! நீங்க நிறைய பெயர்களை எழுதினப்பவே நினைத்தேன், கண்டிப்பாக நீங்க செலக்ட் ஆகிவிடுவீங்க என்று. உங்களுடைய ஐ.க்யூ. ரொம்ப அதிகம்." அவளுடைய அறிவுத் திறமையை பாராட்டினான்.

ஜேம்ஸ் இடையில் புகுந்து "கால் மணி நேரத்தில் பதினாறு பேரில் தகுதி உள்ள நபரை தேர்ந்தெடுக்க எங்க ரேவந்த் தன் அறிவுத்திறமையை பயன்படுத்திக் கண்டுபிடித்த ஐ.க்யூ. டெஸ்ட் இது" என்று ரேவந்தைப் புகழ்ந்தான்.

அந்தப் பெண் பக்திப் பரவசத்துடன் "எல்லாம் எங்க அப்பாவின் கைராசிதான்" என்றாள்.

"அவர் என்ன செய்கிறார்?" ரேவந்த் கேட்டான்.

"பெயர் சூட்டு விழாவின் போது குழந்தை பிறந்த நட்சத்திரத்திற்கு ஏற்றவாறு பெயர்களை தேர்வு செய்து தரும் ஜோசியர்."

நண்பர்கள் இருவரும் திடுக்கிட்டு ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். ரேவந்த் உடனே சமாளித்துக் கொண்டு "ஐ.க்யூவில் என்ன இருக்கு? உங்களுக்கு அதிர்ஷ்டமும் சேர்ந்திருக்கு" என்றான்.

"அது சரி. உங்க பெயர் **என்ன**?" ஜேம்ஸ் கேட்டான்.

"ராக்காயி. என் நட்சத்திரத்திற்கு அந்த ஒரு பெயர்தான் பொருத்தமாக இருந்ததாம்."

# 3

நான்கு நாட்கள் வரையில் மறுபடியும் போன் வரவே இல்லை. முதல் நாள் நினைவில் இருந்தாலும் பிறகு அதைப்பற்றியே ரேவந்த் மறந்து விட்டிருந்தான். நான்காவது நாள் மாலை வேலை முடியும் நேரத்தில் மறுபடியும் போன் வந்தது.

அந்தப் பெண் ஏதோ, சொல்ல வரும்போதே ரேவந்த் முந்திக் கொண்டு "நீங்க என்னை மன்னிக்கணும்" என்றான்.

"எதற்கு?"

"அன்று கடைசியாக போனில் கொஞ்சம் ஆபாசமாக பேசி விட்டேன்."

அவள் கொஞ்ச நேரம் மௌனமாய் இருந்து விட்டு பிறகு தாழ்ந்த குரலில் சொன்னாள்.

"அதில் வியப்பு அடைவதற்கு ஒன்றுமில்லை என்று நினைக்கிறேன். ஒவ்வொரு மனிதனிடமும் அந்த பாராநாயிட் சைக்காலஜி கொஞ்சமாவது இருக்கத்தான் செய்யும். முக்கியமாக கலைஞர்களிடம் அது அதிகமாகவே இருக்கும், அடுத்தவர்களை ஆழம் பார்க்கும் குணம். உதாரணத்திற்கு நான் உங்களுக்கு போன் செய்தேன். ஏன் செய்தேன்? எல்லோரையும் போலவே பேப்பரில் விஷயத்தை படித்துவிட்டு பேசாமல் இருந்திருக்கலாம் இல்லையா. நான் உங்கள் மேல் காட்டும் இந்த அபிமானத்திற்குப் பின்னால் ஏதாவது எண்ணம் இருக்குமோ என்ற சந்தேகம் ஏற்பட்டதால் எல்லா விதமாகவும் ஆராய்ந்து கடைசியில் இப்படி குறும்புத்தனமாய் நடந்து கொண்டு அந்த சந்தேகத்தை தீர்த்துக்கிட்டீங்க. இத்தனைக்கும் காரணம் நான் ஒரு பெண் என்றதால் வந்த சிக்கல்தான்."

ரேவந்த் கலவரமடைந்தவனாய், "என் எண்ணம் அது இல்லை" என்றான்.

"உங்களுக்கு இல்லாவிட்டால் உங்க பக்கத்திலே உட்கார்ந்து கொண்டு உங்களுக்கு பெயரை எடுத்துக் கொடுத்த உங்க நண்பனுக்கு இருக்கலாம் இல்லையா?"

ரேவந்த் அதிர்ச்சி அடைந்தவனாய் என் பக்கத்தில் நண்பன் இருந்தது உங்களுக்கு எப்படித் தெரிந்தது? என்று கேட்டான்.

"உங்க டெலிபோனில் மௌத் பீஸ் ட்ரான்ஸ்மீட்டருக்கு அருகில் உள்ள ஒலியலைகளை மின்சக்தி அலைகளாய் மாற்றி விடக்கூடிய சக்தி என்னிடமுள்ள போன் ரிசீவரின் மேல் பாகத்தில் உள்ள டயஃப்பிரம்க்கு உண்டு. மூன்று நான்கடி தொலைவிலிருக்கும் ஒலிகளை கிரகிக்கும் திறமை இந்த ட்ரான்ஸ்மீட்டருக்கு இருக்கிறது. அதனால் அந்த நபர் உங்களுக்கு அருகில் உட்கார்ந்திருப்பவராகத்தான் இருக்க வேண்டும். இவ்வளவு உயர் பதவியில் இருக்கும் ஒரு அதிகாரிக்கு மூன்றடி தொலைவில் அமர்ந்துகொண்டு "ரசிகப்ரியா" என்ற பெயரை எடுத்துக் கொடுக்கக் கூடிய நபர் நிச்சயமாக நண்பனாகத்தான் இருக்க வேண்டும். அது மட்டுமில்லை. வாழ்க்கையை ரொம்பவும் துச்சமாக மதிப்பவராக இருக்க வேண்டும். என்னுடைய கணிப்பு சரிதானே?"

அவள் அது போல் மனித மனத்தின் ஆழத்தை ஊடுருவி கசப்பு உண்மைகளை வெளிப்படுத்தி விடக் கூடியவள் என்று எண்ணியிராத ரேவந்த் வியப்படைந்தான். தன்னையும் அறியாமல் "கரெக்ட்" என்றான். தொடர்ந்து, "அன்றைக்கு உங்களிடம் போனில் ரசிகப்ரியா என்று சொன்னதன் மூலமாக தவறு செய்து விட்டோமோ என்றும், யாரோ ஒரு பெண் போன் செய்து விட்டாள் என்றதும் எல்லை மீறி தரக்குறைவாக நடந்து கொண்டு விட்டோமோ

என்று கடந்த மூன்று நாட்களாக வருத்தப்பட்டேன். உங்க மனம் காயப்பட்டாலும் மறுபடியும் இப்படி போன் செய்து விளக்கம் கொடுப்பதன் மூலமாக என்னுடைய குற்ற உணர்வை போக்கிவிட்டீர்கள். தாங்க்ஸ்! ஆனால் ஒரு விஷயம் நேர்மையாக ஒப்புக் கொள்ள விரும்புகிறேன். என் நண்பன் அப்படி அந்தப் பெயரை எடுத்துத் தந்திருக்கா விட்டாலும் இன்னும் நாலைந்து முறை நீங்க போன் செய்திருந்தால் நானே உரையாடலை அந்த திசையில் திருப்பியிருப்பேனோ என்னவோ. இதைச் சொல்ல வெட்கப்படுகிறேன். ஆனால் லெட் மி பி ஃபிராங்க்." நேர்மையாக சொன்னான்.

அவள் சொன்னாள். "ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் மலரும் நட்பில் இந்த பிரஸ்தாபனை... அதாவது யார் எதை எதிர்பார்த்து நட்பு கொள்கிறார்கள் என்ற பிரஸ்தாபனை என்றாவது ஒரு நாள் தோன்றாமல் போகாது. பதினெட்டு வயது அடலஸென்ட் ஸ்டேஜில் இருக்கும் இளவட்டங்களின் நட்பில் உத்வேகம், உற்சாகம், அவசரம், ஆவேசம் போன்ற உணர்வுகளுடன் நிரம்பியிருக்குமாதலால் அவர்களை விட்டுவிடுவோம். நமக்கு இடையே இந்த பிரஸ்தாபனை இவ்வளவு சீக்கிரமாக வந்துவிட்டது எனக்கு சந்தோஷமாக இருக்கு. இல்லாவிட்டால் அடிக்கடி போன் செய்யும் இந்தப் பெண் எப்படிப்பட்டவள் என்று தூண்டில் போட்டு பார்க்கலாமே என்ற எண்ணம் உங்க பேச்சில் என்றாவது வெளிப்பட்டிருக்கலாம். உங்க மனதில் அந்த எண்ணம் இல்லாமல் இருக்கலாம். அது வேறு விஷயம். உங்கள் பேச்சில் அது போன்ற எண்ணம் என்றாவது வெளிப்பட்டால் 'அடடா...நான் நண்பனாக நினைத்திருப் பவன் இப்படிப்பட்டவனா?' என்ற தவறான அபிப்பிராயம் எனக்கு ஏற்பட்டிருக்கக்கூடும். பார்த்தீங்களா. எவ்வளவு பெரிய இக்கட்டிலிருந்து தப்பி விட்டோமோ."

அவளுடைய வாதத்திற்கு ஈர்க்கப்பட்டவனாய் "எனக்கு உங்களைப் பார்க்க வேண்டும் போல் இருக்கு" என்றான்.

அந்தக் குரலில் இருந்த நேர்மையை உணர்ந்த அவள் "கட்டாயம் சந்திப்போம். ஒருவரை ஒருவர் உண்மையான நண்பர்களாகப் புரிந்து கொண்ட பிறகு சந்தித்துக் கொள்வோம். ஆனால் ஒன்று மட்டும் உண்மை. மூன்றாம் தர ஆங்கில நாவல்களில் வருவது போல் 'கண்முன்னால் இருந்தாலும் உன்னால் என்னைக் கண்டுபிடிக்க முடியவில்லை பார்த்தாயா' என்று சொல்ல மாட்டேன் போதுமா?

அவன் ஏதோ சொல்வதற்குள் கதவு திறந்த சத்தம் கேட்டது. உள்ளே வந்த ஜேம்ஸ் ரேவந்த் போனை பிடித்திருந்த விதத்திலேயே புரிந்துகொண்டு, "அந்தப் பெண்தானே?" என்று கேட்டான். ரேவந்த் தலையை அசைத்ததும் போனை அவன் கையிலிருந்து பிடுங்கிக் கொண்டு "ஹலோ! எப்படி இருக்கிறாய்?" என்று கேட்டான்.

அவன் ஒருமையில் விளித்ததைக் கேட்டதும் ரேவந்த் திடுக்கிட்டு போனை மறுபடியும் எடுத்துக் கொள்ளப் போனான். ஆனால் ஜேம்ஸ் கொடுக்கவில்லை. 'அந்தப் பெண் மறுபடியும் போன் செய்வாள் என்று எனக்குத் தெரியும்' என்பது போல் முறுவலித்தான்.

"நன்றாக இருக்கிறேன். நீங்க சௌக்கியமா?" மறுமுனையிலிருந்து குரல் கேட்டது.

"டெலிபோனில் குசலபிரச்னைகள் எல்லாம் எதற்கு? நேரில் வந்து சந்திக்கலாமே?" சற்று பழிப்பது போல் சொன்னான் ஜேம்ஸ்.

"நேரில் சந்திக்கும் அளவுக்கு நீங்க பெரிய மனிதர்தானா இல்லையா என்று தெரிந்து கொள்ள வேண்டாமா?"

ஜேம்ஸ் அடியுண்டவனாய், "அப்படி என்றால் இது போல் போன் செய்து ஏன் நேரத்தை வியர்த்தமாக்கணும்?" என்றான்.

"நட்பு ஏற்படுத்திக் கொள்ளத்தான்" என்றாள்.

"இதோ பார் பெண்ணே! நான் பத்து வருடங்களாய் கார்ட்டூன்களை வரைந்து கொண்டு இருக்கிறவன். பத்திரிகைகளில் என் பெயர் பலமுறை வந்திருக்கு. என்னோடு நட்பு வைத்துக்கொள்ள விரும்புவதாக பல பெண்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அது போகட்டும். எது வரையில் படித்திருக்கிறாய்?"

"பத்தாவது வகுப்பு ஃபெயில்" சிரிப்பை அடக்கிக் கொண்ட குரல்.

"உன் பொழுது போக்குகள்?"

"ஸ்டாம்ப் கலெக்ஷன். சினிமா பார்ப்பது."

"உனக்குப் பிடித்த நடிகர்?"

சொன்னாள்.

"இனி நான் சொல்கிறேன். கேட்டுக் கொள். எங்க ரேவந்த் எம்.பி.ஏ.ஃபஸ்ட் ரேங்க். சதுரங்கத்தில் சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியவன். தபால் தலைகளை சேகரிப்பது, சினிமா நடிகர்களின் போட்டோக்களை கலெக்ட் செய்வது போன்ற சின்ன பசங்களின் ரசனைகளை அவன் தாண்டி பதினைந்து வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. அவன் எப்போதாவது பொழுது போகாமல் புத்தகங்களை படித்தால் அவை அசிமோவ், ஆர்த்தர் கிளார்க் போன்ற எழுத்தாளர்களின் படைப்புகளாகத்தான் இருக்கும். அப்படிப் பட்டவனோடு நீ எதற்காக நட்பு வைத்துக் கொள்ளணும்? ஒரு மாதம் கழித்து சந்தித்துக் கொண்டாலும் என்ன பேசிக் கொள்ளமுடியும்? இருவரின் எண்ண அலைகளும் ஒத்துப் போகவேண்டாமா?"

"நீங்க சொல்வது உண்மைதான். பின்னே என்னதான் செய்வது?" அப்பாவியாகக் கேட்டாள்.

"அதைத்தான் சொல்ல வந்தேன். உடனே எங்க ஆபீசுக்கு வா. பேசிக் கொண்டிருக்கலாம்."

"அப்போ மட்டும் எங்க உரையாடல் எப்படி சுவாரசியமாக இருக்க முடியும்? அவர் பேசும் விஷயம் எதுவும் எனக்குத் தெரியாதே?"

"நேரில் பார்த்தால் நீ எப்படி இருக்கிறாய் என்றாவது தெரியும் இல்லையா. இப்படி வெளிப்படையாக பேசுவதை தவறாக நினைக்காதே. கலைஞர்களுக்கு இன்ஸ்பிரேஷன் கொடுப்பது அழகான பெண்கள்தான். குறைந்த பட்சம் உனக்கு அந்த 'அழகு' என்ற தகுதியாவது இருந்தால் உங்க அறிமுகம் நட்பாக மாறுவதற்கு வழி இருக்கும்."

ரேவந்த் நாற்காலியிலிருந்து ஒரே துள்ளலில் எழுந்து நின்று, "ஜேம்ஸ்! என்ன இது? உனக்கு மூளை கலங்கி விட்டதா என்ன?" என்றான். ஜேம்ஸ் எதையும் பொருட்படுத்தவில்லை. மறுமுனையிலிருந்து அவன் சொன்னதைக் கேட்டு விட்டு "உண்மைதான். ஐ யாம் ட்ரூலீ ஃபிராங். ஆனால் கடைசியில் வருத்தப்படுவதை விட முன்னாலேயே விஷயம் சொல்லி விடுவது நல்லது இல்லையா" என்றான்.

"ஒரு பெண்ணுடன் நட்பு வைத்துக் கொள்ள அவளுடைய அழகை மட்டும்தான் பார்ப்பார்களா?"

"ஓரளவுக்கு அறிவுத்திறன் இருந்தால் நல்லதுதான். அது இல்லாத பட்சத்தில் நமக்கு எதிரே இருக்கும் பத்து பொம்மைகளில் ஏதாவது ஒன்றை எடுத்துக் கொள்ளச் சொன்னால் அழகானதைத்தானே தேர்வு செய்வோம்? என்னுடைய கண்ணோட்டத்தில் பெண்களுக்கு அழகைத் தவிர வேறெந்த தகுதியும் இல்லை ஓரிருவரைத் தவிர."

"ஜேம்ஸ்! ஜேம்ஸ்!! என்ன பேச்சு பேசுகிறாய்? போனை இப்படிக் கொடு." இந்த உரையாடலை தாங்க முடியாமல் ரேவந்த் கத்திவிட்டான்.

"உங்களைப் பார்த்தால் இரக்கமாய் இருக்கு" என்றாள் அந்தப் பெண். "உங்களுடைய நண்பர்கள் எல்லோருமாக சேர்ந்து உங்களுக்குப் பெண்கள் மீதும் நட்பின் மீதும் தவறான அபிப்பிராயம் ஏற்படும் விதமாக செய்திருக் கிறார்கள். என் ஊகம் உண்மையாக இருந்தால் உங்களுடைய தாய் தந்தையர் உயிரோடு இல்லை. ஒரு வேளை இருந்தாலும் அவர்களோடும், வீட்டில் உள்ள மற்ற யாருடனும் உங்களுக்கு நல்லுறவு இல்லாமல் இருக்கணும். தனிமையின் கொடுமையினால் நீங்க இப்படி மாறியிருக்க வேண்டும்."

மென்மையாக ஆனால் திடமாய் இருந்த அந்த வார்த்தைகளைக் கேட்டதும் ஜேம்ஸின் முகம் வெளிறிப் போய் விட்டது. அவள் சொன்னதெல்லாம் உண்மையாக இருந்ததால் அவன் சிலையாக நின்றுவிட்டான். ரேவந்த் டெலிபோனை அவனிடமிருந்து எடுத்துக் கொண்டே "என்ன ஆச்சு?" என்று கேட்டான்.

அந்தக் கேள்விக்கு ஜேம்ஸ் பதில் சொல்லவில்லை. ஆனால் மறுமுனையிலிருந்து பதில் குரல் கேட்டது. "சின்னதாக ஷாக் ட்ரீட்மெண்ட் கொடுத்தேன்."

ரேவந்த் சொன்னான். "நீங்க யாரோ என்ன பெயரோ எனக்குத் தெரியாது. ஆனால் என் நண்பன் சார்பில் நான் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். மன்னித்து விடுங்கள்."

"அவர் சொன்னதில் எந்த தவறும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. நீங்க இண்டர்நேஷனல் செஸ் பிளேயர். உங்களுடன் நட்பு கொள்ள வேண்டும் என்று நிறைய பேருக்கு ஆசை இருக்கலாம். ஆனால் என்னுடைய தகுதியையும் நான் யோசித்துப் பார்க்கணும் இல்லையா?

நீங்க என்னவோ ஹெமிங்வேயிலிருந்து ஜாபால்பாத்ரே வரையிலும் படித்தவங்க. நானோ வீட்டில் தாயக்கட்டம் ஆடி பொழுதை போக்குகிறவள். 'என்னுடன் நட்பு கொள்ளுங்கள்' என்று நான் வந்து கேட்டால் உங்களுக்கு தர்மசங்கடமாக இருக்காதா? எனக்கு இருக்கும் ஒரே ஆயுதம் அழகுதான். நட்பானது சமமான அந்தஸ்தில் இருக்க வேண்டுமாதலால் உங்க அறிவுத் திறமையை என் அழகோடு சமப்படுத்திக் கொள்ளணும் என்று உங்க நண்பர் அறிவுரை வழங்குகிறார்."

"நீங்க கேலி செய்வது புரிகிறது. மன்னித்து விடுங்கள் என்று கேட்டுக் கொண்டேனே." ரேவந்தின் குரலில் வேதனை தென்பட்டது.

"நான் கேலி செய்ய வில்லை ரேவந்த். உங்க நண்பனின் மனப்போக்கை அனலைஸ் செய்கிறேன். அவ்வளவுதான்."

அது வரையில் மௌனமாய் ஏதோ யோசித்துக் கொண்டிருந்த ஜேம்ஸ் முன்னால் வந்து, 'போனை ஒரு தடவை இப்படி கொடு' என்றான். அவன் குரலில் தென்பட்ட நிகழ்ச்சிக்கு ரேவந்த் வியப்படைந்தவனாக போனை நீட்டினான்.

"ஐயாம் சாரி சிஸ்டர். ரியல்லி சாரி." என்றான் ஜேம்ஸ்.

அவள் போனில் வீலென்று கத்தாத குறையாய் "இதென்ன? திடீர் என்று என்னை நீங்க தங்கை ஆக்கிட்டீங்க?" என்றாள்.

"நோ ஜோக்ஸ். நான் சின்ஸியராகத்தான் சொல்கிறேன்." ஜேம்ஸ் சொன்னான்.

ரேவந்த் அவனிடமிருந்து போனை எடுத்துக் கொண்டு "அவன் சொல்லி விட்டால் இனி அதற்கு அப்பீலே கிடையாது. அவன் வாயால் இதுவரை யாரையுமே சிஸ்டர்

என்று சொன்னதில்லை. நீங்க உடனே சம்மதம் சொல்லி விடுங்கள்" என்றான்.

"ஓ.கே."

"தாங்க்யூ. ஆனால் ஒரு சந்தேகம் எனக்கு." ரேவந்த் சொன்னான்.

"என்ன?"

"ரசிக ப்ரியா என்று உங்களை அவமானப் படுத்தினோம். என் நண்பன் உங்களை ஒருமையில் விளித்தான். கார சாரமாய் உரையாடல் வேறு நடந்தது. அப்படியும் உங்களுக்குக் கோபம் வரவில்லையே? ஏன்?".

"நான் கோபத்தை முழுவதுமாக ஒழித்து விட்டு ஆறு மாதங்களாகிறது."

"ஏன் அப்படி?"

"இந்த ஒரு கேள்விக்கு மட்டும் பதில் நாம் சந்திக்கும் போது சொல்கிறேன். என்னை வற்புறுத்தாதீங்க." ஏனோ அவள் குரல் நடுங்கியது.

அவன் பேச்சை மாற்றினான். "இத்தனைக்கும் நாம் எப்போ சந்தித்துக் கொள்ளப் போகிறோம்?" என்று கேட்டான்.

"சந்தித்துக் கொள்ளணும் என்றால் இன்றைக்கே கூட சந்திக்கலாம். நான் எந்த போன் நம்பரிலிருந்து பேசுகிறேன் என்று கண்டுபிடித்து விட்டால்..." என்றாள்.

ரேவந்த் உற்சாகமாக "எங்கிருந்து பேசுறீங்க?" என்று கேட்டான்.

"பப்ளிக் பூத்லிருந்து."

"பின்னே எப்படி கண்டுபிடிப்பது?" கவலையுடன் கேட்டான். ஜேம்ஸூம் பழைய விஷயங்களை மறந்து போய் உற்சாகமாக கேட்கத் தொடங்கினான்.

"நான் போனை வைத்து விட்ட பிறகும் இரண்டு நிமிடங்கள் இங்கேயே காத்துக்கொண்டு இருப்பேன். அதற்குள் நான் கொடுக்கும் க்ளூக்களை வைத்துக் கொண்டு. இந்த நம்பரை கண்டுபிடித்து மறுபடியும் போன் செய்தால் நான் உங்க அலுவலகத்திற்கு வருகிறேன். பெயரை எப்படியும் உங்களால் கண்டு பிடிக்க முடியவில்லை. குறைந்த பட்சம் நம்பரையாவது கண்டுபிடியுங்கள். உடனே கண்டுபிடித்து விட்டால் அழகான பெண்ணுடன் இன்று மாலை தேநீர் அருந்தலாம்."

"என்ன க்ளு? சீக்கிரமாகச் சொல்லுங்க". வாட்சைப் பார்த்துக் கொண்டே ரேவந்த் உற்சாகமாகக் கேட்டான்.

"இந்த டெலிபோன் நம்பரில் மொத்தம் ஆறு எண்கள். முதலாவது எண்ணை விட இரண்டாவது எண் இரண்டு அதிகம். இரண்டாவது எண்ணை விட மூன்றாவது எண் மூன்று அதிகம். மூன்றாவது நான்காவது எண்களுக்கு இடையே வித்தியாசம் எட்டு. நான்காவது எண்ணை இரண்டால் பெருக்கினால் ஐந்தாவது எண். அதை இரு மடங்காக்கினால் ஆறாவது எண். க்விக்! இரண்டு நிமிடங்கள் தான் இருக்கு."

அவள் வார்த்தைகள் இன்னும் முடியக் கூட இல்லை. அதற்குள் ரேவந்த் போனை வைத்து விட்டு பேப்பரையும், பேனாவையும் எடுத்துக்கொண்டான்.

"இரண்டு நிமிடங்கள் தான் இருக்கு. சீக்கிரமாக கண்டுபிடி" என்றான் ஜேம்ஸ்.

ரேவந்த் அந்தப் பெண் சொன்ன விதமாக கணக்கைப் போட்டு பார்த்து விட்டு" எப்படி கண்டுபிடிப்பது? எனக் கொன்றும் புரியவில்லையே?" என்றான்.

அதற்குள் அரை நிமிடம் ஓடிவிட்டது. ஒன்றறை நிமிடம் தான் பாக்கி.

"நம்மை அழ வைப்பதற்காகத்தான் வராத கணக்கை சொல்லியிருப்பாளோ என்னவோ." ஜேம்ஸ் சொன்னான்.

"அப்படி நினைக்கவில்லை. அந்தப் பெண் ரொம்ப கெட்டிக்காரியாய் இருப்பது போல்தான் தோன்றுகிறது. இதில் ஏதோ சூக்ஷ்மம் இருந்தே தீரும்" என்று தான் எழுதியதை மறுபடியும் படித்தான்.

முதல் எண்ணை விட இரண்டாவது இரண்டு அதிகம்.

இரண்டாம் எண்ணை விட மூன்றாவது மூன்று அதிகம்.

மூன்றாவது நாலாவது எண்களுக்கு இடையே உள்ள வித்தியாசம் எட்டு.

சட்டென்று மூளையில் ஏதோ மின்னினாற்போல் நிறுத்தி விட்டு தலையை உயர்த்தி ஜேம்ஸ் பக்கம் பார்த்தான். ஜேம்ஸ் அவனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"இரண்டு எண்களுக்கு இடையில் உள்ள வித்தியாசம் எட்டு என்றால் அந்த எண் 1—9 அல்லது 9—1 ஆகத்தானே இருக்க வேண்டும்." ரேவந்த் நெற்றியைத் தடவிக் கொண்டே சொன்னான்.

ரேவந்த் அந்த யோசனையை சொன்னதும் ஜேம்ஸ் துள்ளிக் குதித்து "யுரேகா!" என்று கத்தினான். ரேவந்தின் கண்டு பிடிப்புக்கு தன்னுடைய ஊகத்தை ஜோடித்து " அந்த எண்கள் 1—9 ஆக இருக்க முடியாது. நிச்சயமாக 9—1 ஆகத்தான் இருக்க முடியும்" என்றான்.

"எப்படிச் சொல்கிறாய்?"

"நாலாவது எண்ணை இரண்டால் பெருக்கினால் ஐந்தாவது எண் வரும். அதுதானே க்ளூ. நாலாவது எண் 9

என்றால் ஐந்தாவது எண் 18 ஆக இருக்க வேண்டும். போன் நம்பரில் அது சாத்தியம் இல்லையே?"

"கரெக்ட். நம்பர் கிடைத்து விட்டது" என்று சொல்லிக் கொண்டே ரேவந்த் பேப்பரில் நம்பரை எழுதினான்.

"469124"

இன்னும் அரை நிமிடம் தான் இருந்தது.

ரேவந்த் ஓடிப்போய் போனை கையில் எடுத்தான். ஒவ்வொரு நம்பராய் கவனமாக டயல் செய்தான். மறுமுனையில் மணி அடித்தது. யாரோ எடுத்த சத்தமும் கேட்டது. ஜேம்ஸ் பரபரப்புடன் கவனித்துக் கொண்டிருந்தான். ரேவந்த் பெருமையோடு பார்த்துக் கொண்டே போனில் மிக மென்மையாக "ஹலோ! பார்த்தீங்களா. ஜெயித்து விட்டேன்" என்றான். ஜேம்ஸ் மூச்சை இழுத்துப் பிடித்தான். பேசிக் கொண்டிருந்த ரேவந்தின் முகம் களையிழந்தது.

"என்ன ஆச்சு?" ஜேம்ஸ் கேட்டான் "குரங்கு மார்க் சுருட்டுக் கம்பெனியாம் அது" என்றான் போனை வைத்துக் கொண்டே. ஜேம்ஸ் முகம் வெளிற கையிலிருந்த காகிதத்தையே பார்த்தான். அதற்குள் போன் ஒலித்தது.

ரேவந்த் போனை எடுத்ததும் "நான்தான்" என்றாள் அந்தப் பெண். "என்ன? நம்பரை கண்டுபிடிக்க முடியவில்லையா?"

"கண்டுபிடித்து விட்டோம். ஆனால் அந்த நம்பரில் நீங்க இல்லை."

"அதென்ன நம்பர்?"

"469124"

"தவறு."

"பின்னே?"

"358000" என்றாள்.

ஒரு வினாடி ரேவந்துக்கு ஒன்றும் புரியவில்லை. அவள் சொன்ன நம்பரை பேப்பரில் எழுதிப் பார்த்துவிட்டு குழப்பமடைந்தவன் புரிந்ததும் "இது அநியாயம்" என்று கத்தினான்.

மறுமுனையிலிருந்து மெலிதாக சிரிப்பு சத்தம் கேட்டது, "என்ன அநியாயம்?".

"நாலாவது எண்ணை விட ஐந்தாவது இரு மடங்கு என்று சொன்னீங்களே."

"ஆமாம். ஜீரோவை இரண்டால் பெருக்கினால் ஜீரோதானே.

ரேவந்த் பற்களை கடித்துக் கொண்டே "எங்களை தவறான பாதையில் திசை திருப்பி இருக்கீங்க" என்றான் கோபமாக.

அவள் நிதானமான குரலில் "பாருங்க மிஸ்டர் ரேவந்த். நீங்க இண்டர்நேஷனல் செஸ் பிளேயர். சதுரங்கத்தில் கணக்குப் பாடமும் ஊடுருவியிருக்கும் என்பதை நான் உங்களுக்கு சொல்ல வேண்டியதில்லை. எந்த காய் எத்தனாவது ஆட்டத்தில் எந்த கட்டத்தை அடையும் என்று நீங்க எப்போதும் யோசித்துக் கொண்டே இருக்கணும். எல்லாவற்றையும் விட கஷ்டமானது குதிரை. எதிராளியின் குதிரை எந்த திசையில் வேண்டுமானாலும் வந்து நம்ம காயை பலிவாங்கலாம். அதற்கு இருக்கும் பர்மிடேஷன் அண்ட் காம்பிநேஷன்ஸ் வேறு எந்த காய்க்கும் இல்லை. சதுரங்கத்தில் அத்தனை கோணங்களில் யோசிக்கக் கூடிய நீங்க 9–1 என்று மட்டுமே யோசித்தீங்க. 8–0 வாக இருக்கலாம் என்று யோசிக்காதது வருத்தத்திற்குரிய விஷயம் தான்."

ரேவந்திற்கு என்ன பேசுவதென்றே புரியவில்லை. "நீங்க சொன்னதில் ஓரளவுக்கு நியாயம் இருக்கு" என்றான்.

"இது வரையில் இரண்டு வாய்ப்புகளை கொடுத்தேன். பெயரையும் கண்டுபிடிக்க முடியவில்லை. டெலிபோன் நம்பரையும் உங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை" என்றாள்.

"நம்பரை விடுங்க. பெயர் விஷயத்தில் நீங்க செய்தது ரொம்பவும் சரியில்லை. ஒரே ஒரு எழுத்தை வைத்துக் கொண்டு யாராலும் கண்டுபிடிக்க முடியாது."

மறுமுனையிலிருந்து சிரிப்பு சத்தம் கேட்டது.

"ஏன் அப்படி நினைக்கறீங்க?"

"கிட்டத்தட்ட எண்பது பெயர்கள் வரையில் சொல்லியிருப்பேன். அதில் உங்க பெயர் இல்லை என்றால் உங்களுடைய பெயர் ரொம்பவும் வித்தியாசமான பெயராக இருக்க வேண்டும். மனிதர்களால் அதை கண்டுபிடிக்க முடியாது."

மறுமுனையில் அலைஅலையாக சிரிக்கும் ஒலி. "நீங்க ரொம்ப வேடிக்கையாக பேசறீங்க ரேவந்த். என்னுடைய பெயர் உங்க பெயரைப் போன்று அழகானதும், வித்தியாசமானதும் இல்லை."

ரேவந்த் பெருமையுடன் தலையை அசைத்தான். அவனுக்கு தன்னுடைய பெயர் ரொம்பவும் பிடிக்கும். அந்தப் பெயரை வைத்ததற்கு பெற்றோர்களை எப்போதும் பாராட்டிக் கொண்டே இருப்பான். அந்த விஷயத்தை போனில் அவளிடமும் சொன்னான்.

"உங்களுக்கு இவ்வளவு அழகான பெயரை வைத்த உங்க பெற்றோர்களை பாராட்ட வேண்டியதுதான். ஆனால்

பெயர் சூட்டுவதற்கு முன் அவர்கள் ஒருமுறை அகராதியை புரட்டிப் பார்த்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்."

ரேவந்த் குழப்பமடைந்தவனாய் "ஏன் அப்படி சொல்றீங்க?" என்றான்.

"என்ன ரேவந்த்? இந்த இருபத்தி ஐந்து வயதில் உங்க பெருக்கு அர்த்தம் என்னவென்று தெரிந்து கொள்ள விரும்பவில்லையா நீங்க?"

ரேவந்த் பதில் பேசவில்லை.

"அப்புறமாய் போன் செய்கிறேன். இதற்குள் உங்க பெயரின் அர்த்தத்தை கண்டுபிடித்து வைய்யுங்க. அதைப் பற்றி விரிவாக பேசலாம்" என்று போனை வைத்து விட்டாள்.

விஷயம் புரியாத ஜேம்ஸ் "என்ன சமாச்சாரம்?" என்று கேட்டான்.

"ரேவந்த் என்றால் அர்த்தம் என்ன?"

"அவ்வளவு புலமை தமிழில் இருந்தால் கதைகளை, நாவல்களை எழுதிக் கொண்டு பிழைத்திருக்க மாட்டேனா? ஆயிரம் ரூபாய்க்கு வேலை பார்க்க வேண்டிய தலையெழுத்து எனக்கு ஏன்?"

ரேவந்த் எழுந்து கொண்டே "வா போகலாம்" என்றான்.

"எங்கே?"

"விளம்பரப் பிரிவுக்கு."

பெனின்சுலா கம்பெனி பெண்களுக்குத் தேவையான அலங்காரப் பொருட்களை, உள்ளாடைகளை தயாரித்து விற்பனை செய்யும் நிறுவனம். பொருட்களுக்கு பெயர்களை சூட்டுவதற்கும், விளம்பரம் செய்வதற்கும் தனிப்பிரிவு இருந்தது. சரளா என்ற பெண் அந்தப் பிரிவுக்கு தலைவியாக

இருந்தாள். விளம்பரங்களில் வரும் பெண்களைப் போலவே அழகாக இருப்பாள்.

ரேவந்த், ஜேம்ஸ் வருவதை பார்த்து விட்டு எழுந்து நின்று "வெல்கம் சார்" என்றாள். அஸிஸ்டெண்ட் சீஃப் சுயமாய் தன் பகுதிக்கு வந்தது அவளுக்கு வியப்பாக இருந்தது. டிசைன் வரைந்து கொண்டிருந்தவர்கள், படங்களைக் கத்தரித்துக் கொண்டிருந்தவர்கள் தங்கள் வேலையில் ஆழ்ந்திருந்தார்கள்.

"அகராதியை எடுத்துத்தர முடியுமா மேடம்?" ரேவந்த் கேட்டான்.

அவள் வியப்புடன் அகராதியை எடுத்துக் கொடுத்தாள். உண்மையில் அவன் தன் பியூனை அனுப்பி வரவழைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் அவன் பக்கங்களை புரட்டிய வேகத்தைப் பார்த்தால் ரொம்ப பரபரப்பில் இருப்பது போல் தோன்றியது. ர..ரி..ரு..ரூ...ரே என்ற எழுத்தில் நின்று ஆள் காட்டி விரலை நகர்த்திக் கொண்டே போனான்.

'ரேவந்த்' என்ற எழுத்தில் அவன் கை நின்றது. பதட்டத்தில் கை லேசாக நடுங்கியது. அதன் பொருளைப் பார்த்ததும் முகம் வெளிறிவிட்டது. நண்பனின் முகத்தில் நிறம் மாறியதை கவனித்த ஜேம்ஸ் "என்ன ஆச்சு?" என்று குனிந்து அகராதியைப் பார்த்தான். ரேவந்த் என்ற வார்த்தையின் பொருளை படித்து விட்டு கையால் வாயைப் பொத்திக் கொண்டு சிரிக்கத் தொடங்கினான்.

இருவரையும் பார்த்து முன்னுக்கு வந்த சரளா "என்ன விஷயம் சார்?" என்று கேட்டாள். ஜேம்ஸ் ஏதோ சொல்ல வந்த போது ரேவந்த் தடுத்துவிட்டு "போதும். வா போகலாம்" என்று வலுக்கட்டாயமாக வெளியே இழுத்து வந்தான்.

வெளியில் வந்த பிறகும் ஜேம்ஸ் சிரித்துக் கொண்டே "அந்தப் பெண் யாரோ தெரியவில்லை. கணக்கை மட்டுமே இல்லை. தமிழையும் கரைத்துக் குடித்திருப்பாள் போலிருக்கு" என்றான்.

ரேவந்த் பதில் பேசவில்லை. அவன் முகம் ரோஷத்தில் செம்மை ஏறியிருந்தது. தன் பெயரை மாற்றிக் கொண்டு விட்டால் என்ன என்று யோசிக்கத் தொடங்கினான்.

# 4

"அந்நியர்கள் உள்ளே நுழையக் கூடாது.
உத்தரவின்றி நுழைபவர்கள் தண்டிக்கப்படுவார்கள்."

கேட்டின் மேல் எழுதியிருந்த பலகைக்கு பக்கத்தில் ஸ்டூலைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்த கூர்க்கா சுவற்றில் சாய்ந்து தூங்கிக்கொண்டிருந்தான் அவனுடைய தூக்கம் கலையாதவாறு அவனைத் தாண்டிக் கொண்டு உள்ளே நுழைந்தாள் சுலோசனா.

அவனைப் பார்த்தால் அவளுக்கு சிரிப்புதான் வந்தது. "உனக்கு சம்பளம் கொடுப்பது எதுக்காக?" என்று கேட்டால், "இங்கே வேலை செய்பவர்களும், ஆப்ரேடர்களையும் தவிர வேறு யாராவது என்னைத் தாண்டி உள்ளே போனால் கேளுங்கள்" என்று தயங்காமல் பதில் சொல்வான். ஆனால் சில சமயம் பார்த்தும் பார்க்காமல் காதலியைத் தேடிக் கொண்டு வரும் காதலர்களை உள்ளே போக அனு மதிப்பான்.

அது எட்டடுக்கு கட்டடம்.

டெலிபோன் எக்ஸ்சேஞ்ச். கீழே இரண்டு மாடிகளிலும் லோக்கல் ஆட்டோமேடிக் எக்ஸ்சேஞ்சும் அதற்கு அடுத்த இரண்டு மாடிகளில் நிர்வாக அலுவலகமும் இருந்தன. ஐந்தாவது மாடியில் எமர்ஜென்ஸி ஸ்டாஃப் குவார்டர்கள், ஆறாவது மாடியில் லோக்கல் சர்வீஸெஸ், ஏழாவது மாடியில் டிரங்க் சர்வீசும் இருந்தன. எட்டாவது மாடியில் என்ன இருக்கிறதென்று அவளுக்குத் தெரியாது. அவள் அங்கு போனதில்லை.

அவள் லிஃப்ட் அருகில் வந்து நின்றாள். அது வருவதற்கு வழக்கம் போல் ஐந்து நிமிடங்கள் பிடித்தன.

"ஹலோ" என்ற குரலைக் கேட்டு திரும்பினாள். பக்கத்தில் அனுசூயா மூன்று மாதக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு நின்றிருந்தாள். சுலோசனா பார்வையாலேயே குசலம் விசாரித்தாள்.

லிஃப்ட் முதல் மாடியை வந்தடைந்ததும் அனுசூயா போய் குழந்தையை க்ரெச்சில் விட்டு விட்டு வந்தாள். எது செய்தாலும் செய்யாவிட்டாலும் டெலிபோன் டிபார்ட் மெண்ட் பெண் ஊழியர்களுக்கென்று இந்த உதவியை செய்திருக்கிறது. அதற்காக கொஞ்சம் பணம் வசூல் செய்யக் கூடும். அது வேறு விஷயம்.

லிஃப்ட் பையனுக்கு சுலோசனா, அனுசூயா இருவரையும் நன்றாகத் தெரியும். பல வருடங்களாய் அவனும், அவர்களும் அங்கே அதே வேலையை செய்து கொண்டிருந்தார்கள்.

லிஃப்ட் பையனுக்காவது பதவி உயர்வு கிடைக்கலாமோ என்னவோ. ஆனால் ஒரு டெலிபோன் ஆபரேடர் வாழ்நாள் முழுவதும் ஆபரேடர் ஆகத்தான் இருக்க நேரும். அதிகமாக போனால் லோயர் செலக்ஷன் கிரேட் சூப்பர்வைசர் ஆகலாம். இப்பொழுதோ எல்லா எக்ஸ்சேஞ்சுகளும் ஒன்றாக

சேர்ந்து விட்ட பிறகு பதவி உயர்வைப் பற்றி கனவில் கூட நினைக்க முடியாது. சுலோசனா பன்னிரெண்டு ஆண்டுகளாய் டெலிபோன் ஆபரேட்டராக இருந்து வருகிறாள். அதற்குச் சான்று அவளுடைய ஆள்காட்டி விரல்தான்.

அவளுடைய ஆள்காட்டி விரல் நகத்திற்குச் சற்றுக் கீழே டயலைத் திருப்பித் திருப்பி ரத்த ஓட்டம் நின்று போய் சதையானது கெட்டிப்பட்டு காய்த்து விட்டது. பெரும் பாலான ஆபரேட்டர்களிடையே இது தென்படும். வெளியில் தென்படாதது மற்றொன்று இருக்கிறது. அதுதான் முதுகு வலி!

பட்டறையில் நெருப்பிற்கு முன்னால் உட்காரும் கொல்லன் குளிர்ந்த காற்றுக்காகச் சற்று வெளியே வருவான். கவனம் சிதறாமல் ஆபரேஷன் செய்யும் ஒரு டாக்டர் அது முடிவடைந்ததும் ஓய்வெடுத்துக் கொள்வார் ஆனால் ஒவ்வொரு வினாடியும் இயந்திரம் போல் வேலை செய்யும் ஆபரேட்டர் தன் காதுகளிலிருந்து ஹெட்போனைச் சற்று எடுத்து வைத்து விட்டு நாற்காலியை விட்டு எழுந்து கொள்ள வேண்டும் என்றால், அதற்கு சில முன்னேற்பாடு களை செய்ய வேண்டியிருக்கும். நாளுக்கு ஏழு மணி நேரம் பேசிக் கொண்டே இருக்க வேண்டும். விரல்களை சுழற்றிக் கொண்டே இருக்க வேண்டும். நாட்கள் நகர்ந்து மாதங்கள் ஆகும். மாதங்கள் கடந்து வருடங்கள்! பிறகு இளமை போய் முதுமை வந்துவிடும். அந்த முதுமையில் “லும்பாகோ” நோயும் வந்துவிடும்.

வேலையில் சேர்ந்த புதிதில் அவளுக்கு அடிக்கடி வினோதமான கனவுகள் வந்துகொண்டிருந்தன. டயல் தானாகவே சுழலுவது போலவும், ஹெட் போன்ஸ் நழுவுவது போலவும் வேடிக்கையான கனவுகள். தூக்கத்திலேயே “ஹலோ! டிரங்க் புக்கிங் ப்ளீஸ்” என்றோ, “லோக்கல்

அசிஸ்டெண்ஸ் சார்" என்றோ புலம்புவாள். தட்டி எழுப்பி "ஏதாவது கெட்ட கனவு வந்ததா?" என்று கேட்பதற்கு யாரும் இருக்க மாட்டார்கள். வேலை பழக்கப்பட்டுப் போன பிறகு பழக்கம் வந்து சேர்ந்து விட்டது. ஆள்காட்டி விரலால் காற்றில் டயல் செய்யத் தொடங்கினாள். நாள் தோறும் ஏழுமணி நேரம் டயல் செய்து கொண்டிருந்தாலும் சரி, புத்தகம் படித்துக் கொண்டிருந்தாலும் சரி காற்றில் ஆள் காட்டி விரலை சுழற்றுவது வழக்கமாகி விட்டது. திருமணம் ஆகாத முப்பத்தைந்து வயது பெண் ஒருத்தி அடிக்கடி ஆள் காட்டி விரலை அப்படி அசைப்பது தவறான அபிப்பிராயங்களுக்கு இடம் கொடுக்கக் கூடும் என்று தெரிந்தாலும் அவளால் அந்தப் பழக்கத்திலிருந்து விடுபடமுடியவில்லை.

அவளுக்கு ஆண்களைக் கண்டாலே வெறுப்பு. அதற்குப் பல காரணங்கள். இந்த வெறுப்பு திடீரென்று ஒரு நாளில் ஏற்பட்டது இல்லை. கொஞ்சம் கொஞ்சமாய் சேர்ந்து புரையோடிவிட்டது. அவளிடமிருந்து மென்மையான உணர்வுகளை தொலைபேசி அழைப்புகள் கொன்று விட்டன. போனில் கேட்ட ஆண்களின் குரல்கள் அவளுள் இருந்த பெண்மைக்கே இயல்பாக அன்பை, காதலை சமாதியாக்கிவிட்டன.

"இந்த உலகில் எல்லோரும் கெட்டவர்கள் தான். ஏதோ ஒரு சிலர் நல்லவர்களாக இருப்பதற்குக் காரணம் அவர்களுக்குக் கெட்டுப் போக வழி தெரியாததுதான்" என்று எங்கேயோ படித்திருக்கிறாள். போனில் பேசும் ஆண்களைப் பொறுத்த வரை அது நூற்றுக்கு நூறு சதவீதம் உண்மைதான்.

ஆபரேட்டரின் குரலை கேட்டதும் அந்தக் குரலுக்குடைய பெண் எளிதில் கீழ் படிந்து விடுவாள் என்று நினைத்து உரையாடலைத் தொடங்குவார்கள்.

சில சமயம் வெறுப்பு ஏற்படும். கோபமும், இயலாமையும் கூடத் தோன்றும். ஆனாலும் வெளியில் காட்டிக் கொள்ளக் கூடாது.

"கோட் ஆஃப் காண்டக்ட்" என்று விதிமுறை இருக்கிறது.

டெலிபோன் வைத்திருப்பவர்கள் கோபமாக ஏதாவது பேசினாலும் பொறுமையுடன் பதிலளிக்க வேண்டும் என்பது தான் அது. ஆபரேட்டர்ஸ் கடைபிடிக்கும் இந்த பண்பை, இனிய சிரிப்பை போன் வைத்திருப்பவர்களில் சிலர் வேறுவிதமாகப் புரிந்து கொள்வார்கள். முக்கியமாக ஆபீசுகளிலும், ஒட்டல்களிலும் பணிபுரியும் ஆண் ரிசெப்ஷனிஸ்டுகளும், ஆண் ஆபரேட்டர்களும்.

லிஃப்ட் ஆறாவது தளத்தில் வந்து நின்றது. கதவைத் திறந்து கொண்டது. "வரேன்" என்று சொல்லி விட்டு அனுசூயா வெளியேறினாள். யோசனைகளிலிருந்து மீண்ட சுலோசனா தலையை அசைத்தாள். அவள் போனதும் லிஃப்ட் நகர்ந்தது.

மறுபடியும் எண்ணங்கள்!

ஆண்கள்பால் சுலோசனாவுக்கு இவ்வளவு வெறுப்பு ஏற்படுத்துவதற்கு அனுசூயாவின் வாழ்க்கைக் கூட ஒரு காரணம் என்று சொல்லாம். அனுசூயா கலகலப்பான, புத்திசாலியான பெண். திருமணத்திற்கு முன்பே இரண்டு ஆண்டுகள் சர்வீஸ் முடித்திருந்தாள். கணவன் சந்தேகப் பேர்வழி. மனைவி டெலிபோன் எக்ஸ்சேஞ்சில் வேலை செய்வது பிடிக்கவில்லை. வர சம்பளத்தையும் விட மனம் இல்லை. ஏதோ தியாகம் செய்வது போல் பேசுவான். நைட் ட்யூட்டியை கேன்சல் செய்து கொள்ளச் சொல்வான். அது எப்படி சாத்தியப்படும்?

இரவு ஷிஃப்ட் முடித்து விட்டு வீட்டுக்குப் போக முடியாதவர்களுக்காக டார்மெடரீஸ் இருக்கும்.

எக்ஸ்சேஞ்சில் ஷைலஜா என்ற குறும்புப் பெண் ஒருத்தி இருந்தாள். ஒரு நாள் இரவு திரில்லுக்காக கூர்க்காவை ஏமாற்றி பக்கத்திலேயே இருந்த ரெஸ்டாரெண்டுக்கு தேநீர் அருந்த அனுசூயாவையும் அழைத்துச் சென்றாள். அதுதான் அவள் குடித்தனத்தை மூழ்கச் செய்து விட்டது. இரண்டாவது ஆட்டம் சினிமாவிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த கணவனுக்கு மனைவியை நள்ளிரவு நேரத்தில் சாலையில் பார்த்ததும் மனதில் சந்தேகம் ஏற்பட்டது. நாட்கள் போகப் போக தலைவிரித்தாடத் தொடங்கியது. அவர்கள் விவாகரத்து பெற்றுக் கொள்ளும் போது அனுசூயா மூன்று மாத கர்ப்பிணி. அன்று சுலோசனா வெறுப்போடு சொன்னாள்.

“கற்பு என்பது போனில் பேசுவதாலும், நைட் ட்யூட்டி செய்வதாலும் போகாது. உன் முன்னாள் கணவனை ஒருமுறை எக்ஸ்சேஞ்சிற்கு வரச் சொல்லு. 181ல் உட்கார வைத்து எத்தனை பேர் பெரிய இடத்துக் குடும்பப் பெண்கள் மதிய நேரம் முழுவதும் போனில் மானசீகமாய் விபச்சாரம் செய்து வருகிறார்கள் என்பதை கேட்கச் செய்கிறேன்.”

இப்படிப்பட்ட மனிதர்கள் நிறைந்த சூழ்நிலை... தனிமையான வாழ்க்கை ஏற்படுத்திய விரக்தி... இவற்றையும் அவளை மகிழ்விப்பது அவளுடைய குரல்தான். போனில் எவ்வளவோ இனிமையாக ஒலித்து மறுமுனையில் இருப்பவர்களை எளிதாகக் கவர்ந்து விடும். அவளுடைய உருவத்தைப் பார்க்காதவர்கள் குரலைக் கேட்டு அவளிடம் அறிமுகம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ஆர்வத்தோடு முயன்று வாங்கிக் கட்டிக் கொள்வார்கள். உலகத்தின் மீது தனக்கு இருக்கும் வெறுப்பை தனக்கு உட்பட்ட எல்லையில் முடிந்த வரையில் இந்த விதமாக தீர்த்துக் கொள்வாள். அதனால் அவளை சாடிஸ்ட் என்று நினைத்து விட முடியாது. பகை.. பகை.. பகை அவ்வளவுதான்.

லிஃப்ட் ஏழாவது தளத்தில் நின்றது. அவள் லாக்கர் அருகில் சென்று தன்னுடைய ஹேண்ட் பேக்கை உள்ளே வைத்து விட்டு ஹாலுக்குள் சென்றாள். ஏ.சி.ஹால் சில்லென்று இருந்தது. முன்பெல்லாம் டிபார்ட்மெண்டில் எந்த செக்ஷன் கேட்டாலும் தந்து கொண்டிருந்தார்கள். எல்லோரும் **181** (டிரங்க் அஸிஸ்டென்ஸ்) கேட்டுக் கொள்வார்கள். அங்கிருந்து நமக்கு வேண்டிய போன்களை செய்து கொள்ள முடியும். ஆனால் அப்சர்வேஷன் செல் உறையாடலை டேப் செய்து மெமோ கொடுக்கும் வாய்ப்பு கூட இல்லாமல் இல்லை. **180**ல் (டிரங்க் புக்கிங்) வேலை நிறைய இருக்கும். அதிலும் பத்துமணி ஆகி விட்டது என்றால் போன்கால்கள் மழையாய் பொழியத் தொடங்கிவிடும். தன் மீது இந்த உலகம் இந்த அளவுக்கு சார்ந்திருப்பது அவளுக்கு விநோதமாக இருக்கும். திடீரென்று இந்த போன்கள் வேலை செய்வது நின்று விட்டால் என்ன ஆகும்? மனித வாழ்க்கையே ஸ்தம்பித்துப் போய் விடாதா?

உள்ளூர சிரித்துக் கொண்டே அடெண்டென்ஸ் ரிஜிஸ்டரில் கையெழுத்து போடப்போனாள். தன்னுடைய பெயரைப் பார்த்து நின்று விட்டாள்.

"லோசனா" என்றால் கண்கள். சுலோசனா என்றால் அழகான கண்கள் உடையவள் என்று அர்த்தம். உடனே போய் கண்ணாடியில் தன் கண்களை பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற விருப்பம் ஏற்பட்டது. ஆனால் சூப்ரவைசர் கோபித்துக் கொள்ளப் போகிறானே என்று அந்த எண்ணத்தை கை விட்டாள். அவளுடையது அன்று **181** செக்ஷன். வேலை கொஞ்சம் குறைவாக இருக்கும். அதுவே **199** ஆக இருந்தால் லோகல் அசிஸ்டென்ஸுக்கு நாள் ஒன்றுக்கு பதினாறு ஆயிரம் கால்கள் வரையில் வரும். ஒவ்வொரு ஆபரேடரும் மணிக்கு அறுபது கால்கள் வரையில் அடெண்ட் பண்ண வேண்டும். ஒருமுறை அவள்

199ல் இருந்த போது பத்து மணியிலிருந்து ஒரு மணி வரையில் நானூற்றி இரண்டு கால்களை அடெண்ட் செய்தாள். ரிக்கார்ட் பிரேக் அது.

"என்ன யோசிக்கிறாய்?"

அவள் திடுக்கிட்டு பிறகு முறுவலித்தாள். "ஒன்றுமில்லை" என்று முன்னால் இருந்தவளை ரிலீவ் செய்து விட்டு உட்கார்ந்து கொண்டாள்.

ஏழு மணி இருபது நிமிடம். வாழ்க்கையில் இன்னொரு நாள் கழிந்து விடும்.

"மேடம்! திஸ் ஈஸ் டூ பைவ் டூ சிக்ஸ் ஒன் டூ ஃபோர். பம்பாய் கால் புக் செய்து இரண்டு மணி நேரம் ஆகிறது. பொசிஷன் சொல்ல முடியுமா?"

"எஸ்.டி.டி. விஷயம் யாரிடம் கேட்க வேண்டும்? உங்களை இல்லையா?"

இவ்விதமாக இன்னொரு நாள் தொடங்கி விட்டது என்று நினைத்துக் கொண்டே அவள் பாடரை ஆன் செய்தாள்.

அந்த நாள் மற்ற நாட்களை போல் இல்லை என்றும் புதுமையாக ஏதோ நடக்கப் போகிறதென்றும் அவள் அந்த நிமிடம் ஊகித்திருக்கவில்லை.

# 5

"எங்கேயோ துப்பறியும் நாவலில் படித்திருக்கிறேன். நமக்கு வரும் போன்கால்கள் எங்கிருந்து வருகிறதோ போலீசாரால் கண்டு பிடித்து விட முடியுமாம்."

"அதெல்லாம் கதைகளில்தான் நடக்கும்." ஏமாற்றத்துடன் சொன்னான் ரேவந்த்.

"இல்லை பிரதர். டெலிபோன் டாக்கிங் சிஸ்டம் என்று ஒரு வழி இருக்கிறதாம். நாம் போலீசாரின் உதவியை நாடுவோம்."

"இதென்ன கிரிமினல் கேஸா என்ன? ரிப்போர்ட் என்னவென்று தருவோம்?".

"போகட்டும். பிரைவேட் டிடெக்டிவ் மூலமாய் முயற்சி செய்தால்?"

"மூடுவாயை!"

"எதுவாக இருந்தாலும் நாம் ஒருமுறை முயன்று பார்ப்பதில் தவறு இல்லையே?" என்று போனை எடுத்துக் கொண்டு டயல் செய்தான் ஜேம்ஸ்.

"ஹலோ!" மறுமுனையிலிருந்து கேட்டது.

ரேவந்த் கலவரமடைந்தவனாய் நாற்காலியை விட்டு எழுந்துகொண்டே "யாருக்குச் செய்கிறாய்? போலீஸ் ஸ்டேஷனுக்கா?" என்று கேட்டான். ஜேம்ஸ் பேசாதே என்பது போல் ஜாடை காட்டி விட்டுப் போனில் உரையாடலைத் தொடர்ந்தான்.

"எங்களுக்கு ஒரு உதவி தேவைப்படுகிறது. டெலிபோனுக்கு சம்பந்தப்பட்ட தகவல். நீங்க டிரங்க் அசிஸ்டென்ஸா? பி.ஆர்.ஓ.வுக்கு போன் செய்யச் சொல்றீங்களா? எதுக்குங்க? ஒரு நிமிடத்தில் நீங்களே சொல்லி விடலாம். போனை வைத்து விடாதீங்க ப்ளீஸ். உங்கள் விரலைப் போலவே இதயமும் மென்மையானது என்று எங்களுக்குத் தெரியும். நல்ல ஆள்தான் போங்க. தவறாக நினைத்துக்காதீங்க. இன்னும் விஷயமே சொல்லாமல் பேசிக் கொண்டே போகிறேன்."

கேட்டுக் கொண்டிருந்த ரேவந்த் 'டேய் இடியட்! உண்மையிலேயே நீ அரசியலில் இருக்க வேண்டியவன்' என்று நினைத்துக் கொண்டான்.

"ஆமாம். எங்க போனில்...அது வந்து பிளாக் மெயில் இல்லைங்க. நான் இருக்கிற லட்சணத்திற்கு எந்தப் பெண் எனக்கு போன் செய்யப் போகிறாள்? என் நண்பன் ரேவந்த் இண்டர்நேஷனல் செஸ் பிளேயர். அவனுடைய அபிமானி ஒருத்தி பெயரைச் சொல்லாமலேயே போன் செய்கிறாள். அவள் எந்த நம்பரிலிருந்து போன் செய்கிறாள் என்று கண்டு பிடிக்கணும். அவ்வளவுதான். ஓஹோ! போலீசார் செய்ய மாட்டாங்களா? ஆமாம். அவர்களுக்கு இதுதான் வேலையா என்ன? போகட்டும் நீங்களே ஒரு யோசனை சொல்லுங்களேன். புகார் யாருக்குக் கொடுக்கணும்? 'ஜெனரல் மேனேஜர் டெலிபோன்ஸ்'. ஒரு நிமிடம் மேடம். குறித்துக் கொண்டு விடுகிறேன். தாங்க்யூ. வெச்சுடறேன். பை தி பை, 'உங்களைப் போன்ற பரோபகாரிகளும், தியாக மூர்த்திகளும் கொண்ட இலாகா வாழ்க" என்று போனை வைத்து விட்டான்.

போன் தொடர்பை துண்டித்துவிட்டு சுலோசனா நாற்காலியில் பின்னால் சாய்ந்து கொண்டு விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினாள்.

ரொம்ப நாட்களுக்குப் பிறகு மனபூர்வமாக. "என்ன? உனக்கு நீயே சிரித்துக் கொள்கிறாள்?" ஷைலஜா கேட்டாள்.

"ஒன்றுமில்லை. யாருக்கோ உதவி தேவை என்பதால் செய்தேன். டிரங்க் அசிஸ்டென்ஸ் இல்லை. பர்சனல் ஹெல்ப்" என்று போன்காலை ட்ராப் செய்வதைப் பற்றிச் சொன்னாள். அவ்விருவரும் பேசிக் கொண்டிருந்த போது சூப்ரவைசர் மங்களா வந்தாள். அவளுக்கு வயது நாற்பதுக்கு மேல் இருக்கும். இரட்டை நாடி தேகம். அவ்விருவரும் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்து விட்டு முகத்தைச் சுளித்தாள். "போர்டைப் பாரு. கால்ஸ் காத்துக் கிட்டு இருக்கிறாப் போலிருக்கு" என்றாள் ஷைலஜாவிடம். அவள் குரலில் ஒழுங்கு நடவடிக்கையை விட தன் அதிகாரத்தைக் காட்டிக் கொள்ள வேண்டும் என்ற தவிப்பு தான் அதிகமாய் இருந்தது.

ஷைலஜா அலட்சியமாய் தலையை அசைத்து விட்டு போர்ட் பக்கம் திரும்பினாள்.

சுலோசனாவுக்கு சிரிப்புத்தான் வந்தது. ஷைலஜா வுக்கும் அந்த அம்மாளுக்கும் ஒரு நிமிடம் கூட ஒத்துப் போகாது. ரொம்ப நாட்களுக்கு முன்னால் ஒரு சம்பவம் நடந்தது. சைலஜா அன்று 102ல் இருந்தாள். ஒரு பையன் அவளை போனில் ரொம்ப தொந்தரவு செய்து கொண்டிருந்தான். அவளுடைய குரல் இனிமையாக இருக்கிறதென்றும், அவளைப் பார்க்காவிட்டால் தற்கொலை செய்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்று புலம்பினான்.

சாதாரணமாக ஆபரேட்டர்கள் இதுபோன்ற கால்களை பொருட்படுத்த மாட்டார்கள். அவர்களுக்கு இது சகஜம்தான். ரொம்பவும் எல்லை மீறிப் போனால் மேலதிகாரியிடம் புகார் செய்வார்கள். அவள் எத்தனை முறை தொடர்பு துண்டித் தாலும் திரும்பத் திரும்ப போன் செய்து கொண்டிருந்தான்.

102ல் போன்காலுக்கு கட்டணம் கிடையாது.

"என்னங்க... நாளை நான் ஊருக்குப் போய் விடுவேன். ப்ளீஸ்... இன்னிக்கு நாம் கட்டாயம் சந்தித்துதான் ஆகணும்" என்று வற்புறுத்தத் தொடங்கினான். கிராமத்தில் அவனுக்கு புகையிலை வியாபாரம் இருக்கிறதாம். பட்டப்படிப்பு படித்திருக்கிறானாம். தன்னைப் பற்றி மேலும் மேலும் விவரங்களைச் சொல்லிக் கொண்டே போனான். ஷைலஜாவுக்கு உடல் பற்றி எரிவது போல் இருந்தது. 'ஊருக்கு திரும்பும் முன் கம்பெனி கொடுக்க வேறுயாரும் கிடைக்கவில்லை போலும்' என்று உள்ளூர கருவினாள். சூப்ரவைசரிடம் சொல்லிவிட்டால் என்ன என்று நினைத்தவள் உடனே அந்த எண்ணத்தை கைவிட்டாள். அவளுடைய சுபாவம் ஷைலஜாவுக்குத் தெரியும். இது போன்ற வாய்ப்பு கிடைத்தால் மறைமுகமாக குத்திக் காட்டிப் பேசுவாள்.

ஷைலஜாவின் மௌனத்தை வேறுவிதமாகப் புரிந்துகொண்ட அந்த இளைஞன் மேலும் முன்னேறினான். இரவு சினிமாவுக்குப் போகலாம் என்றும், டின்னர் பற்றியும் பேசத் தொடங்கினான்.

இனி பொறுமையை கடைபிடிப்பதில் அர்த்தம் இல்லை என்று நினைத்தாள். "உங்களுக்கு என்ன வயது ஆகிறது?" என்று கேட்டாள்.

அவள் அந்த அளவுக்கு ஆர்வம் காட்டியதும் அவன் உற்சாகத்துடன் 'இருபது' என்றான்.

'இருபது வயதுக்கே இப்படி முதிர்ச்சி அடைந்து விட்டாயா?' என்று உள்ளூர நினைத்துக் கொண்டே "எங்கே அழைத்துப் போவதாய் பிளான் வைத்திருக்கீங்க?" என்று கேட்டாள்.

"உங்க ஆபிஸ் முடியும் நேரம் நான் வந்து கேட் அருகில் காத்திருப்பேன். அங்கிருந்து அப்படியே சினிமா–டின்னர். டின்னர் முடிந்த பிறகு... வந்து..." வார்த்தைகளை மென்று விழுங்கினான்.

உள்ளூர எழும்பிய கோபத்தை அடக்கிக் கொண்டே "பின்னே என்னை எப்படி அடையாளம் கண்டு பிடிப்பீங்க?" என்று கேட்டாள்.

"சொல்லுங்க. நீங்க எந்த கலர் புடவையை கட்டியிருக்கீங்க?"

அதற்குள் தோளு பக்கத்தில் "யாருடன் பேசுகிறாய்?" என்ற குரல் கேட்டதும் தொடர்பை துண்டித்தாள். சூப்ரவைசர் மங்களா கொடூரமான பார்வையுடன் ஷைலஜாவைப் பார்த்துக் கொண்டிருந்தாள். கருப்புப் புடவையில் காளி தேவியின் மறுஉருவமாய் அந்த நிமிடம் தென்பட்டாள்.

அவள் கிளம்பிப் போனபிறகு மறுபடியும் போன் ஒலித்தது. "என்ன? டிஸ்கனெக்ட் செய்து விட்டீங்களே?"

"அது வந்து... லைனில் ஏதோ கோளாறு. மாலை ஐந்து மணிக்கு டெலிபோன் எக்ஸ்சேஞ்சுக்கு வந்து விடுங்க. நான் பஸ் ஸ்டாப்பில் நின்றுகொண்டு இருப்பேன். சுலபமாய் அடையாளம் கண்டுபிடித்து விடலாம். இன்னிக்கு கருப்பு நிறப் புடவையை கட்டியிருக்கிறேன். கொஞ்சம் பருமனாக இருப்பேன். என்னைப் பார்த்த பிறகு உங்களுக்கு ஏமாற்றமாக இருக்குமோ என்னவோ. என் வயது நாற்பது."

"அதெல்லாம் ஒன்றுமில்லை. அந்த வயதில் இருப்பவர் களைத்தான் எனக்குப் பிடிக்கும்" என்றான்.

'இடியட்' என்று மனதில் வசைபாடிக் கொண்டே "அப்படியா... ஓ.கே. எப்படி வருவீங்க? ஆட்டோவிலா?" என்றாள்.

"ஆமாம்."

"ஆட்டோவில் நீங்க வந்ததுமே நான் ஏறிக் கொண்டால் நன்றாக இருக்காது. பார்க்கிறவங்க ஏதாவது நினைச்சுப்பாங்க."

"அப்போ என்ன செய்வது?"

"நான் நிற்கும் இடத்தில் ஆட்டோவை நிறுத்தி 'வா மங்களா' என்று குரல் கொடுங்க. பக்கத்தில் யாரும் இல்லாவிட்டால் உடனே வந்துவிடுகிறேன். பக்கத்தில் யாராவது இருந்தால் அறிமுகப்படுத்தி வைக்க முயற்சி செய்கிறேன். நீங்க மட்டும் கொஞ்சம் கூட தாமதம் செய்யாமல் 'கிளம்பு... கிளம்பு. சினிமாவுக்கு நேரமாகி விடும் என்று அவசரப்படுத்துங்க. ஆக மொத்தம் பார்க்கிறவர்களின் கண்களுக்கு நீங்க என்னுடைய நெருங்கிய உறவினர்போல் தென்பட வேண்டும். சினிமாவில் வருவது போல் கையைப் பற்றி இழுக்காத குறையாய் உரிமை கொண்டாடினாலும் பரவாயில்லை. நீங்களும் நானும் சந்தித்துக் கொள்வது இது தான் முதல் தடவை என்ற எண்ணம் யாருக்காவது தெரிந்தால் என் மானமே போய்விடும். அதிலும் அந்தச் சமயத்தில் அந்த இடத்தில் எங்க ஆபீஸ்காரங்க நிறைய பேர் இருப்பாங்க."

"கவலையே படாதீங்க. எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்." உற்சாகமாய் சொன்னான்.

மாலை நேரம் நெருங்க நெருங்க ஷைலஜாவுக்கு பதட்டம் அதிகரித்தது. நடந்ததை எல்லாம் சுலோசனாவிடம் சொன்னாள்.

மாலை ஐந்து மணிக்கு பஸ் ஸ்டாப்பில் அந்த சம்பவம் நிகழ்ந்தது. சூபர்வைசர் மங்களா பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தபோது ஆட்டோ ஒன்று அவள் முன்னால் வந்து நின்றது. மூன்றாவது மாடி கண்ணாடி ஜன்னலிலிருந்து

சுலோசனாவும், ஷைலஜாவும் மூச்சை இழுத்துப் பிடித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அந்த ஆட்டோவிலிருந்து இளைஞன் ஒருவன் இறங்கியது... அவளருகில் சென்று ஏதோ சொன்னதும்... அவள் பதட்டமடைந்து அருகில் இருந்தவள் பக்கம் திரும்பியது... அந்த இளைஞன் மேலும் அருகில் வந்து உரிமையாய் ஏதோ சொன்னது... பளாரென்று அவன் கன்னத்தில் அடி விழுந்தது... எல்லாம் சினிமாவில் வருவது போல் வேகமாய் நடந்து முடிந்து விட்டது.

தொலைவிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த இருவருக்கும் சிரிப்பை அடக்கிக் கொள்ள முடியவில்லை. எல்லாம் முடிந்த பிறகு சுலோசனா ஷைலஜாவை கடிந்து கொண்டாள். "அவள் மட்டும் 102 விஷயம் சொல்லியிருந் தால் உன் வேலை என்னவாகியிருக்கும்?"

ஷைலஜா சிரித்து விட்டாள். "அந்த அளவுக்குக் கூட ரிஸ்க் எடுத்துக் கொள்ளாவிட்டால் வாழ்க்கையில் சுவாரசியம் என்ன இருக்கும்?"

உண்மைதான். இது போன்ற சின்னச் சின்ன நிகழ்ச்சிகள் தான் சுவாரசியமற்ற அந்த வேலையில் கொஞ்சமாவது ஆர்வத்தை ஏற்படுத்துகின்றன.

பகலை விட இரவு ட்யூடியை தான் சுலோசனா அதிகமாக விரும்பினாள். தனிமையான வாழ்க்கை... இரவு நேரத்தின் வெறுமை அவளை அதிகமாக துன்புறுத்தி வந்தன. இரவு வேளையில் வேலையும் குறைவாக இருக்கும். முக்கியமாக ஜீரோ அவர் தாண்டிய பிறகு.

டார்மெடரியில் சரியாக தூக்கம் வராது. வாயாடிப் பெண்கள் மற்றவர்களின் தூக்கத்திற்கு இடைஞ்சலாக விடிய விடிய சத்தமாக பேசிக் கொண்டே இருப்பார்கள்.

ட்யூட்டியில் இருந்தால் காலையில் நான்கு மணிக்கே "wake up calls" தொடங்கிவிடும். சாதாரண நாட்களில் இது

போன்ற கால்கள் எழுநூறுவரையில் இருந்தால் பண்டிகை நாட்களில் இரு மடங்காகி விடும் என்றால் அது மிகை அல்ல. கஸ்டமர்கள் சொன்ன நேரத்தில் சுப்ரபாதம் பாடி அவர்களை எழுப்ப வேண்டும்.

குடிகாரர்களுடன் போனில் பேசுவது வித்தியாசமான அனுபவமாக இருக்கும். ஒருமுறை குடிகாரன் ஒருவன் இரவு இரண்டு மணிக்கு போன் செய்தான். நன்றாக குடித்திருப்பான் போலும். "தூக்கம் வரவில்லை மேடம். நீங்களும் பாட்டைக் கேளுங்கள்" என்று திருவிளையாடல் கேசட்டை போட்டு விட்டு போனுக்கு பக்கத்திலேயே வைத்து விட்டான். வேலை இல்லாத போது அந்த கீயை அழுத்தி விட்டு கேட்டுக் கொண்டிருந்தாள்.

ஒரு முறை டிரங்க் அசிஸ்டென்ஸில் இருந்தாள். லைனில் ஏதோ கோளாறு. போன்கள் சரியாக செயல்பட வில்லை. மறுமுனையில் இருந்து பெண்மணி லைனில் வந்ததும் லோகல் கனெக்ஷனில் ஏற்பட்ட கோளாரை தெரிவித்து விட்டு மறுபடியும் முயற்சி செய்வதாக சொன்னாள். "பரவாயில்லை மேடம். பொறுமையாக முயற்சி செய்யுங்க" என்றாள் அந்தப் பெண்மணி. டில்லியிலிருந்து வந்த கால் அது. கனெக்ஷனை கொடுத்த பிறகு பாதியில் மறுபடியும் டிஸ்கனெக்ட் ஆகி விட்டது. இந்தப் பக்கம் இருந்த அமைச்சர் பதட்டமடைந்து "உடனே லைனை சரி செய்யுங்க. மறுமுனையில் இருப்பது யாரோ இல்லை. பிரதமர்" என்று சொல்லும் வரையில் சுலோசனாவுக்குப் புரியவில்லை, தன்னை மேடம் என்று விளித்தது பிரதமர் இந்திரா காந்தி என்று. உடல் முழுவதும் ஏதோ பதட்டம்... துடிப்பு. வாழ்க்கையில் மறக்க முடியாத அனுபவம் அது.

டிசம்பர் 31ம் தேதி இரவு முன்பின் தெரியாதவர்கள் கூட வாழ்த்துக்களை போனில் தெரிவிப்பார்கள். பழைய

வருடம் போய் புது வருடம் வரும். தான் மட்டும் தூக்க மாத்திரைகளின் உதவியுடன் இரவுகள் விரக்தியாகக் கழித்துக் கொண்டு...

* * *

**அ**சிஸ்டென்ட் இஞ்ஜினியரின் மேஜைக்கு எதிரே அமர்ந்துகொண்டு ரேவந்த் கம்ளெயிண்டை எழுதிக் கொண்டிருந்தான்.

அய்யா,

என் தொலைபேசி எண் **13414**. சமீபத்தில் ஒரு நபர் இந்த நம்பருக்கு போன் செய்து அடிக்கடி என்னை மிரட்டி வருகிறான். இது எனக்கு தொந்தரவாக இருக்கிறது. அந்தபோன் கால் எங்கிருந்து வருகிறதோ தெரிந்து கொண்டு அந்த தொலைபேசியின் எண்ணை எனக்கு தெரிவிக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி.

இப்படிக்கு,

ரேவந்த்.

என்று கையெழுத்திட்டு கொடுத்தான்.

"போலீஸ் கம்ளெயிண்ட் கொடுத்து விட்டீர்களா?"

ரேவந்த் திடுக்கிட்டாலும் உடனே சமாளித்துக் கொண்டு "கொடுத்தாகி விட்டது" என்றான்.

"நாலைந்து நாட்களில் உங்க போனை எடுத்துவிட்டு வேறு ஒரு போனை வைப்போம். அதற்கு ஒரு பட்டன் இருக்கும். உங்களுக்கு அந்த நபர் போன் செய்ததும் அந்த பட்டனை அமுத்துங்கள். நாங்கள் ட்ரேஸ் செய்யும் வரையில் உரையாடலை நீடித்துக் கொண்டிருக்க வேண்டும்.

"எத்தனை நேரம் பிடிக்கும்?"

"உங்களுக்கு வரும் கால் இதே எக்ஸ்சேஞ்ச் ஆக இருந்தால் மூன்று நிடங்கள் போதும். வேறு எக்ஸ்சேஞ்சாக இருந்தால் ஐந்து நிமிடங்கள் ஆகலாம். பத்து நாட்கள் வரையில் இப்படி அப்சர்வேஷனில் வைப்போம். அதற்குள் அந்த பிளாக்மெயிலர் போன் செய்வான் என்று எதிர்பார்ப்போம்."

"பத்து நாட்கள் எதற்கு? தினமும் செய்வாள்" என்று சொல்லி விட்டு நாக்கைக் கடித்துக் கொண்டான்.

"செய்வாள் என்றால் பெண் பிளாக்மெயிலரா?" வியப்புடன் கேட்டார் இஞ்ஜினியர்.

அதற்குள் ரேவந்த் சமாளித்துக் கொண்டு "ஆமாம். சமீபத்தில் பெண்கள் தான் அதிகம் குற்றம் செய்கிறார்கள்" என்று எழுந்து கொண்டான். கைக்குலுக்கி விடை பெற்றுக் கொண்டு வெளியே வந்தான். வரும்போது நினைத்துக் கொண்டான். 'எங்கே போய்விடப் போகிறாய் பெண்ணே. இந்த முறை எப்படித் தப்பித்துக் கொள்வாயோ அதையும் பார்த்து விடுகிறேன்.'

ரேவந்திடமிருந்து கம்ளெயிண்டை பெற்றுக் கொண்ட இஞ்ஜினியரின் பெயர் விஸ்வம். இளைஞன். ரேவந்த் கிளம்பிப் போனதும் அவன் இரண்டாவது தளத்திற்குச் சென்றான். அங்கிருந்த ஸ்விட்ச் ரூம் கதவைத் திறந்ததுதான் தாமதம். அங்கு கேட்ட ஓசைக்கு தன்னையும் அறியாமல் ஒரு அடி பின் வாங்கினான்.

அந்த எக்ஸ்சேஞ்ச் ஏரியாவில் இருந்த எல்லா டெலிபோன்களுக்கும் அந்த அறையில் தான் ஸ்டோர்ஸ் இருந்தது. ரேவந்தின் டெலிபோன் இருந்தது ஸ்ட்ரோ கேர் எக்ஸ்சேஞ்சில். அதைப் தவிர 'மேனுவல்' (Manual) என்றும் கிராஸ்பார் என்று இன்னும் இரண்டு வித எக்ஸ்சேஞ்சுகள் இருந்தன.

தினமும் சுமார் 8,500 டிரங்க் கால்கள் போகும். லோகல் கால்கள் பத்து இலட்சத்திற்கு மேல் இருக்கும். அதுதான் ஸ்விட்ச் ரூமில் அத்தனை இரைச்சல்.

ஸ்விட்ச் ரூமில் வரிசையாய் சுவற்றைப் போன்ற ஃபிளாமெனல்ஸ் இருந்தன. விசுவம் 13414 அருகில் சென்று அந்த பின்னை அப்சர்வேஷனுக்கு எடுத்துக் கொண்டு மானிட்டருக்கு ஏற்பாடு செய்தான். அன்றிலிருந்து ரேவந்தின் போன் கண்காணிப்பில் வைக்கப்பட்டது.

☆ ☆ ☆

**அ**தற்குப் பிறகு இரண்டு நாட்கள் கழித்து அவளிடமிருந்து போன் வந்தது. அந்த இரண்டு நாட்களும் ரேவந்த் ரொம்ப பதட்டத்துடன் கழித்தான். எந்த போன்கால் வந்தாலும் சரி அவனுடைய ஆள்காட்டி விரல் போனில் இருந்த பட்டனை நோக்கிப் போயிற்று.

"ஹலோ!" என்று அவள் குரல் இனிமையாக ஒலித்ததுமே பட்டனை அழுத்தினான். உடனே ஸ்விட்ச் ரூமில் பஸ்ஸர் ஒலித்தது. அடுத்த வினாடி 'பேக்வர்ட் ட்ரேஸிங்' தொடங்கியது.

ரேவந்த் சாகவாசமாக பேசத் தொடங்கினான்.

"நான் என்னுடைய பெயரை மாற்றிக்கொண்டு விடலாம் என்று நினைக்கிறேன்."

"எதுக்கு ரேவந்த்? உங்க பெயர் ரொம்ப நன்றாக இருக்கு. எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு."

"ஆனால் அதனுடைய அர்த்தம்..." என்று இழுத்தான்.

"பரவாயில்லை விடுங்க. எப்படியோ அட்ஜெஸ்ட் செய்து கொண்டால் போச்சு. குப்புசாமி, கண்ணாயிரம் விட நன்றாக இருக்கு இல்லையா."

ரேவந்தின் முகம் கற்றி சிவந்து விட்டது. "இத்தனைக்கும் நீங்க யாரு?" ரோஷத்தை அடக்கிக் கொண்டே கேட்டான்.

"குரலைக் கேட்டதிலிருந்தே பெண் என்று தெரிந்திருக்குமே. நான் மிமிக்ரி செய்பவளும் இல்லை. குரலை மாற்றி பேசுபவளும் இல்லை. பத்தாம் வகுப்பு வரையில் படித்திருக்கிறேன்."

"நீங்க நிச்சயமாக ஒரு பெண் தான். ஆனால் உங்க குவாலிஃபிகேஷன் பத்தாம் வகுப்பு மட்டும் இல்லை. பந்தயம் கட்ட நான் தயார்."

அந்தப் பெண் சிரித்துவிட்டு "ஆமாம். நான் பொய்த்தான் சொன்னேன். போதுமா" என்றாள்.

"நீங்க இப்படி பெயரையும், முகவரியையும் கொடுக்காமல் எதற்காக போன் செய்யறீங்க?"

"இரண்டு க்ளூ கொடுத்தேன். கண்டுபிடிக்க முடியவில்லை என்றால் அது என்னுடைய தவறு இல்லையே."

"இருவரும் சந்தித்துக் கொள்ளாமல் சும்மா இப்படி போனில் பேசுவது டைம் வேஸ்ட் தானே?"

"எதுக்கு சந்திக்க மாட்டோம்? கட்டாயம் சந்தித்துக் கொள்வோம். உங்களுடன் நட்பு வைத்துக் கொள்ள வேண்டும் என்று தானே இப்படி கஷ்டப்பட்டு போன் செய்கிறேன். இடையில் கொஞ்சம் த்ரில் இருக்கட்டுமே என்று தான் போன் செய்கிறேன். இதுவும் வேண்டாம் என்றால் நாளைக்கே உங்க ஆபீசுக்கு வந்து சந்திக்கிறேன்."

"வேண்டாம் விடுங்க. நாளைக்குள் கண்டுபிடிக்க முயற்சி செய்கிறேன்.

"எப்படி?"

"என்னால் முடிந்தவரையில் முயன்று."

"இன்னொரு க்ளூ ஏதாவது கொடுக்கட்டுமா?"

"தேவையில்லை."

"அப்போ போனை வைத்து விடுகிறேன்."

ரேவந்த் பதட்டமடைந்து "வேண்டாம்... வேண்டாம். இன்னும் கொஞ்ச நேரம் ஏதாவது பேசுங்க" என்றான்.

அது வரையில் ஒரு நிமிடம் தான் ஆகியிருந்தது. இன்னும் நான்கு நிமிடங்கள் இருந்தன. இங்கே இந்த உரையாடல் நடைபெறும் போது அங்கே பேக்வர்ட் ட்ரேஸிங் ஆபரேஷன் துரிதமாக நடந்து கொண்டிருந்தது. அசிஸ்டெண்டுகள் இருவர் பாயிண்டுகளை பரிசோதித்துக் கொண்டிருந்தார்கள்.

"உங்களைப் பற்றி எதுவும் தெரியாமல் எப்படி நட்பு ஏற்படுத்திக் கொள்வது?" ரேவந்த் கேட்டான்.

"என்னுடைய விருப்பு வெறுப்புகளை போனிலேயே சொல்கிறேன்."

"ஆனாலும் உங்களைப் பார்க்கணும்."

"எதுக்கு?"

உடனே சொல்ல சரியான காரணம் கிடைக்கவில்லை. "நீங்க யாரோ? எப்படி இருப்பீங்களோ தெரியாமல் எப்படி நட்பு வைத்துக் கொள்வது," சங்கடமாக இருந்தாலும் நேர்மையாகக் கேட்டான்.

"எப்படி இருந்தால் என்ன ரேவந்த்? எந்தப் பெண்ணாக இருந்தாலும் இரண்டு கண்கள் இரண்டு காதுகள் தானே இருக்கும்?"

"ஆனால் சிலரைப் பார்த்தால் சட்டென்று நட்பு ஏற்படுத்திக் கொள்ளத் தோன்றும். வேறு சிலரைப் பார்த்தால் காரணமே இல்லாமல் வெறுப்பு ஏற்படும். நாம் போனில் சில நாட்கள் பேசிக் கொண்ட பிறகு சந்தித்துக் கொள்கிறோம் என்று வையுங்க. அப்பொழுது நான் ஊகித்ததற்கு நேர்மாறாக நீங்க இருந்தால் எனக்கு ஏமாற்றமாக இருக்காதா. இதுக்குப் போய் இரண்டு கண்கள் ஒரு மூக்கு என்ற புள்ளி விவரம் எதற்கு? உணர்வுகளை புள்ளிக் கணக்கில் சொல்வது அவ்வளவு நல்லதில்லை என்று நினைக்கிறேன்.

அவள் ஒரு நிமிடம் மௌனமாக இருந்தாள். பிறகு. "ஒரு சினேகிதியாய் உங்களுக்கு ஏமாற்றமளிக்க மாட்டேன் என்று தான் நினைக்கிறேன் ரேவந்த்" என்றாள்.

"ஏமாற்றம் ஏற்படுத்தமாட்டீங்க என்றால் நல்லதுதான். ஆனால் ஏமாற்றமாக இருக்குமோ என்ற தயக்கத்துடன் நான் வைத்துக் கொள்ளும் நட்பில் நிறைவு இருக்காது. ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளாமல் உருவாகும் 'பேனா நண்பர்களின் நட்பு' அவர்கள் சந்தித்துக் கொண்ட பிறகு தோல்வி அடைவதற்குக் காரணம் கூட இதுதான்."

"மற்றவர்களின் விஷயத்தில் அப்படி நடக்கலாமோ என்னவோ. ஆனால் நம் விஷயத்தில் மட்டும் அப்படி நடக்காது."

"அவ்வளவு கச்சிதமாய் எப்படிச் சொல்றீங்க?"

"இந்தக் கேள்விக்கு பதில் நாம் சந்திக்கும் போது சொல்கிறேன்."

அதற்குப் பிறகு என்ன பேசுவதென்று அவனுக்குத் தெரியவில்லை. மூன்று நிமிடங்கள்தான் ஆகியிருந்தன. இன்னும் இரண்டு நிமிடங்கள் பேச வேண்டும். அதற்குள் அவளே கேட்டாள். "உங்க நண்பர் என்ன சொல்கிறார்?"

"யாரு? ஜேம்ஸா!" ரேவந்த் சொன்னான். "நன்றாகத்தான் இருக்கிறான். அவன் உங்களைப் பற்றி என்ன சொன்னான் தெரியுமா?"

"என்ன சொன்னார்?"

"நீங்க ஒரு சைகிக் கேஸாம். சாதாரணமாக இது போல் போன் செய்கிறவர்களில் குறும்புத்தனமாய் நடந்து கொள்ளும் பெண்கள் ரொம்ப குறைவாக இருப்பார்களாம். பெரும் பாலானவர்கள் தங்கள் மன வேதனையை போக்கிக் கொள்ள இது போன்ற வடிகாலை நாடுவார்களாம்."

"அவர் சொன்னது உண்மைதான். ஆனால் நான் "பெரும்பாலானவர்கள்" பிரிவின் கீழே வரமாட்டேன். "குறைவாக இருப்பவர்கள்" பிரிவில்தான் வருவேன்." ரொம்ப சாதாரணமான குரலில் சொன்னாள்.

ரேவந்திற்கு வியப்பாக இருந்தது. தான் சொன்னது அவளுக்குக் கோபத்தை வரவழைக்கும் என்று எதிர்பார்த் தான். ஆனால் தான் சொன்னதை அப்படியே ஏற்றுக் கொள்வாள் என்று நினைக்கவில்லை. அவளுக்குக் கோபத்தை வரவழைக்க வேண்டு மென்பதும் அவனுடைய எண்ணம். அந்தக் கோபத்தில் தன்னைப் பற்றி சொல்லி விடுவாள் என்று எதிர்பார்ப்பு.

"அப்படியானால் நீங்க குறும்புத் தனமாய் செயல்படும் பெண் என்று சொல்லுங்க."

"இல்லை...இல்லை" என்று சிரித்தாள். விடியற்காலை யில் பால் நிலவு வெளிச்சத்தில் தாவணியை இடுப்பில் சொருகிக் கொண்டு 'மார்க்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளில்' என்று பாடிக் கொண்டே கோலம் போடும் பெண்."

"நிலாப் பெண்! "சட்டென்று சொன்னான்.

"பெயர் நன்றாக இருக்கு."

"இனிமேல் அப்படியே கூப்பிடுகிறேன்.

"எனக்கு ஆட்சேபனை இல்லை" என்றவள் சற்று நிறுத்தி தாழ்ந்த குரலில், "அது சரி. முந்தாநாள் எதற்காக டெலிபோன் எக்ஸ்சேஞ்சிற்குப் போனீங்க ரேவந்த்?" என்று கேட்டாள்.

பக்கத்தில் வெடிகுண்டு வெடித்தாற் போல் அதிர்ச்சி அடைந்தான். "உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"என்ன ரேவந்த்? உங்களுடன் நட்பு ஏற்படுத்திக் கொள்ளும்முன் உங்களுடைய தினசரி நிகழ்ச்சிகளைப் பற்றி தெரிந்து கொள்ளவில்லை என்றால் எப்படி?"

"ஆமாம். சின்ன வேலை இருந்ததால் போனேன்" என்று சொல்லிக் கொண்டிருந்த போதே அவனுக்கு ஒரு யோசனை வந்தது. தான் அவளுடைய போன் நம்பரை கண்டுபிடிக்க முயற்சி செய்வது அவளுக்குத் தெரிந்து விட்டதோ என்னவோ. அதனால் வீட்டிலிருந்து போன் செய்யாமல் வேறு எங்கிருந்தாவது செய்கிறாளோ? அப்படியானால் அங்கே போய்ச் சேரும் வரையில் அவளை அங்கேயே இருக்கும் விதமாக செய்ய வேண்டும். என்ன செய்வது என்று ஒரு நிமிடம் யோசித்தவன் குரலை அப்பாவியாக மாற்றிக் கொண்டு "நீங்க அன்றைக்கு ஒரு கணக்குச் சொன்னீங்க நினைவு இருக்கா? அதே போன்ற கணக்கு இன்னொன்று சொல்லுங்க. அப்போ என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. இந்த முறை கண்டுபிடிக்க முடியுமா என்று பார்க்கிறேன்" என்றான்.

"எது? என் டெலிபோன் நம்பருக்கு சம்பந்தப்பட்ட கணக்கா?"

"ஆமாம். உங்க நம்பரைக் கண்டுபிடிக்கிறேன். ஆனால் எனக்கு ஐந்து நிமிடம் அவகாசம் தேவை" என்றான். அவன்

மனதிலிருக்கும் எண்ணம் வேறு. அவளை எப்படியாவது ஐந்து நிமிடம் வரை அந்தப் போனிடம் நிறுத்தி வைக்க வேண்டும்.

"அந்த நம்பரில் உங்களை திசை திருப்ப வழியிருந்தது. இந்த நம்பருக்கு அது போன்ற சிறப்பு எதுவும் இல்லையே?"

"எந்த நம்பருக்குமே ஏதாவது ஒரு சிறப்பு இல்லாமல் போகாது. முயன்று பாருங்கள் ஊக்குவிப்பது போல் சொன்னான்.

"ஒரு நிமிடம் இருங்கள்." அவள் யோசிப்பது போல் மௌனமாக இருந்துவிட்டாள். ரேவந்த் மூச்சை இழுத்துப் பிடித்துக் காத்திருந்தான்.

"கிடைத்து விட்டது."

"என்ன?" பதட்டத்துடன் கேட்டான்.

"இப்பொ நான் செய்கிற இந்த போன் நம்பர் ரொம்ப வித்தியாசமானது ரேவந்த். ஐந்து நிமிடங்களில் உங்களால் கண்டு பிடிக்க முடியும் என்று நினைக்கிறேன்."

"சொல்லுங்க."

"ஐந்து எண்களுடைய இந்த நம்பர் கணித சாஸ்திரத்தில் முதல் ப்ரைம் நம்பர்" என்று சொல்லி விட்டு போனை வைத்து விட்டான்.

ரேவந்த் போனை வைத்து விட்டான். எக்ஸ்சேஞ்சி லிருந்து உடனே விவரங்களை தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்த் தான். ஆனால் போன் எதுவும் வரவில்லை. பேப்பரையும், பேனாவையும் எடுத்துக் கொண்டான்.

பிரைம் நம்பர் என்றால் எந்த எண்ணாலும் வகுக்க முடியாத எண். உதாரணமாய் இரண்டு எண்களுடைய பிரைம் நம்பர்கள் 11, 13, 17, 19.

இது போன்று ஐந்து எண்கள் கொண்டது அவளுடைய போன் நம்பர். அவன் கணக்குப் போடத்தொடங்கினான். கணிதத்தில் ஐந்து எண்கள் கொண்ட முதல் எண் 10,000. ஆனால் இதை பத்தால் வகுக்க முடியும். அதனால் அவளுடைய டெலிபோன் நம்பர் இது இல்லை.

அடுத்தது 10001. இதை 73ல் வகுக்க முடியும்.

10002. இதை இரண்டால் வகுக்க முடியும்.

அவன் வேகமாக கணக்குப் போடத் தொடங்கினான். நேரம் அதை விட வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. அவனுக்கு ஒன்று மட்டும் ஆச்சரியமாக இருந்தது. அந்தப் பெண் தன்னுடைய போன் நம்பரின் சிறப்பை இவ்வளவு துரிதமாக எப்படிக் கண்டுபிடித்தாள்? அவளுடைய அறிவுத் திறன் கணித மேதை சகுந்தலா தேவிக்கு சமமானதாக இருந்திருக்க வேண்டும்.

அடுத்த எண் 10003. இது ஏழால் வகுக்கப்படும்.

10004, 10005, 10006 வரிசையாய் இரண்டு, மூன்று, இரண்டால் வகுக்கப்படுபவை.

அடுத்த எண் 10007. தொலைபேசி இலாகாவை மனதில் கடிந்து கொண்டே மளமளவென்று கணக்குப் போடத் தொடங்கினான். தனக்கு வேண்டியது அந்த பிரைம் நம்பர் தான் என்று தெரிந்ததும் சந்தோஷ மிகுதியால் 'யுரேகா'! என்று கத்தப் போன போது போன் மணி ஒலித்தது. ரிசீவரை எடுத்து "ஹலோ!" என்றான்.

"டெலிபோன் டிபார்ட்மெண்டலிருந்து பேசுகிறோம். உங்களுக்கு இப்போ வந்த அழைப்பு 10007 நம்பரிலிருந்து. ஹோட்டல் ஹரிபிரியா."

"இன்னும் அரைமணி நேரம் கழித்து சொல்லாமல் போனீங்களே" என்று கோபமாய் போனை வைத்து விட்டு

சட்டென்று எழுந்தான். இன்னும் இரண்டு நிமிடங்கள் தான் இருந்தன.

அவன் வேகமாய் படியிறங்கிக் காரை நோக்கி ஓடினான். ஹோட்டல் ஹரிபிரியா பக்கத்துத் தெருவில் தான் இருந்தது. போய்ச் சேர்ந்த போது மூன்று நிமிடங்கள் ஆகி விட்டது. அவன் நேராக ரிசப்ஷன் அருகில் சென்று "சற்று முன் உங்க ஹோட்டலிலிருந்து ஒரு பெண் போன் செய்தாள். அவள் எங்கே இருக்கிறாள்?" என்று கேட்டான்.

"நீங்க யாரு?"

"சி.ஐ.டி. போலீஸ் கிரைம் பிராஞ்ச். சி.பி.ஐ. என்று வாய்க்கு வந்த பெயரைச் சொன்னான்.

அதைக் கேட்டதும் ரிசப்ஷனிஸ்ட் மிரண்டு விட்டான். "நாங்க பெண்களுக்கு அறையோ, போன்களோ தருவதில்லைங்க" என்றான்.

"இப்போ இந்த நம்பரிலிருந்துதான் எங்களுக்கு போன் வந்தது." குரல் உயர்த்தி அதட்டினான் ரேவந்த்.

ரிஷப்ஸனிஸ்ட் குரலை தாழ்த்திக் கொண்டு **314**ம் நம்பர் அறையில் மட்டும் ஒரு பெண் தங்கியிருக்கிறாள். வந்து ஒரு மணி நேரம் தான் ஆகிறது" என்றான்.

ரேவந்த் மேற்கொண்டு தாமதிக்கவில்லை. லிப்டைக் கூட எதிர்பார்க்காமல் மூன்றாவது மாடியை நோக்கி ஓடினான்.

ரூம் நம்பர் **314** இருட்டாக இருந்தது. கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தான். திடீரென்று வெளிச்சத்தி லிருந்து இருட்டிற்கு வந்ததால் கண்ணுக்கு எதுவும் தென்படவில்லை. தடவிக் கொண்டே சுவிட்சைப் போட்டான்.

அவ்வளவு தான்!

வீலென்று எழும்பப் போன அலறல் தொண்டைக் குழியிலேயே நின்று விட்டது. கைப்பிடிகள் இறுகிக் கொண்டன. அரும்பாடுபட்டுத் தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டே திரும்பினான்.

அப்பொழுதுதான் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் அந்த அறைக்குள் நுழைந்து கொணடிருந்தார். அறையின் நடுவில் பதினாறு வயது இளம்பெண்ணின் பிணம் தொங்கிக் கொண்டிருந்தது.

# 6

ஒரு மணி நேரத்திற்குப் பிறகு ரேவந்த் காவல் நிலையத்தில் தலையைக் கவிழ்ந்துகொண்டு உட்கார்ந்திருந் தான். ரொம்ப நேரம் கடுமையான விசாரணை நடந்தது. அவனுக்கு இருந்த செல்வாக்கும் புகழும் எதற்கும் பயன்படவில்லை.

அந்தப் பெண் யாரோ என்ன பெயரோ தெரியாது. சாவகாசமாக ஹோட்டலில் அறையை எடுத்துக் கொண்டு இன்ஸ்பெக்டருக்கு போன் செய்துவிட்டுப் பிறகு செத்திருந்தாள்.

"நீங்க அந்த அறைக்குப் போக வேண்டிய காரணம் என்ன மிஸ்டர் ரேவந்த்?" இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"தவறுதலாகப் போய் விட்டேன்."

"அப்படி என்றால் எந்த அறைக்குப் போக நினைத்து இந்த அறைக்குப் போனீங்க?"

அந்தக் கேள்விக்கு ரேவந்திடம் பதில் இல்லை.

"ரிசப்ஷனிஸ்ட் கிட்டே நீங்க சி.ஐ.டி. என்று ஏன் சொன்னீங்க. அது குற்றம் இல்லையா?"

ரேவந்த் பதில் பேசவில்லை. தான் வந்த விஷயத்தைச் சொன்னால் வேறு வினையே வேண்டாம். இந்த விசாரணை மேலும் நீடிக்கப்படும். தான் டெலிபோன் இலாகாவிற்கு தந்த கம்ளெயிண்ட் விவரம் வெளிப்பட்டு விடும். சமீபகாலமாய் பெண் ஒருத்தி தன்னை பிளாக்மெயில் செய்து வருவதாக தான் இஞ்ஜினியரிடம் சொன்னதை அப்படியே போலிசாரிடம் சொல்லி விடுவான். தனக்கு அன்று 10007 லிருந்து போன் கால் வந்த விஷயம் தனக்குத் தெரிவித்ததாக சுவிட்ச் ரூம் அஸிஸ்டெண்டுகள் வாக்குமூலம் தருவார்கள். உடனே தான் ஹோட்டல் ஹரிபிரியாவுக்குக் கிளம்பி... அந்த அறையில் இருந்த பெண் பிளாக்மெயிலரை கொன்று விட்டு...

"கோவிந்தா... கோவிந்தா" என்று நினைத்துக் கொண்டான்.

தன் மான மரியாதை, புகழ் எல்லாம் போவது நிச்சயம். அதோடு வேலையும் போய்விடும். இனி ஜெயில் வாழ்க்கை தான்!

"மிஸ்டர் ரேவந்த்! நீங்க எந்தக் கேள்விக்கும் சரியாக பதில் சொல்ல மறுக்கிறீங்க. நீங்க படித்தவர். உங்கள் மீது தர்ட் டிக்ரியை பயன்படுத்துவதில் எனக்கு விருப்பம் இல்லை."

ரேவந்த் திடுக்கிட்டான். குற்றத்தை ஒப்புக் கொள்ளச் சொல்லி இன்ஸ்பெக்டர் தன்னிடம் மறைமுகமாக சொல்கிறார்.

அவனுக்கு தூக்கம் வரவில்லை. தன்னுடைய முட்டாள் தனத்தை நினைத்து தன்மீதே பரிதாபம் ஏற்பட்டது. யாரோ

ஒரு பெண் போன் செய்தால் அவளுக்கு "நிலாப் பெண்" என்று பெயர் சூட்டி அவளைத் தேடுவதற்கு பெரிய ஹீரோவைப் போல் கிளம்பிவிட்டான். இதற்குப் பின்னால் பெரிய கும்பல் ஒன்று இருக்கிறதென்றும் தன்னைச் சுற்றிலும் கவனமாக வலையைப் பின்னுவதற்காகத்தான் இந்த நாடகத்தை நடத்தி இருக்கிறார்கள் என்றும் தெரிந்து கொள்ளாமல் போய் விட்டான். அவர்களுக்குத் தேவையான கொலையை அவர்கள் செய்து விட்டு தன்னை இதில் சிக்க வைத்து விட்டார்கள். அந்தப் பெண்ணின் மேல் இருந்த ஆர்வத்தில் எதையும் கவனிக்காமல் தான் அந்த வலையில் மாட்டிக் கொண்டு விட்டான். தன்னைப் போன்ற முட்டாள் யாருமே இருக்க மாட்டார்கள்.

மேலும் அரைமணி நேரம் விசாரணை நடந்தது. அது வாதவிவாதமாய் மாறியது. இன்ஸ்பெக்டர் கோபமாக "ஓ.கே. மிஸ்டர் ரேவந்த்! மேஜிஸ்ட்ரேட் முன்னால் உங்களைக் கொண்டு போய் நிறுத்துவோம். பிறகு மற்ற விஷயங்களை பார்த்துக் கொள்வோம்" என்றார்.

"நீங்க வருவதற்கு இரண்டு நிமிடங்களுக்கு முன்னால் தான் நான் ஹோட்டல் அறைக்குள் சென்றேன். அந்த விஷயத்தை ரிசப்ஷனிஸ்ட்டை கேட்டால் சொல்வான். அந்த இரண்டு நிமிடங்களுக்குள் நான் கொலையை செய்துவிட்டு தொங்க விட்டிருப்பேன் என்று நினைக்கிறீங்களா?" ஆவேசமாகக் கேட்டான் ரேவந்த்.

இன்ஸ்பெக்டர் நிதானமாக "இந்த தர்க்கத்தை எல்லாம் கோர்ட்டில் சொல்லிக்கொள்ளுங்கள்" என்று கான்ஸ்டபிள் பக்கம் திரும்பி "இவனை லாக்கப்பில் வை" என்றார். அதைக் கேட்டதும் ரேவந்த் சரேலென்று நாற்காலியிலிருந்து எழுந்து கொண்டே "இது அநியாயம்" என்று கத்தினான். "சாட்சியம் சொல்ல வேண்டும் என்று அழைத்து வந்துவிட்டு, என் லாயரைச் சந்திக்கும் அவகாசம் தராமல் என் மீது குற்றம் சுமத்துவதும் அநியாயம்."

இன்ஸ்பெக்டர் கோபமாய் "மிஸ்டர் ரேவந்த்! எந்த வேலையை எப்போ செய்ய வேண்டுமோ எங்களுக்குத் தெரியும்" என்று அதட்டினார்.

அவரை இழுத்து ஒரு அறைவிடவேண்டும் என்ற அளவுக்குக் கோபம் வந்தது ரேவந்திற்கு. அதுவும் மற்றொரு குற்றம் ஆகிவிடும் என்று கட்டுப்படுத்திக் கொண்டான். இயலாமையும், ரோஷமும் ஒன்றாக சேர்ந்து கொள்ள தவியாய் தவித்தான். கண்களிலிருந்து கண்ணீர் வருவது தான் பாக்கி. விளையாட்டாகத் தொடங்கியது பார்த்துக் கொண்டிருந்த போதே வினையாக மாறிவிட்டது. முதலில் அரெஸ்ட்... பிறகு ஜாமின், பிறகு தீர்ப்பு... ஜெயில் வாழ்க்கை...

"வாங்க. போகலாம்." கான்ஸ்டபிள் அருகில் வந்தான்.

ரேவந்த் அவன் பக்கம் குழப்பத்துடன் பார்த்தான். இன்ஸ்பெக்டரின் மேஜைக்குப் பத்தடி தொலைவில் கம்பிகளுக்கு அப்பால் நின்று கொண்டிருந்த பிக்பாக்கெட் கைதி ஒருவன் வேடிக்கை பார்ப்பது போல் சிரித்துக் கொண்டிருந்தான்.

ரேவந்த் எழுந்து கொள்ளாததால் கான்ஸ்டபிள் அவன் தோளைப் பற்றினான்.

"ஒரு ஐநூறை அவங்க முகத்தில் வீசி எறியுங்க. அவங்க வேனிலேயே மாலை மரியாதையோடு வீட்டுக்கு அனுப்பி வைப்பாங்க" என்றான் கைதி. லட்டி வேகமாக வந்து அவன் முகத்தில் விழுந்தது.

இன்ஸ்பெக்டர் ஏளனமாக சிரித்துக் கொண்டிருந்தார்.

வேறு வழியின்றி ரேவந்த் எழுந்துகொண்டான். நடப்பதெல்லாம் கனவா இல்லை நினைவா என்று அவனுக்குப் புரியவில்லை. தூக்கத்தில் நடப்பது போல் லாக்கப்பை நோக்கி நடந்தான்.

நடந்து போய்க் கொண்டிருந்த போது போன் ஒலித்தது.

இன்ஸ்பெக்டர் அலட்சியமாக போனை எடுத்து "ஹலோ! டூ டௌன்" என்றார். ஆனால் அடுத்த நிமிடமே அவருடைய குரலில் திடீரென்று மாறுதல் வந்தது.

சட்டென்று எழுந்து நின்று விரைப்பாக நின்று கொண்டு "யெஸ் சார்" என்றார் நடுங்கும் குரலுடன். அவரிடம் தென்பட்ட மாறுபாட்டை ரேவந்த் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான். இன்ஸ்பெக்டர் நெற்றியில் படிந்த வியர்வையை அடிக்கடி துடைத்துக் கொண்டார். போனைப் பிடித்துக் கொண்டிருந்த கை நடுங்கிக் கொண்டிருந்தது.

"எஸ் சார்... ஆமாம் சார்" என்பதைத் தவிர வேறு எதுவும் அவர் வாயிலிருந்து வரவே இல்லை. அவருடைய போக்கைப் பார்த்தால் மறுமுனையில் இருப்பவர் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸுக்குக் குறைந்த பதவியில் இருக்க முடியாது என்று தோன்றியது.

"இல்லை சார். தற்கொலைன்னு கடிதம் எழுதி வைத்து விட்டுத்தான் இறந்து போயிருக்கிறாள்."

"...."

"ஆமாம் சார். எனக்கு போன் செய்தாள். வாழ்க்கையின் மீது விரக்தி ஏற்பட்டு விட்டதாம்."

"...."

"அப்பொழுது தான் வந்தாராம் சார். ரிசப்ஷனிஸ்ட் சொன்னான்."

"...."

"ஓ.கே. சார். விட்டு விடுகிறேன் சார். பைல் க்ளோஸ் பண்ணி விடுகிறேன். "சட்டென்று போனை வைத்து விட்டு

தன்னையே பார்த்துக்கொண்டிருந்த ரேவந்த் அருகில் சென்று மரியாதையுடன் அழைத்து வந்தார் இன்ஸ்பெக்டர்.

"வாங்க. உட்காருங்க மிஸ்டர் ரேவந்த் வி.ஆர். சாரி. அது தற்கொலையே தான். சந்தேகத்திற்கு உரியச் சூழலில் நீங்க தென்பட்டதால் உங்களை இண்டராகேட் செய்ய வேண்டி வந்தது. நடந்ததை எல்லாம் மறந்து விடுங்க. டூ நாட் ஃபோர்! அய்யாவுக்கு ஒரு காபி எடுத்துக் கொண்டு வா."

ரேவந்திற்கு வியப்பாக இருந்தது. தன்னுடைய குற்ற மற்றத் தன்மை... நேர்மையான தன்னிலை விளக்கம்... கிடைத்த சாட்சியங்கள்... இவை எல்லாவற்றையும் விட ஒரு போன்கால் அதிகப் பலனைத் தந்திருக்கு.

அதற்குள் வெளியே கார் வந்து நின்ற ஓசைக் கேட்டது. ரேவந்த்துடன் இன்ஸ்பெக்டரும் எழுந்துகொண்டு வாசல் வரையில் விடைகொடுக்க வந்தார்.

வெளியே வெய்யிலில் டொயோட்டா பளபளவென்று மின்னிக் கொண்டிருந்தது. டிரைவர் பணிவாய் கார் கதவைத் திறந்து பிடித்துக் கொண்டான். ரேவந்த் உட்கார்ந்து கொண்டதும் இன்ஸ்பெக்டர் கதவைச் சாத்தினார். கார் நகரும் போது ரேவந்த் கேட்டான்.

"உங்களுக்கு போன் செய்தது யாரு?"

"டி.ஐ.ஜி. சார்" இன்ஸ்பெக்டர் சொன்னார்.

கார் நகர்ந்தது. ஏ.சி.கார் என்பதால் குளிர்ந்த காற்று வந்து மோதியது. இருக்கையில் பின்னால் சாய்ந்து கொண்டு சோர்வுடன் கண்களை மூடிக்கொண்டான். உடலில் இருந்த சக்தி முழுவதையும் இந்த சம்பவம் ஒரேயடியாய் வீழ்த்தி விட்டது போலிருந்தது. டிரைவரிடம் கூட எதுவும் கேட்கத் தோன்றவில்லை.

அவனுடைய அலுவலகத்திற்கு முன்னால் காரை நிறுத்தி விட்டு இறங்கி பின் கதவைத் திறந்து பிடித்துக் கொண்டான். ரேவந்த் இறங்கியதும் அவன் கையில் ஒரு கவரை கொடுத்து விட்டு "அம்மா கொடுக்கச் சொன்னாங்க சார்" என்று சொல்லி விட்டு கிளம்பிப் போய் விட்டான்.

அப்பொழுதுதான் ரேவந்திற்கு நினைவு வந்தது, குறைந்த பட்சம் அந்தக் கார் யாருடையது என்று கூட கேட்காமல் இருந்துவிட்டது. அதற்குள் அந்தக் கார் சாலையில் வெகு தூரம் சென்று விட்டிருந்தது. கையிலிருந்த கவரைப் பிரித்து ரோஜா நிறத்திலிருந்த தாளை வெளியில் எடுத்தான்.

முத்துச் சரம் போல்... நீலவானத்தில் சுடர்விடும் நட்சத்திரங்களைப் போல் அழகான எழுத்துக்கள்.

"விளையாட்டாக தொடங்கியது இப்படி திசைத் திரும்பும் என்று கனவில் கூட நினைக்கவில்லை. என்னை மன்னித்து விடுங்கள். கண்ணீருடன்

உங்களுடைய

நிலாப்பெண்.

அவன் சிலையாக நின்று விட்டான். அவனுக்கு இப்பொழுது காவல்நிலையம்... அந்த அனுபவம் எதுவும் நினைவில் இல்லை. தான் செய்த தவறு புரிந்தது. கார் யாருடையது என்று கேட்டு தெரிந்து கொள்ளாமல் போய் விட்டான். டிரைவரிடம் கேட்டால் அந்தப் பெண்ணைப் பற்றிய விவரங்களை எல்லாம் சொல்லியிருப்பான். தன்னையே நொந்து கொண்டவனாய் சேம்பருக்குள் நுழைந்த போது போன் ஒலித்தது. எடுத்தான்.

"அப்பாடா! வந்துவிட்டீங்க இல்லையா. நான் எவ்வளவு கலவரமடைந்தேன் தெரியுமா?" நிம்மதியாக மூச்சை விட்டுக் கொண்டே சொன்னாள்.

"நீங்களா?" என்றான் ரேவந்த்.

"நானே தான். டிரைவர் வந்து சொல்லும் வரையில் என் மனம் ஒரு நிலையில் இருக்கவில்லை. அது சரி. நீங்க எதுக்கு அந்த அறைக்குப் போனீங்க ரேவந்த்?

"314ம் நம்பர் ரூமில் ஒரு பெண் இருப்பதாக ரிசப்ஷனிஸ்ட் சொன்னான். நான் வேறு எதையுமே யோசிக்கவில்லை."

"இந்த ஊரிலேயே இருந்து கொண்டு உங்களுக்கு போன் செய்வதற்காக மட்டும் ஹோட்டலில் ரூம் எடுப்பேனா ரேவந்த்? அதுவும் உங்க போனை கண்காணிக்க நீங்க ஏற்பாடு செய்த பிறகு."

ரேவந்த் திடுக்கிட்டு "அப்படி என்றால் உங்களுக்கு எல்லாமே தெரியுமா?" என்றான்.

"தெரியும். அப்படியும் உங்களிடம் சொன்னது போல் இந்த நிமிடம் வரையில் நான் அங்கேயே இருந்தேன். ஒரு விஷயம் மட்டும் உண்மை ரேவந்த். நான் உங்களுடன் கண்ணா மூச்சி ஆடவில்லை. இதை மட்டும் நம்புங்க. நேர்மையாக உங்களுக்கு வாய்ப்புகளை கொடுத்துக் கொண்டுதான் வந்திருக்கிறேன். நீங்க பரபரப்புடன் ரிசப்ஷனிஸ்ட் அருகில் வந்து "சி.ஐ.டி. போலீஸ் கிரைம் பிராஞ்ச்... சி.பி.ஐ." —கம்பீரமாக நடித்துக் கொண்டிருந்ததைப் பார்த்து சிரிப்பை அடக்க முடியாமல் தவித்தேன். நீங்க எந்தப் பக்கமும் திரும்பிப் பாராமல் நேராக மூன்றாவது மாடிக்கு போய் விட்டீர்கள். கொஞ்சம் தலையைத் திரும்பிப் பார்த்திருந்தால் லௌஞ்ச் சோபாவில் என்னைப் பார்த்திருக்கலாம்." சிரித்துக் கொண்டே சொன்னாள்.

சட்டென்று அவள் குரல் மாறி விட்டது. "நீங்க மறுபடியும் தோற்றுப் போய் விட்டீங்க என்றெண்ணி உள்ளூர சிரித்துக் கொண்டே எழுந்து கொள்ளப்

போனபோது இன்ஸ்பெக்டர் வந்து கொண்டிருப்பது தென்பட்டது. நொடிப் பொழுதில் ஹோட்டலில் கலவரம் ஏற்பட்டது. ரிசப்ஷனிஸ்ட் உங்களுக்கு எதிராக சாட்சியம் சொன்னான். அதைக் கேட்டதும் பதட்டமடைந்து விட்டேன். அதற்குள் வேனில் உங்களை இன்ஸ்பெக்டர் காவல் நிலையத்திற்குக் கூட்டிச் சென்று விட்டதால் நிலைமை மேலும் மோசமாகி விட்டது. எனக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. அழாத குறையாய் ஓடிப்போய் அப்பாவிடம் எல்லாவற்றையும் சொல்லி விட்டேன். அவர் டி.ஐ.ஜி.க்கு போன் செய்தார்."

கேட்டுக் கொண்டிருந்த ரேவந்த் திடுக்கிட்டான். "உங்க அப்பாவுக்கு எல்லாம் தெரியுமா?" கேட்கும் போதே நாக்கு வறண்டுப் போய் விட்டது.

"தெரியும்".

இருவருக்குமிடையே வெகு நேரம் நிசப்தம். அதைச் சிதறடித்தபடி அவள் சொன்னாள் "ரேவந்த்! உங்களிடம் ஒரு விஷயம் சொல்லணும். முதலில் சொல்ல வேண்டாம் என்று தான் இருந்தேன். ஆனால் இப்போ சொல்லி விடுகிறேன். ரேவந்த்! நான் ஆக்ஸ்ஃபர்ட் யுனிவர்சிடியில் படிப்பை முடித்து விட்டு சமீபத்தில் தான் இந்தியாவுக்கு திரும்பி வந்தேன். அப்பாவுக்கு ஒரே மகள். செல்வாக்கும், பணமும் படைத்தவர் என் தந்தை. மகள் வெளி நாட்டில் செட்டில் ஆக வேண்டும் என்றும், மருமகன் பெரிய அந்தஸ்தில் இருக்க வேண்டும் என்றும் விரும்பினார். ஆனால் என்னுடைய விருப்பம் வேறு. காவேரி மணற்பரப்பில் படுத்துக்கொண்டு பாரதியார் கவிதைகளை இயற்கையுடன் சேர்ந்து ரசிக்க வேண்டும் என்பது தான் என்னுடைய கோரிக்கை. ஒரு அழகான, புத்திசாலியான கணவனுக்கு மனைவியாக நம் நாட்டில் தமிழ் மண்ணில் இறுதி மூச்சை விடவேண்டும் என்று ஆசைப்பட்டேன். எங்க

இருவருக்கும் நடுவில் மோதல் ஏற்பட்டது. இறுதியில் நான் தான் ஜெயித்தேன். ஆனால் அப்பா ஒரு வார்த்தை சொன்னார், "கண்ணம்மா! எனக்குத் தெரிந்தவர்கள் எல்லோருமே பிசிநெஸ் மாக்னெட்ஸ். அவர்களுடைய மகன்களும் அது போன்றவர்கள் தான். அறிவும், அழகும், வேண்டியதுதான். ஆனால் நீயோ அதோடு கூட அப்பாவித்தனமும், கவிதையை ரசிக்கும் தன்மையும் இருக்கணும் என்கிறாய். என்னுடைய உத்தேசத்தில் அது போன்ற இளைஞர்கள் இந்த உலகிலேயே யாரும் இருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்" என்றார். அது மட்டுமே இல்லை. அப்படிப்பட்ட இளைஞன் யாரையாவது தனக்குக் காண்பித்தால் அந்த இளைஞனையே எனக்கு பரிசாக அளிக்கிறேன் என்றார். வேறு விதமாக சொல்லணும் என்றால் எனக்கு வரப்போகும் மாப்பிள்ளையை நானே தேர்ந்தெடுக்க வேண்டும். நானும் அதை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டேன். ஆனால் விரைவிலேயே புரிந்து விட்டது எனக்கு, அப்பா சொன்னது அப்பழுக்கற்ற உண்மையென்று. அழகு, அறிவு, அப்பாவித்தனம், கவிதையை ரசிக்கும் சுபாவம்... இந்த நான்கில் குறைந்தது மூன்று லட்சணங்களும் பொருந்திய இளைஞன் யாருமே எனக்கு தென்படவில்லை. தோற்றுப் போய் விட்டேனோ என்று நான் நினைத்துக் கொண்டிருந்த போதுதான் ஒரு பார்ட்டியில் உங்களைப் பார்க்க நேர்ந்தது. யாரோடும் சேராமல் தொலைவில் தனியாய் நின்று கொண்டிருந்த உங்களைப் பார்த்ததும் 'யார் இந்த தயிர் சாதம்?' என்று நினைத்தேன்."

கேட்டுக் கொண்டிருந்த ரேவந்தின் முகம் ரோஷத் தினால் சிவந்தது.

"கோபம் கொள்ளாதீங்க. உங்களைப் பார்த்ததுமே எனக்கு முதல் முதலில் தோன்றியது அதுதான். அதற்குள்

யாரோ சொன்னாங்க நீங்க பெனின்சுலா பிராடக்ட்ஸில் டிப்யூடி சீஃப் எக்ஸிக்யூடிவ் என்று. நான் வியந்து கொண்டிருந்த போதே வேறு யாரோ உங்களைப் பற்றி சதுரங்க ஆட்டத்தில் மேதை என்றும் சொன்னார்கள். அப்பொழுதே எனக்குப் புரிந்து விட்டது. நான் தேடிய இளைஞன் கிடைத்து விட்டான் என்றும் எனக்குத் துணைவராகத் தகுந்தவன் என்றும்..."

ரேவந்த் அதிர்ச்சி அடைந்தவனாய் "என்ன சொல்றீங்க நீங்க?" என்றான்.

"அப்பாவிடம் சொன்னேன் ரேவந்த்! எனக்குப் பிடித்தவர் யாராக இருந்தாலும் சரி அவருக்கு சம்மதம்தான். அதிலும் அவருக்கு உங்களை ரொம்பப் பிடித்து விட்டது."

"இது ரொம்ப முட்டாள் தனம். நான் என்ன கடைத் தெருவில் விற்கப்படும் பொருளா? உங்களுக்கும், உங்க அப்பாவுக்கும் பிடித்துப் போய் விட்டால் வாங்கிக் கொள்வதற்கு. உங்களைப் பார்த்து நான் விருப்பப்பட வேண்டாமா? அதுதானே வேண்டியது."

"உங்களுக்கு ரோஷம் அதிகம் என்று நினைக்கிறேன்." கலகலவென்று நகைத்தாள்." ரொம்பவும் தமிழ் நாட்டு இளைஞர்களைப் போலவே பேசுறீங்க. இங்கே பெண் பார்க்கப்படும் நிகழ்ச்சியில் கூட எல்லோரும் பையனைத் தான் கேட்கிறார்கள், பெண்ணை பிடித்திருக்கிறதா என்று. பெண்ணிடம் சம்மதம் கேட்பது வெறும் ஒப்புக்குத்தான்." அவள் குரல் மென்மையாக ஒலித்தது. "நான் உங்க உரிமைகளை மறுக்கவில்லை ரேவந்த். ஆனால் முதலில் உங்களைப் பார்த்தது நான். பார்த்து விரும்பிவிட்டேன். அதனால் தான் பிரபோஸ் செய்கிறேன். இதில் தவறு ஏதாவது இருக்கா?"

அவனால் சட்டென்று பதில் சொல்ல முடியவில்லை. ஆமாம் என்று சொல்வதற்கு சுயகௌரவம் குறுக்கிட்டது. ஆனால் உடனே அதை வெற்றிக் கொண்டு 'தவறு இல்லை' என்றான். "ஆனால் நான் உங்களைப் பார்க்காமல் எப்படிச் சொல்ல முடியும்? அஃப் கோர்ஸ். எனக்கு அப்பா இல்லை. அம்மா நான் சொன்னால் மறுக்க மாட்டாள். மேலும் சந்தோஷப்படுவாள். ஆனால்... ஆனால்..." அதற்கு மேல் என்ன பேசுவதென்று அவனுக்குப் புரியவில்லை.

அவன் மனதைப் புரிந்து கொண்டாற்போல் அவள் சொன்னாள். "உங்க எண்ணம் புரிந்து விட்டது. பெண் பார்க்கும் நிகழ்ச்சி என்று நடக்கா விட்டாலும் குறைந்த பட்சம் சந்தித்துக் கொள்ளாமல் எப்படிச் சொல்வது என்று கேட்கிறீங்க. அப்படித்தானே?"

ரேவந்த் பதில் பேசவில்லை. அவன் மௌனத்தை சம்மதமாக எடுத்துக் கொண்டு மேலும் தொடர்ந்தாள்.

"இந்த பெண் பார்க்கும் நிகழ்ச்சியைப் பார்த்தாலே எனக்கு சிரிப்புத்தான் வரும். ஃபுல் சூட்டில் முறுக்கிக் கொண்டு உட்கார்ந்திருக்கும் மாப்பிள்ளையும், வெட்கத் தினால் பார்வையை தரையோடு பதித்துக் கொண்டு அந்தப் பெண்ணும் சேர்ந்து தாமிருவரும் வாழ்நாள் முழுவதும் இணைந்து வாழ வேண்டும் என்ற முடிவை மூன்றே நிமிடங்களில் எடுத்துக் கொள்வார்கள். இது அர்த்தமற்ற சடங்காக உங்களுக்குத் தோன்றவில்லையா?"

"அப்படியென்றால் வெளிநாடுகளைப் போல் டேட்டிங் இருக்கணும் என்கிறீங்களா?"

"ஐயோ! அது இன்னும் கொடுமை. நம் நாட்டு சூழ்நிலையில் அவசரப்பட்டு எல்லை மீறும் ஆபத்தும் இருக்கிறது."

"திருமணத்திற்கு முன் ஒருவரைஒருவர் தெரிந்து கொள்ளணும். ஆனால் அவங்க சந்தித்துக் கொள்ளக் கூடாது. ரொம்ப வேடிக்கையான கண்டிஷன் இது. எப்படி சாத்தியப்படும்?" ரேவந்த் கேட்டான்.

"சரியாக நான் நினைத்த அதே பாயிண்டுக்கு வந்து சேர்ந்துட்டீங்க ரேவந்த். ஏன் சாத்தியப்படாது? போன் மூலமாக இப்படி நடக்கலாமே. இல்லாவிட்டால் கடிதங்கள் மூலமாய் நடக்க வழி இருக்கு இல்லையா?" என்று கேட்டாள்.

சிலையாகி விட்டான் ரேவந்த். இந்த லாஜிக் அவனைக் கட்டிப் போட்டு விட்டது. என்ன பேசுவதென்று புரியவில்லை. தன்னை பேச்சில் ஆழ்த்தி விட்டு எங்கே பிடிக்க வேண்டுமோ அங்கே பிடித்து விட்டாள். தான் முன்னாடி ஊகித்தது போல் இவளுடைய சப்ஜெக்ட் கணக்கும் தமிழ் மட்டுமே இருக்காது. தர்க்க சாஸ்திரமோ அல்லது பொலிடிக்கல் சயின்ஸ் ஆகவோ இருக்கலாம்.

"என்ன யோசிக்கறீங்க?"

ரேவந்த் யோசனையிலிருந்து மீண்டு "ஒன்றுமில்லை" என்றான்.

"இது போல் நானாக கல்யாணப் பேச்சை எடுத்ததில் உங்களுடைய பார்வையில் நான் தாழ்ந்து விட்டேனோ?"

ரேவந்த் கலவர மடைந்தவனாய் "இல்லை... இல்லை" என்றான். "உண்மையிலேயே இல்லை. அது போன்ற அபிப்பிராயம் எதுவும் வைத்துக் கொள்ளாதீங்க. ஒரு ஆண் என்பதால் இந்த முரண்பாட்டை ஏற்றுக் கொள்ள கொஞ்சம் தயங்குகிறேன். நீங்கள் செய்தது ரொம்ப நல்ல காரியம். எல்லோரும் செய்வது போல் நீங்க உங்க அப்பாவிடம் சொல்லியிருந்தால் அவர் பெண் பார்க்கும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருப்பாராய் இருக்கும். நீங்க சொன்னது போல் மூன்று நிமிடங்களில் முடிவு எடுக்கப்பட்டு நம்

திருமணம் முடிந்திருக்கும். உங்கள் எண்ணம் எனக்குப் புரிகிறது.

"தாங்க்ஸ்."

"ஆனால் எனக்குப் புரியாதது ஒன்றுதான். இப்போ போனில் மட்டும் என்னைப்பற்றிச் சரியான விவரங்களை தருவேன்னு என்ன நிச்சயம்? உதாரணமாக உங்களுக்கு கவிதை என்றால் பிடிக்கும். கிட்ஸ் எழுதிய கவிதைகளை சேகரித்து உங்களுடைய பாராட்டை பெறுவதற்காக என்னுடைய சொந்த கவிதையை போல் போனில் படித்துக் காட்ட வாய்ப்பு இருக்கு இல்லையா."

மறுமுனையில் சிரிப்பு சத்தம் கேட்டது. "உங்களால் அப்படி செய்ய முடியாது ரேவந்த். நான் கவிதையை ரசிக்கும் குணம் என்றதும் கீட்ஸ் பற்றி மேற்கோள் காட்டும் அளவுக்கு உங்களுக்குத் தெரிந்திருக்கிறதே."

அவன் அதைப் பொருட்படுத்தாமல் "உங்களுக்கு அந்த நம்பிக்கை எப்படி வந்தது?" இரட்டிப்பது போல் கேட்டான்.

சற்று நேரம் மௌனம். "உங்களைப் பற்றி எதுவும் தெரிந்து கொள்ளாமலே ஏதோ பார்ட்டியில் பார்த்து விட்டு கண்டதும் காதல் என்றெண்ணிக் கொண்டு இப்படி போன் செய்யத் தொடங்கி விட்டேன் என்று நினைத்தீங்களா?" அவள் குரல் தெளிவாக ஒலித்தது.

"வாழ்க்கையை நான் ரொம்பவும் கால்குலேட் ஆக எடுத்துக் கொள்வேன் ரேவந்த். தயவு செய்து இதை தற்பெருமை என்று எடுத்துக்கொள்ளாதீங்க. உங்களை நான் முதலில் பார்த்ததற்கும் போன் செய்ததற்கும் நடுவில் இரண்டு மாதங்கள் இடைவெளி இருக்கிறது. நான் நட்பு வைத்துக் கொள்ள தேர்ந்தெடுக்கும் நபர் எனக்குத் தகுந்தவன் தான் என்ற முடிவுக்கு வருவதற்கு அத்தனை நாள் தேவைப் பட்டது. இந்த இடைவெளியில் உங்களைப்

பற்றி முழுவதுமாக தெரிந்துகொண்ட பிறகுதான் உங்களுக்கு போன் செய்தேன்."

ரேவந்த் ஆர்வத்தோடு சற்று குனிந்து "என்னைப் பற்றி என்ன தெரிந்து கொண்டீங்க?" என்றான்.

"எல்லாமே."

"அப்படி என்றால்?"

"உங்களுடைய விருப்பு வெறுப்புகள், பழக்க வழக்கங்கள்... உங்களுடைய தனித்தன்மை... எல்லாவற்றையும் சொல்லணும் என்றால் ரொம்ப நேரம் ஆகும்.

"பரவாயில்லை. சொல்லுங்க. நான் இப்போ ஓய்வாகத்தான் இருக்கிறேன்" என்றான். தன்னைப் பற்றி அவள் என்ன சொல்லப் போகிறாள் என்று தெரிந்து கொள்ள ரொம்ப துடிப்பாக இருந்தான். தன் தந்தை என்னவாக இருந்தார்? தன் கூடப் பிறந்தவர்கள் எத்தனை பேர்? தன்னுடைய வாழ்க்கை... இதுபோன்ற விவரங்களை எல்லாம் சொல்லுவாள் என்று எதிர்பார்த்தான். ஆனால் அதற்கு மாறாக அவளுடைய விளக்கம் வேறு விதமாக இருந்தது.

"நீங்க ரொம்ப சென்சிடிவ் ரேவந்த். எவ்வளவு சென்சிடிவ் என்றால் யாராவது உங்களுக்கு உதவி செய்ய முன் வந்தால் கூட அந்த உதவியை பெறுவது உங்களையே நீங்கள் தாழ்த்திக் கொள்வது போல் நினைப்பீங்க. அதனால் உங்களைச் சுற்றிலும் ஒரு வட்டத்தை ஏற்படுத்திக் கொண்டு அதற்குள் வாழ்ந்து வருவது போல் வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்குத் தோன்றும். உங்களைப் புரிந்து கொள்ள ரொம்பப் பொறுமை வேண்டும். உங்களுடைய வாழ்க்கையின் குறிக்கோள் ரொம்ப உயர்வானதாகத்தான் இருக்கும். அதைச் சாதிப்பதற்காக இடைவிடாமல் உழைப்பதிலேயே உங்க நேரமெல்லாம் செலவாகிவிடுவதால்

"சாதாரண மகிழ்ச்சிகளை" தேடிப் போக மாட்டீங்க. உங்களுடன் வாழ்க்கையை பகிர்ந்து கொள்ளப் போகிறவளுக்கு அது ஒன்று தான் கஷ்டம். ஆனால் உங்களுக்கு எப்போதும் கோபமோ, எரிச்சலோ வராது என்பதை அதிர்ஷ்டமாக எடுத்துக் கொள்ளலாம். வாழ்க்கையைப் பற்றி உங்களுக்குத் தெளிவான கண்ணோட்டம் இருக்கிறது. இளைய தலைமுறையினரிடம் பெரும்பாலும் இந்தத் தகுதி இருப்பதில்லை. எந்தச் சூழ்நிலையிலும், எந்த நிலையிலும் ஊடுருவி அதை உங்களுக்கு சாதகமாக மாற்றிக் கொணடு விடக் கூடிய மாறுபட்ட குணம் உங்களுடையது.

"பண விஷயத்தில் ரொம்பவும் கறாறாக நடந்து கொள்வீங்க. செலவழிக்கும் ஒவ்வொரு ரூபாய்க்கும் முழு மதிப்பு கிடைக்க வேண்டும் என்று கணக்குப் போடுவீங்க. இந்த உலகில் நீங்க விரும்பும் ஒரே நபர் உங்கள் தாய் தான். சதுரங்கம் விளையாடுவதில் தினந்தோரும் ஐந்துமணி நேரம் செலவழிப்பது போல் தாயுடன் ஒரு மணி நேரம் பேசி பொழுது போக்கவில்லை என்றால் எதையோ இழந்து விட்டாற் போல் உணருவீர்கள். உங்கள் நண்பன் ஜேம்ஸ் போல் அல்லாமல் நிறைவான, பற்றுதலுடன் கூடிய வாழ்க்கையை நீங்க அனுபவித்து வருவதற்குக் காரணம் உங்க தாய் தான். அவள் காட்டும் அன்புதான். வேலை விஷயத்தில் நீங்க சராசரிக்கு சற்று மேல் என்று சொல்லலாம். உங்களுடைய முழு கவனமும் சதுரங்கத்தின் மீது தான். குறைந்த பட்சம் உங்களுடன் பணி புரியும் பெண்களின் பெயர்கள் கூட உங்களுக்குத் தெரியாது. அந்த விதத்தில் உங்க மனைவி அதிர்ஷ்டசாலி. ஆனால் சதுரங்கம் உங்கள் முதல் மனைவி என்பதால் அந்தக் கோணத்தில் பார்த்தால் துரதிர்ஷ்டசாலி. பதினாறு வயது பெண்ணுடன் பேசுவதை விட சதுரங்கம் ஆடுவதுதான் உங்களுக்குப் பிடிக்கும். உங்க எண்ணங்களை மற்ற மக்களுடன் பகிர்ந்து

கொள்வதை விட மனதிற்குள்ளேயே புதைத்துக் கொள்வதை தான் விரும்புவீங்க. மூளையைக் காட்டிலும் இதயத்திற்கு முக்கியத்துவம் தருவீங்க. எந்த விதமான கெட்ட பழக்கங்களும் உங்களுக்கு இல்லை. எல்லாவற்றையும் விட முக்கியமாக உங்களிடம் எனக்குப் பிடித்த விஷயம் என்னவென்றால் வாழ்க்கையை நீங்க அமைத்துக் கொள்ளும் முறை. ஒரு லட்சியத்தை நோக்கி அதை சாதிப்பதற்காக ஒழுங்கு முறையை பின்பற்றி வருகிறீர்கள். எடுத்துக் காட்டாக... கடந்து ஐந்து வருடங்களில் ஒரு நாள் கூட காலையில் ஐந்து மணிக்குப் பிறகு தூங்கியதில்லை. இனி உங்களுக்கு இருக்கும் கெட்ட பழக்கம் என்று சொன்னால் அலுவலகத்திற்கு வருவதற்கு முன்னால் அரைமணி நேரம் பெண் பிள்ளைகளைப் போல் நிலைக் கண்ணாடியின் முன் உட்கார்ந்திருப்பதை சொல்லலாம்."

கேட்டுக் கொண்டிருந்த ரேவந்தின் முகம் சிவந்து விட்டது.

"இன்னொரு குணம் என்னவென்றால் எந்த சின்ன விஷயமாக இருந்தாலும் உங்களுக்கு எதிர்மறைவாக கேட்க நேர்ந்தால் உங்கள் முகம் சிவந்து விடும். தற்போது கூட அப்படித்தான் சிவந்திருக்கு."

ரேவந்த் திடுகிட்டான். அவள் குரல் மேலும் ஒலித்தது.

"ரொம்ப கஷ்டப்பட்டு நான் சேகரித்த விவரங்கள் இவை. இப்பொழுது சொல்லுங்கள் ரேவந்த். மூன்று நிமிடம் பெண் பார்க்கும் நிகழ்ச்சியை விட அதிக விஷயங்களை சேகரித்து வைத்திருக்கிறேன் இல்லையா?"

ரேவந்த் பேசவில்லை. ஏதோ அற்புதமான காட்சியைப் பார்ப்பது போல், முற்றிலும் புதிய விஷயத்தை கேட்பது போல் சலனமற்று இருந்துவிட்டான். இதையெல்லாம் அவளால் எப்படி சேகரிக்க முடிந்தது என்று அவனுக்குப் புரியவில்லை.

"சொல்லுங்க ரேவந்த். நான் இது போல் உங்களைத் தேர்ந்தெடுத்ததில் தவறு இல்லை என்றும் உங்களுக்கு போன் செய்து பேசுவதால் பெண்களுக்கே உரிய வரம்பை மீறி விடவில்லை என்றும் சொல்லுங்க. நீங்க மௌனமாக இருந்தால் உங்களுடன் நட்பு வைத்துக் கொள்பவள் இப்படி துணிச்சலாக செயல்படுவது உங்களுக்கு பிடிக்கவில்லை என்று நான் நினைக்க வேண்டியிருக்கும்."

அவள் பேச்சை இடைமறித்து "இல்லை இல்லை. நான் இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. இதை எல்லாம் எப்படிக் கண்டுப்பிடித்தீங்க?"

"அந்த விஷயத்தை இனி விட்டு விடுவோம். நான் கேட்டதற்கு பதில் சொல்லுங்க. இந்தப் பெண் என்ன பெரிய டிடெக்டிவ் போல் என்னைப் பற்றி விவரங்களையும் துப்பு துலக்கியதோடு கல்யாணப் பேச்சையும் எடுப்பதாவது என்று நினைக்கவில்லையே?"

"இல்லை. ஆனால் ஒரு விஷயத்தை சொல்ல விரும்புகிறேன். நாம் சந்தித்துக் கொண்டு உங்களைப் பார்த்த பிறகுதான் என் இறுதி முடிவை தெரிவிக்க முடியும்."

மறுமுனையில் அவள் நகைக்கும் சத்தம். "நான் என் அவலட்சணத்தை மூடி மறைப்பதற்காகவே முன் கூட்டி இப்படி போன் செய்து என் அறிவுத்திறனால் உங்களை கவற முயற்சிக்கிறேனோ என்று நீங்க நினைப்பதில் தவறு இல்லை. ஆனால் நான் உங்களை ஏமாற்றத்திற்கு ஆளாக்க மாட்டேன்."

"எதுக்கு அவ்வளவு ரிஸ்க்? நாம் உடனே சந்தித்துக் கொண்டால்?" பரபரப்போடு கேட்டான்.

"அம்மாடி! ஆசையை பார்! எத்தனை பேருக்கு நடுவில் உங்களைத் தேடி கண்டு பிடித்திருக்கிறேன். இனி என்னை கண்டுபிடிக்கும் பொறுப்பு உங்களுடையது."

"எப்படிக் கண்டு பிடிப்பது?"

"நிறைய க்ளூக்களை கொடுத்துக் கொண்டுதான் வருகிறேன். இனி மேலும் அப்படியே தருகிறேன். ஒரு மாதம் அவகாசம் தருகிறேன். இதற்குள் என் மனதில் உள்ள உணர்ச்சிகளை வெளிப்படுத்த கடிதங்களை எழுதுகிறேன். நான் கொடுக்கும் க்ளூக்களை வைத்துக் கொண்டு என் போன் நம்பரையோ இல்லை என்னையோ கண்டுபிடித்து விட்டால் அன்றைக்கே நாம் சந்தித்துக் கொள்ளலாம். ஒருக் கால் உங்களால் கண்டு பிடிக்க முடியவில்லை என்றால் சரியாக இன்றிலிருந்து ஒரு மாதத்திற்குப் பிறகு நான் உங்களைச் சந்திக்கிறேன். ஆனால் என் வருங்கால கணவர் இவ்வளவு புத்திசாதூரியம் இல்லாதவரா? இவ்வளவு குறிப்புகளை தந்தும் என்னைக் கண்டு பிடிக்க முடியவில்லையே என்கிற வருத்தத்துடன் தான் உங்களை அன்றைக்கு சந்திப்பேன். போதுமா?"

ரேவந்தின் முகம் சிவந்தது. "எப்படியாவது ஒரே மாதத்திற்குள் உங்களை நான் கண்டுபிடித்துவிடுவேன்" என்றான் உறுதியாக.

"இன்று பதிமூன்றாம் தேதி. அடுத்த மாதம் பதிமூன்றாம் தேதி மாலை ஐந்து மணிக்குள் நீங்க என்னைக் கண்டுபிடிக்க முடியாவிட்டால் தோற்றுப் போய் விட்டாற் போலத்தான்" என்றாள்.

அவள் பதிமூன்று என்றதும் ஏதோ அபசுருதி தொனித்தது போலிருந்தது அவனுக்கு. அப்படியும் "சரி" என்றான்.

"அதற்குள் நீங்க என்னைக் கண்டுபிடிக்கா விட்டால் அன்று மாலை சரியாக ஐந்து மணி ஒரு நிமிடத்திற்கு எங்கள் கார் உங்க அலுகலகத்திற்கு முன்னால் வந்து நிற்கும், தோற்றுப் போய் விட்ட உங்களை எங்க வீட்டுக்குப் பெண்

பார்க்க வரவேற்பதற்காக. பிறகு அத்துடன் திருப்திப் பட்டுக் கொள்ள வேண்டியதுதான்."

ரேவந்த் ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது. "ஓ.கே." என்றான். மனதில் 'என் சதுரங்க விளையாட்டுத் திறமையை பயன்படுத்தி உங்களைப் பிடித்து விடுகிறேன்' என்று நினைத்துக் கொண்டான். மேலுக்கு "நீங்க மட்டும் எனக்கு சரியான குறிப்புகளைத்தான் தரணும். தவறான திசையில் திரும்பி விடக் கூடாது" என்றான்.

"அப்படி ஒரு நாளும் செய்ய மாட்டேன். என் வருங்கால கணவர் புத்திசாலி என்று நிரூபணம் ஆனால் எனக்கும் மகிழ்ச்சிதானே? இன்னொரு தடவை சொல்றேன். கேட்டுக் கொள்ளுங்க ரேவந்த். உங்களோடு கண்ணாமூச்சி ஆடணும் என்று நான் நினைக்கவில்லை. உங்க ஐ.க்யூ.வைக் கண்டு பிடிக்கத்தான் இத்தனையும் செய்கிறேன். வேண்டுமானால் உங்களுக்கு ஒரு நல்ல க்ளூவைத் தருகிறேன்."

"என்ன?"

"நான் உங்களுக்கு ஒரு வாக்கியத்தைச் சொல்கிறேன். அதில் என் வீட்டுப் போன் நம்பர் ஒளிந்து கொண்டு இருக்கிறது. அந்த குறிப்பின் மூலம் எங்க போன் நம்பரைக் கண்டுபிடிக்க ஒரு மாதம் அவகாசம் இருக்கு. இனி தாமதம் உங்களுடையதுதான்."

ரேவந்த் பரபரப்போடு "அதென்ன வாக்கியம்"? என்று கேட்டான்.

"I ATE NOTHING SIX மணிகள்."

அவனுக்குப் புரியவில்லை. "என்ன?" என்றான் மறுபடியும் சொன்னாள். அவன் பேப்பரில் எழுதிக் கொண்டு அதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்ன யோசிக்கறீங்க?"

"ஒன்றுமில்லை. இந்த முறை எப்படியாவது உங்களைக் கண்டு பிடி.த்து விடுகிறேன்."

"உங்களைப் பற்றி இன்னொரு விஷயம் சொல்ல மறந்து விட்டேன். நீங்க ரொம்ப நன்றாக காரை ஓட்டுவீங்க. உங்களிடம் இண்டர்நேஷனல் டிரைவிங் லைசன்ஸ் இருக்கு இல்லையா?"

"ஆமாம்".

"வெளியில் மழை பெய்கிறதா?"

ரேவந்த் ஜன்னல் வழியாக பார்த்துவிட்டு "இல்லையே" என்றான்.

"இங்கே பெய்கிறது. நீங்க மணிக் கூண்டு கடியாரத்திற்கு அருகில் வாங்க. நானும் அங்கே டாக்ஸியில் வந்து சேருகிறேன். நீங்க வேகமாக வந்தால் என்னைப் பார்க்கலாம்."

ரேவந்தின் உடலில் ரத்தம் வேகமாக பாயத் தொடங்கியது. அதற்குள் சந்தேகம் வந்தது "நீங்க அங்கே அருகிலேயே இருக்கீங்க போலிருக்கு. நான் வருவதற்குள் போய் விடுவீங்களோ என்னவோ."

"உங்க டிரைவிங் திறமை எல்லாம் காட்டினால் அந்த மாதிரி நடக்காது. இடையில் உள்ள தூரத்தை கணக்கிட்ட பிறகு தான் சொல்கிறேன்."

அவன் மேற்கொண்டு தாமதம் செய்யாமல் போனை வைத்துவிட்டு காற்றை விட வேகமாக படி இறங்கி காரை நோக்கி வந்தான். அடுத்த நிமிடம் அது புறப்பட்டது.

போக்குவரத்து விதிகளையோ, மக்கள் நட மாட்டத்தையோ அவன் எதையும் பொருட்படுத்தவில்லை. அவன் நெற்றியிலிருந்து வியர்வை ஆறாக வழிந்து கொண்டிருந்தது. மணிக்கு எண்பது மைல் வேகத்தில் காரை

ஓட்டிக் கொண்டிருந்தான். வாகனங்களுக்கு இடையே அம்பாய் பறந்து கொண்டிருந்தான்.

சரியாக எட்டு நிமிடங்களில் அவன் மணிக் கூண்டை அடைந்தான்.

அங்கு எந்த டாக்ஸியும் தென்படவில்லை. நிம்மதியாக மூச்சு விட்டுக் கொண்டான். இனிமேல் அவள் வர வேண்டியது தான் பாக்கி. தன்னுடைய டிரைவிங் திறமையைப் பற்றித் தெரியாமல் இந்தப் பந்தயம் கட்டியிருக்கிறாள்.

அவன் ரிலாக்ஸ்ட் ஆக சீட்டின் பின்னால் சாய்ந்து கொள்ள போனபோது தொலைவிலிருந்து டாக்ஸி ஒன்று மெதுவாக வருவது தென்பட்டது. அவன் நிமிர்ந்து உட்கார்ந்து தாங்கமாட்டாத பதட்டத்துடன் டாக்ஸியை பார்த்துக் கொண்டிருந்தான்.

டாக்ஸி வந்து அவனுடைய காருக்கு பக்கத்திலேயே நின்றது. நின்ற டாக்ஸியிலிருந்து டிரைவர் இறங்கினான். டாக்ஸி காலியாக இருந்ததைப் பார்த்து ரேவந்தின் மனம் தளர்ந்து விட்டது.

"வணக்கம் சார்" என்றான் டிரைவர்.

அந்தப் பெண் ஏதாவது செய்தியை சொல்லி யிருப்பாளோ என்ற எதிர்பார்ப்புடன் "என்னப்பா? சற்றுமுன் உன் டாக்ஸியில் யாராவது ஏறினாங்களா?" என்று கேட்டான்.

"ஒரு பெண் ஏறினாள் சார். அதோ... அந்த டைப் இன்ஸ்டிட்யூட்க்குள் போனாள்."

ரேவந்த் சட்டென்று அந்த இன்ஸ்டிட்யூட்க்குள் ஓடினான். உள்ளே நாலைந்து டைப் மிஷின்கள் இருந்தன.

ஆனால் ஆட்கள் யாரும் இருக்கவில்லை. முதலாளி மட்டும் சீரியஸாக ஏதோ எழுதிக்கொண்டிருந்தார்.

ரேவந்த் வெளியே வருவதற்குள் டாக்ஸி கிளம்பி விட்டது. சந்தடியை கேட்டு முதலாளி நிமிர்ந்து பார்த்தான்.

ரேவந்த் பரபரப்புடன் "இப்போ எந்தப் பெண்ணாவது உள்ளே வந்தாளா சார்?" என்று கேட்டான், குறைந்த பட்சம் அவளுடைய உருவத் தோற்றத்தையாவது அவரிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொள்ளலாமே என்று.

ரேவந்த் சொன்னதை அவர் காதில் வாங்கிக் கொண்டாற் போல் தெரியவில்லை. தலையை உயர்த்தி சூனியத்தில் பார்த்துக் கொண்டு கம்பீரமாக "வாழ்க புரட்சி!" என்று மறுபடியும் எழுதத் தொடங்கினான்.

ரேவந்த் திடுக்கிட்டான். பிறகு சந்தேகம் வந்து குனிந்து பார்த்த போது அவர் கவிதை எழுதிக் கொண்டிருப்பது புரிந்தது.

அவரை இவ்வுலகிற்கு அழைத்து வருவதற்காக ரேவந்த் "உன் ரத்தம் சிவப்பு... என் ரத்தம் சிவப்பு... இரண்டும் சேர்ந்தால் புரட்சி!" என்று வாய்க்கு வந்த கவிதையைச் சொன்னான்.

அதைக் கேட்டதும் அந்த வழுக்கைத் தலை ஆசாமி ரேவந்தை ஒரு நிமிடம் குழப்பமாக பார்த்துவிட்டு, பிறகு சந்தோஷத்தின் மிகுதியில் துள்ளிக் குதித்தார். பிறகு பேனாவை மூடி பக்கத்தில் வைத்து விட்டு "சொல்லு பிரதர். உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

ரேவந்த் நிம்மதியாக மூச்சு விட்டு "சற்று முன் உங்க இன்ஸ்டிட்யூட்டுக்கு ஒரு பெண் வந்து போனாள். அவள் எப்படி இருந்தாள்?" என்று கேட்டான்.

"ஆமாம். வந்தாள். எதுவும் சொல்லாமல் போய் விட்டாள். எதற்காக வந்தாளோ தெரியாது."

தன்னை முட்டாளாக்குவதற்காகத்தான் அவள் அம்மாதிரி அங்கு வந்து விட்டுப் போயிருக்கிறாள் என்று ரேவந்திற்குப் புரிந்தது. அந்த டாக்ஸிகாரனை கேட்டிருந் தாலாவது அவள் எங்கே ஏறினாள் என்று சொல்லி யிருப்பான். இப்போ அதை நினைத்து வருந்துவதில் பயன் இல்லை.

"நீங்க அந்தப் பெண்ணைப் பார்த்தீங்களா?"

"பார்த்தேன்."

ரேவந்தின் ரத்தம் சூடாயிற்று. மேஜையின் மீது கைகளை ஊன்றியபடி குனிந்து "அவள் எப்படி இருந்தாள்? கொஞ்சம் சொல்லுங்களேன் காம்ரேட்" என்றான்.

அவர் மௌனமாய் தன் உலகத்தில் ஆழ்ந்து விட்டார். பிறகு திடீரென்று அழத் தொடங்கினார். ரேவந்த் கலவர மடைந்தான். ஆனால் அதற்குள் அவர் தேறிக் கொண்டு "அந்த நாட்கள் மறுபடியும் வரப் போவதில்லை" என்றார்.

"எந்த நாட்கள்?"

"என் மனைவியோடு சேர்ந்து இருந்த நாட்கள்."

"இப்போ அவங்க இல்லையா?"

"எதிர் வீட்டு தையல்காரனுடன் ஓடி விட்டாள். அன்றிலிருந்து புரட்சிக்கு என் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டு விட்டேன்."

அது வரையில் சமுதாயச் சிந்தனையும், பசிக் கொடுமையும் தான் புரட்சியை தோற்றுவிப்பதாக ரேவந்த் எண்ணியிருந்தான். ஆனால் தாம்பத்திய வாழ்க்கையில் தோல்வியுற்றவர்கள் கூட புரட்சியின் நிழலில் தஞ்சம் புகுந்து

கொள்வார்கள் என்று நினைக்கவில்லை. அவருக்கு ஆறுதல் சொல்வது போல் "அதற்கு முன் என்ன செய்துகிட்டு இருந்தீங்க?" என்று கேட்டான்.

"கவிதைகளை, பாட்டுகளை எழுதிக் கொண்டிருந்தேன்."

"உங்களுடைய கவிதையை இயற்றும் திறமைக்கு இந்தப் பெண்ணின் அழகு பொருத்தமாக இல்லையா பிரதர்?" அவரை மறுபடியும் பாயிண்டுக்கு இழுத்து வந்தான்.

அவர் ஆழமாக மூச்சை விட்டு "அந்தப் பெண்ணைப் பார்த்த பிறகுதான் எனக்குப் பழைய நாட்கள் நினைவுக்கு வந்தன. உண்மையிலேயே அந்தப் பெண் ரொம்ப அழகு. அவை கண்கள் இல்லை... தாமரையின் இதழ்கள். அந்த மூக்கு... மூக்கு..." என்று யோசிக்கத் தொடங்கினார்.

"உபமானத்திற்காக நிறுத்தாதீங்க காம்ரேட். அந்தப் பெண் எப்படி இருந்தாள் என்று சொன்னால் போதும். அழகாக இருந்தாளா?"

"அழகா? அசல் அழகே அவளைப் பார்த்துக் கற்றுக் கொள்ளணும். அந்த மூக்கு..."

"மூக்கு விஷயத்தை விடுங்க சார். சிவப்பாய் இருந்தாளா?"

"பால் வெள்ளை. இதோ இந்த மல்லிகைப் பூ இருக்கு பார்த்தாயா? அதை விட வெண்மை."

தரையில் கிடந்த மல்லிகையை பார்த்ததும் ரேவந்தின் இதயம் வேகமாக துடித்தது. அதை கவனமாக எடுத்து பத்திரமாக வைத்துக் கொண்டான். அவள் கூந்தலிலிருந்து விழுந்த மல்லிகை.

"அந்தப் பெண் இன்னும் எப்படி இருந்தாள்?" என்று கேட்டான்.

"தங்கப் பதுமை காம்ரேட்! என் வாயிலிருந்து தங்கம் என்ற வார்த்தை வந்ததற்கு மன்னித்து விடு. ஆனால் அந்தப் பெண் மட்டும் தங்கப் பதுமையே தான். பதுமையை போலவே வந்தாள். மௌனமாக படி இறங்கி போய்விட்டாள். சந்திர பிம்பம் போன்று வட்ட முகம்... பவளம் போன்ற சிறிய வாய்... எல்லாவற்றைக் காட்டிலும் அந்த மூக்கு..."

ரேவந்த் அழாத குறையாக "மூக்கை விட்டுத் தள்ளுங்க பிரதர். வேறு ஏதாவது விஷயம் இருந்தால் சொல்லுங்க" என்றான்.

"வேறு ஏதாவது விஷயமா? அப்படி என்றால் புரட்சி" என்று அவர் தொடங்கியது ரேவந்த் தப்பித்தேன் பிழைத்தேன் என்று வெளியே வந்து விட்டான். இனி அவரிடமிருந்து விஷயத்தை வரவழைப்பது கல்லிலிருந்து நாரை உரிப்பது போல்தான் என்று எண்ணிக் கொண்டான்.

ரேவந்த் காரை ஸ்டார்ட் செய்து கொஞ்சம் தூரம் போனானோ இல்லையோ பின்னாலிருந்து "நில்லு காம்ரேட்! ஒரு முக்கியமான விஷயம் நினைவுக்கு வந்து விட்டது" என்ற குரல் கேட்டது. ரேவந்த் சட்டென்று பிரேக்கைப் போட்டு ஆர்வத்தோடு கார் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான்.

மூச்சிரைக்க ஓடி வந்தவர் சொன்னார். "காம்ரேட்... மூக்கு எப்படி இருந்தது என்று ஒப்பிடத் தெரியாமல் தவித்துக் கொண்டு இருந்தேன் இல்லையா. நினைவு வந்து விட்டது. மூக்கு சம்பங்கிப் பூவே தான்."

# 7

**அ**ன்று போர்ட் ரொம்ப பிசியாக இருந்தது. சில நாட்களில் இப்படித்தான். காரணம் தெரியாமல் ஏனோ தொடர்ந்து வேலை இருந்து கொண்டே இருக்கும். அன்று தேர்தல் முடிவுகள் வேறு வந்திருந்தன.

சுலோசனா அன்று லோகல் அஸிஸ்டென்ஸில் இருந்தாள். அன்று அவளுடைய மூட் ஏனோ சரியாக இல்லை. காலையிலிருந்தே எரிச்சலாக இருந்தது. யாரோ போன் செய்து ஒரு நம்பரை கனெக்ட் செய்யச் சொன்னார்கள். முயற்சி செய்து எங்கேஜ்ட் ஆக இருந்ததால் "நம்பர் பிசியாக இருக்கு சார்" என்றாள். கொஞ்ச நேரம் கழித்து மறுபடியும் அதே நம்பரிலிருந்து அவளுக்குப் போன் வந்தது. இரண்டாவது முறை முயன்றும் தோல்வி அடைந்து" நம்பர் தவறாக இருக்கலாம்னு நினைக்கிறேன் சார்" என்று டாகெட் தயாரிப்பதில் முனைந்த போது "நினைக்கிறது என்ன? சரியாக சொல்ல முடியவில்லையா?" என்று கடுமையான குரல் கேட்டது. அவள் கோபத்தை அடக்கிக் கொண்டாள்.

எக்ஸ்சேஞ்சில் பெண்கள் கற்றுக் கொள்ளும் முதல் பாடம் பொறுமையை இழக்காமல் இருப்பதுதான். சுலோசனா அதே பொறுமையைக் கடைபிடித்து "நம்பர் ஃபால்ட் தான் சார். ரிப்போர்ட் செய்கிறேன்" என்றாள்.

"பின்னே முதலில் எங்கேஜ்ட்னு ஏன் சொன்னீங்க?"

"அப்போ எங்கேஜ்ட் டோன் வந்தது." "அதற்காக நாங்க இரண்டு தடவை ஃபோன் செய்யணுமா? வேலை வெட்டி இல்லாமல் இருப்பவர்கள் அங்கே சேருவது வேலை செய்யவா இல்லை வம்பு பேசுவதற்காகவா?"

சுலோசனா முகம் சிவக்க "மரியாதையாக பேசுங்க" என்றாள்.

"கை நீட்டி சம்பளம் வாங்குகிறவளுக்கு மரியாதை என்ன வேண்டியிருக்கு" என்று மேலும் தரக் குறைவாக பேசத் தொடங்கினான்.

அவன் அப்படிச் சொன்னதும் ஆவேசம் தாங்க முடியாதவளாய் "யூ சன் ஆஃப் எ பிட்ச்! ஷட்டப்!" என்று கத்தி விட்டாள்.

அறையிலிருந்த மற்ற ஊழியர்கள் எல்லோரும் அப்படியே வேலையை நிறுத்தி விட்டு அவள் பக்கம் பார்த்தார்கள். எப்போதும் பொறுமையின் இருப்பிடமாக இருக்கும் அவள் முகம் இன்று ஆவேசத்தினால் சிவந்திருந்தது.

சூப்பர்வைசர் அருகில் வந்து சுலோசனா தோளில் தட்டிக் கொடுத்தாள். என்ன நடந்தது என்று யாரும் கேட்க வில்லை. சுலோசனா அரும்பாடுபட்டு தன்னை சமாளித்துக் கொண்டாள்.

மறுபடியும் எல்லோரும் வேலையில் ஆழ்ந்து விட்டார்கள். அவள் கைகள் கூட இயந்திர கதியில் வேலை செய்யத் தொடங்கின.

சரியாக அதே நேரத்தில்...

மின்சாரம் போய் பத்து நிமிடங்கள் ஆகியிருந்தன. ஜேம்ஸ் போனுடன் போராடிக் கொண்டிருந்தான்.

"ஹலோ ஆபரேட்டர். கொஞ்சம் உதவி செய்யுங்க. நான் சாஸ்திரி நகரில் இருக்கிறேன். எங்க வீட்டில் மின்சாரம் போயிடுத்து. என்ன... நீங்க டிரங்க் அசிஸ்டென்ஸா? என்குயரியில் விசாரிக்கணுமா? அது என்ன நம்பர்?"

“டைரக்டரியில் பாருங்க” என்றாள் ஆபரேட்டர்.

“அது எங்கே ஒழிந்து விட்டதோ தெரியலைங்க. அடடா... உங்களை ஒழிந்து போகச் சொல்ல வில்லைங்க. இங்கே கரெண்ட் இல்லை.

“...”

“உங்கள் மீது புகார் செய்வேன். என்ன? நம்பர் சொல்றீங்களா? அந்த நம்பர் சொல்வதற்கு பதில் மின்சார இலாக்காவின் நம்பரையே சொல்லி விடலாம் இல்லையா?”

மறுமுனையில் போன் கட்ஆகிவிட்டது.

ஜேம்ஸ் டைரக்டரியில் கம்பிளயிண்ட் என்ற பகுதியைத் தேடி 198க்கு போன் செய்தான். போன் வேலை செய்யாமல் போனால்தான் அவர்களுக்கு புகார் செய்ய வேண்டுமாம்.

சாம, தான, பேத, தண்டோபாயத்தில் முதலாவது வழியை பின்பற்ற நினைத்தான் ஜேம்ஸ். அசிஸ்டென்ஸுக்கு போன் செய்து பெண் குரலில் “ஹலோ! நாங்க சாஸ்திரி நகரில் குடியிருக்கிறோம். எங்க வீட்டில் கரெண்ட் இல்லை” என்றான்.

“அடடா... எப்போ போச்சு?” குசலம் விசாரித்தான். பரவாயில்லை. இத்தனை நேர முயற்சிக்குப் பிறகு நல்லவன் ஒருவன் கிடைத்தான் என்று நினைத்துக் கொண்டே “பத்து நிமிடங்கள் ஆகிறது” என்றான்.

“உங்க வீட்டில் மட்டும் தான் போச்சா இல்லை தெரு முழுவதும் போச்சா?” அந்த ஏரியா எம்.எல்.ஏ.வை போல் விசாரித்தான்.

“எங்க வீட்டில் மட்டும் தான் போச்சு.”

“சாஸ்திரி நகர் கரெண்ட் ஆபீஸின் நம்பர் வேண்டுமா உங்களுக்கு?”

"ஆமாங்க."

"197க்கு என்குயரி செய்து கேளுங்க." இலவசமாக அறிவுரையை வழங்கி விட்டு போனை வைத்து விட்டான்.

மறுமுனையில் இருந்தவன் இழுத்து ஒரு அறை கொடுக்க வேண்டும் என்ற அளவுக்குக் கோபம் வந்தது. மனதில் திட்டிக் கொண்டே 197க்கு போன் செய்தான். "ஹலோ! எனக்கு சாஸ்திரி நகர் சப் ஸ்டேஷன் நம்பர் தர்றீங்களா?" ஆபரேட்டரிடம் கேட்டான்.

"ஒரு நிமிடம் சார்." அந்த ஆபரேட்டர் தேடிக் கண்டுபிடித்து அந்த நம்பரைக் கொடுத்தாள்.

உடனே அந்த நம்பருக்குச் செய்தான். "ஹலோ! சாஸ்திரி நகர் சப் ஸ்டேஷன்தானே?"

"ஆமாங்க. அதுதான்." மறுமுனையில் கேட்டது.

"இதோ பாருங்க. எங்க வீட்டில் கரெண்ட் இல்லை. எங்க வீட்டு முகவரி..." என்று மேலும் சொல்லப் போனான்.

"அய்யா இல்லைங்களே. வீட்டுக்கு போயிட்டாரு."

"மின்சார இலாக்கா ஆட்கள் இரவு முழுவதும் ஆபீசில் இல்லாமல் வீட்டுக்குப் போய் விட்டால் ப்யூஸ் யாரு வந்து போடுவாங்களாம்?"

"என்னவோ எனக்குத் தெரியாதுங்க. அவரையே கேளுங்க."

"அப்போ நீ யாரு?"

"சாஸ்திரி நகர் வாட்டர் வர்க்ஸ் ஸ்டேஷனில் ப்யூனுங்க."

டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் மீது பெட்ரோலை ஊற்றி கொளுத்தி விட வேண்டும் போல் இருந்தது ஜேம்ஸுக்கு. இந்த முறை 199க்கு போன் செய்தான்.

ஒரு நிமிடம் கழிந்தது. இரண்டு நிமிடம்...மறுமுனையில் யாரும் போனை எடுக்கவில்லை. ரிசீவரை கடாசி விடுவோம் என்று நினைக்கும் போது ஆபரேட்டர் லைனில் வந்து "ஹலோ!" என்றாள். போனில் மற்ற உரையாடல்களும் கேட்டுக் கொண்டிருந்தன.

ஜேம்ஸ் தொண்டைக் கிழியும் அளவுக்கு உரத்த குரலில் "ஐந்து நிமிடங்களாக மணி அடித்தாலும் யாரும் எடுக்க வில்லையே? எங்கே போய்த் தொலைந்தீங்க எல்லோரும்?" என்று கத்தினான்.

"எங்களுக்கு ஒன்றும் ஆயிரம் கைகள் இல்லை. ஒரு முறை இங்கே வந்து பாருங்க. எப்படி வேலை செய்கிறோமோ," அதே அளவுக்கு வேகமாய் பதில் குரல் கேட்டது.

ஜேம்ஸ் திடுக்கிட்டான். டெலிபோன் இலாக்காவில் இப்படி எரிச்சலுடன் பதில் சொல்வது அவனுக்கு புதிது. அவன் திடுக்கிட்டதற்குக் காரணம் அந்த குரலில் தென்பட்ட எரிச்சல் இல்லை.

அந்த குரல்...

அவனுக்கு ஏற்கனவே தெரியும்.

"ஹலோ! நீங்கதானா?" என்றான்.

"யாரு?"

"சமீபத்தில் போன் அப்சர்வேஷனில் எப்படி வைப்பது என்று நான் கேட்ட போது விவரங்களை சொன்னீங்களே."

சுலோசனா வியப்படைந்தாள். "உங்களுக்கு அந்த விவரங்களை தந்தது நான்தான்னு எப்படி கண்டு பிடிச்சீங்க?"

"ஃப்ரீக்வென்ஸியை வைத்து குரலை அடையாளம் கண்டு பிடிக்க என்னால் முடியும்."

"ரொம்ப பெரிய கலைதான் அது."

"தாங்க்யூ. உங்கள் பெயர்?"

"சுலோசனா" என்று சொல்லிவிட்டு தொடர்பை துண்டித்தாள்.

மேலும் அரைமணி நேரம் வேலை செய்து ட்யூட்டீயை முடித்தாள். ரிலீவரிடம் போர்டை ஒப்படைத்து விட்டு லாக்கரிலிருந்து பேக்கை எடுத்துக் கொண்டு லிஃப்ட் பக்கம் நடந்து வருகையில் "எக்ஸ்க்யூஸ் மீ" என்ற குரல் கேட்டது.

அவள் தலையைத் திருப்பிப் பார்த்தாள். முப்பது வயது மதிக்கத் தக்க இளைஞன் ஒருவன் அவளை நோக்கி வந்து கொண்டே "சுலோசனா என்பது..." தயக்கத்துடன் பாதியிலேயே நிறுத்தினான்.

"நான்தான்."

"குட் ஈவினிங். என் பெயர் ஜேம்ஸ். வரச் சொன்னீங்க இல்லையா. அதான் வந்து விட்டேன்."

அவளுக்குப் புரியவில்லை. அவன் பக்கம் குழப்பமாக பார்த்தாள்.

"எங்களுக்கு ஒன்றும் ஆயிரம் கைகள் இல்லை. ஒருமுறை இங்கே வந்து பாருங்க எப்படி வேலை செய்கிறோமோ" என்றான் அவளுடைய குரலை பின்பற்றி.

அவளுக்கு சிரிப்பு வந்தது. "நீங்கள் தானா அது" என்றாள்.

☆ ☆ ☆

“நீங்க அவ்வளவு நெருக்கத்திலேயே இருந்துகொண்டு என்னை அவ்வளவு தூரம் வரவழைப்பதில் உங்கள் எண்ணம் தான் என்ன? நான் எவ்வளவு ஸ்பீடாக டிரைவ் செய்து கொண்டு வந்தேன் தெரியுமா? அவ்வளவு ஸ்பீடாக வந்தும் நீங்கள் தென்படவில்லை என்றால் இது என்னை முட்டாளாக்கும் திட்டம் தான். இப்படியே நடந்தால் நான் என்ன அந்த கடவுளே வந்தால் கூட உங்களைப் பிடிக்க முடியாது. தயவு செய்து என்னுடைய நேரத்தை வீணடிக்காதீங்க.” கோபமாக சொன்னான் ரேவந்த்.

“நான் முன்னாடியே சொன்னேன் உங்களை ஏமாற்றுவது என்னுடைய நோக்கம் இல்லை என்று. சரியான குறிப்புகளை தந்து கொண்டுதான் இருந்தேன். அப்படியும் கண்டுபிடிக்க முடியவில்லை என்றால் அது என்னுடைய தவறு இல்லை.”

“என்ன க்ளூ கொடுத்தீங்க? உங்க வீடு அந்த மணிக் கூண்டுக்கு பக்கத்திலேயே தான் இருக்க வேண்டும். நான் இத்தனை தொலைவிலிருந்து வருவதற்குள் நீங்க போய்விட்டீங்க. இதென்ன பந்தயம்?”

“நான் ஏறிய டாக்ஸிக்காரனை உங்களிடம் போகச் சொல்லி அனுப்பினேன். அவனை நீங்க ஏன் என்று கேட்க வில்லை. அந்தப் பெண் எங்கே ஏறினாள் என்று கேட்டிருந்தால் அவன் நான் இருந்த ஏரியாவை சொல்லி யிருப்பான். அதற்கு முன்பே எங்க வீட்டு போன் நம்பர் பற்றிய குறிப்பு தந்திருக்கிறேன். அந்த இரண்டையும் சேர்த்து சரிபார்த்துக் கொண்டால் உங்களுக்கு முழு விவரமும் கிடைத்திருக்கும்.”

ரேவந்த் அடிபட்டவன் போல் பின் வாங்கினான். உடனே சமாளித்துக் கொண்டு “என்னவோ பொய் சொல்லச் சொல்லி நீங்க டாக்ஸி டிரைவரிடம் சொல்லி யிருக்கலாம் இல்லையா?”

"அது வேறு விஷயம். நீங்க அவனை எதுவும் கேட்கவில்லையே?"

"நீங்க டைப் இன்ஸ்டிட்யூடில் இருக்கீங்கன்னு சொன்னதுமே அங்கே ஓட்டமெடுத்தேன்."

"அவசரக்குடுக்கை என்றால் இதுதான். ஒருக்கால் நான் இன்ஸ்டிட்யூடில் இருந்தால் அங்கிருந்து ஓடிப் போய்விட மாட்டேன் இல்லையா? முதலில் கைக்கு கிடைத்த டிரைவரை விட்டு விட்டு எதற்காக அங்கே போனீங்க?"

"டிரைவர் உண்மையைச் சொல்லுவான்னு நான் நம்பவில்லை. அவன் என்னை தேடிக் கொண்டு வந்த போதே எனக்கு சந்தேகம் ஏற்பட்டது."

"டிரைவரிடம் நீங்க ஒரு கேள்வி கூட கேட்டிருக்கத் தேவையில்லை. நீங்க கிளம்புவதற்கு முன் உங்களை ஒரு கேள்வி கேட்டேனே, நினைவு இருக்கா? அங்கே மழை பெய்கிறதா என்று. இல்லைன்னு சொன்னீங்க. நீங்க நான் வந்த டாக்ஸியைக் கொஞ்சம் உற்று பார்த்திருந்தால் அது மழையில் நனைந்திருப்பது புரிந்திருக்கும். அந்த சின்னத் தூரல் இந்த வட்டாரத்தில் எங்கே பெய்திருக்கும்னு கண்டு பிடிப்பது உங்களுக்கு சிரமமாக இருந்திருக்காது. அதோடு அந்த டிரைவர் உண்மையைச் சொல்கிறானா பொய் சொல்கிறானா என்று எளிதாக கண்டு பிடித்திருக்கலாம். இப்படி யோசிப்பதை விட்டு விட்டு அனாவசியமாக இன்ஸ்டிட்யூட்டிற்கு ஓடினீங்க."

அவன் நாணமடைந்தவனாய் "நான் அவ்வளவு ஆழமாக யோசித்துப் பார்க்கவில்லை" என்றான், நேர்மையாக தோல்வியை ஒப்புக் கொள்வது போல்.

"போகட்டும் விடுங்க. இன்னும் இருபத்தி ஆறு நாட்கள் இருக்கே. கடைசி நாளில் கண்டுபிடித்து விட்டால் கூட போதும். நீங்க ஜெயித்தாற் போல்தான்."

"சொல்ல மறந்து விட்டேன். உங்களைப் பற்றி டைப் இன்ஸ்டிட்யூட் முதலாளி வர்ணித்துச் சொன்னார்."

மறுமுனையில் சின்ன சிரிப்பு. "என்ன சொன்னார்?"

"தேவக் கன்னிகைக்கு குறைந்த லெவலில் இல்லை அந்த வர்ணனை."

அவள் கொஞ்ச நேரம் மௌனமாக இருந்து விட்டு பிறகு தாழ்ந்த குரலில் சொன்னாள். "நான் உங்களுக்கு ஏமாற்றம் தரும் விதமாக இருக்க மாட்டேன் என்று தான் நினைக்கிறேன் ரேவந்த்."

"எனக்கு உங்களை உடனே பார்க்க வேண்டும் போல் இருக்கு."

"இன்னும் இருபத்தாறு நாட்கள் பொறுத்துக் கொள்ளணும். அதற்குள் நீங்க கண்டுபிடித்து விட்டாலும் சரிதான். சொல்ல மறந்துவிட்டேன். உங்களுக்கு கடிதம் எழுதுவதாக சொன்னேன் இல்லையா இன்றைக்குதான் ஒரு கடிதம் எழுதி தபாலில் போட்டேன். வாரத்திற்கு ஒரு கடிதம் வீதம் இன்னும் மூன்று கடிதங்கள்."

"அதற்குள் என்னால் கண்டுபிடிக்க முடிந்தால் தானே?"

"முடியும் என்றே எதிர்பார்ப்போம்."

"என் அறிவுத்திறனை பயன்படுத்தி உங்களை எப்படியாவது கண்டு பிடித்தே தீருவேன். தோற்றுப் போய் விட்டால் அது வேறு விஷயம்." அவன் குரலில் பிடிவாதம் வெளிப்பட்டது.

அவள் சிரித்துக் கொண்டே சொன்னாள். "இந்த உலகில் அறிவு படைத்தவர்கள் நிறையபேர் இருக்கிறார்கள். ஆனால் அறிவுடன் லாஜிக்காக யோசித்து செயல்படு பவர்கள் ரொம்ப குறைவு. இந்த இரண்டாவது பிரிவைச்

சேர்ந்த ஆண்களைத்தான் பெண்கள் விரும்புவார்கள். இந்த விஷயம் பெரும்பாலான இளைஞர்களுக்குத் தெரியாது."

"ஊஹ¨ம். எனக்கு சரியாக புரியவில்லை" என்றான் ரேவந்த்.

"உதாரணமாக ஒரு வீட்டுக் கூரையின் மீது பத்து காக்கைகள் உட்கார்ந்து இருக்கின்றன. ஒருவன் துப்பாக்கியால் அதில் ஒன்றை சுடுகிறான். இப்போ எத்தனை காக்கைகள் அந்தக் கூறையின் மீது இருக்கும்."

"ஒன்றுமே இருக்காது. பறந்து போயிருக்கும்." ரேவந்த் சட்டென்று சொன்னான்.

"அது சாதாரணமானவர்கள் சொல்லும் பதில். "ஒன்றே ஒன்று இருக்கும். செத்துக்கிடக்கும் அந்த காக்கை."

"அது கொஞ்சம் புத்திசாலி சொல்ற பதில்."

"ஒன்பது இருக்கும். துப்பாக்கி தொலைவிலிருந்து சுடப்பட்டு அந்த சத்தம் மற்ற காக்கைகளுக்குக் கேட்காத பட்சத்தில்"

"அது அளவு கடந்த புத்திசாலியாக இருப்பவன் சொல்வது."

ரேவந்த் ரோஷமடைந்தான் "பின்னே என்னதான் பதில்?" என்று கேட்டான்.

"கேள்விக்கு பதில் சொல்லும் முன் கொஞ்சமாவது லாஜிக்காக யோசித்தால் உங்களுக்கு ஒரு விஷயம் புரியும். கேள்வி எவ்வளவு காக்கைகள் எஞ்சியிருக்கும் என்பது இல்லை. கூரையின் மீது எவ்வளவு இருக்கும் என்பது தான். கூரை சமதளமாக இருக்கும் பட்சத்தில் துப்பாக்கி தொலைவிலிருந்து சுடப்பட்டிருந்தால் பத்து காக்கைகளும் (இறந்து போன கா க்கத்தையும் சேர்த்து) கூரை மீதே இருக்க

வாய்ப்பு இருக்கிறது. புத்திசாலியாக இருப்பவன் தன்னுடைய அணுகுமுறையில் எந்த குறையும் இல்லாமல் பார்த்துக் கொள்வான். ரேவந்த்! நீங்க இதே வழியிலேயே யோசித்தால் ஒரு மாதம் கூட தேவையில்லை. பத்தே நாட்களில் கண்டு பிடித்து விடலாம்."

ரேவந்த் வியப்படைந்தவனாய் "நீங்க என்ன படித்திருக்கீங்க?" என்று கேட்டான்.

"என்ன படித்திருப்பேன் என்று நினைத்தீங்க?"

"முதலில் கணக்குன்னு நினைத்தேன். அப்புறம் ஆங்கிலம்னு. ஆனால் இப்போ தோன்றுகிறது. லாஜிக்காக இருக்குமோ என்று."

"ஊஹூம். இவற்றில் எதுவும் இல்லை. ஃபிலாசபி. நீங்க சொன்ன அத்தனை சப்ஜெட்டும் அதிலிருந்து வந்தவை தான்."

உண்மைதான் என்று நினைத்துக் கொண்டான்.

"சரி. நான் வெச்சடறேன். நாளைக்கு உங்களுக்குக் கடிதம் கிடைக்கும். பை."

"ஒரு நிமிஷம்." கலவரமடைந்தவனாய் சொன்னான். "உங்க நம்பரைப் பற்றி வேறு ஏதாவது க்ளூ கொடுங்க ப்ளீஸ்."

"எந்த நம்பர்? வீட்டு நம்பரா இல்லை போன் நம்பரா?

"நீங்க I ATE NOTHING என்று ஒரு வாக்கியம் சொன்னீங்களே அதைப்பற்றி."

"சரி. அப்படியானால் எழுதிக்கொள்ளாமல் கேளுங்கள்" என்று சொல்லத் தொடங்கினாள். "ஐந்து எண்கள் கொண்ட நம்பர். எல்லாவற்றையும் கூட்டினால் வரும் தொகை பத்தொன்பது. முதலாவது எண்ணை விட

இரண்டாவது எண் எட்டு மடங்கு அதிகம். கடைசி மூன்று எண்களை ஒன்றோடு ஒன்று பெருக்கினால் சைபரோ அல்லது இருபத்தி நான்கு வரும். கூட்டினால் பத்து வரும். நான்காவது, மூன்றாவது எண்களை கூட்டி ஐந்தாவது எண்ணிலிருந்து கழித்தால் இரண்டு வரும்" என்று சொல்லி விட்டு போனை டிஸ்கனெக்ட் செய்தாள்.

அவள் போனை வைத்ததுமே ரேவந்த் மேலும் தாமதம் செய்யாமல் போன் செய்தான். இது வரையில் அவள் வைத்த பந்தயத்தில் வெற்றி பெறமுடியவில்லையே தவிர அவனுடைய கணக்கு அறிவு குறைந்தது ஒன்றுமில்லை. அவள் சொல்லிக் கொண்டிருந்த போதே அவன் கணக்குப் போடத் தொடங்கி விட்டான்.

முதலாம் எண்ணை விட இரண்டாவது எண் எட்டு மடங்கு என்றதுமே அவை **1..8** என்று தெரிந்து விட்டது. கடைசி மூன்று எண்களின் கூட்டுத் தொகை பத்து என்றால் அவை **6,4,0** அல்லது **6,2,2** என்றாவது இருக்கணும். கடைசி எண் எல்லாவற்றையும் விட பெரிய எண் என்பதாலும் வித்தியாசம் இரண்டு என்பதாலும் அந்த நம்பர் **18226, 18406, 18046** இந்த மூன்றில் ஏதோ ஒன்றாக இருக்க வேண்டும். போனை அருகில் இழுத்துக் கொண்டு முதல் நம்பருக்கு போன் செய்தான்.

"ஹலோ! மறுமுனையிலிருந்து குரல் கேட்டது.

"இப்பொழுது தான் ஒரு பெண் அங்கிருந்து போன் செய்தாள்."

"பெண்ணா? இருக்கவே முடியாது. யாராவது பெண் குரலில் பேசி இருப்பாங்க." அந்தப் பக்கம் இருந்தவன் சிரித்துக் கொண்டே சொன்னான்.

ரேவந்த் கோபத்தை அடக்கிக்கொண்டு "அவ்வளவு உறுதியாக எப்படிச் சொல்றீங்க?" என்று கேட்டான்.

"இது பைத்தியக்கார ஆஸ்பத்திரி என்பதால்" என்று சொல்லிவிட்டு போனை வைத்து விட்டான் அந்த ஆள்.

ரேவந்த் மனதில் நொந்து கொண்டே இரண்டாவது நம்பருக்கு போன் செய்தான்.

"திஸ் ஈஸ் கேன்சர் ஹாஸ்பிடல் ப்ளீஸ்" என்று ஒரு பெண் குரல் இனிமையாக ஒலித்தது. பட்டென்று வைத்து விட்டு மூன்றாவது நம்பருக்கு போன் செய்தான்.

முதலில் பெருத்த இருமல் சத்தம் கேட்டது. "ஹலோ! டி.பி.ஆஸ்பத்திரி."

ரேவந்த் கையிலிருந்து ரிசீவர் நழுவி விட்டது. ஒரு நிமிடம் யோசித்தான். அவள் சொன்னது நினைவுக்கு வந்தது.

"புத்திசாலியாக இருப்பவன் தன்னுடைய அணுகு முறையில் எந்த குறையும் இல்லாமல் பார்த்துக் கொள்வான்."

உடனே டெலிபோன் டைரக்டரி எடுத்துக் கொண்டு அந்த மூன்று ஆஸ்பத்திரிகளின் நம்பர்களை பார்த்தான். ஒருக்கால் அவள் போன் அருகிலேயே இருந்து தனக்கு 'பைத்தியக்கார ஆஸ்பத்திரி' என்று சொல்லியிருக்கலாமோ என்று நினைத்தான். மூன்று ஆஸ்பத்திரி நம்பர்களும் வரிசையாக **18226, 18046, 18406** என்றே இருந்தன.

அப்படியானால் தான் தான் தவறாக கணக்குப் போட்டிருப்பான் போலும்.

பின்னே வேறெந்த நம்பராக இருக்கும்?

ரேவந்த் பேப்பரையும் பேனாவையும் எடுத்து வைத்துக் கொண்டு கணக்குப் போடப் போகும் போது சீதாராமன் உள்ளே வந்தான். சீதாராமனுக்கு வது நாற்பதுக்கு மேல் இருக்கும். பேரா சைக்காலஜி படித்திருப்பதாகச் சொல்லிக் கொண்டிருப்பான். நெற்றியில் குங்குமப் பொட்டு, முகத்தில்

அசட்டுச் சிரிப்பு. குறுக்கு வழியில் பிரபலமாகி விட வேண்டும் என்ற தவிப்பு அவனிடம் வெளிப்படையாக தென்படும்.

"உங்களை ஒரு உதவி கேட்கணும்னு வந்தேன் சார்." உள்ளே வரும் போதே சொன்னான்.

"என்ன?" என்றான் ரேவந்த், அவனை சீக்கிரமாக அனுப்பி விட வேண்டும் என்ற எண்ணத்தில்.

"நீங்க எழுதிய புத்தகத்தை... எனக்கு அர்ப்பணம் செய்யணும்."

ரேவந்திற்கு சட்டென்று புரியவில்லை. அவன் சொன்னது புரிந்த பிறகு அருவருப்பு ஏற்பட்டது.

ரேவந்த் தன்னுடைய அனுபவத்தை, தனக்குத் தெரிந்த விஷயங்களை எல்லாம் ஜோடித்து 'சதுரங்கம் ஆடுவது எப்படி?' என்று ஒரு புத்தகத்தை ஆங்கிலத்தில் எழுதியிருந்தான். பிரபல நிறுவனம் ஒன்று அதைப் பிரசுரித்துக் கொண்டிருந்தது. அதைத் தான் தனக்கு அர்ப்பணம் செய்யச் சொல்லி கேட்பதற்காக சீதாராமன் வந்திருக்கிறான்.

ரேவந்த் பெரும்முயற்சி செய்து தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு "இதோ பார் சீதாராமன்! அர்ப்பணம் என்பது தனக்குப் பிரியமான நபருக்கு அன்போடு தருவது. அவ்வளவுதானே தவிர கேட்டு வாங்கிக் கொள்வது இல்லை. எனக்கு கோபமும் வெறுப்பும் ஏற்பட்டு உன்னைத் திட்டுவதற்கு முன் இங்கிருந்து போய்விடு" என்றான்.

"உங்களைப் பற்றி பலருக்குத் தெரியும். உங்களைப் போன்றவர்கள் என்னைப் பற்றி எழுதினால் எனக்கும் பெயர் கிடைக்கும் இல்லையா" என்றான் கோணலாக சிரித்துக் கொண்டே.

சீதாராமன் சின்னச் சின்ன கட்டுரைகளை எழுதிக் கொண்டு இருப்பான். பெயரும், புகழும் கிடைக்க வேண்டும் என்ற ஆசை அதிகம்.

ரேவந்த் பொறுமையை வரவழைத்துக் கொண்டு "ஏதாவது கலையில் திறமை இருந்தால் எப்படியாவது புகழ் வந்து சேரும். அவ்வளவு தானே தவிர இப்படி கேட்டு வாங்கிக் கொள்வதால் வந்து விடாது. இனி கிளம்பு" என்றான்.

அவன் நகரவில்லை. சட்டை பையிலிருந்து நூறு ரூபாய் நோட்டை எடுத்து மேஜையின் மீது வைத்து விட்டு "இதை வெச்சுக்குங்க" என்றான்.

மறுநிமிடம் ரேவந்த் அவனுடைய காலரைப் பற்றி உயரே எழுப்பினான். "ராஸ்கெல்... உன்னை... உன்னை" என்றவன், "இனி ஒரு போதும் இது போல் செய்யாதே" என்று நூறு ரூபாய் நோட்டை அவன் ஜோபியில் திணித்தான். "இது என்னுடைய ஒரு நாள் லஞ்ச் செலவு. மைண்ட் இட்? கெட் அவுட்" என்று கத்தினான்.

சீதாராமன் வருத்தப்படவில்லை. அதே அசட்டுச் சிரிப்புடன் "மன்னிச்சுக்குங்க சார்" என்றான்.

"கெட் அவுட்!" ரேவந்த் உச்சஸ்தாயில் கத்தினான். அவன் போனதும் ப்யூனை அழைத்து "அவன் மறுபடியும் இந்தப் பக்கம் வந்தால் உள்ளே விடாதே" என்றான்.

கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாய் வெளியேற்றப் பட்ட சீதாராமனின் முகத்தில் அந்த அறையிலிருந்து வெளியேறும் வரை அதே அசட்டுச் சிரிப்பு வழிந்து கொண்டிருந்தது. அறையைத் தாண்டியதும் அந்தச் சிரிப்பு மாயமாகி விகாரமாக மாறியது. ஒரு முறை தலையைத் திருப்பி ரேவந்தின் அறையை நோட்டமிட்டான்.

பிறகு தலையை அசைத்துவிட்டு வெளியேறினான்.

"நான் சொன்ன அந்த ஒரு வார்த்தையைப் பிடித்துக் கொண்டு இவ்வளவு தூரம் வந்தீங்களா?" சுலோசனா சொன்னாள்.

"முழுக்க முழுக்க உண்மையில்லை என்று வையுங்க. மாலிஷஸ் கால் பற்றி உதவி செய்த போதே உங்கள் குரல் எனக்கு பிடித்து விட்டது. அப்போதே எக்ஸ்சேஞ்ச்க்கு பார்க்க வரலாமா என்று கேட்க நினைத்தேன். ஆனால் நன்றாக இருக்காதுன்னு விட்டு விட்டேன். இரண்டாவது முறை இன்று காலையில் நீங்களே போனில் கிடைத்ததும் இது யதேச்சையாக நடந்தது இல்லை என்றும், கடவுள் கூட நாம் சந்தித்துக் கொள்வதை விரும்புகிறார் என்றும் புரிந்து கொண்டு உங்க பெயரைக் கேட்டேன். நீங்களும் சொன்னீங்க. நான் வந்து விட்டேன்." அதேதோ ரொம்ப சாதாரணமான விஷயம் என்பது போல் ஜேம்ஸ் சொன்னான்.

சுலோசனா அவன் முகத்தை உற்றுப் பார்த்தாள். அவன் முகம் உணர்ச்சியற்று இருந்தது.

"எங்க சூபர்வைசர் ஏதாவது சொல்வாளோ என்னவோ?"

"பரவாயில்லை. போகலாம் வாங்க" என்றான். உண்மையில் அவனுக்கு எக்ஸ்சேஞ்சைப் பார்க்க வேண்டுமென்ற விருப்பம் எதுவும் இல்லை, அவளைப் பார்க்க வேண்டுமென்ற எண்ணம் தவிர.

அவள் ஒரு வினாடி தயங்கி "கொஞ்சம் இருங்க" என்று உள்ளே போய் விட்டு திரும்பி வந்தாள். "வாங்க" என்றாள்.

இருவரும் உள்ளே போனார்கள். கண்ணாடிக் கதவைத் திறந்து கொண்டு அவர்கள் உள்ளே நுழைந்ததுமே அங்கு தென்பட்ட காட்சியை பார்த்து நம்ப முடியாதவனாய் அப்படியே நின்று விட்டான். அதுவரையில் அவனுக்கு

டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் என்றாலும், ஆபரேட்டர்கள் என்றாலும் ஒருவிதமான ஏளனம் கலந்த அபிப்பிராயம் இருந்தது. ஊழியர்கள் வேலை செய்யாமல் கும்பலாக உட்கார்ந்து கொண்டு வம்பு பேசிக் கொண்டிருப்பார்கள் என்று எண்ணியிருந்தான்.

ஆனால் இங்கேயோ...

சுமார் ஐம்பது பேர் நீண்ட மேஜைக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டு நிமிர்ந்தோ, திரும்பியோ கூட பார்க்காமல் நம்பர்களை டயல் செய்து கொண்டு ஒருவினாடிகூட வீணாக்காமல் வேலை செய்து கொண்டிருந்தார்கள். எந்த ஆபீசிலும், எந்த பேக்டரியிலும் தென்படாத 'டைம் சென்ஸ்' அங்கு தென்பட்டது.

பின்னே இந்த இலாக்காவின் மேல் மக்களுக்கு ஏனிந்த ஏளன மனப்பான்மை? அவனுக்கு தன் நண்பன் சொன்னது நினைவுக்கு வந்தது. எந்த ஒரு இலாக்காவும் தவறாக செயல் பட்டால் நஷ்டம்தான் அடையும். ஆனால் டெலிபோன் இலாக்காவோ அதற்கு நேர்மாறாக லாபம் அடையும். போன் பயன்படுத்தாத போதும் ஆயிரக் கணக்கில் பில் வருவது, அடிக்கடி ராங் நம்பர் வருவது, கொஞ்சம் மழை பெய்தாலும் போன் செய்யாமல் இருப்பது...

எல்லாவற்றையும் விட முக்கியமாக விசாரணைக் காகவோ, நம்பர் உதவிக்காவோ போன் செய்தால் 199லோ அல்லது 197லோ யாருமே போனை எடுக்காமல் போவது.

அதைத்தான் அவளிடம் கேட்டான்.

"ரொம்ப தவறான அபிப்பிராயம் அது. உதாரணமாக இந்த 199ஐ எடுத்துக்குங்க" என்றாள். ஆறு பெண்கள் அந்த லைனில் வேலை செய்து கொண்டு இருந்தார்கள். அவர்கள் முன்னால் இருந்த போர்டில் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. ஆறுபேரும் போனில் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"தற்சமயம் இந்த ஆறுபேரும் ஆறு கஸ்டமர்களுக்கு உதவி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த விளக்குகள் எரிந்து கொண்டு இருக்கிறது என்றால் மேலும் ஆறு கஸ்டமர்கள் லைனில் வந்திருக்கிறார்கள் என்று அர்த்தம். இதைத் தான் 'கால் க்யூ சிஸ்டம்' என்பார்கள். இங்கே வெளி உலகிற்கு புரியாத விஷயம் ஒன்று இருக்கிறது. அந்த லைனில் வந்த கஸ்டமருக்கு எங்கேஜ்ட் டோன் கேட்காது. போன் மணி ஒலிக்கும் சத்தம் தான் கேட்கும். அவர்களையோ யாருமே போனை எடுக்கவில்லையே என்று எரிச்சல் அடைவார்கள். உண்மையில் அந்த மாதிரி போன் ஒலிப்பதற்கு அர்த்தமே என்னவென்றால் ஆபரேட்டர் யாருடனோ பேசிக்கொண்டிருக்கிறாள். அடுத்த சான்ஸ் உங்களுடையது தான். சற்று நேரம் லைனில் காத்திருங்கள் என்று. இதைப் புரிந்துகொள்ளாமல் டெலிபோன் இலாக்கா மேல் தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்திக் கொண்டு விடுகிறார்கள்.

"நானும் அப்படித்தான் நினைத்திருந்தேன். ஆப ஆப்பரேட்டர்கள் ஹெட் போனை எடுத்துக் கீழே வைத்து விட்டு வம்பு பேசிக் கொண்டு இருப்பார்கள் என்று. பை தி பை உங்க பப்ளிக் ரிலேஷன் ஆபிசர் யாரு?"

அவள் வியப்புடன் "எதற்காக கேட்கறீங்க?" என்றாள்.

"அவருக்கு பதில் என்னை அங்கே போடுங்கள். இந்த விஷயங்கள் எல்லாம் மக்களுக்குப் புரியும் விதமாக எடுத்துச் சொல்லும் பொறுப்பு அவருடையது தான்."

"அவர் மட்டும் என்ன செய்வார்? அவருக்கும் மற்ற பிரச்னைகள் இருக்கும் இல்லையா?"

இருவரும் வெளியே வந்தார்கள். லிஃப்டில் இறங்கும் போது அவன் மின்சார இலாக்காவின் சப்ஸ்டேஷனின் நம்பரைக் கண்டு பிடிக்க தான் பட்டபாட்டை விவரித்தான்.

அவன் சொல்லச் சொல்ல அவளால் சிரிப்பை அடக்க முடியவில்லை. அவள் சிரிக்கும் போது கன்னத்தில் விழுந்த குழி ரொம்ப அழகாக இருந்தது.

லிஃப்ட் நின்றதும் "போயிட்டு வரேன்" என்றாள்.

"உங்க ஆபீசுக்கு வந்த விருந்தாளிக்குக் காபி கூட தராமல் அனுப்பி விடுவீங்களா?"

எதிர் பாராத இந்தக் கேள்விக்கு திகைத்துப் போனாலும் உடனே சிரித்து விட்டாள். "எங்க கேன்டீனில் காபியைக் குடித்தால் இனி வாழ்க்கையில் ஒரு நாளும் காபி குடிக்க மாட்டீங்க" என்றாள்.

"அப்படி என்றால் வெளியே எங்கேயாவது குடிப்போம்" என்று வாட்சைப் பார்த்தான். "இந்த நேரத்தில் காபி எதுக்கு? உங்களுக்காக யாராவது காத்துக்கிட்டு இருப்பாங்களா?" என்று கேட்டான்.

அவள் இல்லை என்றதும் "அப்போ சேர்ந்து சாப்பிடுவோம்" என்றான்.

கொஞ்சம் கூட தயங்காமல் அவள் தலையை அசைத்தாள்.

அப்பொழுது இரவு ஒன்பது அடிக்க இருந்தது. நகரம் இன்னும் உறக்கத்தில் ஆழ்ந்திருக்கவில்லை.

அவனுடன் மோட்டார் சைக்கிளில் அந்த விசாலமான தெருவில் வேகமாக போகும் போது அவளுக்கு பயமாக இருந்தது.

பிடித்துக் கொள்ள எதுவுமே இல்லை, அவனுடைய இடுப்பைத் தவிர.

# 8

அன்பார்ந்த உங்களுக்கு,

இதுதான் நான் உங்களுக்கு எழுதும் முதல் கடிதம். ஆனால் தபாலில் சேர்க்காத கடிதங்கள் என் கற்பனையில் எத்தனையோ எழுதியிருப்பேன். இந்தக் கடிதத்துடன் என் புகைப்படத்தையும் சேர்த்து அனுப்பி வைக்கலாம் என்று நினைத்தேன். ஆனால் பயந்து விடுவீர்கள் என்று எண்ணி மனதை மாற்றிக் கொண்டேன். என்னை உடனே பார்த்தாக வேண்டும் என்ற ஆர்வம் உங்களுக்கு ஏன்? போனில் உங்கள் குரலில் தெரியும் பரபரப்பை நினைக்கும் போது எனக்குச் சிரிப்புதான் வருகிறது. இன்னும் எத்தனை நாள்? இருபத்தி நான்கு நாட்கள் தானே. அதுவரை பொறுமையாக காத்திருக்க மாட்டீர்களா?

என்னைப் பற்றி சொல்லச் சொன்னீங்க. என்னவென்று சொல்வது? வானத்தில் பறக்க முடியாதவாறு கனத்த சிறகுகள் கொண்ட பறவைப் போன்றவள் நான். உறவினர்களும், வேலையாட்களுடன் ரயில்வே பிளாட் ஃபாரம் போல் இருக்கும் எங்கள் வீட்டில் புத்தகங்கள் தான் என் நண்பர்கள். உங்க நாவலின் மொழி பெயர்ப்பு "ஸ்ரீகாந்த்" பலமுறை படித்திருக்கிறேன். அதைப் படித்த பிறகுதான் தோன்றியது. ஒவ்வொரு சந்திப்பும் ஒரு பிரிவுக்கு அடிகோலிடுகிறது என்று. சந்திப்பையும், பிரிவையும் ஒரே விதமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்றால் அதற்கு பற்றற்ற தன்மை இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

ஃபிலாசஃபிக்கு மறுபெயர் "விஸ்டம் ஆஃப் லவ்" என்று பிளாட்டோ சொல்லியிருக்கிறார். அது உண்மைதான் போலும். எந்த விதமான ஆசைகளும் இல்லாமல் இருப்பது ஃபிலாசபி இல்லை. எல்லாம் இருந்தும் அவற்றிலிருந்து

விலகியிருப்பது தான் ஃபிலாசபி. இன்னும் சொல்லப் போனால் காதல் என்பதே வேதாந்தம் தான். அடடா... என்னுள் இத்தனை அன்பு புதைந்திருக்கிற விஷயமே எனக்கு இப்பொழுது தான் புரிகிறது. 'தாங்க்யூ.' (ஏன் சொல்கிறேன் என்று தெரியும் இல்லையா.)

மைகாட்! எதையோ எழுத நினைத்து வேறு எதையோ எழுதிக் கொண்டிருக்கிறேன்.

தமிழ் சரியாக வராதோ என்ற தாழ்வு மனப்பான்மை யைப் போக்கிக் கொள்வதற்காக மேலும் புரியாத தமிழைத் தப்பும் தவறுமாக எழுதிக் கொண்டிருக்கிறேன். தவறாக நினைக்காதீங்க.

இப்போ மணி என்ன தெரியுமா? பதினொன்று.

ஜன்னலுக்கு வெளியே எங்கும் நிலா வெளிச்சம். உலகம் உறங்கிக் கொண்டிருக்கிறது. கருத்த இரவை பால்நிலவில் தோய்த்து வானத்தில் பரத்தியிருப்பது போல் தோன்றுகிறது. விடிவதற்குள் ஊர் எல்லையைத் தாண்டி விட வேண்டுமென்று போட்டி போட்டுக் கொண்டு மேகங்கள் ஓடிக் கொண்டிருந்தன நிலா வெளிச்சத்தில் ஜாதி மல்லிகைகள் மலர்ந்திருக்கும் காட்சியை பார்ப்பதற்காக கண் இமைக்கும் நேரத்தைக் கூட வியர்த்தமாக்க விரும்பாத பேராசைக்காரி நான். ஜாதி மல்லிகை என்றதும் நினைவுக்கு வருகிறது. போனில் உங்கள் குரலைக் கேட்கும் பொழுதெல்லாம் ஜாதி மல்லிகை மலர்கள் மழையாய் என் மீது பொழிவது போன்ற உணர்வு! விடியற்காலையில் எழுந்து திருப்பாவையைக் கேட்டுக் கொண்டே லேசாக நடுங்கும் குளிரில் வீட்டின் முன்னால் கோலமிடும் போது ஏற்படும் சந்தோஷம்!

ஆக்ஸ்ஃபோர்டில் கார்த்திகை மாதமோ நவராத்திரி உற்சவமோ கிடையாது. பனி, இலையுதிர் காலம் போன்று

வாழ்க்கை. விடியலிலேயே அம்மாவுடன் சேர்ந்து கோவிலுக்கு போவதற்காக தலைக்குக் குளிப்பதால் அடிக்கடி ஜலதோஷம் பிடித்துக் கொண்டு விடும். அம்மாவுக்கு பக்தி அதிகம். அப்பாவோ வியாபாரத்தில் மூழ்கியிருப்பார். எனக்கு பக்தி இருக்கா இல்லையா தெரியாது. எது எப்படி இருந்தாலும் கோவிலுக்கு போவது மட்டும் மறக்க முடியாத அனுபவம்.

தொலைவில் மங்கலான வெளிச்சத்தில் தென்படும் சிவன் கோவில். கீழ் வானத்தை சிவக்கச் செய்யும் இளம் சூரியன். அந்த நிசப்த வேளையில் ஜோடியாக சேர்ந்து பாடும் வானம்பாடி பறவைகள். வாழ்க்கைக்கு தான் எவ்வளவு இனிமையை சேர்க்கின்றன. விடிவெள்ளியின் வெளிச் சத்தைத் துணையாக்கிக் கொண்டு கோவிலுக்குச் செல்லும் போது இதயம் முழுவதும் ஓங்காரநாதம் நிரம்பிவிட்டது போன்ற உணர்வு.

இன்று சற்று நேரத்தில் நகரம் துயிலெழுந்து விடும். கொஞ்சம் கொஞ்சமாக இயந்திரத்தன்மை நம் வாழ்க்கையில் புகுந்து கொள்வதை பார்க்கும் போது இந்த உலகத்தை விட்டு தொலைவாக போய் விட வேண்டும் என்று தோன்றும்.

சந்தியா வேளையில் இருட்டத் தொடங்கும் நேரத்தில் திறந்த வெளியில் உட்கார்ந்து தேநீர் அருந்தியபடி கீட்ஸின் படைப்புகளை ரசிப்பது மறக்க முடியாத அனுபவம். எனக்கு நானே உருவாக்கிக் கொண்ட சின்ன உலகம் இது. இதற்கு நான் தான் ராணி. என்னுடைய இந்த சிறிய உலகில் நீங்க எப்பொழுது அடி எடுத்து வைக்கப் போறீங்க? உங்களுக்காக எத்தனை கனவு மாளிகைகளை கண்ணொளி வெளிச் சத்தால் நிரப்பி வைத்திருக்கிறேன் தெரியுமா?

எங்கள் யுனிவர்சிடியில் ஹாகின்ஸ் என்று ப்ரஃபொசர் ஒருவர் இருந்தார். ஃபிலாசபி பற்றி அவர் சொல்லும் போது மணிக்கணக்காக கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும்

போல் தோன்றும். மனித வாழ்க்கையின் ஒவ்வொரு அசைவும் கடவுள் தான் முடிவு செய்வாராமே.

எங்க யுனிவர்சிடிக்கு தெற்கே உயர்ந்த மரங்கள் இருந்தன. அவற்றை "ஸ்னோ லான்" என்பார்கள். இரவு முழுவதும் பெய்த பனி அதன் கிளைகளில் சிக்கிக் கொண்டு இருக்கும். சற்றே உலுக்கினால் முத்துக்களைப் போல் உதிரும்.

நாம் சந்திக்கும் போது முதல் முதலாக என்ன பேசப் போறீங்க? "ஆட்டுக்கார அலமேலு" வை பார்த்தாயா என்று மட்டும் கேட்டு விடாதீங்க. ரவீந்திரநாத் டாகூர் எழுதிய "போஸ்ட் மேன்" நினைவுக்கு வருகிறது.

காலிப் எழுதிய கவிதைகளை படித்திருக்கிறீர்களா? "உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும் காதலியின் சிவந்த இதழ்களை மென்மையாக முத்த மிட்டேன். எவ்வளவு அழகான கனவு இது" என்று எழுதுவார். ஆனால் ஏனோ எனக்கு காலிப் கவிதைகளை விட உமர்கய்யாம் கவிதைகள் தான் பிடிக்கும்.

ரேவந்த்!

இதென்ன? இந்தப் பெண் எப்போதும் கனவு கண்டு கொண்டே இருப்பாளோ என்று நினைத்து விட்டீர்களா? தவறு... தவறு.. என்றாவது நீங்கள் சொல்லாமல் கொள்ளாமல் திடீரென்று எங்க வீட்டிற்குள் நுழைந்து என்னுடைய அறையை பார்த்தால் தெரியும். டிஸ்கோவும், டிரை சார்லெஸ் குரலும் அறையில் அலறிக் கொண்டிருக்கும். "ரொம்பவும் சின்னக் குழந்தையைப் போல் குதித்து கும்மாளம் போடுகிறாயே" என்று அம்மா கடிந்து கொள்வது பாட்டுக்கு நடுவில் தாள கதியில் கேட்டுக் கொண்டிருக்கும்.

அங்கே ஜீன்ஸ் உடையணிந்த இளம் பெண் ஒருத்தி உங்களுக்கு காட்சியளிப்பாள். பதட்டமடைந்து விடாதீங்க. நானும் சின்னப் பெண்தானே. பாரதியாரின் கவிதைகளை

மேல் நாட்டு இசையோடு கலந்து பாடினால் கேட்க விரும்பும் விசித்திர மனப்பான்மை கொண்ட ரசிகை நான். "இந்த வயதில் கும்மாளம் போடாமல் தமிழ் சினிமா கதாநாயகி போல் வயதான பிறகு கும்மாளம் போடச் சொல்கிறாயா?" என்று அம்மாவுடன் வாதாடுவேன். டீன் பீட்ஸ் இசைத்த ரிகார்ட் "கமான் டான்ஸ் டான்ஸ்" சமீபத்தில் தான் வெளியாகியிருக்கு. கேட்டிருக்கீங்களா? உண்மையிலேயே டான்ஸ் ஆட வேண்டும் போல் தோன்றும்.

இந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டால் சமையலறையில் கூட டிஸ்கோ ஆடிக் கொண்டே தோசையை தீய்த்து விடுவாளோ என்ற பயம் உங்களுக்கு வேண்டாம். இல்லாள் ஆனபிறகு அப்படிச் செய்ய மாட்டேன் என்று ஸ்டாம்ப் பேப்பரில் எழுதிக் தருகிறேன் ஆனால் படுக்கை அறையில் உங்கள் மூச்சு நிரம்பிய காற்றை சுவாசித்துக் கொண்டு ஜன்னலுக்கு அப்பால் தெரியும் நிலவையும் கலகலவென்று உதிரும் மல்லிகை மலர்களையும் பார்த்துக் கொண்டே உங்களை மறந்து போய் விட்டால் மட்டும் என்னை நீங்க மன்னிக்க வேண்டியிருக்கும்.

நாளைக்கு திங்கள்கிழமை. விடியலிலேயே எழுந்து கொண்டு காலத்தோடு போட்டி போட்டுக்கொண்டு ஓட வேண்டியிருக்கும். உறக்கம் வராத மனம் எங்கேயோ பறந்து செல்லத் துடித்துக் கொண்டு இருக்கிறது. அங்கே மல்லிகை மலர்கள் இருக்குமோ இல்லை மணல் மேடுகள் இருக்குமோ உங்களுக்கு அனுப்புகிறேன். அவை சின்னஞ்சிறு அகல் விளக்குகளாய் உங்கள் வீட்டு முற்றத்தில் ஒளிவீசிக் கொண்டிருக்கும். அந்த நிலா வெளிச்சத்தில் பாவாடை தாவணி அணிந்துகொண்டு மெல்ல மெல்ல நடந்து வரும் இளம் பெண்... அவள் தான்

உங்கள்
நிலாப் பெண்

மனம் பரவசமடைந்த நிலையில் அவன் சிலையாய் அப்படியே உட்கார்ந்து விட்டான். பிறகு கனவிலிருந்து விழித்தெழுந்தவன் போல் எழுந்து ஹாலுக்கு வந்தான். அங்கே தாய் ஊஞ்சல் பலகையின் மீது அமர்ந்துகொண்டு எதையோ தைத்துக்கொண்டு இருந்தாள். அவள் சந்தடி செய்யாமல் போய் தரையில் உட்கார்ந்துகொண்டு சிறு பையனைப் போல் அவள் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டான்.

அவள் பரிவுடன் மகனின் தலையை விரலால் கோதி விட்டு "என்னப்பா ரேவு! என்னவோ போல் இருக்கிறாயே?" என்று கேட்டாள்.

அவன் பதில் பேசவில்லை. அந்த நேரத்தில் அவனைப் பார்த்தவர்கள் யாருமே அவனை ஒரு இண்டர்நேஷனல் ப்ளேயர் என்று சொல்ல மாட்டார்கள். சதுரங்க விளையாட்டில் எதிராளியின் அசைவுகளை முன் கூட்டியே ஊகிக்கக் கூடிய திறமைப் படைத்தவன் என்றால் நம்பவும் மாட்டார்கள். அப்படிப்பட்டவன் இந்த நேரத்தில் தாயின் புடவைத் தலைப்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு இனிமையான நினைவுகளை அசை போட்டுக் கொண்டிருந்தான்.

"என்ன ரேவு! உடம்புக்கு ஒன்றுமில்லையே?" கலவரமடைந்து கொண்டே தாய் கேட்டாள்.

தாய் தன்னை அடிக்கடி "ரேவு!" என்று அழைத்ததும் ரோஷத்துடன் "எனக்கு இந்தப் பெயரை வைத்தது யாரும்மா?" என்று கேட்டான், தன்னுடைய காதல் விஷயத்தை தற்காலிகமாக மறந்து போனவனாய்.

"அந்தக் காலத்தில் யாருக்குக் குழந்தை பிறந்தாலும் உங்க அத்தை தானே பெயர் சூட்டுவாள்" என்றாள் தாய்.

ரேவந்தின் அத்தை ஒரு எழுத்தாளர். இப்பொழுதும் பக்கம் பக்கமாக எழுதித் தள்ளிக் கொண்டே இருப்பாள். ஆனால் புதிய தலைமுறை எழுத்தாளர்கள் வந்த பிறகு பப்ளிஷர்களும், எடிடர்களும் அவள் எழுத்துக்களை பிரசுரிப்பதை விட்டு விட்டார்கள்.

"அவளுக்கு டிமாண்ட் குறைந்த நாட்களில் நான் பிறந்திருப்பேனாய் இருக்கும். உலகத்தின் மீது உள்ள வெறுப்பை இது போல் என் மீது தீர்த்துக் கொண்டிருப்பாள்" என்றான்.

"என்ன நடந்தது்ப்பா?"

"ரேவந்த் என்றால் என்ன அர்த்தம் தெரியுமா?"

"என்ன?"

"குதிரைகளுக்கு பயிற்சி தருபவன். நீ செல்லமாக அழைக்கிறாயே 'ரேவு' என்று. அதனுடைய அர்த்தம் இதுதான்." கோபத்துடன் அங்கிருந்து எழுந்து போய் விட்டான்.

☆ ☆ ☆

"குட் மார்னிங் சார். என்னை புரொபசர் ராமன் அனுப்பியிருக்கிறார்."

"ப்ளீஸ் கமின்."

ரேவந்த் நாற்காலியில் அமர்ந்து கொண்டு கடிதத்தை அவர் முன்னால் வைத்துக்கொண்டே வெட்கம் கலந்த தயக்கத்துடன் "இது கிரிமினல் கேஸ் இல்லை" என்றான்.

அவர் சிரித்து விட்டு "எந்தக் கேள்வியும் கேட்காமல் உங்க வேலையை முடித்துத் தரச் சொல்லி ராமன் சொல்லியிருக்கிறார்" என்றார்.

ரேவந்த் மேலும் நாணமடைந்து "சாரி. ரொம்ப அற்ப விஷயத்திற்காக உங்களுடைய நேரத்தை வீணாக்குகிறேன்" என்றான்.

"பரவாயில்லை. எனக்கும் ஆர்வமாகத்தான் இருக்கு. அந்தப் பெண் யாருன்னு உங்களுக்குத் தெரியாதா?"

"ஊஹூம். இந்த கையெழுத்தைப் பார்த்து அந்தப் பெண்ணைப் பற்றிய விவரம் ஏதாவது தெரிந்து கொள்ள நினைக்கிறேன். பை தி பை நீங்க மனவியல் நிபுணரா?"

"இல்லை. குறைந்த பட்சம் டாக்டர் கூட இல்லை. கையெழுத்தை வைத்துக் கொண்டு சம்பந்தப்பட்ட நபரின் குணாதிசயத்தை கண்டு பிடிக்கும் சாஸ்திரத்தை கிராஃபாலஜி என்பார்கள். ஐ யாம் எ கிராஃபாலஜிஸ்ட். யார் வேண்டுமானாலும் இதைக் கற்றுக் கொள்ள முடியும். பொழுது போக்காக பிராக்டீஸ் செய்யலாம்."

"பிரொபசர் ராமன் சொன்னார். இது போன்ற டெக்னிக் இருப்பதே எனக்குத் தெரியாது."

அவர் முறுவலுடன் "நாளைக்கு வாங்க. அனலைஸ் செய்து வைக்கிறேன்" என்றார்.

ரேவந்த் மறுநாள் போன போது இரண்டு பக்கம் டைப் அடித்து வைத்திருந்ததைத் தந்தார்.

ரேவந்த் வியப்புடன் "ஒரு சின்ன லெட்டரை ஆதாரமாக வைத்துக் கொண்டு இவ்வளவு பெரிய சைகோ அனாலிஸ்ஸா?" காகிதங்களை பெற்றுக் கொண்டே கேட்டான்.

"கடிதம் தமிழில் இருந்தது. அதனால் ஓரளவுக்குத்தான் அனலைஸ் செய்ய முடிந்தது. ஆங்கிலத்தில் இருந்தால் மேலும் விவரங்களை தந்திருப்பேன்."

கையில் இருந்த காகிதத்தைப் பார்த்துக் கொண்டே "இதையெல்லாம் என்னால் நம்பவே முடியவில்லை" என்றான்.

"கையெழுத்தைப் பார்த்து வெறும் குணத்தை மட்டுமே அல்ல, அவருடைய குடும்பத்தைப் பற்றிக் கூட சொல்லி விடமுடியும். எழுத்துக்களின் அளவு, முற்றுப் புள்ளி வைக்கும் விதம், வாக்கியங்களின் அமைப்பு... எல்லாவற்றையும் விட முக்கியமாக கடிதத்தை விட்டுக் கடைசியில் கையெழுத்துப் போடும் போது தென்படும் சலிப்பு... கால் வாங்க மறந்து போவது, உணர்வுகளை வெளிப்படுத்தும் முறை, கடிதத்தை தொடங்கிய போது அழகாக இருந்த எழுத்துக்கள் கடைசி வரையில் அப்படியே இருக்கிறதா என்பது... இவற்றை வைத்துக் கொண்டு அந்த நபரின் சுபாவத்தை கண்டு பிடிக்க முடியும். நீங்க ஒரு நபருடன் ஐந்து வருடம் பழகி தெரிந்து கொள்வதை அவற்றை கைப்பட எழுதிய ஒரு கடிதத்தை வைத்துக் கொண்டு கண்டுபிடிக்க முடியும். அந்த அளவுக்கு இந்த விஞ்ஞானம் முன்னேறியிருக்கிறது."

"எனக்கும் இந்தக் கலையைக் கற்றுக் கொள்ள வேண்டும் போலிருக்கு."

"முதலில் காதலில் வெற்றி அடையுங்கள். கிராஃபாலஜி பெரிய விஷயம் இல்லை." கை குலுக்கிக் கொண்டே சொன்னார். "ஏற்கெனவே உங்களுக்கு கூச்சப்படும் சுபாவம். அந்தப் பெண்ணை வெற்றிக் கொள்ள முடியுமா?"

ரேவந்த் வியப்பின் மிகுதியில் "எனக்கு கூச்ச சுபாவம் என்று உங்களுக்கு எப்படி தெரிந்தது?" என்று கேட்டான்.

"விசிட்டிங் ஸ்லிப்பில் உங்க பெயரை எழுதினீங்க இல்லையா. உங்களைப் பற்றி தெரிந்து கொள்ள அந்த சின்ன இன்பர்மேஷன் போதும். அதுதான் கிராஃபாலஜி" என்றார் அவர் சிரித்துக் கொண்டே.

# 9

"உங்களைப் பற்றி எனக்கு நிறைய விஷயங்கள் தெரியும்,"

"என்ன தெரியும்?"

"உங்க விருப்பு வெறுப்புகள், உங்களுடைய தனித்தன்மை... எல்லாமே."

"எப்படித் தெரிந்தது?"

"அதை மட்டும் சொல்ல மாட்டேன்."

"சரி, என்ன தெரியுமோ அதையாவது சொல்லுங்க."

அவன் அவளைப் பற்றித் தயாரித்திருந்த அந்த இரண்டு பக்க விவரங்களையும் போனில் சொன்னான். மிக நுட்பமாக தயாரிக்கப்பட்ட ரிபோர்ட் அது. அவளுடைய தனித் தன்மையைப் பற்றி, வெளிப்படையாக பேசும் சுபாவம், இரக்க குணம், வாழ்க்கை பற்றிய கண்ணோட்டம், சினேகிதிகளுடன் பழகும் முறை... முதலிய விவரங்களை அவன் சொன்னதும் அவள் திகைத்துப் போனாள்.

"எப்படிக் கண்டு பிடித்தீங்க இதையெல்லாம்? என்று கேட்டாள்.

அவன் கொஞ்சம் தற்பெருமை கலந்த குரலில் "உங்களைப் போல் ஆள் இன்னாரென்று தெரிந்த பிறகு உளவாளிகளை வைத்து இரண்டு மாதம் கஷ்டப்பட்டு தெரிந்து கொள்ளும் முறையை நான் பின்பற்றவில்லை" என்றான்.

அவள் கெஞ்சும் குரலில் "சொல்லுங்களேன் ப்ளீஸ்" என்றாள்.

அவள் கெஞ்சியதும் அவன் மேலும் பிகு செய்து கொண்டு "ஆசையைப் பாரு. உங்களைப் பற்றி நீங்க எதுவுமே சொல்ல மாட்டீங்க. நான் மட்டும் இதையெல்லாம் எப்படி கண்டுபிடித்தேன் என்று எதற்காக சொல்லணும்?" என்றான்.

"சரி. எங்க வீட்டில் என்னை செல்லமாக எப்படி அழைப்பாங்க என்று சொல்கிறேன். நீங்க மட்டும் இதைச் சொல்லுங்க ப்ளீஸ்." சமரசத்திற்கு வருவது போல்.

"குட். கிராஃபாலஜி" என்றான்.

"மைகாட்! அதுவா. அந்த யோசனை எனக்கு வரவே இல்லை பார்த்தீங்களா."

"சரி. இப்போ சொல்லுங்க உங்க செல்லப் பெயரை."

"ஒரு பேப்பரையும் பேனாவையும் எடுத்துக்குங்க."

எடுத்துக் கொண்டான்.

"கோழி முட்டை வடிவத்தில் 26 புள்ளிகளை வைத்துக் கொண்டே போங்கள். ஏதாவது ஒரு புள்ளிக்கு அருகில் 3 என்று குறித்துக் கொள்ளுங்க. கிளாக்வைஸ் டைரக்ஷனில் அந்தப் புள்ளிக்கு அடுத்த பன்னிரண்டாவது புள்ளியின் மேல் 4 என்ற எண்ணும் பிறகு ஒரு புள்ளியை விட்டு விட்டு 5 என்ற எண்ணையும் போடுங்கள்."

"போட்டுட்டேன்."

"கவனமாக கேளுங்க. ஆங்கிலத்தில் ஐந்து எழுத்துக்கள் கொண்ட பெயர் என்னுடையது. முதல் எழுத்து உங்களுக்குத் தெரியும். 'ஆர்' இரண்டாவது எழுத்தையும் சொல்லி விடுகிறேன். அது 'ஏ'. இனி எஞ்சிய மூன்று எழுத்துக்களைப் பற்றிய குறிப்புகளைத் தருகிறேன். நீங்க இருபத்தாறு புள்ளிகளை வைத்தீங்க இல்லையா. ஏதாவது ஒரு புள்ளியின்

அருகில் 'ஏ' என்று தொடங்கி வரிசையாக ஆங்கில எழுத்துக்களை 'இசட்' வரையில் எழுதுங்க. மூன்று என்று குறிப்பிட்ட புள்ளிக்கு அருகில் எந்த எழுத்து வருகிறதோ அது என் பெயரில் மூன்றாவது எழுத்து. அது போலவே நான்காம் ஐந்தாம் எழுத்துக்கள் அதே வரிசையில் இருக்கும். நீங்க கண்டுபிடிக்க வேண்டியதெல்லாம். எந்த புள்ளிக்கு அருகில் 'ஏ' ஆரம்பிக்க வேண்டும் என்று தான். அதைக் கண்டு பிடித்து விட்டால் எல்லாம் தெரிந்து விட்டார் போல் தான். குட் லக்."

"இது அநியாயம். பதட்டத்துடன் சொன்னான். இந்த வழியில் உங்க பெயரைக் கண்டு பிடிக்கணும் என்றால் நான் இருபத்தாறு விதமாக முயற்சிக்க வேண்டும்!"

"அது ஒரு கணக்கு வாத்தியாரின் அணுகுமுறை. கொஞ்சம் காமன்சென்ஸ் இருப்பவர்கள் சுலபமாக கண்டுபிடித்து வருவார்கள். ரேவந்த்! உங்களுக்கு ஒரு விஷயம் சொல்கிறேன் கேளுங்க. உங்களுக்கு அபாரமான அறிவுத்திறமையுடன் கூட கொஞ்சம் தாழ்வு மனப்பான்மை இருக்குன்னு தோன்றுகிறது. அனாவசியமாக உங்க நண்பர்களின் உதவியை நாடுறீங்க. அவர்கள் உங்களைத் தவறான வழியிலே திசை திருப்புவார்களே தவிர வேறு எதற்குமே பயன்பட மாட்டார்கள். நீங்களே சுயமாக முயற்சி செய்தால் மிகச் சுலபமாக இந்தப் பெயரைக் கண்டு பிடித்துவிடலாம். நான் லைனில் இருக்கிறேன். முயற்சி செய்யுங்க."

அவன் பேனாவை கையில் எடுத்துக் கொண்டான். மறு வினாடி சதுரங்கம் ஆடும் போது பின்பற்றும் அளவுக்கு மனதை ஒருமுகப்படுத்தி செயல்படத் தொடங்கினான்.

நேரம் ஓடிற்று. இரண்டு நிமிடங்கள் ஆகி விட்டது. அவன் நெற்றியில் வியர்வை அரும்பியிருந்தது முதல் இரண்டு எழுத்துக்கள் R, A என்று தெரியும்.

"உங்களால் கண்டு பிடிக்க முடியும் ரேவந்த். முயற்சி செய்யுங்க." மறுமுனையிலிருந்து அவள் ஊக்குவித்துக் கொண்டிருந்தாள்.

வந்து விட்டது.

அவள் முறுவலுடன் "நீங்க கொஞ்சம் போனை காதுக்கு அருகில் வைத்துக் கொள்ளுங்க" என்றான் தன் வெற்றியைப் பற்றி சொல்லாமல்.

"ஊம்" என்றாள் "எதுக்கு" என்று கேட்டாள்.

அன்பும், ஆர்வமும், கொஞ்சம் குறும்புத் தனமும் கலந்த குரலில் அவள் பெயரை உச்சரித்தான்.

வீலென்று கத்தாத குறையாய் "மைகாட்! கண்டுபிடித்து விட்டீங்களே" என்றாள்.

"தாங்க்ஸ்."

"இதே ரீதியில் முயன்றால் என் போன் நம்பரைக் கூட விரைவிலேயே கண்டு பிடித்து விடுவீங்க."

"நிச்சயமாக கண்டு பிடித்து விடுவேன். ஆனால் இரண்டு நாட்கள் அவகாசம் கொடுங்க. இந்த இரண்டு நாளும் சதுரங்கப் போட்டி இருக்கு" என்றான்.

"ஆமாம். பேப்பரில் படித்தேன். நீங்க கண்டிப்பாக ஆடித்தான் ஆகணுமா ரேவந்த்?"

அவன் வியப்புடன் "ஏன்? எதுக்காக அப்படிக் கேட்கிறீங்க?" என்றான்.

அவள் பதில் சொல்லவில்லை.

"ரஷ்யாவிலிருந்து போலன்ஸ்கீ கூட வருகிறார்."

"அதுதான் எனக்கு தயக்கமாக இருக்கு. ரஷ்யர்கள் தோல்வியை அவ்வளவு சுலபமாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள்."

ரேவந்த் அவள் சொன்னதை சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை. "நீங்க அனாவசியமாக கவலைப்படுறீங்க. போலன்ஸ்கீ அப்படிப்பட்ட ஆள் இல்லை. ரொம்ப நல்லவர். ஸ்போர்டிவ்" என்றான்.

(ஆனால் ஆபத்து போலன்ஸ்கீயிடமிருந்து வரவில்லை. சீதாராமனிடமிருந்து வந்தது. இங்கே போனில் இந்த உரையாடல் நடந்து கொண்டு இருந்தபோது அங்கே அவன் ஒரு எலுமிச்சம் பழத்தில் கோழியின் இரத்தத்தை இஞ்செக்ட் செய்து கொண்டிருந்தான். பிறகு அந்த பழத்தில் ஒரு குண்டூசியைச் சொருகினான். அவன் முகத்தில் பகையும், வெறுப்பும் பரவியிருந்தன.)

"போலன்ஸ்கீ நல்லவராகவே இருக்கலாம். ஆனால் 'தி கேம்' என்ற அமெரிக்கன் பத்திரிகையைப் படித்தீங்களா?' என்று கேட்டாள்.

ரேவந்த் அதில் வந்த கட்டுரையைப் படித்திருக்கிறான். 'ரஷ்யனுக்குப் பாடம் கற்பித்த இந்தியன்' என்ற தலைப்பில் வந்திருந்த கட்டுரை அது. 'தி கேம்' பத்திரிகை மஞ்சள் பத்திரிகையைப் போன்றது.

"எல்லா விளையாட்டுத் துறைகளிலும் ஐரோப்பா நாட்டுடன் இணைந்து ஒளிவீசிய ரஷ்யா சதுரங்கத்தில் மட்டும் ஏஷியன் சாம்பியன்ஷிப்பிற்காக முயன்றது ஏன்?" சதுரங்கத்தில் தாம் முடிசூடாத மன்னர்கள் என்று நிரூபித்துக் கொள்வதற்காகவா? அதற்காகத்தான் இந்தப் போட்டிகளை மாஸ்கோவில் நடத்தாமல் ஆசியாவில் உள்ள உஸ்பெகிஸ் தானில் ஏற்பாடு செய்தது போல் தோன்றுகிறது. ரஷ்யர்களின் தந்திரத்தை முறியடித்துப் பாடம் கற்பித்து இந்திய விளையாட்டு வீரனை 'தி கேம்' பாராட்டுகிறது."

ரேவந்த் அதைப் பொருட்படுத்தவில்லை. ஆனால் போலன்ஸ்கீ ஒரு ரஷ்யன் பத்திரிகைக்குக் கொடுத்திருந்த பேட்டி அவனைக் கவர்ந்தது.

நிருபர் போலன்ஸ்கீயிடம் கேட்டான் "நீங்க மிகச் சுலபமாக ரேவந்தை ஜெயிக்கும் நிலையில் இருந்தீங்க. ஆனால் எப்படித் தோற்றுப் போனீங்க?"

"எப்படியும் ஜெயிக்கத்தானே போகிறோம்னு கொஞ்சம் அலட்சியமாக ஆடினேன்." போலன்ஸ்கீ நேர்மையாக பதில் அளித்தார்.

"ஆனால் எதிராளி எந்த விதமான காயை நகர்த்துவான் என்று பத்து ஸ்டெப்புகளுக்கு முன்னாடியே ஊகிக்க முடியும் என்றே பெயர் உங்களுக்கு இருக்கிறது. அப்படிப்பட்டவர் நான்கே ஸ்டெப்புகளில் எப்படி தோற்றுப் போனீங்க?"

"அதான் சொன்னேனே ஓவர் கான்ஃபிடென்ஸ். அவனுடைய மந்திரி போய் விடும் என்று நினைத்தேன். அதோடு டைம் ரன் அவுட் ஆகிக் கொண்டிருந்தது."

"ஆனால் உங்கள் ஆட்டம் வெறும் ரூக்கால் (யானை) கட்டுப்படுத்தப்பட்டு விட்டதை நீங்க கேவலமாக நினைக்கவில்லையா?"

"அந்த நிமிடம் எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை."

அந்தப் பத்திரிகை அதே தலைப்புடன் அந்த பேட்டியை பிரசுரித்திருந்தது.

"அந்த நிமிடம் எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை." கடைசியில் ரேவந்தையும் பாராட்டி எழுதியிருந்தது.

அந்த விஷயம் நினைவுக்கு வரவே ரேவந்த் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

"என்ன மௌனமாகி விட்டீங்க?"

"ஊம். ஏதோ யோசித்துக் கொண்டு இருக்கிறேன்."

"நான் சொன்னதைப் பற்றியா?"

"ஆமாம்."

"ஏனோ தெரியவில்லை. எதுவோ நடக்கப் போகிறது என்று என் மனம் சொல்கிறது. போலன்ஸ்கீயுடன் ஆடாமல் தப்பித்துக் கொள்ள வழியே இல்லையா?"

"எல்லாம் முடிவான பிறகு இப்போ எப்படி முடியும்? போலஸ்கீ இந்தியன் மாஸ்டரஸ் ஹசன், ரவிசேகர், ஆரன் இவர்களோடு வரிசையாய் கல்கத்தா, டெல்லி, பம்பாயில் ஆடிவிட்டு இங்கே வருகிறார். இங்கே மாஸ்டர்ஸ் ஆக இருக்கும் நானும், பிரபாகரும் ஆடணும். எங்களுக்குள் யார் ஜெயிக்கிறார்களோ அவங்களோடு போலன்ஸ்கீ ஆடுவார். இது போட்டிக்காக விளையாடும் ஆட்டம் இல்லை. நட்புக்காக ஆடப் போகும் ஆட்டம். அவ்வளவுதான்."

"ஆனாலும் எனக்கு பயமாக இருக்கிறது. நீங்க இந்த ஒரு முறை ஆடாமல் தவிர்க்க முடியாதா?"

அவன் சிரித்து விட்டான். "எனக்கு அபிமன்யு உத்தரையின் கதை தான் நினைவுக்கு வருகிறது" என்றான். சொல்லி முடித்த பிறகு தான் ரொம்பவும் உரிமை எடுத்துக் கொண்டு விட்டோம் என்று தோன்றியது. அவளுக்குக் கோபம் வருமோ என்று நினைத்தான். ஆனால் அவள் மௌனமாக இருந்து விட்டாள். மேலும் அவனே சொன்னான்.

"இதில் உயிர் போகிற விஷயம் எதுவும் இல்லை. அதிக பட்சம் நான் தோற்றுப் போவேன். அவ்வளவு தானே. நட்புக்காக விளையாடப் போகும் கேம் என்பதால் இதில் வரப்போகும் நஷ்டம் எதுவும் இல்லை."

"உங்களுக்கு இன்ட்யூஷனைப் பற்றித் தெரியுமா?"

"தெரியும். ஆனால் அதையெல்லாம் நான் நம்பமாட்டேன். ஒவ்வொருவரும் தங்களிடம் அது போன்ற

சக்தி ஏதோ இருப்பதாக நினைத்துக் கொண்டு இருப்பார்கள்."

அதற்கு மேல் அவளால் எதுவும் பேச முடியவில்லை. "சரி. நாளைக்கு போன் செய்கிறேன்." விருப்பமில்லாமலேயே போனை வைத்து விட்டாள்.

## 10

விசாலமான ஹால்...

ரேவந்த் போய்ச் சேருவதற்குள் அங்கே எல்லா ஏற்பாடுகளும் நடந்து முடிந்திருந்தன. அவன் போய்ச் சேர்ந்த பத்து நிமிடங்களுக்குப் பிறகு போலன்ஸ்கீ வந்தார். ரேவந்துடன் கை குலுக்கிவிட்டு நட்புமுறையில் முறுவலித்தான்.

அதற்குள் பிரபாகரும் அங்கே வந்தான். அவன் எப்போதும் வயிற்று வலிக்காரனைப் போல் ரொம்ப சீரியஸாக தென்படுவான். போலன்ஸ்கீயை மட்டும் குசலம் விசாரித்து விட்டு சும்மா இருந்து விட்டான்.

ரேவந்த் மேஜை அருகில் சென்றான்.

சதுரங்கத்தில் டாஸ் போடுவதோ அல்லது கையில் காயை மறைத்துக் கொண்டு கேட்பதாலோ யார் முதலில் ஆடுவது என்று முடிவு செய்யப்படும்.

பிரபாகர் நாணயத்தைச் சுண்டினான்.

"தலை" என்றான் ரேவந்த்.

பூ விழுந்தது. பிரபாகர் வெள்ளைக்காய்கள் இருந்த பக்கம் உட்கார்ந்து கொண்டான். ஸ்டாப் வாட்ச்கள் இயங்கத்

தொடங்கின. போலன்ஸ்கீ ரேவந்தின் ஆட்டத்தை கவனமாக பார்த்துக் கொண்டிருந்தான்.

பிரபாகர் கிங்க் பானை இரண்டு கட்டங்கள் நகர்த்தினான். (PK4) ரேவந்த் உடனே ராணிக்குப் பக்கத்தில் இருந்த பிஷப் பானை முன்னால் நகர்த்தினான். பிரபாகர் நைட்டை முன்னால் நகர்த்தியதும் ரேவந்தின் இதழ்களில் முறுவல் மலர்ந்தது.

டிஃபென்ஸ் விளையாட்டில் ரேவந்தை மிஞ்சக் கூடியவர்கள் யாரும் இல்லை. பர்ட் ஓபனிங்கிலும் அவன் கை தேர்ந்தவன். பிரபாகர் தானாக வலிய முன்வந்து அஸ்திரத்தை ரேவந்தின் கையில் ஒப்படைத்துக் கொண்டிருந்தான்.

ரேவந்த் நைட்டை முன்னுக்கு நகர்த்தினான். பிரபாகர் சிகரெட்டை பற்ற வைத்துக் கொண்டு தீப்பெட்டியை கை விரல்களுக்கு இடையே சுழற்றிக் கொண்டிருந்தான். இது போன்ற மூன்றாம் தர டிரிக்குகளை பயன்படுத்துவது அவனுக்கு கை வந்த கலை. எதிராளியின் கவனத்தைச் சிதறடிப்பதற்காக சிகரெட் புகையை வளையம் வளையமாக ஊதிக் கொண்டிருப்பான்.

ரேவந்த் அதைப் பொருட்படுத்தவில்லை. அடுத்த ஆட்டத்தைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தான்.

இரண்டரை மணி நேரம் முடிவதற்குள் மேஜையின் மேல் பாதி காய்கள் காலியாகி இருந்தன. பிரபாகரின் ஆட்டம் மேலோங்கியிருந்தது. பிஷப்பால் ரேவந்தின் நைட்டையும், ரூக்கினால் பிஷப்பையும் கட்டுப்படுத்தி யிருந்தான். பார்வையாளர்களுக்கு அவன் வென்று விட்டது போல்தான் தோன்றியது. மேலோட்டமான பார்வைக்கு அப்படித்தான் தென்படும். ரேவந்த் இரண்டு ரூக்குகளையும் இழந்து விட்டிருந்தான். ஆனால் அவன் குதிரைகளை கையாளுவதில் நிபுணன். அவனுடைய குதிரைகள் இரண்டும்

எதிரியின் கூடாரத்திற்கு நுழைந்து தாக்குதலை தொடங்கி விட்டன. தன்னுடைய சிப்பாய்களை பலி கொடுப்பதன் மூலமாக குதிரைகளை முன்னால் நடத்திச் செல்வது அவனுடைய தனித்தன்மை.

ரேவந்தின் ஒரு நைட்டையாவது பலி வாங்க வேண்டு மென்று பிரபாகர் எல்லாவிதமாகவும் முயற்சி செய்து கொண்டிருந்தான்.

மாலை ஐந்து மணி ஆகப் போகிறது.

சதுரங்கத்தில் அந்த நாளுக்கான ஆட்டத்தை முடிக்கும் போது இறுதி ஸ்டெப் தங்களுடையதாக இருப்பதை யாருமே விரும்பமாட்டார்கள். அப்படிச் செய்தால் எதிராளிக்கு அன்று இரவு முழுவதும் யோசிக்க அவகாசம் இருக்கும். அதனால் கடைசி ஸ்டெப்பை பேப்பரில் எழுதி கவரில் வைத்து சீல் செய்து ரெஃபரியிடம் தருவார்கள். மறுநாள் அதே போசிஷனில் போர்டை வைத்து ஆட்டத்தை தொடங்குவார்கள்.

ரேவந்த் பிஷப்பால் பிரபாகரின் சிப்பாயை பலி வாங்கினான். அன்று தன்னுடைய ஆட்டம் கடைசியாக இருக்க வேண்டும் என்று பிரபாகர் விரும்பினான்.

ரூக்கை முன்னால் நகர்த்தி ரேவந்தின் பிஷப்பை எடுத்துவிட்டு பெருமையுடன் ரேவந்த் முகத்தை கூர்ந்து நோக்கினான். ஆனால் ரேவந்தின் முகத்தில் அவன் எதிர்பார்த்த தோல்வியின் அறிகுறி எதுவும் தென்பட வில்லை. ரேவந்த் பேப்பரில் எதையோ எழுதி கவரில் வைத்துவிட்டு ரெஃபரியிடம் கொடுத்தான்.

மேஜையைப் பார்த்த பிரபாகருக்கு ஏதோ சந்தேகம் வந்தது. தான் ரூக்கை நகர்த்தும் அவசரத்தில் மந்திரியைக் கவனிக்கவில்லை. ரேவந்த் மறுநாள் காயை எப்படி நகர்த்தப் போகிறான் என்று புரிந்து விட்டது.

ரேவந்த் நைட்டை பின்னால் கொண்டு வந்து தண்ணுடைய ராஜாவுக்கும் மந்திரிக்கும் ஃபோர்க் வைத்து விடுவான். அத்துடன் தன் ஆட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும். மந்திரியை இழக்க வேண்டியதுதான்.

நெற்றியின் மீது அரும்பிய வியர்வையைத் துடைத்துக் கொண்டு பிரபாகர் நிமிர்ந்தபோது ஹால் முழுவதும் காலியாகி இருந்தது. குறைந்தது ஆறுதல் சொல்லக் கூட ஒருவரும் இருக்கவில்லை. சோர்வோடு எழுந்து கொள்ளப் போனவன் ஹாலுக்கு ஒரு மூலையில் தனியாக நின்று கொண்டு தன்னையே கவனித்துக் கொண்டிருந்த நபரைப் பார்த்தான்.

அவன் தான் சீதாராமன்.

☆ ☆ ☆

“பார்த்தீங்களா. நீங்க அனாவசியமாக கவலைப் பட்டீங்க. நாளைக்கு நான் ரொம்ப சுலபமாக ஜெயிக்கப் போகிறேன்.”

வீட்டில் படுக்கை அறையில் கட்டில்மீது குப்புறப் படுத்துக் கொண்டு ரேவந்த் அவனுடன் பேசிக் கொண்டிருந்தான்.

தவறை ஒப்புக் கொள்வது போல் “சாரி. நான் அனாவசியமாக கவலைப்பட்டுவிட்டேன்” என்றான்.

“பரவாயில்லை. அது போகட்டும். இரண்டாவது கடிதம் எனக்கு எப்போ எழுதப் போறீங்க?”

“கடிதமா? உங்களுக்கு என்னைச் சந்திப்பதை விட அந்த கடிதங்களை படிப்பதில்தான் ரொம்ப உற்சாகம் இருக்கும் போல் தோன்றுகிறதே.”

"ஆமாம். உண்மைதான். நான் எவ்வாறு கற்பனைகளை வளர்த்துக் கொண்டிருக்கிறேன் தெரியுமா?"

"அதற்குள் மூன்று வாரங்களும் கழிந்து போய் விடும்."

"சதுரங்கத்தில் என்னுடையது வித்தியாசமான டெக்னிக். கடைசிவரையில் தோற்றுப் போவது போல் எதிராளிக்கு நம்பிக்கையை ஏற்படுத்திவிட்டு இறுதியில் ஒரே அடியில் வீழ்த்துவது. உங்களையும் அதே போல் கெடு வைத்த நாளுக்கு முன்னாலேயே கண்டுபிடித்து விடுவேன் என்று நினைக்கிறேன்."

"ஆனால் நான் உங்களுடைய எதிரி இல்லை ரேவந்த். எவ்வளவு சீக்கிரமாக கண்டுபிடிப்பீர்களோ அவ்வளவு தூரமே உங்க அறிவுத் திறமையின் மீது எனக்கு நம்பிக்கை ஏற்படும்.

"ஆனால் நீங்க உங்க லாஜிக்கால் என்னைக் குழப்பறீங்க. லாஜிக் இல்லாத கணக்கு ஏதாவது கொடுங்க. அடுத்த நிமிடத்தில் செய்து விடுகிறேன்.

"உண்மையாகவா?"

"பந்தயம்!"

"அப்படியானால் என் சினேகிதியின் போன் நம்பரைச் சொல்கிறேன். ஒரு எண்ணை அதே எண்ணால் பெருக்கினால் வரும் எண் அது."

"பர்ஃபெக்ட் ஸ்கொயர் என்று சொல்லுங்க."

"ஆமாம். இன்னொரு க்ளூ என்னவென்றால் அந்த எண்ணின் முதலாவது இடத்திலிருக்கும் எண்ணின் ஸ்கொயரையும், கடைசி எண்ணின் ஸ்கொயரையும் கூட்டினால் நடுவில் இருக்கும் எண் வரும். இதில் எந்த லாஜிக்கும் இல்லை."

அவன் முடிக்கும் முன்பே ரேவந்த் "100 x 101 = 10201" என்றான்.

அவள் வியப்படைந்து விட்டதுபோல் "மைகாட்! எப்படி இவ்வளவு சீக்கிரம் கண்டுபிடித்தீங்க?" என்று கேட்டாள்.

ரேவந்த் காலரை தூக்கி விட்டுக்கொண்டு "பின்னே என்னன்னு நினைத்தீங்க என்னை?" என்றான்.

"வாழ்த்துக்கள். இவ்வளவு சீக்கிரம் கண்டு பிடிப்பீங்க என்று நினைக்கவில்லை" என்றாள்.

"உங்களுக்கு என்னுடைய திறமையின் மீது தாழ்வான அபிப்பிராயம் இருப்பது போல் தெரிகிறது. பந்தயம் வேண்டுமானாலும் வைக்கிறேன். எந்த கணக்காக இருந்தாலும் உங்களை விட சீக்கிரமாக என்னால் முடிக்க முடியும்."

"ஆனால் எந்தப் பெண்ணுமே தன் கணவன் கொஞ்சமாவது காமன்சென்ஸ் இருப்பவனாகவும், அவசரக்குடுக்கை இல்லாதவராக இருக்க வேண்டும் என்று விரும்புவாளே தவிர வெறும் கணக்கு வாத்தியாராக இருக்கணும் என்று நினைக்கமாட்டாள் இல்லையா? உங்களைக் கல்யாணம் செய்து கொண்டால் கத்தரிக்காய் கிலோ விலையின் ஸ்கொயர் ரூட் நூறுகிராம் பச்சை மிளகாயின் விலை என்று சொல்வீங்க போலிருக்கே" என்று நகைத்து விட்டு போனை வைத்து விட்டாள்.

ரேவந்தின் முகம் கன்றி விட்டது. அதற்குள் ஒரு சந்தேகம் ஏற்பட்டது. அவசரகுடுக்கையாக இருக்கக் கூடாது என்று ஏன் சொன்னாள்? தான் அவசரப்பட்டு தவறான நம்பரைச் சொல்லி விட்டேனோ?

போனை அருகில் இழுத்துக் கொண்டு 10201க்கு போன் செய்து "ஹலோ" என்றான்.

"சூப்பர் பைன் ஹேர் கட்டிங் ச்லூான் சார்" என்று குரல் கேட்டது.

ரேவந்த் பட்டென்று போனை வைத்து விட்டான். மறுபடியும் பேப்பரையும் பேனாவையும் எடுத்துக் கொண்டு கவனமாக கணக்குப் போட்டான். அதே போன்று அமைந்திருந்த மற்றொரு எண் **110 x 110 = 12100 வந்தது.**

அந்த நம்பருக்கு டயல் செய்தான்.

"யெஸ் ப்ளீஸ்" என்றாள் மறுமுனையிலிருந்து ஒரு பெண்.

ரேவந்த் நிதானமாக, பதட்டமில்லாமல் "உங்களைத் தொந்தரவு செய்வதற்கு மன்னித்துக் கொள்ளுங்கள் மேடம்! நாங்க பெனின்சுலா பிராடக்ட்ஸிலிருந்து பேசுகிறோம். உங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றால் உங்களுடைய நேரத்தில் இரண்டு நிமிடங்களை எங்களுக்காக ஒதுக்க வேண்டும். சில கேள்விகளை கேட்போம். நீங்க எங்களுக்கு உதவி செய்வீங்க என்று எதிர்பார்க்கிறோம்." ஆங்கிலத்தில் மென்மையான குரலில் சொன்னான். இதுபோல் போனில் பேட்டி காணும் முறையை சமீபகாலமாய் வெளிநாடுகளில் கடைபிடித்து வருகிறார்கள்."

"உங்களுக்கு என்ன விவரங்கள் வேண்டும்?"

"பதினாறுமுதல் இருபத்தி இரண்டு வயதுக்கு இடையில் உள்ள பெண்கள் உங்கள் வீட்டில் யாராவது இருக்காங்களா?"

"வாட்!!" கோபமாக குரல் கேட்டது.

"கோபித்துக் கொள்ளாதீங்க மேடம். எங்கள் பொருட்களின் விற்பனையை பெருக்குவதற்காகத்தான் இந்த விவரங்களை சேகரித்து வருகிறோம். அந்த வயதில் இருக்கும் பெண்களிடம் அவர்களுடைய விருப்பு வெறுப்புகளை

கேட்டுத் தெரிந்து கொள்வதுதான் எங்களுடைய நோக்கம். அதற்கு ஏற்றாற்போல் எங்கள் பொருள் உற்பத்தியில் மாற்றங்களை செய்வோம். இது போன்ற விஷயங்களை நேரில் வந்து கேட்டால் நன்றாக இருக்காது என்று போனில் கேட்கிறோம். தயவு செய்து எங்களுடைய வேண்டுகோளை புரிந்து கொள்ளுங்கள்" என்றான் பொறுமையாக. 'எவ்வளவு கதையை பிணைத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது கடவுளே' என்று உள்ளூர நொந்து கொண்டான்.

"அதனால்தான் போனில் விசாரிக்கிறீங்களா?"

"ஆமாம் மேடம்." பணிவு நிரம்பியகுரலில் சொன்னான்.

"நேரில் கேட்கமுடியாத கேள்விகள் என்று சொல்றீங்க. உள்ளாடை சைஸ் என்னன்னு கேட்டுத் தொலைக்க மாட்டீங்களே?" குறும்பாக கேட்டாள்.

'மைகாட்!' என்று எண்ணிக் கொண்டான் ரேவந்த். இந்தக் காலத்துப் பெண்கள் பெண்களே இல்லை. குட்டிப் பிசாசுகள்!

"ச்செ...ச்செ...அது போன்று எதுவும் கேட்கமாட்டோம். வெறுமே முகத்திற்கு பயன்படுத்தும் பொட்டு, க்ரீம், பவுடர் என்ன பிராண்ட்? இதுபோன்ற கேள்விகள் கேட்போம். தயவு செய்து உங்க வீட்டில் அந்த வயதில் இருக்கும் பெண்கள் எத்தனை பேர் இருக்காங்கன்னு சொல்றீங்களா?"

"நான் ஒருத்திதான் இருக்கிறேன்."

"தாங்க்யூ மேடம். 'உன்னுடைய நண்பர்களைப் பற்றிச் சொல். நான் உன்னைப் பற்றிச் சொல்கிறேன்' என்று சொன்னார் ஒரு அறிஞர். உங்களுடைய விருப்பு வெறுப்பு களைப் பற்றிச் சொல்லும் முன் உங்க சினேகிதிகளைப் பற்றிச் சொல்லுங்க. உங்களுக்கு வெளிநாட்டிலோ அல்லது வெளிநாட்டில் படித்துவிட்டு வந்த சினேகிதிகளோ இருக்கிறார்களா?"

"ஆமாம். இருக்கிறாள். சமீபத்தில்தான் ஆக்ஸ்போர்டில் படித்துவிட்டு வந்திருக்கிறாள்.

ரேவந்தின் இதயம் வேகமாக துடிக்கத் தொடங்கியது. "அந்தப் பெண்ணின் முழு பெயரும், முகவரியும் சொல்றீங்களா?" என்று கேட்டான்.

"எதுக்கு?"

"இது போல் வெளிநாட்டில் படித்துவிட்டு வந்த பெண்களின் ரசனை என்னவென்று தெரிந்து கொள்ளத் தான்."

"முழு பெயரும் வேண்டுமா?"

"யெஸ் மேடம்.'

"முகரியும் வேண்டும் இல்லையா?"

"ஆமாம்," பரபரப்புடன் சொன்னான்.

அவள் போனை யாரிடமோ கொடுத்த ஓசை.

"சொல்லுங்க. நான்தான் பேசுகிறேன். உங்களுக்கு என்ன விவரங்கள் வேண்டும்? நான் வைத்துக் கொண்டிருக்கும் பொட்டு நிறம் ரோஸ். முகத்திற்கு பாண்டஸ் கிரீம் பயன்படுத்துவதுதான் எங்கள் பரம்பரையின் வழக்கம்."

ரேவந்த் தளர்ந்து போய் விட்டான். "நீங்க அங்கே தான் இருக்கீங்களா?" என்று கேட்டான்.

அவள் சிரித்து விட்டுச் சொன்னாள். "உங்களுக்கு காமன் சென்ஸ் கொஞ்சம் அதிகம் என்று தெரியும். அதான் முன் ஜாக்கிரதையுடன் இருக்கிறேன். ஆனாலும் நாம் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி நான் கண்டுபிடிக்கச் சொன்ன போது தான் கண்டுபிடிக்கணுமே தவிர ஏதோ பேச்சு

வாக்கில் சொன்னதை வைத்துக் கொண்டு தேடிக் கொண்டு வரக் கூடாது. தெரிஞ்சுதா?"

"சரி" என்று சோர்வுடன் சொல்லி விட்டு போனை வைத்தான் ரேவந்த்.

# 11

**ம**றுநாள் காலை பத்து மணிக்கு போட்டி நடக்கும் இடத்திற்கு போய்ச் சேர்ந்தான் ரேவந்த். அப்பொழுது மக்கள் கூட்டம் குறைவாக இருந்தது. போலன்ஸ்கீயின் ஆட்டம் பிற்பகலில் தான் நடைபெற இருந்தது. அப்பொழுது வந்தால் போதும் என்று மக்கள் நினைத்து விட்டார்கள் போலும். பிரபாகர் இன்னும் சற்று நேரத்தில் தோற்றுவிடுவான் என்று முதல் நாள் மாலையிலேயே தெரிந்து போய் விட்டது.

ரேவந்த் படியேறிக் கொண்டிருக்கும் போது சீதாராமன் எதிர்பட்டு "குட்மார்னிங் சார்" என்றான். ரேவந்த் அவனைப் பார்த்து நெற்றியைச் சுளித்தான்.

"உங்களுக்காகவும், நீங்க வெற்றி பெற வேண்டும் என்பதற்காகவும் நேற்று முழுவதும் பூஜை செய்தேன் சார். நீங்க கட்டாயம் ஜெயிப்பீங்க."

ரேவந்த் மரியாதை கருதி "தாங்க்யூ" என்று சொல்லிவிட்டு உள்ளே போகப் போனான். அவன் போக விடாமல் தடுத்து விட்டு "இந்த எலுமிச்சம் பழத்தை உங்களிடம் வெச்சுக்குங்க சார். உங்களுக்கு மிகப் பெரிய வெற்றியை தேடித் தரும் இது" என்று எலுமிச்சம் பழத்தை தரப் போனான்.

ரேவத்திற்கு இவற்றில் எல்லாம் நம்பிக்கை இல்லை.

"என்னுடைய திருப்திக்காக சார்" என்று வற்புறுத்தினான்.

ரேவந்த் காஷுவலாக அதை வாங்கிக் கொண்டு உள்ளே போனான்.

பத்தரைக்கு ஆட்டம் தொடங்கியது.

ரேவந்த் தன்னுடைய கவரை பெற்றுக் கொண்டு அதில் குறித்து தந்தது போல் தன்னுடைய நைட் மூலம் ராஜாவுக்கும், மந்திரிக்கும் ஃபோர்க் போட்டான்.

பிரபாகர் ரொம்ப நேரம் யோசித்து விட்டுத் தன் மந்திரியை இழந்தான். வேறு எந்த வழியும் இல்லாத போது அவன் எதற்காக அவ்வளவு நேரம் யோசித்துக் கொண்டிருந்தான் என்று பார்வையாளர்களுக்குப் புரிய வில்லை.

ரேவந்த் பிஷப்பைக் கொண்டு வந்து மறுபடியும் செக் சொன்னான்.

பிரபாகர் தன்னுடைய பிஷப்பை குறுக்கே நிறுத்தினான். அவனுக்கு மூளை கலங்கி விட்டதோ என்று தான் பார்வையாளர்களுக்கு நினைக்கத் தோன்றியது. மந்திரியை இழந்ததுமே விலகியிருக்க வேண்டியவன் மேற் கொண்டு ஆட்டத்தை தொடருவது ஏன் என்று புரியவில்லை.

ரேவந்த் அவனுடைய பிஷப்பையும் அடித்து விட்டு மறுபடியும் செக் சொன்னான். பிரபாகர் தலையை இரண்டு கைகளாலேயும் பிடித்துக்கொண்டு காய்களைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான். நேரம் முடியப் போகிறது.

எல்லோரும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார் கள்.

திடீரென்று அவன் எழுந்து "எனக்கு என்னவோ செய்கிறது" என்றான். அவன் சொன்னது யாருக்குமே புரியவில்லை.

பிரபாகர் தலையைப் பிடித்துக் கொண்டு "என்னை யாரோ ஹிப்னாடைஸ் செய்கிறார்கள். ஆட்டத்தை எப்படி தொடருவது என்று எனக்குத் தெரியவில்லை" என்றான்.

அதற்குள் சிலர் ரேவந்தை சந்தேகத்துடன் பார்க்கத் தொடங்கினார்கள். மேலும் சிலர் என்ன நடக்கப் போகிறதோ என்று ஆர்வத்துடன் நெருங்கி வந்து பார்க்கத் தொடங்கினார்கள்.

ரெஃபரி இடையே புகுந்து "மிஸ்டர் பிரபாகர்! நீங்க இந்த மாதிரி சாக்கு போக்கு சொல்லித் தப்பிக்க முடியாது. நீங்க ஆட்டத்தை தொடரவில்லை என்றால் தோற்று விட்டதாக அறிவிக்க வேண்டியிருக்கும் ஜாக்கிரதை" என்று எச்சரித்தார்.

(உலக சாம்பியன் கார்போவுடன் இண்டர்நேஷனல் செஸ் போட்டியில் விக்டர் கார்சினாய் ஆடும் போது ஆட்டத்தின் நடுவில் கார்சினாய் எழுந்து நின்று இதே போல் தன்னை கார்போவ் ஹிப்னடைஸ் பண்ணுவதாக குற்றம் சாட்டினான். திருஷ்டி தோஷத்திற்கு பரிகாரமாக முன் வரிசையில் காஷாய உடைகள் அணிந்த சன்யாசியை உட்காரவும் வைத்தான். ஆனால் இவற்றை ரெஃப்ரி ஏற்றுக் கொள்ள மறுத்ததோடு கார்போவ் வெற்றிபெற்றதாக அறிவித்தார்)

ரேவந்த் இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. பிரபாகரையே குழப்பத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

பிரபாகர் ரேவந்தைப் பார்த்து "நான் காயை எடுத்து வைக்கும் போது அவன் ஏதோ மந்திரங்களை முணுமுணுக் கிறான். இல்லா விட்டால் இவ்வளவு முட்டாள் தனமாக பிஷப்பை முன்னால் கொண்டு வந்திருப்பேனா?" என்றான். அவன் கடைசியாக சொன்னது மட்டும் உண்மை. சதுரங்கத்தைப் பற்றிக் கொஞ்சமாவது தெரிந்திருப்பவன்

கூட அந்த மாதிரி எந்த தற்காப்பும் இல்லாமல் அப்படி காயை நகர்த்த மாட்டான். ஆனால் உண்மையிலேயே அவன் அப்படி நடந்து கொள்வதற்குக் காரணம் ரேவந்த்தானா? காளை மாடு கன்று போட்டது என்று சொன்னால் கன்றுக்குட்டி எங்கே என்று கேட்கும் மனப்பான்மை நம் மக்களுடையது. இதற்கு ரேவந்த் என்ன பதில் சொல்லப் போகிறான் என்பது போலப் பார்த்தார்கள். ரெஃப்ரி மட்டும் "டைம் ரன் அவுட் ஆகிக் கொண்டிருக்கிறது பிரபாகர்" என்று எச்சரித்தார்.

தான் இனி ஆடப் போவதில்லை என்பது போல் பிரபாகர் எழுந்து கொண்டான். ரேவந்தும் எழுந்து நின்றான்.

பிரபாகரின் பார்வை ரேவந்தின் பேண்ட் ஜேபியின் மேல் படிந்தது. "அதென்னது?" என்று கத்தி விட்டான். எல்லோரும் அந்தப் பக்கம் பார்த்தார்கள். ரேவந்தின் பேண்ட் பாக்கெட் உப்பலாக தென்பட்டது. ரேவந்திற்குக் கூட தன் ஜேபியில் என்ன இருக்கிறதென்று புரியவில்லை. தன்னை யறியாமலேயே வெளியே எழுந்தான், என்னவென்று பார்ப்பதற்காக.

அது ஒரு எலுமிச்சம் பழம். குண்டூசி குத்தப்பட்டு இருந்தது. நடுவில் சிவப்பாக இருந்தது.

ரெஃப்ரி கூட ஒரு வினாடி திகைத்துப் போய் விட்டார். கண் இமைக்கும் நேரத்தில் இதெல்லாம் நடந்து முடிந்து விட்டது.

பத்திரிகையாளர்கள் டெலி பிரிண்டரில் இந்தச் செய்தியை அனுப்புவதற்காக குறிப்பெடுத்துக் கொண்டு அங்கிருந்து ஓட்டமெடுத்தார்கள். மக்களுக்கு இடையே கலவரம் எழுந்தது. ரேவந்தை ஒரு விநோதப் பிராணியைப் போல் பார்க்கத் தொடங்கினார்கள் யாரோ அவன்

கையிலிருந்த எலுமிச்சம்பழத்தை எடுத்துக் கொண்டு அதிலிருந்த குண்டூசியை வெளியே இழுத்தார்கள்.

பெரிய புயல் வீசும் போது மைதானத்திற்கு நடுவில் தன்னந்தனியாக நின்று கொண்டிருப்பது போல் ரேவந்த் சலனமற்று இருந்தான். தன்னைச் சுற்றி என்ன நடந்துகொண்டிருக்கிறது என்று அவனுக்குப் புரியவில்லை. இதயத்தை யாரோ அழுத்துவது போல் இருந்தது. போர்க்களத்தில் தன்னைச் சேர்ந்தவர்களே திடீரென்று எதிரியாக மாறி முதுகில் கத்தியால் குத்திவிட்டாற் போல் உணர்ந்தான்.

பிரபாகர் வெற்றியை சாதித்துவிட்டவன் போல் இறுமாப்புடன் ஹாலை விட்டு வெளியேறினான். ஹால் காலியாகி விட்டது.

சதுரங்க மேஜைக்கு அருகில் ரேவந்தும், அவனுக்குத் துணையாய் நிசப்தமும் எஞ்சியிருந்தன. அந்தத் தனிமையில், மௌனச் சூழலில் கால்கள் துவள நாற்காலியில் சரிந்து விட்டான். இதயத்தை அழுத்திக் கொண்டிருந்த வேதனையானது மடைதிறந்து வெளியேறத் தொடங்கியது. இருகைகளிலும் முகத்தைப் புதைத்துக் கொண்டான். அந்த விசாலமான ஆளரவமற்ற ஹாலில் அவன் எவ்வளவு நேரம் அவ்வாறு உட்கார்ந்திருந்தானோ தெரியாது.

தோளில் யாருடையதோ கை படிந்தது. ஈரமான விழிகளுடன் நிமிர்ந்து பார்த்தான்.

போலன்ஸ்கீ!

போலன்ஸ்கீ எதுவும் பேசவில்லை. தோளில் லேசாக தட்டி விட்டு சும்மாயிருந்து விட்டான். அந்த நேரத்தில் அந்த ஆறுதல் போதும். இரு விளையாட்டு வீரர்களும் அந்த அறையை விட்டு மௌனமாக வெளியே வந்தார்கள்.

இந்தப் பிரச்னை இத்துடன் நின்று விடவில்லை. மறுநாள் ஸ்போர்ட்ஸ் பக்கமே முழுவதும் இந்தச் செய்தி தான்.

"கிராண்ட மாஸ்டரின் வெற்றிக்குப் பின்னால் மறைந்திருக்கும் ரகசியம்"

"மந்திர சக்தியின் உதவியுடன் வெற்றிவாகை சூடும் கிராண்ட் மாஸ்டர்."

சில நாட்களுக்கு முன் ரஷ்யன் பத்திரிகையில் வெளியான போலன்ஸ்கீ பேட்டியின் தலைப்பை நிருபர்கள் தேடிப் பிடித்து விட்டார்கள்.

"அந்த நேரத்தில் எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை" என்று போலன்ஸ்கீ சொன்னார். அப்படியென்றால், போலன்ஸ்கீயை வெற்றிக் கொண்டது இதே போல் டிரிக் செய்ததால்தானா?" என்று ஒரு பத்திரிகை பிரசுரித்திருந்தது.

போலன்ஸ்கீயே அப்படிச் சொன்னார் என்றால் நம்பாமல் எப்படி இருப்பது என்றும் குறிப்பிட்டன.

தான் எந்த சந்தர்ப்பத்தில் அவ்வாறு சொல்ல நேர்ந்தது என்று விளக்கம் அளிக்க போலன்ஸ்கீயும் இல்லை. முதல் நாளே ஊருக்குப் போய்விட்டார். நிலைமை எப்படி மாறி விட்டது என்றால் போலன்ஸ்கீயே நேரில் வந்து "நான் அந்த எண்ணத்தில் சொல்லவில்லை. பேச்சுவாக்கில் சொன்னேன்" என்று சொன்னாலும் நம்புவதற்கு மக்கள் தயாராக இல்லை. ரேவந்தின் கண்களுக்கு உண்மையிலேயே ஹிப்னாடிக் சக்தி இருக்கிறதா இல்லையா என்று வாத விவாதங்களில் ஆழமாக மூழ்கிப் போய் விட்டார்கள்.

மறுநாள் மாலை உள்ளூர் விளையாட்டு சங்கத்தின் கூட்டமே நடத்தப் போவதாக ஏற்பாடு ஆகியிருந்தது.

“நம் நாட்டில் இதுவரைக்கும் கிராண்ட் மாஸ்டர் யாருமே இல்லை. அந்த பட்டத்தை வென்ற முதல் ஆள் நீதான். அதனால்தானோ என்னவோ இவ்வளவு ஆதரவு,” ஜேம்ஸ் சொன்னான்.

ரேவந்த் பதில் எதுவும் சொல்லவில்லை. அவனுக்கு தாடி வளர்ந்திருந்தது. கிட்டதட்ட முப்பத்தி ஐந்து மணி நேரமாக அவன் மௌனமாக, ஒரு விதமான ட்ரான்ஸ் நிலையில் இருந்தான்.

ஜேம்ஸ் மேலும் ஏதோ சொல்லப் போனபோது கதவு அருகில் சந்தடி கேட்டது. சீதாராமன் உள்ளே வந்து கொண்டிருந்தான். உள்ளே வந்ததும் ரேவந்தின் கைகளை பிடித்துக் கொண்டு “என்னை மன்னித்துவிடுங்கள். கள்ள மில்லாத மனதுடன் உங்களுக்குத் தந்த தேவி பிரசாதம் இவ்வளவு விபரீதமான விளைவுக்கு வழிவகுக்கும் என்று கனவில் கூட நினைக்கவில்லை” என்றான்.

ரேவந்த் மௌனமாக இருந்தான்.

சீதாராமன் மேலும் ஏதோ பேசிக் கொண்டே இருந்தான். இந்த விஷயத்தில் தவறு முழுவதும் தன்னுடையது தான் என்றும், தான் தான் அந்த எலுமிச்சம் பழத்தை ரேவந்திற்கு தந்தான் என்று உலகிற்கு சொல்வதாக உறுதியளித்தான்.

ஏதோ இந்த அளவுக்காவது நியாயம் கிடைத்தால் சரி என்று நினைத்துக் கொண்டான் ரேவந்த். ஆனால் சீதாராமன் மென்று விழுங்குவது போல் “உங்க புத்தகம்...அதான்...எனக்கு அர்ப்பணம்” என்று பாதியில் நிறுத்தினான்.

நண்பர்கள் இருவருக்கும் புரிந்து விட்டது அவனுடைய வியாபார தந்திரம். ‘நீ எனக்கு உதவி செய்தால் நான் உனக்கு உதவி செய்கிறேன்.’

ரேவந்த் பெரும் முயற்சி செய்து கோபத்தை கட்டுப் படுத்திக் கொண்டு 'கெட் அவுட்!' என்றான்.

சீதாராமன் அவனை இளப்பமாக பார்த்துவிட்டு வெளியேறினான். ஜேம்ஸ் சட்டென்று அறையை விட்டு வெளியே வந்து அவனை நெருங்கினான்.

"சீதாராமன்! தவறாக நினைத்துக் கொள்ளாதே. ரேவந்தின் மனம் சரியாக இல்லை என்று உனக்கும் தெரியும். அவன் சார்பில் நான் பேசுகிறேன்" என்றான்.

"நிலைமையை நீங்க சரியாக புரிஞ்சுக்கிட்டீங்க சார்" என்றான்.

"எதிரியை தோற்கடிப்பதற்காக மந்திரித்த எலுமிச்சம் பழத்தை தரச் சொல்லி என்னை ரேவந்த் கேட்டார் என்று பத்திரிகைகளுக்கு நீ ஸ்டேட்மெண்ட் தந்தாயானால் பிறகு ரேவந்த் மானத்தோடு பிழைக்க முடியுமா? இந்தச் சின்ன விஷயத்தை அவன் புரிந்துகொள்ள மறுக்கிறானே?"

"நானும் அதைத்தான் சார் சொல்றேன். என் நல்ல குணத்தை அவர் புரிந்து கொள்ளவில்லை. ஏற்கனவே பேப்பர்காரங்க என்னை கேள்வி கேட்கத் தொடங்கிவிட்டார் கள்."

"நீ மட்டும் அந்த எலுமிச்சம் பழ விஷயம் ரேவந்திற்கு எதுவும் தெரியாது என்றும், அவனுக்கு நல்லது நடக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அதை அவனுக்குத் தந்தது நீ தான் என்றும் பேப்பர்காரங்களுக்குச் சொன்னால் ரேவந்த் இழந்த மதிப்பும், மரியாதையும் திரும்ப கிடைத்துவிடும் இல்லையா?"

"ஏன் முடியாது?"

"இவ்வளவு உதவி செய்யப் போகும் உனக்கு தன்னுடைய புத்தகத்தை அர்ப்பணம் செய்வதில் தவறென்ன

இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. இது விஷயமாக ரேவந்திடம் பேசிப் பார்க்கிறேன்."

"அப்படிச் செய்யுங்க சார்."

"அப்படிச் செய்தால் பிரபாகர் சும்மாயிருக்க மாட்டானோ என்னவோ." சந்தேகமாக கேட்டான் ஜேம்ஸ். "நீ இப்போ அவன் பக்கம் இருப்பதாக நினைத்துக்கிட்டு இருப்பான் இல்லையா."

"நம்மை அவன் என்ன செய்துவிடுவான்?"

"என்னப்பா இப்படிக் கேட்கிறாயே? ரேவந்திடம் எலுமிச்சம்பழம் இருப்பதைத் தெரிந்து கொண்டான் என்றால் அவன் சாதாரண ஆளாக இருக்க முடியாதே?"

"அப்படி எதுவும் இல்லை சார். நான் தான் சொன்னேன் அவனுக்கு."

"அதாவது அதில் அவனுடைய மகிமை எதுவும் இல்லை. நீதான் சொல்லியிருக்கிறாய். அப்படித்தானே?"

"ஆமாம். நான் தான் சொன்னேன்."

சீதாராமன் அந்த வார்த்தையை முடிக்கும் முன்னே அவன் உடல் காற்றில் எழும்பியது. தரையில் விழும்முன் மறுபடியும் பந்தாடப்பட்டது. ஒலியை விட ஒளி வேகமாக பயணம் செய்யும். அது போல் சீதாராமன் கண்ணின் முன்னால் மின்னல் தோன்றி பிறகு அடியின் வேதனை மூளைக்கு எட்டியது. ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு சீதாராமன் கரிச்சுரங்கத்தில் வேலை பார்க்கும் தொழிலாளியைப் போல் காட்சியளித்தான்.

அவனுடைய சட்டை காலரைப் பற்றி எழுப்பிக் கொண்டே ஜேம்ஸ் சொன்னான், "நான் ரேவந்தைப் போல மென்மையான மனமோ, இளகிய உள்ளமோ படைத்தவன் இல்லை. அந்த விஷயத்தை நினைவில் வைத்துக் கொள்."

ஆபீசில் வேலை பார்த்துக் கொண்டிருந்த போது மேனேஜிங் டைரக்டரிடமிருந்து ரேவந்திற்கு அழைப்பு வந்தது. பேனாவை மூடிவைத்து விட்டு அவன் அவருடைய அறைக்குச் சென்றான்.

"உட்காரு."

ரேவந்த் உட்கார்ந்து கொண்டான். அவர் ஒரிரு நிமிடங்கள் மௌனமாக இருந்தார். பிறகு பேப்பர் வெயிட்டை விரல்களுக்கு இடையே சுழற்றிக் கொண்டே சொல்லத் தொடங்கினார்.

"ரேவந்த்! 'பாட்டா' போன்ற பெரிய கம்பெனிகளும், வங்கிகளும் கிரிக்கெட் ஆட்டக்காரர்களை ஊக்குவித்து வருகின்றன. ஏர்ஃபோர்ஸ், ரயில்வே போன்றவை ஹாக்கி விளையாட்டு வீரர்களை தம் நிறுவனத்தில் சேர்த்துக் கொள்கின்றன. ஆனால் எனக்குத் தெரிந்த வரையில் செஸ் ப்ளேயர்களை யாரும் அந்த தகுதிக்காக தங்களுடைய நிறுவனங்களில் சேர்த்துக் கொள்வதில்லை" என்று சற்று நிறுத்திவிட்டு மறுபடியும் தொடர்ந்தார்.

"உண்மையைச் சொல்லணும் என்றால் இதில் எங்களுடைய சுயநலமும் கொஞ்சம் இருக்கு. அதை நான் மறுக்கவில்லை. உதாரணமாக பெனின்சுலா பிராடக்ட்ஸ் பற்றி தினசரி பேப்பர்களிலோ, பத்திரிகைகளிலோ ஒரு விளம்பரம் கொடுக்க வேண்டும் என்றால் கிட்டத்தட்ட ஐம்பதாயிரம் வரையில் செலவாகும். அப்படி இருக்கும் போது நீ ஒருமுறை நேஷனல் சாம்பியன்ஷிப் போட்டியில் வென்றால் குறிப்பிட்ட ரேவந்த் என்பவர் பெனின்சுலா பிராடக்ட்ஸில் வேலை செய்கிறார் என்று எல்லா பத்திரிகைகளும் எழுதும். நம் கம்பெனிக்கு மிகப் பெரிய விளம்பரம் இது. இன்னொரு விதமாக சொல்லணும் என்றால் உன்னுடைய ஒவ்வொரு வெற்றியும் நம்

நிறுவனத்திற்கு ஐம்பதாயிரம் ரூபாய் மதிப்புள்ள விளம்பரத்தை மறை முகமாக பெற்றுத் தருகிறது. அதனால் தான் பெரிய பெரிய நிறுவனங்கள் கிரிக்கெட் ஆட்டக்காரர்களை சேர்த்துக்கொள்கின்றன.

ரேவந்த் மௌனமாக கேட்டுக்கொண்டிருந்தான். அவர் மெதுவாக விஷயத்திற்கு வந்தார். "கேன்வாசிங் எவ்வளவு நன்றாக வேலை செய்யுமோ, வயதில் சிறியவன் என்பதால் உனக்குத் தெரியாமல் இருக்கலாம் ரேவந்த். சிலசமயம் எதிர் மறை பிரசாரம் அதைவிட அதிகமான ஆபத்தை விளைவிக்க வழி செய்யும். இதை உன்னால் புரிந்து கொள்ள முடியும் என்று நினைக்கிறேன். இனி நீ போகலாம்." வார்த்தைகளை அளந்து ரொம்ப குறைவாக பேசினார் அவர். அதனால் ஆழ்ந்து யோசித்துப் பார்த்தால் பல வேறு அர்த்தங்கள் இருப்பது போல் தோன்றியது. ரேவந்தின் முகம் வாடிவிட்டது. எப்படியோ சக்தியைத் திரட்டிக் கொண்டு பெரும்முயற்சி செய்து தன் அறைக்குள் வந்து நாற்காலியில் சரிந்தான்.

வெள்ளம் நாலா பக்கத்திலிருந்து வந்து ஒரேமாதிரியாக தன்னை மூழ்கடித்துவிடும் என்று அவன் எதிர்பார்க்க வில்லை. உலகத்தின் மீதே ஏதோ புரியாத வெறுப்பு! ஏதாவது செய்ய வேண்டும். இந்த உலகத்தை விட்டே ஓடிப் போய் விடவேண்டும். அக்கவுண்ட்ஸ் டிபார்ட்மெண்ட்க்கு போன் செய்தான். "என்னுடைய கிராட்சுடீ, மற்றவை எல்லாம் சேர்த்து எவ்வளவு வருமோ சொல்றீங்களா?"

இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு அவர்கள் சொன்னார்கள். ரேவந்த் பேப்பரை எடுத்து ராஜிநாமா கடிதத்தை எழுதத் தொடங்கினான். தன்னுடைய வெறுப்புக்கும், ஆத்திரத்திற்கும் அவுட் லெட் தன்னையே பழிவாங்குவதுதான்.

நாலைந்து வரிகளை விட அதிகம் எழுதவில்லை. தனக்கு இத்தனை நாள் ஆதரவு தந்ததற்கு நன்றியைத் தெரிவித்து விட்டு கடிதத்தை முடித்தான். அவன் அதை கையில் எடுத்துக் கொண்டு எழுந்து கொள்ளப் போன போது போன் ஒலித்தது.

"நீங்கள் தானா?" என்றான் ரிசீவரை எடுத்து.

"ஐ யாம் சாரி."

இருவரும் மௌனமாக இருந்து விட்டார்கள் ஒரு நிமிடம். அந்த மௌனத்தைச் சிதறடித்தபடி அவள் கேட்டாள். "என்ன செய்துகிட்டு இருக்கீங்க?"

தன் கையிலிருந்த காகிதத்தை பார்த்து விரக்தியாக சிரித்துவிட்டு தான் செய்யப்போகும் காரியத்தைச் சொன்னான்.

"உங்களுக்கு மூளை கலங்கி விட்டதா என்ன?" என்றாள்.

அவன் சொல்லத் தொடங்கினான். இதயம் அடிவாரத்தில் கரடு கட்டிக் கிடந்த மலை போன்ற வேதனையானது நட்பு கலந்த ஆதரவில் கரைந்து போய் வார்த்தைகளாக வெளியேறத் தொடங்கியது. அவள் குறுக்கே எதுவும் பேசாமல் அவனை முழுவதுமாக சொல்லும் வரை கேட்டுக் கொண்டிருந்தாள். அவன் அவளுக்குச் சொல்ல வில்லை. இந்த உலகிற்கு சொல்லிக் கொண்டிருந்தான். கண்ணுக்குத் தெரியாத மக்கள் சமுதாயத்தை ஊகித்துக் கொண்டு கண்களை மூடிய நிலையில் சொல்லிக் கொண்டிருந்தான்.

"உங்களுக்குத் தெரியாது. சதுரங்கம் என் வாழ்க்கையோடு எந்த அளவுக்கு பிணைந்து விட்டதோ உங்களுக்குத் தெரியாது. என் எட்டாவது வயதில் இந்த

கருப்பு, வெளுப்பு கட்டங்கள் என் வாழ்க்கையில் ஒரு பகுதியாக மாறிவிட்டன. அன்றிலிருந்து இன்று வரை ஒரு ரிஷியைப் போல் அதைக் கையாண்டு வருகிறேன். சதுரங்கத்தை நான் என்றுமே ஒரு விளையாட்டாக எண்ணியதில்லை. அது ஒரு வேள்வி. நள்ளிரவில் விழிப்பு வந்தால் மேற்கூரையைப் பார்த்துக் கொண்டே நைட்களையும், ரூக்குகளையும் ஊகித்துக் கொண்டு கண்ணுக்குத் தெரியாத எதிரியுடன் விளையாடிக் கொண்டிருப்பேன். இந்தியாவின் முதல் கிராண்ட் மாஸ்டர் ஆக வேண்டுமென்ற தவிப்பில் மற்ற இளைஞர்கள் கவலை யின்றி அனுபவித்து வரும் ஒவ்வொரு மகிழ்ச்சியையும் என்னுடைய பன்னிரண்டாவது வயதிலேயே துறந்து விட்டேன். என் வாழ்க்கையைப் பணயமாக வைத்து உழைத்தேன். இதையெல்லாம் நான் பெருமைக்காக சொல்லவில்லை. என் வேதனையை வெளிப்படுத்துகிறேன். இவ்வளவு செய்து, இத்தனை படிகளை ஏறி இந்த சிகரத்தை அடைந்த பிறகு... இப்பொழுது...என்னை தன் ஆட் காட்டி விரலால் கூட சுட்டிக்காட்ட தகுதியில்லாத அனாமத்து பேர்வழிகள் வாய்க்கு வந்தபடி பேசுகிறார்கள். அதை கூட ஒதுக்கித் தள்ளிவிடலாம். ஆனால் என் வாழ்க்கையில் ஒரு அங்கமாக பிணைந்து விட்ட சதுரங்கத்தை என்னிடமிருந்து பிரிக்க முயற்சி செய்கிறார்கள்." அவன் குரல் கம்மி விட்டது.

அவள் உடனே பதில் சொல்லவில்லை. அவன் வேதனையை புரிந்து கொள்வது போல் சற்று நேரம் மௌனமாக இருந்து விட்டு பிறகு சொன்னாள்.

"உங்களுக்கு எடுத்துச் சொல்லும் அளவுக்கு பெரியவள் இல்லை. காரணமே இல்லாமல் பழி வந்து சேர்ந்தால் யாராக இருந்தாலும் துவண்டு போவது சகஜம். ஆனால் தனித்தன்மை இருப்பவன் தோல்வியிலிருந்தும் பாடத்தை கற்றுக் கொள்வான்."

"இப்போ என்னால் என்ன செய்ய முடியும்?"

"எதை வேண்டுமானாலும் செய்யலாம். முடியுள்ள சீமாட்டி எப்படி வேண்டுமானாலும் கொண்டை போட முடியும். அது போல் உங்களிடம் திறமை இருக்கிறது. அதை வைத்துக் கொண்டு பதிலடி கொடுப்பது கஷ்டமான விஷயம் இல்லை."

"பதிலடி கொடுப்பதா?" விரக்தியாக சிரித்தான். "நாளைக்கே மாநில விளையாட்டுச் சங்கத்தின் கூட்டம் நடக்கப் போகிறது. அந்த கூட்டத்தில் எல்லோருமாக சேர்ந்து ரேவந்தின் கண்களில் ஹிப்னாடிக் சக்தி இருக்கா இல்லையா என்று முடிவு செய்ய ஒரு கமிட்டியை ஏற்பாடு செய்தாலும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை."

"அவர்களை எல்லாம் முந்திக் கொண்டு நீங்க ஒரு அறிக்கை தந்து விட்டால்?"

"என்னவென்று?"

அவள் சொன்னாள். அதைக் கேட்டதும் அவன் கையிலிருந்த போன் நழுவிவிட்டது. எப்படியோ சமாளித்துக் கொண்டு "உங்களுக்கு மூளை பிசகி விட்டதா? நீங்க என்ன சொல்றீங்க?" என்றான்.

இயல்பான குரலில் அவள் சொன்னாள். "உங்களால் அந்த காரியத்தைச் சாதிக்க முடியும் ரேவந்த். எனக்குத் தெரியும். உங்களிடம் அந்த திறமை இருக்கிறது. உங்கள் உழைப்பு, விடா முயற்சி, இருபது வருடம் சதுரங்கம் ஆடிய அனுபவம்...இவற்றை குறைவாக மதிப்பிட வேண்டாம்."

"ஆனால் சின்ன தவறு ஏற்பட்டாலும் காரியம் கெட்டு விடும்." அவநம்பிக்கையோடு சொன்னான்.

"என் திட்டம் வீண் போகாது" என்றாள் அவள்.

அவனுடைய திறமையின் மீது அவளுக்கு சந்தேகம் இல்லை. அவனுக்கு வேண்டியது ஊக்கம் மட்டும் தான். அதுவும் அவளுக்குத் தெரியும்.

மறுநாள் நாளேடுகளில் பெரிய எழுத்துக்களில் செய்தி வந்தது.

"REVANTH ANNOUNCES BLIND-FOLD"

கீழே விவரமாக எழுதியிருந்தார்கள்.

"இந்தியன் கிராண்ட் மாஸ்டர் ரேவந்தின் கண்களில் வசியம் செய்யும் சக்தி இருப்பதாகவும், அதன் மூலமாகத் தான் அவர் எதிரியின் ஆட்டத்தை சுலபமாக முறியடித்து விடுகிறார் என்று சக ஆட்டக்காரர் ரேவந்த் மீது குற்றம் சாட்டியிருக்கிறார். அந்த சமயத்தில் ரேவந்திடம் மந்திரித்த எலுமிச்சம் பழம் இருந்ததாலும், சில நாட்களுக்கு முன் பிரபல ரஷ்ய ஆட்டக்காரர் போலன்ஸ்கீ பத்திரிகைக்கு தந்த பேட்டியில் "அந்த நேரத்தில் எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை." என்று சொல்லியிருந்ததாலும் இந்த குற்றச்சாட்டில் உண்மை இருக்கக்கூடும் என்று மக்கள் நம்பத் தொடங்கியிருந்தார்கள்.

தன்னிடம் எந்த விதமான வசிய சக்திகளும் இல்லை என்றும், கண்பார்வையால் ஹிப்னடைஸ் செய்யும் வாய்ப்பே இல்லை என்றும் நிரூபிப்பதற்காகவும் ரேவந்த் மிகத் துணிச்சலான ஒரு முடிவை எடுத்துள்ளார்.

எதிர் ஆட்டக்காரர் ஆன பிரபாகரனுடன் சேர்த்து மொத்தம் ஏழு பேருடன் அவர் "பிளயிண்ட் ஃபோல்ட்" ஆடப் போகிறார். கண்களை துணியால் கட்டிக் கொண்டு ஆடுவதால் ஒருக்கால் தன் கண்களுக்கு அத்தகைய சக்தியிருந்தாலும் அது வேலை செய்யாது என்றும் அதனால் இந்தப் போட்டியை நடத்த ஒப்புக் கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். மாநில விளையாட்டுச் சங்கம்

ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் பேசிய பிரபாகர் இந்தப் போட்டியில் பங்கேற்க தனக்கு பிரபாகர் சம்மதம் தான் என்றும் ரேவந்தின் கண்கள் கட்டப்பட்டு இருக்கும் பட்சத்தில் அவனுடைய ஆட்டத்தை நாற்பதே ஸ்டெப்புகளில் தன்னால் வீழ்த்தமுடியும் என்று அறிவித்தார்.

பார்வையாளர்கள் மிகுந்த ஆர்வத்துடன் காத்திருக்கும் இந்தப் போட்டிக்கு போலன்ஸ்கீ ரெஃப்ரியாக இருப்பார். இப்போட்டியில் வெற்றி பெறுபவருக்கும் போலன்ஸ்கீக்கும் முன்பே முடிவு செய்தது போல் இன்று, நடக்க வேண்டிய ஆட்டம், பத்து நாட்களுக்குப் பிறகு டில்லியில் நடக்கும். மாநில விளையாட்டுச் சங்கத்தின் பிரதான ஹாலில் நாளை காலையில் பத்து மணிக்கு தொடங்கவிருக்கும் இந்த ஆட்டத்தை காண்பதற்கு பார்வையாளர்கள் பெரிய அளவில் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது."

# 12

மறுநாள் ஒன்பதரை மணிக்கே மக்கள் அந்த இடத்திற்கு படையெடுத்து வரத் தொடங்கினார்கள். நாளேடுகளில் எழுதியது உண்மையாகி விட்டது. சதுரங்கத்தைப் பற்றித் தெரியாதவர்கள் கூட இந்த 'பிளயிண்ட் ஃபோல்ட்' ஆட்டத்தை பார்க்க வந்தார்கள்.

ரேவந்த்திற்கு மூளை கலங்கி விட்டது என்றுதான் எல்லோரும் நினைத்தார்கள். கண்களை மூடிக் கொண்டு ஒரு சதுரங்க போர்டில் இருக்கும் காய்களை நினைவு வைத்துக் கொள்வதே கடினம். அப்படி இருக்கும் போது ஏழு போர்டுகளின் ஆட்டத்தை எப்படி நினைவில் வைத்துக் கொள்ளமுடியும்?

சரியாக பத்துமணி அடிக்க பத்து நிமிடங்கள் இருந்த போது ரேவந்தின் கார் அந்தக் கட்டத்தின் முன் வந்து நின்றது. மக்கள் கும்பலாக கூடி அவனையே பார்க்கத் தொடங்கினார்கள். அவன் யாருடனும் பேசவில்லை. மௌனமாக தலையைக் குனிந்து கொண்டு ஹாலுக்குள் நுழைந்தான். போலன்ஸ்கீயுடன் மட்டும் கை குலுக்கினான். அவனுடைய கவனத்தை சிதறடிக்கக் கூடாது என்று போலன்ஸ்கீக்கும் தெரியும். அதான் ரேவந்திடம் பேச்சு கொடுக்கவில்லை.

தான் செய்யப்போவது சாதாரணமான சாகஸச் செயல் இல்லை என்று ரேவந்துக்குத் தெரியும். தன்னுடைய மானம், மரியாதை சதுரங்கத்தில் தனக்கு இருக்கும் தனிப்பட்ட இடம் எல்லாமே இன்று தான் ஆடப்போகும் ஆட்டத்தின் மீதுதான் நிலைத்திருக்கிறது. அவனுடைய நண்பர்கள் சிலர் எச்சரிக்கவும் செய்தார்கள். பிரபாகர் சுமத்திய குற்றச்சாட்டின் காரணமாக எதுவும் நடக்கப் போவது இல்லை என்றும், பிரபாகர் தோற்றுவிட்டார் போல்தான் என்றும் சொன்னார்கள். ஆனால் ரேவந்த் தன்னுடைய முடிவை மாற்றிக் கொள்ளவில்லை. சதுரங்க ஆட்டத்தின் விதிகளின்படி தான் ஜெயித்தாற்போல் தான். ஆனால் மக்கள் மனதில் ஏற்கனவே ஆழமாக பதிந்து போய் விட்ட சந்தேகத்தை வேருடன் பிடுங்கி எறியவேண்டும். அதுதான் உண்மையான வெற்றி.

அதற்காகத்தான் அவன் இந்த ரிஸ்கை எடுத்துக் கொள்ள முடிவு செய்தான்.

காலையில் ஐந்து மணிக்கே எழுந்துவிட்டான் கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் அறையில் தனியாக கண்களை மூடி அமர்ந்திருந்தான், அது தியானம் இல்லை. கலைஞர்கள், விளையாட்டு வீரர்கள் தங்களுடைய தொழிலில் ஒன்றிப் போய் செய்யும் யாகம். ரிஷிகளும், சன்யாசிகளும் குறிப்பிடும்

தியான நிலையை விட ஒரு படி உயர்ந்தது. அவன் தியானித்தது கடவுளை இல்லை. தன்னுள் புதைந்திருக்கும் சக்தியை. அதற்கு கடவுள் என்று பெயரிட்டு அழைத்தால் அதில் அவனுக்கு ஆட்சேபனை இல்லை.

கடல் அலைகளை போல் எண்ணங்களின் கொந்தளிப்பு முதல் பத்து நிமிடங்களில் அடங்கிவிட்டது. மனம் அமைதி அடைந்தது. கண்ணாடியை போல் தெளிவாக இருந்தது. பல வருடங்களாக செய்து வந்த சாதனை அதற்கு உறுதுணை புரிந்தது. சரியாக ஒருமணி நேரம் முடியும் போது அவன் மனப்பலகையின் மீது அருபத்திநான்கு கட்டங்கள் கொண்ட சதுரங்க போர்ட் முத்திரையாக பதிந்து விட்டது.

அந்த ஒரு நிருமித்த மனம் கலைந்து விடாமல் அவன் அப்படியே கிளம்பிவிட்டான்.

ஹாலுக்கு நடுவில் ஏழு மேஜைகள் இருந்தன. ஏழு மேஜைகள் மீதும் ஏழு சதுரங்க பலகைகள் இருந்தன. நடு மேஜையின் முன்னால் பிரபாகர் அமர்ந்திருந்தான். மற்ற ஆறு பேரும் ஜுனியர்ஸ் என்றாலும் சதுரங்க ஆட்டத்தில் திறமை படைத்தவர்கள்.

போலன்ஸ்கீ ஏழுமுறை டாஸ் போட்டார். ரேவந்த் நான்கு முறை சரியாகச் சொன்னான்.

முதல் இரண்டு பேருடன் கருப்புக்காய்கள், அடுத்த ஆட்டக்காரனுடன் வெள்ளை, பிரபாகருடன் கருப்பு, மற்ற மூவருடன் வெள்ளை...இந்த ரீதியில் ஆட்டத்தைத் தொடங்க வேண்டும்.

அதற்குப் பிறகு அவனுடைய கண்கள் கட்டப்பட்டன. பார்வையாளர்களிலிருந்து இரண்டு மூன்று பேர் வந்து கண்கட்டை பரிசோதனை செய்தார்கள். பிளயிண்ட் ஃபோல்ட் ஆட்டம் தொடங்கிவிட்டது.

ஹால் முழுவதும் மக்களால் நிரம்பிவிட்டது. எல்லோரும் உற்சாகத்துடன், ஆர்வத்துடன் கவனிக்கத் தொடங்கினார்கள்.

இடது பக்கம் முதலாவதாக உட்கார்ந்திருந்த ஆட்டக்காரன் தன்னுடைய காயை முன்னால் நகர்த்தினான்.

"போர்ட் நம்பர் ஒன்.எஸ்.கே.பி. 3" உரத்த குரலில் போலன்ஸ்கீ சொன்னார். ரேவந்தின் மூளையில் ஏற்கனவே பதிந்திருந்த சதுரங்க போர்ட் ஏழாக பிரிந்து விட்டது. எல்லாவற்றிலும் காய்கள் நிரம்பியிருந்தன. போலன்ஸ்கீ சொன்னதும் முதலாவது இடத்தில் இருந்த போர்டில் வெள்ளைக் காய் முன்னால் நகர்ந்தது.

ரேவந்த் "பி.கே.4" என்றான் தாழ்ந்த குரலில், தன்னுடைய ஆட்டம் அதுதான் என்பதுபோல்.

போலன்ஸ்கீ அவன் சொன்னபடி காயை நகர்த்திவிட்டு இரண்டாவது மேஜை அருகில் சென்றார். ரேவந்தும் கூடவே சென்றான். இதே விதமாக ஏழு பேருடன் ஏழுமுறை காயை நகர்த்திவிட்டு மறுபடியும் முதலாவது ஆட்டக்காரனிடம் வந்த போது அவன் நைட்டை நகர்த்தியிருந்தான். அஷ்டாவதானத்தில் செய்வது போல் முதலாவது ஆட்டக்காரனுடன் எந்தக் காயை நகர்த்தினோம் என்பதை நினைவில் வைத்துக் கொண்டு அடுத்த காயை நகர்த்த வேண்டும்.

ரேவந்த் தன்னுடைய இருக்கையில் அமர்ந்துகொண்டு இரண்டாவது காயை நகர்த்துவதைப் பற்றிச் சொன்னான். இதே விதமாக ஆட்டம் தொடர்ந்தது. கிட்டத்தட்ட இரண்டரை மணி நேரம் போவதற்குள் இரண்டு பேர் ஆட்டத்தை விட்டு விலகிக் கொண்டார்கள். நாற்பத்தி இரண்டாவது ஸ்டெப்பில் மற்றொருவன் விலகிக் கொண்டான்.

ரேவந்த் நாற்காலியில் அமர்ந்து கொண்டான். அவன் மனப்பலகையின் மீது நான்கு சதுரங்க போர்டுகள் தெளிவாக தென்பட்டுக் கொண்டிருந்தன. அந்த அறையில் ஊசி விழுந்தாலும் கேட்கும் அளவுக்கு நிசப்தம் பரவியிருந்தது. ரேவந்த் ஒரு ரிஷியை போல் தென்பட்டான். போலன்ஸ்கீயின் குரல் மட்டும் அவனுக்குக் கேட்டுக் கொண்டிருந்தது. உடனுக்குடன் அவற்றுக்கு பதில் சொல்லிக் கொண்டிருந்தான். கண்களைத் திறந்து ஆடுபவர்களை விட அரை மணி நேரத்தை மிச்சப்படுத்தி இருந்தான்.

அவனைக் கொஞ்சம் திணறடித்தவன் பிரபாகர் மட்டும் தான். பிளயிண்ட் ஃபார்டில் அதிக காய்களை வெட்டக் கூடாது. கண்களை மூடி ஆடும் ஆட்டக்காரனை மேலும் குழப்புவதற்கு போர்டில் அதிக காய்கள் இருக்க வேண்டும். பிரபாகர் அதே யுக்தியை பின்பற்றிக் கொண்டிருந்தான். அவனுடைய திறமையையும் குறைவாக மதிப்பிட முடியாது. இந்தியாவின் மிகவும் குறைவான மாஸ்டர்களின் எண்ணிக்கையில் அவனும் ஒருவன். மற்றவர்களைப் பற்றி சொல்லுவானேன்? மேலும் அரை மணி நேரம் போன பிறகு செக் சொன்னதும் விலகிக் கொண்டார்கள்.

அதற்குப் பிறகுதான் உண்மையான போர் தொடங்கியது. பிரபாகர் எந்த ஒழுங்குமுறையும் பின்பற்றாமல் ஆடிக் கொண்டிருந்தான். ரேவந்தின் பலம் முழுவதும் அவனுடைய குதிரைகளில் இருப்பதை புரிந்து கொண்டான். தன்னுடைய பிஷப்பையும் இரண்டு ரூக்குகளையும் காவு கொடுத்து விட்டு ரேவந்தின் இரண்டு குதிரைகளையும் வெட்டினான். ஆனால் அதற்குப் பிறகு எஞ்சிய காய்களை விட்டுக் கொடுக்கவில்லை.

தன்னுடைய குதிரைகள் போனதும் ரேவந்த் தன்னுடைய ராணியின் மீது நம்பிக்கை வைத்தான். சரியாக நான்கு ஸ்டெப்புகளில் அதை வெளியே கொண்டு வந்து

எதிரியின் இலாகாவுக்குள் புகுந்தான். அவனால் கண்களை மூடிக் கொண்டே பிரபாகர் பத்து ஸ்டெப்புகளுக்குப் பிறகு எந்தக் காயை எப்படி நகர்த்துவான் என்பதை ஊகிக்க முடிந்தது. இந்த திறமை பாபிஃபிஷருக்கு மட்டும் தான் இருந்தது என்பது உலக பிரசித்தம். பிரபாகர் தன்னுடைய ராணியைக் கொடுத்து ரேவந்தின் ராணியை வீழ்த்தினான். அதற்குப் பிறகு ரேவந்த் தன்னுடைய ரூக்கை களத்தில் இறக்கி பிரபாகரின் பிஷப்பை வெட்டினான். அடுத்ததாக ரேவந்த் தன்னுடைய ரூக்கையும் இழக்க நேர்ந்தது. இடையில் இருபக்கத்து சிப்பாய்களையும் மளமளவென்று சரிந்து விட்டன.

ஆட்டம் இந்த நிலைக்கு வந்ததும் ரேவந்த் தன்னுடைய ராஜாவை சுயமாக முன்னுக்குக் கொண்டு வந்தான்.

அதுவரையில் ஒரே கோணத்தில் ஆடிக் கொண்டிருந்த பிரபாகர் போர்டைப் பார்த்ததும் திடுக்கிட்டான். போர்டில் பாதிக்குமேல் காலியாக இருந்தது. அதாவது ரேவந்தின் மூளை அவ்வளவு துல்லியமாக செயல்படத் தயாராக இருக்கிறது என்று புரிந்துவிட்டது. அது மட்டுமே இல்லை. ஆட்டத்தின் தொடக்கத்தில் ரேவந்தின் நைட்டுகளை பலிவாங்க தன்னுடைய பிஷப்பையும், இரண்டு ரூக்குகளையும் விட்டுக் கொடுத்தான். இப்போ போர்ட் ஏறத்தாழ காலியாகி விட்ட இந்த நிலையில் ரேவந்த் ரூக்கின் உதவியுடன் ராஜாவை முன்னால் நடத்தி வந்து கொண்டிருந்தான். தன்னை விட ரேவந்திற்கு ஒரு ரூக் வேறு அதிகமாக இருந்தது.

மேலும் நான்கு முறை காய்களை நகர்த்தியதும் பிரபாகருக்கு ஒரு விஷயம் புரிந்து விட்டது. ரேவந்த் தன்னுடைய நைட்டுகளை வெட்டமாட்டான். காலியாக இருக்கும் போர்டில் நைட்டுகள் எதற்குமே பிரயோஜனம் இல்லை. மற்றொரு பக்கம் ரேவந்தின் ரூக் அதிரடி தாக்குதல்

நடத்திக் கொண்டிருந்தது. போர்ட் காலியாகிக் கொண்டிருந்ததைக் கவனிக்காமல் தான் புதைகுழியில் காலை வைத்து விட்டான்.

இனி ரேவந்த் கண்களை கட்டிக்கொண்டு ஆடினாலும், நான்கு கண்களுடன் ஆடினாலும் ஒன்றுதான். தான் எப்படியெல்லாம் ஆடவேண்டும் என்று எண்ணியிருந் தானோ சரியாக அதற்கு எதிர்ப்பதமாக தன்னை ஆட வைத்து விட்டான். போர்டில் இருந்த காய்களை தன்னை வைத்தே வெட்டி விடச் செய்துவிட்டான். இனி ஆட்டத்தை தொடருவதில் பிரயோஜனம் இல்லை. இன்னும் நான்கு ஸ்டெப்புகளில் ராஜாவுக்கும், நைட்டுக்கும் ஃபோர்க் வைக்கப் போவது நிச்சயம்.

அவன் நேரத்தைப் பார்த்துக் கொண்டான். இன்னும் ஐந்து நிமிடங்களில் நான்கு முறை காய்களை நகர்த்தியாக வேண்டும். மேலும் ஆடி நேரத்தை வீணாக்குவதில் அர்த்தம் இல்லை. ஆட்டத்தைத் தொடர்ந்தால் முட்டாளாவது நிச்சயம்.

எழுந்து நின்று "நான் ஆட்டத்தை விட்டு விலகிக் கொள்கிறேன்" என்றான்.

பிரபாகர் தொலைவில் இருந்ததால் ரேவந்திற்கு அவன் சொன்னது கேட்டவில்லை. முதலில் கேட்டது மக்களின் கரகோஷம் தான். பிறகு போலன்ஸ்கீ சுயமாக ரேவந்தின் கண்கட்டை அவிழ்த்துவிட்டு "கங்கிராட்சுலேஷன்ஸ் மை பாய்" என்றார். அப்பொழுதுதான் ரேவந்திற்கு புரிந்தது தான் ஜெயித்து விட்டோம் என்று. அதற்குள் மக்கள் வந்து அவனை சூழ்ந்து கொண்டார்கள். ரொம்ப நேரமாக கண்களை மூடியிருந்ததால் கண்களில் எரிச்சல் தோன்றியது. கண்ணீரும் வழிந்து கொண்டிருந்தது. ஆனால் அந்த கண்ணீர் எரிச்சலினால் ஏற்பட்டவை அல்ல. மகிழ்ச்சியால் ஏற்பட்டது. அந்த சந்தோஷத்தை சுயமாக அனுபவித்தால் தவிர வார்த்தைகளில் சொல்ல முடியாது. என்ன நினைத்துக்

கொண்டானோ தெரியாது. பிரபாகரும் வந்து கை குலுக்கினான். கேமராக்கள் பளிச்சிட்டன.

"மிகப் பெரிய வெற்றியை சாதித்து விட்டாய்" போலன்ஸ்கீ முறுவலுடன் சொன்னார்.

"மாஸ்டர் ஆக இருப்பவனை வெற்றிக் கொள்வது பெரிய விஷயம்தான். ஏழு பேருடன் பிளயிண்ட் ஃபோல்ட் ஆடுவது சாதாரண விஷயம். உண்மையைச் சொல்லுங்கள். இந்த மாதிரி பந்தயம் ஆட நேர்ந்தால் உங்களால் முப்பது பேருடன் ஒரே சமயத்தில் பிளயிண்ட் ஃபோல்ட் ஆட முடியாதா?"

போலன்ஸ்கீ ரேவந்தை உற்றுப் பார்த்தார்.

ரேவந்த் சொன்னது உண்மைதான். உலக சாம்பியன் கார்போவ் எழுபது பேருடன் ஒரே நேரத்தில் பிளயிண்ட் ஃபோல்ட் ஆடக் கூடிய அளவுக்கு திறமை படைத்தவர் என்பது உலகிற்கு தெரிந்த விஷயம்தான். கலை என்பது ரொம்ப உயர்வானது. கலைஞர்களுக்கு எப்போதும் முழுமையான சந்தோஷம் கிடைக்காது. லட்சியத்தை அடைந்தாலும் மேலும் மேலும் சாதிக்க வேண்டியது இருப்பதாக தோன்றிக் கொண்டே இருக்கும். அந்த தவிப்பில் வேதனையும், மகிழ்ச்சியும் கலந்திருக்கும்.

டி.வி.கேமரா நிசப்தமாக இயங்கிக் கொண்டிருந்தது. ஆட்டோ கிராஃபில் கையெழுத்திட்டுக் கொண்டே அவன் யோசித்துக் கொண்டிருந்தான். வெற்றிக்கும் தோல்விக்கும் இடையே உள்ள வித்தியாசம் எவ்வளவு சின்னது? தவறான காயை நகர்த்தி விட்டு தான் தோற்றுப் போய் இருந்தால் மகிழ்ச்சியுடன் ஆரவாரம் செய்து கொண்டிருக்கும் இந்த மக்கள் கேலியாக பேசி ஏளனம் செய்திருப்பார்கள். குறைந்த பட்சம் தன்னுடைய முயற்சியைக் கூட புரிந்துகொண்டிருக்க மாட்டார்கள்.

அந்த நேரத்தில் அவனுக்கு ஒரு வினோதமான உணர்வு தோன்றியது. அவன் உயரமான சிகரத்தின் மேல் நின்று கொண்டிருந்தான். வெற்றிக்கும் தோல்விக்கும் அப்பாற்பட்ட உணர்வு முகத்தில் பிரதிபலிக்க ரிஷியை போல் அவன் மேலும் மேலும் ஏறிக் கொண்டிருந்தான். கீழே நின்றிருந்த ஆயிரக் கணக்கான மக்கள், சூரிய ஒளி கண்களை குத்தாமல் கைகளை நெற்றியின் மீது குறுக்கே வைத்துக் கொண்டு அவன் கண் மறைவாவதை பார்க்க முயற்சி செய்து கொண்டிருந்தார்கள்.

இதெல்லாம் வினாடி நேரம் தான். அடுத்த வினாடியே அவன் சாதாரண மனிதனாக மாறி விட்டான். அந்த வினாடி நேரத்து அனுபவத்தில் கர்வமோ, அகம்பாவமோ கடுகளவும் இல்லை. ஆனால் வாழ்க்கை பற்றிய பெரிய உண்மை அடங்கியிருந்தது.

## 13

"கங்கிராட்சுலேஷன்ஸ்!"

"உண்மையில் நான்தான் உங்களுக்குச் சொல்லணும் "உத்வேகம் நிரம்பிய குரலில் ரேவந்த் சொன்னான். அந்த நேரத்தில் உங்களைப் பார்க்கணும்னு எப்படித் துடித்தேன் தெரியுமா? எல்லோரும் என்னை வாழ்த்தும் போது நான் நினைத்தேன், இந்த வாழ்த்துக்கள் சேர வேண்டியது எனக்கு இல்லை உங்களுக்கு என்று."

"நீங்க ரொம்பத்தான் என்னை புகழறீங்க."

"இல்லை. இல்லை. அந்த நிமிடம் நான் எந்த அளவுக்கு சுய இரக்கத்தால் குன்றிப் போய் விட்டேனோ உங்களுக்குத் தெரியாது. நீங்க மட்டும் தைரியம் சொல்லாமல் இருந்தால் என் எதிர்காலமே இருண்டு போயிருக்கும். எங்கேயோ

படித்திருக்கிறேன். ஆணின் ஒவ்வொரு வெற்றிக்கும் பின்னாடியும் ஒரு பெண் இருப்பாள் என்று. ஆறுதல் சொல்வதை விட மனதளவில் உற்சாகப்படுத்தி, ஊக்குவிப்பது பெரிய விஷயம். நீங்க அதைத்தான் செய்திருக்கீங்க. உங்களுக்கு எப்படி நன்றியைத் தெரிவிப்பது என்று எனக்குத் தெரியவில்லை."

"நண்பர்களுக்கிடையே நன்றி எதற்கு? உங்களிடம் அந்த திறமை இருக்கு என்று எனக்குத் தெரியும். அதனால் என்னால் முடிந்த வரையில் ஊக்கமளித்தேன். நீங்க ஜெயித்தீங்க. அவ்வளவுதான். இந்த உலகில் நான் அதிகமாக வெறுக்கும் ஒரே விஷயம் இந்த தன்னிரக்கம்தான் ரேவந்த்."

"ஆனால் நீங்க மட்டும் இந்த உதவியை செய்திருக்கா விட்டால்..." அவன் மேலும் ஏதோ சொல்லப் போனான்.

"இனி ஒருவரை ஒருவர் புகழ்ந்து பேசிக்கொள்வதை நிறுத்துவோமா?" என்றாள்.

"ஐயாம் சாரி" என்றான் ரேவந்த்.

அவன் பேச்சை மாற்றிக் கொண்டே "நீங்க வெற்றி பெற்ற தருணத்தில் உங்களுக்கு ஒரு சிறிய பரிசு கொடுத்தனுப்புகிறேன். பெற்றுக் கொள்ளுங்கள்" என்று சொன்னாள்.

"என்ன பரிசு?"

"ஊஹூம், சொல்ல மாட்டேன். அது சஸ்பென்ஸ்."

"உங்களுடைய ஒவ்வொரு விஷயமும் சஸ்பென்ஸாக இருக்கு. உங்க போன் நம்பர், முகவரி எல்லாமே."

"இதில் என் தவறு இல்லை. நான் குறிப்புகளை தந்து கொண்டுதான் வந்தேன். நீங்க தான் கண்டுபிடிக்கவில்லை."

"உங்களுடைய செல்லப் பெயரைக் கண்டு பிடித்துச் சொன்னேன்."

ரேவந்த் சொன்னதைக் கேட்டு அவள் நகைத்தாள்.

"எதற்காக சிரிக்கிறீங்க?"

"கல்லூரியில் கேட்ட துணுக்கு "இருட்டறையில் தந்த முத்தமே' நினைவுக்கு வந்தது அதான் சிரித்தேன். அது போகட்டும். இன்னும் பத்து நாட்கள் கூட இல்லையே? என்னைக் கண்டுபிடிக்க என்ன முயற்சி எடுத்தீங்க? உங்களைப் பார்த்தால் எந்த முயற்சியும் எடுத்தாற் போல் தெரியவில்லையே?"

"இல்லை என்று எப்படி நினைத்தீங்க, 'I ATE NOTHING FOR SIX HOURS' அதனுடைய அர்த்தம் என்னன்னு யோசித்துக் கொண்டு இருக்கிறேன்."

"அதற்குள் நான் வைத்த கெடு முடிந்து விடப் போகிறது."

"கெடு என்றதும் நினைவுக்கு வருகிறது. உங்களைக் கண்டு பிடிக்க இன்னும் பத்து நாட்கள் இருக்கு இல்லையா. அதில் கடைசி இரண்டு நாளும் நான் டெல்லியில் இருப்பேன்."

"அப்படி என்றால் இன்னும் இரண்டு நாள் கூடுதலாக டைம் தரச் சொல்றீங்களா?"

"ச்செ... ச்செ... என் எண்ணம் அது இல்லை. சும்மா சொன்னேன் அவ்வளவுதான். ஆனாலும் பத்து நாள் எதுக்கு? இன்னும் இரண்டு மூன்று நாளில் கண்டுபிடித்து விடுவேன். உங்க போன் நம்பரின் முதல் இரு நம்பர்களும் இப்போதே தெரியும்."

"என்ன?"

"ஒன்று...எட்டு."

"கரெக்ட். எப்படிக் கண்டு பிடித்தீங்க?" உண்மையாக கேட்டாளோ கேலியாக கேட்டாளோ தெரியாது.

"இரண்டாவது எண் முதலாவது எண்ணை விட எட்டு மடங்கு என்று சொன்னீங்களே."

"குட்" என்றாள். "மூன்றாவது நான்காவது எண்களை சொல்லட்டுமா?"

"சொல்லுங்க." உற்சாகத்துடன் கேட்டான்.

"மூன்று நான்கு எண்களை விட அவற்றை திருப்பிப் போட்டால் வரும் நம்பர் பத்து மடங்கு அதிகம்."

"ஊம். அப்புறம்?"

"அப்புறம் என்ன இருக்கு?"

"வேறு ஏதுவும் இல்லையா?" அவன் உற்சாகம் வடிந்து விட்டது.

"சாதாரண ஐக்யூ இருப்பவனுக்குக் கூட இந்த க்ளூ போதும் மூன்றாவது நம்பரைக் கண்டு பிடிக்க."

ரேவந்த் சட்டென்று ஏதோ புரிந்தவன் போல் "மூன்றாவது எண் எண்ணவென்னு தெரிந்து விட்டது" என்றான்.

"இனி இருட்டில் தந்த முத்தம் கதையைக் கூட சொல்லி விட்டேன் என்றால் போன் நம்பர் முழுவதும் தெரிந்து விடும்" என்றாள்.

"ப்ளீஸ்...ப்ளீஸ். அந்தக் கதையை சொல்லுங்களேன்." ரேவந்த் வேண்டுகோள் விடுத்தான்.

"ஒரு ஊரில் ஒரு கல்லூரி இருந்ததாம். அந்த கல்லூரியில் படிக்கும் பெண்கள் சிலர் கல்லூரி தின விழா

முடிந்த பிறகு ஒரு ஹாலில் பார்ட்டி கொண்டாடிக் கொண்டு இருந்தார்களாம். அவர்களில் ஒரே ஒரு பையனும் இருந்தானாம். அப்பாவியாய், பால் வடியும் முகத்துடன் அப்படியே ரேவந்த்ப் போல்..."

ரேவந்த் பற்களைக் கடித்துக் கொண்டே "முதலில் கணக்கைச் சொல்லுங்க" என்றான்.

அவள் சிரித்துக் கொண்டே "அப்புறம் என்ன? அதற்குள் மின்சாரம் போய் விட்டதாம். அந்த இருட்டில் ஒவ்வொரு பெண்ணுக்கும் ரேவந்த் போல் இருக்கும் அந்த இளைஞனை முத்தமிடனும் என்ற எண்ணம் தோன்றியதாம்" என்றாள்.

"ரவீந்திர சரோவரில் நடந்த நிகழ்ச்சியை போல் என்று சொல்லுங்க."

"அப்படித்தான். ஆனால் அந்த இருட்டில் ரேவந்த் எங்கே இருக்கான்னு எப்படிக் கண்டு பிடிப்பது? முடியாது இல்லையா. அதனால் அவர்களில் லீடரைப் போலிருந்த ஒரு பெண் சீனேகிதிகளைப் பார்த்து 'நீங்கள் எல்லோரும் அப்படியே அசையாமல் நில்லுங்க. எல்லோரையும் வரிசையாக முத்தமிட்டு விட்டு நான் ஹாலை விட்டுப் போய் விடுகிறேன்' என்றாளாம்."

"மைகாட்! ஒரு பையனை முத்தமிடுவதற்காக ஒரு பெண் இந்த அளவுக்கு துணிச்சலாக நடந்து கொள்வாளா?"

"வேறு என்ன செய்வாள் பாவம்? ரேவந்தின் கன்னங்களுக்கு அவ்வளவு டிமாண்ட் இருக்கே?"

ரேவந்த் கோபமாக போனை வைக்கப் போனவன் கணக்கு சுவாரசியமாக இருந்ததால் "அப்புறம் என்ன நடந்தது?". என்று கேட்டான்.

"அந்தப் பெண்ணைப் பார்த்து இன்னொரு பெண்ணும் அதே போல் செய்து விட்டு வெளியே போனாளாம். அரை மணி நேரம் கழிந்த பிறகு ரேவந்த் மட்டும் தனியாக சிவந்து கன்றிவிட்ட கன்னங்களுடன் அந்த ஹாலில் நின்று கொண்டிருந்தானாம்."

"அதற்குப் பிறகு?"

"வெளியே ப்யூஸ் போட்டுக் கொண்டிருந்த எலக்ட்ரீஷியனுக்கு அறையிலிருந்து 1081 முறை 'இச்' என்ற சத்தம் கேட்டதாம்."

"மைகாட்!"

"அந்த அறையில் எவ்வளவு பேர் பெண்கள் இருந்தார்களோ அதுதான் என் டெலிபோனின் கடைசி இரண்டு எண்கள்" என்று போனை வைத்து விட்டாள் அவள்.

* * *

"**ரே**வூ! உனக்காக யாரோ வந்திருக்கிறாங்க பாரு" என்று தாய் சொன்னதைக் கேட்டு ரேவந்த் அறையை விட்டு வெளியே வந்தான். ஹாலில் காக்கி உடைகள் அணிந்திருந்த ஒருவன் நின்றிருந்தான். "ஒரு பெரிய வெற்றிக்கு அடையாளமாய் வாழ்த்துக்களுடன்" என்று எழுதியிருந்தது. அதற்குக் கீழே சிறிய எழுத்துக்களில் "உங்கள் துப்பறியும் அறிவையும், உளவு சாதுரியத்தையும் தயவு செய்து இந்த அப்பாவிப் பிராணியின் மேல் உபயோகிக்காதீங்க" என்று குறிப்பு எழுதியிருந்தது. அவனுக்குச் சிரிப்பு வந்தது.

காகிதத்தை மடித்து விட்டு"இதென்ன பாக்கெட்?" என்று கேட்டான் ஆர்வத்துடன்.

அவன் பாக்கெட்டைப் பிரித்துக் கொண்டே "உங்க டெலிபோன் எங்கே இருக்கு சார்?" என்று கேட்டான்.

ரேவந்த் அவனை தன்னுடைய படுக்கை அறைக்கு அழைத்துச் சென்றான்.

அந்த பாக்கெட்டில் சிறிய எலெக்ட்ரானிக் கால்குலேட்டர் போன்ற கருவி ஒன்று இருந்தது. அதை போனில் பொருத்திக் கொண்டே சொன்னான். "இதில் நூறு பட்டன்கள் இருக்கு சார். உங்க நண்பர்களுக்கு, உறவினர்களுக்கு போன் செய்யும் போது தடவைக்கு தடவை நம்பர்களை டயல் செய்ய வேண்டியது இல்லை. உங்களுக்குத் தேவையான நம்பர்களை இதில் ஃபீட் செய்து விட்டால் போதும். நீங்க பட்டனை அழுத்தினால் நம்பரை அதுவே டயல் செய்யும். ஒருக்கால் லைன் கிடைக்கும் வரையில் தொடர்ந்து டயல் செய்துகொண்டே இருக்கும். இது உங்க நேரத்தை மிச்சப்படுத்துவதோடு எஸ்.டி.டி. பண்ணும் வசதியும் இருக்கிறது" என்று இன்னொரு கருவியை எடுத்து மறுபக்கம் பொருத்தினான்.

"நீங்க வீட்டில் இல்லாத போது இந்த பட்டனை அழுத்திவிட்டுப் போய் விட்டால் போதும். உங்களுக்கு யாராவது போன் செய்தால் இதோ இந்த விதமாக அவர் களுக்கு குரல் கேட்கும்" என்று சொல்லிக் கொண்டே பட்டனை அழுத்தினான். ஒரு பெண்ணின் குரல் கேட்டது. "எக்ஸ்க்யூஸ் மி சார். மிஸ்டர் ரேவந்த் வீட்டில் இல்லை. அவருக்கு ஏதாவது செய்தி இருந்தால் சொல்லுங்கள்." டப் என்ற ஓசையுடன் டேப் சுழலத் தொடங்கியது.

அவன் டேப்பை நிறுத்தி விட்டு சொன்னான். "நீங்க வீட்டுக்கு வந்த பிறகு இந்த டேப்பை திருப்பிப் போட்டுக் கேட்டால் உங்களுக்கு யார் யார் போன் செய்தார்கள் என்று புரியும்."

ரேவந்த் வியப்புடன் அந்தக் கருவியைப் பார்த்தான். விஞ்ஞானம் தான் எவ்வளவு முன்னேறிவிட்டது? இத்தகைய கருவி இருப்பதாக எங்கேயோ படித்திருக்கிறேன். ஆனால்

இப்பொழுது நேரில் இந்தியாவில் அதுவும் தன்வீட்டில் பார்க்கும் போது ஆச்சரியம் தாங்கவில்லை.

"யார் அனுப்பினார்கள் இதை?"

"சின்னம்மா அனுப்பி வைத்தாங்க சார்."

ரேவந்த் ஆர்வத்துடன் "அதைத்தான் கேட்கிறேன். அந்த சின்னம்மா யாரு?" என்று கேட்டான்.

அவன் முகத்தில் எந்த உணர்ச்சியும் காட்டாமல் ஜேபியிலிருந்து இன்னொரு சீட்டை எடுத்துத் தந்தான். அதில் இவ்வாறு இருந்தது.

"நீங்க இப்படிக் கேட்பீங்கன்னு தெரியும். அதனால் தான் இந்த சீட்டையும் எழுதி வைத்தேன்."

படித்துவிட்டு ரேவந்த் நிமிர்ந்து பார்த்தபோது அந்த மெகானிக் அங்கே இருக்கவில்லை.

* * *

"கங்கிராட்சுலேஷன்ஸ்."

"தாங்க்யூ."

"கங்கிராட்ஸ்!"

"தாங்க்யூ."

ரேவந்த் தன்னுடைய சேம்பருக்குள் வந்து உட்கார்ந்த ஐந்து நிமிடங்களுக்கெல்லாம் மேனேஜிங் டைரக்டரிடமிருந்து அழைப்பு வந்தது. மறுபடியும் என்ன வந்துவிட்டிருக்கும் என்று நினைத்துக் கொண்டே அவன் போனான்.

"வா...உட்கார்" என்றார் அவர்.

ரேவந்த் எதிரே இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டான்.

"கங்கிராட்சுலேஷன்ஸ்! பேப்பர்களில் உன்னைப் பற்றி புகழ்ந்து எழுதியிருக்காங்க. உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டிய விஷயம்."

ரேவந்த் வியப்படைந்தான். நான்கு நாட்களுக்கு முன்னால் தன்னை மறைமுகமாக ராஜிநாமா செய்யச் சொல்லி சொன்னவர் இவர்தானா? இப்பொழுது எதுவுமே நிகழாதது எத்தனை சாதாரணமாக பேசுகிறார்? இதனால்தான் இவர்களால் இந்த வியாபார உலகில் இவ்வளவு முன்னுக்கு வர முடிந்திருக்கிறது.

"இரண்டு மூன்று போர்ட் ஆஃப் டைரக்டர்ஸ் போன் செய்து உன்னைப் பற்றி விசாரித்தார்கள். அடுத்த போர்ட் மீட்டிங்கில் உன் திறமைக்கு பரிசாக இரண்டு இன்க்ரிமெண்டுகளை தர வேண்டுமென்று சிபாரிசு செய்யப் போகிறேன்."

"தாங்க்யூ சார்" என்று எழுந்து கைகுலுக்கி விட்டு வெளியே வந்தான். அவனுக்குச் சிரிப்பு வந்தது.

அவன் தன்னுடைய சேம்பருக்குள் நுழைந்த போது அங்கே ஜேம்ஸ் உட்கார்ந்திருந்தான். எப்போதும் சிரித்துக் கொண்டு, கலகலப்பாக இருக்கும் அவன் முகம் இன்று ஏதோ உணர்ச்சிப் போராட்டத்தில் சிக்கிக் கொண்டார்போல் தென்பட்டது.

"என்ன விசேஷம்?" ரேவந்த் கேட்டான்.

ஜேம்ஸ் கை விரல் நகங்களை ஆராய்ந்துகொண்டே "ரேவந்த்! உன்னிடம் ஒரு விஷயம் சொல்லணும்" என்றான்.

அவன் குரலில் தென்பட்ட சீரியஸ்நெஸ் ரேவந்தை வியப்பில் ஆழ்த்தியது. "என்ன? ஏதாவது பிரச்னையா?" என்றான்.

"ஆண்களின் வாழ்க்கையில் கல்யாணம் என்பதே ஒரு பெரிய பிரச்னை என்றால் அதுதான் நடக்கப் போகிறது" என்றான்.

ரேவந்த் புரியாதவன் போல் "அப்படி என்றால்?" என்றர்ன்.

"நாம் ஒரு பெண்ணுடன் போனில் பேசினோம் நினைவு இருக்கா? அந்தப் பெண்ணை கல்யாணம் செய்து கொள்ளப் போவதாக முடிவு செய்திருக்கிறேன்." நிதானமான குரலில் சொன்னான்.

ரேவந்த் அதிர்ச்சி அடைந்தவனால் "வாட்!!" என்றான். கனவில் கூட நினைத்திராத விஷயத்தைக் கேட்க நேர்ந்தாற்போல். "எந்தப் பெண்? பத்து நாட்களுக்கு முன்னால் மாலிஷஸ்கால் எப்படிச் செய்யணும்னு போனில் சொன்னாளே? அந்தப் பெண்ணா?" என்றான்.

"ஆமாம். அவளே தான். அவள் பெயர் சுலோசனா ராஜ சுலோசனா."

"அவளை நீ எப்போ சந்தித்தாய்?"

"முந்தா நாள் இரவு."

"முந்தா நாள் சந்தித்துவிட்டு அதற்குள் திருமணம் செய்து கொள்வதாக முடிவு செய்து விட்டாயா?"

"ஏன்? சந்தித்துக் கொண்டே இரண்டு மூன்று வருடங்கள் வரையில் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது என்று சட்டம் ஏதாவது இருக்கிறதா?"

"அப்படி இல்லை. ஒன்றுமே தெரியாமல் கல்யாணம் செய்து கொள்வதா என்றுதான்."

"நீங்கள் எல்லோரும் வாழ்க்கைக்கு இவ்வளவு முக்கியத்துவம் தருவது ஏன் என்றுதான் எனக்குப்

புரியவில்லை. பரஸ்பர ஈர்ப்பு, கவர்ச்சி, ஒருவரை ஒருவர் புகழ்ந்து கொள்வது...புரிந்துகொள்வது இதெல்லாம் 'ட்ராஷ்' என்பது என் அபிப்பிராயம். வாழ்க்கை என்றால் இது மட்டுமே இல்லை. திருமணம் என்பது வாழ்க்கையில் ஒரு சின்ன நிகழ்ச்சிதான். உனக்குத்தான் தெரியுமே, நான் எதையாவது நம்பிவிட்டேன் என்றால் அதைக் கடைப்பிடித்தே தீருவேன் என்று."

"இத்தனைக்கும் அந்தப் பெண் எந்த விதமாக உன்னைக் கவர்ந்தாள்?"

"இதில் கவருவது என்ற பேச்சுக்கே இடமில்லை. ஏதோ ஒன்று நடக்கணும். அது அப்படி நடந்துவிட்டது. அவ்வளவு தான்."

"அதான் எப்படி நடந்தது என்று கேட்கிறேன்?"

ஜேம்ஸ் சொல்லத் தொடங்கினான்.

## 14

விசாலமான தெருக்கள் வழியே அவன் மோட்டார் சைக்கிளை ஓட்டிக் கொண்டிருந்தான். திருப்பங்களில் வண்டி சாயும் போது அவளுக்கு பயமாக இருந்தது. பிடித்துக் கொள்ள எதுவுமே இல்லை அவனுடைய இடுப்பைத் தவிர.

மோட்டார் சைக்கிள் பெரிய ஹோட்டலுக்கு முன்னால் நின்றது.

இருவருமே ஒரு கேபினில் வந்து உட்கார்ந்ததும் அவன் டின்னருக்கு ஆர்டர் கொடுத்தான். ஸ்பீக்கரிலிருந்து மெலிதாக இசை கேட்டுக் கொண்டிருந்தது. அவன் ஏதாவது பேசுவான் என்று எதிர்பார்த்தாள். ஆனால் அவன் அவளோடு பேசுவதைக் காட்டிலும் இசையை கேட்பதிலேயே

ஒன்றிப் போய், மோட்டார் சைக்கிள் சாவியால் மேஜை மீது பாட்டுக்கு ஏற்ப தாளம் போட்டுக் கொண்டிருந்தான்.

சாப்பிட்டு முடிக்கும் போது மணி பத்தடித்து விட்டது.

"நீங்க எங்கே இருக்கீங்க?" பில்லுக்குப் பணம் கொடுத்துக் கொண்டே அவன் கேட்டான்.

அவள் சொன்னாள்.

அவளுடைய வீட்டை நோக்கிப் போகும் போது பிரதான சாலைக்கு பக்கத்து சந்தில் தென்பட்ட மாடி அறையை சுட்டிகாட்டி "அதோ! அதுதான் நான் தங்கியிருக்கும் அறை" என்றான். அதற்குள் ஏதோ யோசனை வந்தாற்போல் "வாங்க. என் அறையை பார்த்து விட்டுப் போகலாம்" என்று மோட்டார் சைக்கிளை சரேலென்று அந்தப் பக்கமாக திருப்பினான்.

அவள் "இந்த இரவு வேளையில் எதற்கு?" என்று தடை சொல்லப் போனாள்.

அவன் பிரேக்கைப் போட்டு விட்டு "எங்க வீட்டு ஓனர் ஒன்றும் நினைத்துக் கொள்ளமாட்டார், வாங்க" என்று சொல்லிக் கொண்டே உள்ளே நடந்தான். பிரச்சனையை தன்னுடைய கோணத்திலிருந்து மட்டுமே யோசிக்கும் அவனைப் பார்க்கப் பார்க்க அவளுக்கு வியப்பாக இருந்தது.

அவன் பூட்டைத் திறந்து உள்ளே நுழைந்தான். அந்த அறை ஒரு மியூசியத்தைப் போல் காட்சியளித்தது. இங்க் பாட்டில், பிரஷ்கள் டிராயிங் போர்ட் மீது உருண்ட நிலையில் தென்பட்டன. ஜன்னல் கதவுகளை சரியாக சார்த்த வில்லையோ என்னவோ டிராயிங் பேப்பர்கள் பறந்து வந்து தரையில் கிடந்தன.

கட்டில் புதிதாக இருந்தாலும் நாடா சரியாக இறுக்காததால் தொய்ந்து கிடந்தது. தலையணை இருக்க

வேண்டிய இடத்தில் நாலைந்து புத்தகங்கள் இருந்தன. சுவற்றில் ஸ்பானிஷ் கிட்டார் தொங்கிக் கொண்டிருந்தது.

"காபி குடிக்கிறீர்களா?"

"இப்பொழுதுதானே சாப்பிட்டோம்."

"பரவாயில்லை" என்று பிளாஸ்க்லிருந்து ஆறிப் போன காபியை எடுத்து ஸ்டவ் மீது சுடவைத்தான். அவள் பார்வை அங்கிருந்த பெரிய போட்டோவின் மீது படிந்தது. அதன் கீழே எழுதியிருந்த பெயரைப் படித்து விட்டு "யார் இந்த கிரெகரி பெக்?" என்று கேட்டாள்.

"அமெரிக்காவில் பெரிய கிரிக்கெட் பிளேயர்" என்றான்.

புத்தக அலமாரியிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்தாள். "கோடுகளில் உணர்ச்சிகளைக் காட்டும் கலை" என்ற ஆங்கில புத்தகம் அது.

"நீங்க படம் கூட போடுவீங்களா?"

"போடுவேன்."

"பத்திரிகைகளில் வந்திருக்கா?"

"கார்ட்டூன்கள் வந்திருக்கு."

அவள் சட்டென்று நிமிர்ந்து "ஜேம்ஸ் என்ற பெயரில் போடுவது நீங்கதானா?" என்றாள்.

"நான்தான்."

அவளையும் அறியாமல் கையிலிருந்த புத்தகமே நழுவிவிட்டது. தமிழ்நாட்டில் இருக்கும் சொற்ப கார்ட்டூனிஸ்டுகளில் அவன் ஒருவன். படம் வரைந்து கீழே ஜோக் எதுவும் எழுதாமல் படத்திலேயே நகைப்பை தோற்றுவிப்பவன். முக்கியமாக கணவனை அப்பள

குழவியால் துரத்தும் மனைவி போன்ற ஜோக்குகளை போட மாட்டான்.

"இத்தனை நேரமாக நீங்கதான் கார்ட்டூனிஸ்ட் என்று ஏன் சொல்ல வில்லை?"

"அதற்கு அவகாசம் வரவில்லையே?"

சுலோசனாவுக்கு எக்ஸ்சேஞ்சில் தன்னுடன் பணிபுரியும் ஆபரேடர் ஒருவன் நினைவுக்கு வந்தான். அவன் எழுதிய புதுக்கவிதை ஒன்று பிரசுரமான போது அந்த பத்திரிகையை கையில் பிடித்துக் கொண்டு அலைந்தான். யாரிடம் பேசினாலும் தன்னுடைய கவிதை பத்திரிகையில் வெளியானதைப் பற்றிச் சொல்லாமல் விட மாட்டான்.

"நீங்க வரைந்த கார்ட்டூன்கள் சிரிப்பை வரவழைக்கும். இவ்வளவு நன்றாக எப்படி போடறீங்க?"

"எப்படி என்று கேட்டால் டிராயிங் பேப்பரின் மேல் இண்டியன் இங்க் பயன்படுத்திதான். சிரித்துக் கொண்டே சொன்னான். "நிரந்தர மனப் போராட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ளதான் கார்ட்டூன் போடுகிறேன்."

அவள் இன்னும் வியப்பிலிருந்து மீளவில்லை. அதற்குள் காபி சுட்டு விட்டது. அவன் கப்புகளைத் தேடி எடுக்க ஐந்து நிமிடங்கள் ஆயிற்று. நியூஸ் பேப்பர்களுக்கு அடியில் இருந்தன. அதற்குள் காபி ஆறிப் போய் விட்டது. அதையே குடித்தார்கள்.

தொலைவில் எங்கேயோ பத்தரை மணி ஆனாற்போல் ஒரு தடவை மணி அடித்தது.

ஜேம்ஸ் சிறிய விளக்கைப் போட்டான். அறை முழுவதும் நீலவண்ணத்தில் மங்கலான வெளிச்சம் பரவியது. ஜன்னல் வழியாக நிலா வெளிச்சம் உள்ளே விழுந்து கொண்டிருந்தது. திடீரென்று அறையில் சூழ்ந்த இருளைக் கண்டு அவள் மிரண்டு போய் விட்டாள்.

அதற்குள் அவன் கேட்டான் "உங்க எக்ஸ்சேஞ்ச் பற்றிச் சொல்லுங்களேன்."

தனக்கு சம்பந்தப்பட்ட விஷயம் என்றதும் அவள் உற்சாகமடைந்து "என்ன சொல்லட்டும்?" என்றாள்.

"எக்ஸ்சேஞ்சில் நமக்குத் தெரிந்தவர்கள் யாராவது இருந்தால் நாம் ப்ரீயாக எத்தனை போன்கள் வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம் என்று சொல்வார்கள். அது உண்மையா?"

"யார் சொன்னது? சுத்தப் பொய்" என்றாள் கோபத்துடன்

"அப்படித்தான் சொல்வீங்க. உண்மையைச் சொல்லுங்க" என்று வற்புறுத்தினான்.

அவள் கொஞ்சம் யோசித்து விட்டு "எனக்குத் தெரிந்த வரையில் அப்படிச் செய்யமுடியாது. ஒருக்கால் ஆம்புலென்ஸில் யாராவது தெரிந்தவர்கள் இருந்தால் அவங்க மூலமாய் லோக்கல் கால்களை ஃப்ரீயாக செய்து கொள்ள முடியுமோ என்று நினைக்கிறேன்

"நீங்க அந்த பொசிஷனுக்கு எப்போ வருவீங்க?

அவள் சிரித்துவிட்டு "ஏன்? நீங்க செய்ய வேண்டிய கால்ஸ் இருக்கா?" என்றாள்.

அவன் தலையை அசைத்தான். "இந்த விதத்திலாவது பில்லைக் கறைக்கலாமே என்ற எண்ணம் தான்" என்றவன் சட்டென்று ஏதோ நினைவுக்கு வந்தாற்போல் "லைன்மேனை கைக்குள் போட்டுக் கொண்டால் ஒருத்தருடைய பில்லை மற்றொருவர் கணக்கில் வருவது போல் ஏற்பாடு செய்ய முடியுமாமே. உண்மைதானா?" என்று கேட்டான்.

"அப்படித்தான் சொல்லுவார்கள். ஆனால் அது உண்மையில்லை. எங்களுக்கு வரும் புகார்களில் நூற்றுக்கு

தொண்ணூற்று ஒன்பது பர்செண்ட் தவறானவை தான். முக்கியமாக எஸ்.டி.டி. வந்த பிறகு வீட்டில் இருக்கும் பெண்கள் தூரதேசத்தில் இருக்கும் தம் உறவினர்களுடன் மணிக்கணக்கில் பேசிவிட்டு அந்த விஷயமே மறந்துபோய் விடுவார்கள். பில் வந்தபிறகு கணவர் கோபத்தால் தலைகால் புரியாமல் குதிக்கும் போது திருடனுக்கு தேள் கொட்டினாற்போல் இருந்து விடுவார்கள்."

"அப்படி என்றால் தவறாக பில் போடவே மாட்டார்கள் என்கிறீர்களா?"

"அது போன்ற சில தவறுகள் எல்லா துறைகளிலும் தான் நடக்கும். எங்க இலாகாவை குறை சொல்லணும் என்றால் ஒரு விஷயம் தான் இருக்கு. இந்த தவறுக்குக் காரணம் அலட்சியப் போக்குதான்."

"என்ன தவறு அது?"

"எவ்வளவோ பேர் போன் வேணும்னு வெயிட்டிங் லிஸ்டில் இருக்காங்க இல்லையா. எதிர்காலத்தில் இவர்களுடைய எண்ணிக்கை லட்சத்தைக் கூட எட்டிவிடும். இத்தனை பேருக்கும் வேண்டிய போன்களை இந்த இலாக்கா வினர் ஏன் ஏற்பாடு செய்யவில்லை? ஒழுங்காக திட்டம் போடத் தெரியாதது தான் இதற்குக் காரணம். இப்போ பத்து கோடி செலவு செய்தால் எதிர்காலத்தில் மேலும் லாபத்தை ஈட்ட முடியும். எக்ஸ்சேஞ்சுகளை அதிகரிப்பதன் மூலம் போன் கேட்டவனுக்கு பத்தே நாளில் கனெக்ஷன் கொடுக்கும் அளவுக்கு செயல்பட முடியும். ஏன் செய்ய வில்லை?" என்றவள் சட்டென்று ஆவேசமாக பேசிவிட்டதை உணர்ந்து நிறுத்திக் கொண்டாள்.

ஜேம்ஸும் அந்த விஷயத்தில் அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை. "வேறு ஏதாவது சொல்லுங்க" என்றான்.

ஊர் முழுவதும் உறக்கத்தில் ஆழத் தொடங்கியிருந்தது. கிழக்கு நோக்கிப் பறந்து கொண்டிருந்த பறவை ஒன்று ஜன்னல் வழியாக வெள்ளை நிறத்தில் தென்பட்டது.

"வேறு என்ன சொல்லட்டும்?"

"நாம் யாருக்காவது தொல்லை கொடுக்கணும்னா அவர்களுக்கு போன் செய்து விட்டு நம் ரிசீவரை சரியாக வைக்காவிட்டால் அவர்களுடைய போன் வேலை செய்யாதாமே?" என்றான்.

அவள் கண்களை விரித்து "இவ்வளவு மோசமான யோசனைகள் உங்களுக்கு ஏன் வருது?" என்றாள்.

"உண்மைதானா இல்லையா? சொல்லுங்க."

"உண்மைதான்."

கீழே இருந்த வீட்டுக்காரரின் வீட்டில் விளக்குகளை அணைத்து விட்டார்கள். வராண்டாவில் இருள் பரவியது. அவன் ஜன்னல் கதவை நன்றாக திறந்தான். குளிர்ந்த காற்று வீசியது. டேப்ரிக்கார்டரை ஆன் செய்து கொண்டே கேட்டான். "எதை பேசினாலும் போனில்தானே பேசுறாங்கன்னு நினைத்து பெண்கள் அவ்வளவாக பொருட்படுத்த மாட்டாங்களாமே?" என்றான்.

"தேவைக்கு மீறி அதிகமாக மறுமுனையில் இருப்பவர்கள் பேசினால் கீயை அணைத்து விடுவோம். அது தெரியாமல் நாங்க இன்னும் கேட்டுக்கொண்டு இருப்பதாக நினைத்து மறுமுனையில் இருக்கும் நபர் பேசிக் கொண்டே இருப்பார்கள். சில சமயம் திட்டவும் செய்வார்கள்" என்று சிரித்தாள்.

"எனக்கு ஆச்சரியமாக இருக்கும். காலையிலிருந்து மாலை வரையில் டயல் செய்து கிட்டே இருப்பீங்க இல்லையா. விரல்கள் வலிக்காதா?"

"பியானோ பட்டன் சிஸ்டம் வந்தால் நன்றாக இருக்கும்னு எங்களுக்கும் தோன்றும்," சுலோசனா சொன்னாள்.

"டேப் ரிக்கார்டரில் பாட்டு மெலிதாக கேட்டுக் கொண்டிருந்தது. ஜேம்ஸ் கட்டில் மீது இருந்த புத்தகங்களை எடுத்து அலமாரியில் அடுக்கிவைத்தான். அவள் வாட்சைப் பார்த்துக் கொண்டாள்.

அவன் தன்னுடைய அறையில் இருந்த போனை சுட்டிக் காட்டி "இது எனக்கு எப்படி வந்தது தெரியுமா?" என்றான்.

"எப்படி வந்தது?"

"முதல் ஆறுமாதம் எங்க அப்பாவுக்கு ஹார்ட் கம்பிளயிண்ட். அடுத்த ஆறுமாதமும் எங்க அம்மாவுக்கு இதய நோய். வீட்டில் யாருக்காவது சீரியஸாக இருந்தால் டெம்ப்ரவரி போன் தருவாங்க இல்லையா?"

"அவங்க எங்கே?" அந்த அறையை பார்வையால் அளந்து கொண்டே கேட்டாள்.

"என் சின்ன வயதிலேயே காலமாகி விட்டார்கள்" என்று சிரித்தான்.

அவளும் சிரித்தாள். அவன் ரொம்ப காஷுவலாக அருகில் வந்து அவளைத் தன் இரு கைகளாலும் சிறைப்படுத்தினான். இதெல்லாம் ரொம்ப நிசப்தமாக, இயல்பாக நடந்துவிட்டது.

ஒரு வினாடி அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவன் முகம் தன்னை நெருங்கி வருவதை உணர்ந்து சட்டென்று திமிறிக்கொண்டு இரண்டடி பின்னால் நகர்ந்து "எ...என்ன இது?" என்றாள் உலர்ந்து போன குரலில்.

அவளிடமிருந்து இந்த ரியாக்ஷனை எதிர்பாக்காதவன் போல் அவன் ஒரு வினாடி வியப்படைந்தவனாய்

"உங்களுக்கு இதில் விருப்பம் இல்லையா? என்றான். அவன் குரலில் வியப்பு வெளிப்படையாக தென்பட்டது.

"என்னனென்னு நினைத்தீங்க என்னைப்பற்றி?" ரோஷமும், இயலாமையும், அழுகையும் கலந்த குரலில் கேட்டாள்.

அவனும் அதே போல் நேர்மை மாறாத குரலில் "ஒன்றுமே நினைக்கவில்லை" என்றான்.

அந்த பதிலுக்கு திகைப்படைந்தவளாய் நிமிர்ந்து பார்த்தாள்.

அவன் சொன்னான். "நீங்களும், நானும் மட்டுமே இந்த அறையில் இருக்கிறோம். நேரம் இரவு பத்தைத் தாண்டிவிட்டது. உங்களுக்கும் விருப்பம் தான் என்று எண்ணி விட்டேன்."

"அப்பாவிப் பெண்ணொருத்தி உங்களை நம்பி அறைக்குள் வந்தால் அந்த எண்ணத்தைத்தவிர வேறு எதுவும் தோணாதா உங்களுக்கு?" கோபமாகக் கேட்டாள்.

"ஒன்றுமே தெரியாதது போல் நடிக்காதீங்க. நடிக்கிறவங்களைக் கண்டாலே எனக்குப் பிடிக்காது. இந்த மாதிரி நடக்கப் போகிறதென்று உண்மையாகவே உங்களுக்குத் தெரியாதா?" என்றான்.

"உண்மையிலேயே எனக்குத் தெரியாது. உங்களுக்கு அந்த மாதிரி எண்ணம் இருக்கும்னு நினைக்கவே இல்லை நான். அழுகை ஒன்றுதான் பாக்கி அவள் குரலில்.

அவன் அவளை உற்று நோக்கினான். அவள் குரலில் தென்பட்ட நேர்மையை உணர்ந்தவன் ஒரு வினாடி மௌனமாக இருந்தான். பிறகு தோள்களைக் குறுக்கிவிட்டு "ஓ.கே. இட்ஸால் ரைட். நான் அவசரப்பட்டு விட்டேன் போலிருக்கு. இனி இதையெல்லாம் மறந்து விடுங்க" என்றான்.

மூக்குப் பொடி போட்டுக் கொண்டு தும்மிவிட்டு "சாரி" என்று சொல்வது போல் அவ்வளவு சுலபமாக 'இதெல்லாம் மறந்துவிடுங்கள்' என்று அவன் சொன்னதைக் கேட்டு அவளுக்கு தலையைச் சுற்றிக் கொண்டு வந்தது.

"இதுக்காகத்தான் என்னை இங்கே அழைத்து வந்தீங்களா?" என்று கேட்டாள்.

அவன் அலட்சியமாக தலையைச் சிலிர்த்துவிட்டு "இனி அந்த விஷயத்தை மறந்துவிடுங்க என்று சொன்னேனே" என்றான்.

"பரவாயில்லை. சொல்லுங்க. என்னை இனிமேல் சந்திக்கவே மாட்டீங்க இல்லையா?"

"அதற்கென்ன வந்தது? எப்போதாவது சந்தித்துக் கொள்ளத்தானே போகிறோம்" சாதாரணமான குரலில் சொன்னான்.

"அப்படி என்றால் உங்கள் கண்ணோட்டத்தில் ஆண் பெண் நட்பு என்றாலே இதுதானா?" ஏளனம் கலந்த குரலில் கேட்டாள்.

அவன் மெல்ல நிமிர்ந்து அவளை உற்றுப் பார்த்தான்.

"இதுதானா என்று நீங்க சொன்னதற்கு அர்த்தம் என்ன? முதலில் காதலன் நிலா எவ்வளவு அழகாய் இருக்கு பார்த்தாயா என்பான். அவள் ஆமாம் என்பாள். இந்த இரவு ரொம்ப அழகாக இருக்கு இல்லையா என்பான். ஆமாம் என்பாள் அவள். நம் எண்ணங்கள் எவ்வளவு ஒத்துப் போகிறது பார்த்தாயா? என்பான். மயக்கத்தில் ஆழ்ந்து போனவளாய் தலையை அசைப்பாள். நான் உன்னைக் காதலிக்கிறேன். நீ இல்லாவிட்டால் என்னால் உயிரோடு இருக்க முடியாது அன்பே என்பாள். அவன் அவளை அணைத்துக் கொள்வான். இயற்கை சிலிர்க்கும். குயில்

பாடும். அவள் அவனோடு இணைந்து விடுவாள். மொத்தத்தில் கடைசியில் நடப்பது என்னவென்றால் அவன் அவளை அனுபவிப்பது. இதற்காக இத்தனை டிராமாவும், இத்தனை பாடும் எதற்கு? ஒவ்வொரு காதலும் அங்கேதான் முடியப் போகிறது என்ற போது தொடக்கத்திலேயே அந்த காரியத்தை முடித்துக் கொண்டு விட்டால் அந்த நேரத்தை வேறு நல்ல காரியங்களுக்கு ஒதுக்கலாம் இல்லையா? இந்தக் காதலர்களைப் பார்த்தால் எனக்குச் சிரிப்புதான் வரும். காதல் என்ற பெயரில் மனச்சாட்சியை வஞ்சித்துக்கொண்டு விலைமதிப்பற்ற நேரத்தை எப்படி வீணடித்துக் கொண்டிருக்கிறார்கள் தெரியுமா? முக்கியமாக எங்க ரேவந்த் போன்றவர்கள்."

"நீங்க இவ்வளவு 'மெடீரியலிஸ்ட்' என்று நினைக்கவில்லை.

"என்னுடையது கொஞ்சம் கொடூரமான கருத்துக்கள் தான். ஆனால் என் மனதிற்கு ஏற்றாற்போல் கருத்துக்களை ஏற்படுத்திக் கொள்ளும் உரிமை எ‹ ‾க்கு இருக்கு. அவற்றுடன் நீங்க ஒத்துப் போகணும்னு சட்டம் எதுவும் இல்லையே?"

"இனி நாம் கிளம்புவோமா?" சுலோசனா கேட்டாள்.

"வாங்க," பூட்டுச் சாவியை கையில் எடுத்துக் கொண்டே சொன்னான்.

வாசற்படியைத் தாண்டப் போனவள் சட்டென்று நின்று "மைகாட்!" என்றாள்.

"என்ன நடந்தது?"

அவள் சற்று நாணத்துடன். "பிரா அறுந்து விட்டது போலிருக்கு. இப்படியே வெளியில் எப்படி போக முடியும்?" என்றவள் அவனுக்கு முதுகைக் காட்டி "அறுந்துதானே போயிருக்கு?" என்று கேட்டாள்.

அவன் அருகில் வந்தான். வெண்மையான அவள் முதுகில் திண்மையாயிருந்த பிளவுஸை கொஞ்சம் மேலே தள்ளிவிட்டு ஸ்ட்ராப்பை தேடிப் பிடிக்க முயன்று, இரு கைகளாலேயும் ஒன்று சேர்த்து "அறுந்து போகலை. கொக்கி விட்டுப் போயிருக்கு. அவ்வளவுதான்" என்று மாட்டிவிட்டான்.

அவள் மேஜை மீது வைத்திருந்த கைப்பையை எடுத்துக் கொண்டு அவனை ஏறிட்டுப் பார்த்தாள். ஒரு காரை பழுது பார்த்த மெகானிக்கின் சோர்வு மட்டுமே தென்பட்டது. அவன் முகத்தில்.

இருவரும் அறையிலிருந்து வெளியே வந்தார்கள். அவன் அறைக்கதவைப் பூட்டிவிட்டுப் படியிறங்கி கடைசிபடியில் வந்து சேரும் வரையில் கேட்பதா வேண்டாமா என்று உள் மனதுடன் போராடி ஒரு முடிவுக்கு வந்தவள் போல் நின்றாள். "நான் ஒரு கேள்வி கேட்பேன். பதில் சொல்வீங்களா?" என்றாள்.

"கேளுங்களேன்."

அவளுக்கு வெட்கமாக இருந்தது. ஆனால் அவன் ஆழ்மனதில் இருப்பதை தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் அந்த வெட்கத்தை புறக்கணித்தது. "உங்களுக்கு... உங்களுக்கு எந்த விதமான கோரிக்கையும் ஏற்பட வில்லையா?"

அவன் முகத்தில் வியப்பு வெளிப்படையாக தெரிந்தது. "நீங்க தான் மறுத்து விட்டீர்களே? ஒரு முறை வேண்டாம் என்று சொன்ன பிறகு எப்படித் தோன்றும்?" என்றான். அதற்குள் ஏதோ புரிந்து விட்டாற்போல் சிரித்துவிட்டு "என் மனஉறுதியை சோதிக்கத்தான் நீங்க இந்த மாதிரி நடந்து கொண்டீர்களா என்ன?" என்றான். திடீரென்று அவன் குரல் மாறிவிட்டது.

"என் எண்ணங்கள், உணர்வுகள் எல்லாமே மெட்ரியலிஸ்ட்டாகத் தான் இருக்கும் சுலோசனா. இன்னும் நூறு வருஷம் போனாலும் நாம் இப்படித்தான் இருப்போம். நீங்க குளியல் அறையில் இருந்துகொண்டு சோப்பை எடுத்துக் கொடுக்கச் சொன்னாலும் எனக்கு எந்த கோரிக்கையும் ஏற்படாது. நீங்க "நோ" என்று மறுத்து விட்ட வினாடியிலிருந்து உங்களை ஒரு பெண்ணாக பாவிப்பதையே விட்டு விட்டேன். அதனால் தான் நம்மிருவருக்கும் இடையே நட்பு ஏற்படுவதைப் பற்றி நீங்க கேட்டபோது தயங்கினேன். என்னால் உங்களோடு சீட்டாட முடியாது. மனநிலை சரியாக இல்லாமல் போனால் உங்களுடன் சேர்ந்து குடிக்க முடியாது. இனி எந்த விதமாக உங்களுடன் நட்பு ஏற்படுத்திக் கொள்ள முடியும்? மனதில் ஒரு எண்ணத்தை வைத்துக் கொண்டு வெளியில் வேறு விதமாக பேச எனக்குத் தெரியாது. நான் பச்சையாக பேசுவதாக உங்களுக்குத் தோன்றினால் என்னை மன்னித்து விடுங்கள். உங்களை விட சுனில் கவாஸ்கருடன் பேனா நண்பனாக இருப்பது எனக்குப் பிடிக்கும்" என்றான்.

"எத்தனை கொடூரமான எண்ணங்கள் உங்களுடையது? மனதைக் கூட அணா பைசாவுடன் கணக்கிடுவீங்க போலிருக்கு."

நிலவு மேகத்தின் பின்னாடி மறைந்து விட்டதால் வெளிச்சம் குறைந்துவிட்டது. இருளில் அவன் முகத்தில் இருக்கும் உணர்வுகளை அவளால் பார்க்க முடியவில்லை குரல் மட்டும் ஆழமாய் ஒலித்தது.

"ரொம்ப கொடூரமான எண்ணங்கள் தான்! கொடுக்கல் வாங்கல் என்று வியாபார தோரணையை பிரதிபலிக்கும் எண்ணங்கள். மென்மையான ரசனைகள் கொண்ட பெண்ணாக இருந்தால் அவள் மனதை சுக்கு நூறாக்கி விடவில்ல எண்ணங்கள். எனக்கு காதல் மீது நம்பிக்கை

இல்லை. அதைப்பற்றி காலங்காலமாக யோசித்து, மூட்டை மூட்டையாய் காவியங்களை எழுதித் தள்ளுவது ஏன் என்றுதான் எனக்குப் புரியவில்லை. கிரிமினல் வேஸ்ட் ஆஃப் டைம்."

"காதல் மீது இவ்வளவு இளப்பமான எண்ணத்தை உங்களுக்குத் தோற்றுவித்தவங்க யாரோ?"

"எங்க குடும்ப நபர்கள்" என்றான். "இன்ஸெஸ்ட்" என்ற வார்த்தையை நீங்க எப்போதாவது கேட்டிருக்கீங்களா? இன்ஸெஸ்ட் என்றால் நெருங்கிய உறவினர்களுக்குள் ஏற்படும் உடலுறவு. தற்போது மேற்கு நாடுகளில் மிகக் கொடுமையாகி பரவிவிட்ட இந்த இன்ஸெஸ்ட் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே எங்க வீட்டில் நுழைந்து விட்டது. என் தாய் ஸ்கூல் டீச்சர். ஒரு நாள் மதியம் ஏதோ வேலையாக வீடுதிரும்பிய அவளுக்கு தன் கணவனும் மகளும் ஒன்றாக தென்பட்டார்கள். அங்கேயே இருவரையும் கொன்று விட்டு எட்டாண்டுகள் சிறைவாசம் அனுபவித்துவிட்டு அங்கிருந்த ஜெயிலருடன் ஓடிப் போய் விட்டாள்."

அவன் எவ்வளவு சாதாரணமாகப் பேச முயன்றாலும் நடுங்கும் குரலை சுவாதீனத்தில் கொண்டு வருவதற்கு அவன் பெரும் முயற்சி செய்கிறான் என்பதை அவளால் உணரமுடிந்தது. அந்தப் பக்கம் திரும்பியிருந்ததால் அவன் முகம் அவளுக்குத் தென்படவில்லை.

அவன் சொல்லத் தொடங்கினான். "படிப்பைத் தொடர ரொம்பக் கஷ்டப்பட்டேன். ஸ்காலர்ஷிப் போறவில்லை. ட்யூஷன்கள் சொல்லித்தர வேண்டியதாயிற்று. அதனால் படிக்க நேரமும் இருக்காது. நாள் தோறும் பதினாறு மணி நேரம் உழைப்பது பழகிவிட்டது. படிப்பு முடிந்ததும் திடீரென்று இவ்வளவு நேரத்தை எப்படிக் கழிப்பது என்று புரியவில்லை. கார்ட்டூன், கிடார், புத்தகங்கள் இவற்றுடன்

பொழுது போக்கினேன். இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு வந்தாற்போல் இருந்தது. என்னைச் சுற்றிலும் இவ்வளவு பெரிய உலகம் இருக்கிறதா என்று வியப்படைந்தேன். அந்த 'விழிப்பு' ஏற்பட்டதும் காதல் மீதும், மென்மையான உணர்வுகள் மீதும் நம்பிக்கை போய் விட்டது. என்னுடைய இந்த பரிணாம வளர்ச்சியெல்லாம் சேர்த்து நீங்க "மெட்டீரியலிசம்" என்று சொன்னால் எனக்கு ஆட்சேபனை இல்லை. வாங்க போகலாம். நாம்ப இந்த மாதிரி வராண்டாவில் நின்று கொண்டு மனங்களை ஆராய்ச்சி செய்வது நன்றாக இல்லை" என்று முன்னோக்கி நடந்தான்.

அவள் நகரவில்லை. சிலையாக ஆடாமல் அசையாமல் அப்படியே நின்றுவிட்டாள். எந்த மனிதனுமே கெட்டவன் இல்லை. மனதில் அடித்தளத்தைத் துருவிப் பார்த்தால் அது புலப்படும் என்றுதான் பட்டது அவளுக்கு.

"வாழ்க்கையை இவ்வளவு வியாபாரரீதியாக எடுத்துக் கொள்கிற நீங்க ஏன் கல்யாணம் செய்து கொள்ளவில்லை? என் எண்ணம் என்னவென்றால் மனைவிக்காக ஒரு முன்னூறு நானூறு ரூபாய் மாதந்தோறும் செலவு செய்தாலும் ஒரு சமையல்காரி+பெண்+வேலைக்காரி எல்லாமே கிடைத்து விடும் இல்லையா?" என்றாள்.

அவள் பேச்சில் ஏளனம் தொனித்ததோ என்று அவளை உற்று நோக்கினான். அவள் சிரித்துக் கொண்டிருந்ததை பார்த்துவிட்டு தானும் நகைத்தான்.

"உண்மைதான். இந்த யோசனையே எனக்கு வரவில்லை. ஆனாலும் இவ்வளவு பச்சையான எண்ணங்கள் கொண்ட என்னை யார் திருமணம் செய்து கொள்வார்கள்? சாமர்த்தியமாக பேசி ஏமாற்றுவதில் எனக்கு உடன்பாடு இல்லை" என்றான்.

"என்னைப் போன்று தனியாக இருக்கும் பெண் யாராவது செய்து கொள்வாளோ என்னவோ. கேட்டுப் பாருங்க" என்றாள்.

"உண்மையிலேயே செய்துகொள்வீங்களா?"

"ஊம்."

"தேங்க்யூ. இரண்டு மூன்று நாட்களில் ஏதாவது கோவில் அல்லது சர்ச். எது காலியாக இருந்தாலும் அங்கே செய்து கொள்வோம். ஒ.கே."

"சரி."

☆ ☆ ☆

"என்ன? இவ்வளவுதானா. முடிந்து விட்டதா?" வியப்புடன் கேட்டான் ரேவந்த்.

"இவ்வளவுதானா என்ன? இத்தனையும் நடந்திருக்கு." சாவகாசமாக நாற்காலியில் சாய்ந்து கொண்டான் ஜேம்ஸ்.

"என்னால் நம்ப முடியவில்லை. இவ்வளவு சீக்கிரத்தில் இரண்டே இரண்டு கேள்விகளுடன் இருவரும் இந்த முடிவுக்கு வந்து விட்டீங்களா? வாழ்நாள் முழுவதும் சேர்ந்திருக்கப் போகும் ஒரு தீர்மானத்தை இவ்வளவு காஷுவலாக முடிவு செய்திங்களா?" கேள்விமேல் கேள்வியாக கேட்டான் ரேவந்த்.

"அப்போ கல்யாணம் செய்துகொள்ளும் முன் ஒருமாதகாலம். ஒருத்தருக்கொருத்தர் ஐ.க்யூ. டெஸ்ட் வைத்துக் கொள்ளணும் என்று சொல்கிறாயா?"

ஜேம்ஸ் தன்னை குத்திக் காட்டியதை ரேவந்த் உணர்ந்தான். ஆனால் அவ்விருவருக்கும இடையில் அத்தனை நெருக்கம் இருந்தது. ரேவந்தால் ஜேம்ஸ் திருமண

விஷயத்தை அவ்வளவு எளிதாக எடுத்துக் கொள்ள முடியவில்லை.

"அவள் எப்படிப் பட்டவளோ என்னவோ. அவளைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?" ரேவந்த் கேட்டான்.

"உன் நிலாப் பெண் எப்படிப் பட்டவளோ தெரியாமலேயே நீ அவளைக் காதலிக்க வில்லையா? மூன்றே நிமிடங்களில் பெண் பார்த்து முடிவெடுக்கும் லாஜிக் எனக்கும் பொருந்தும் இல்லையா." என்றவன் சற்று நிறுத்தி "நீ கேட்கப் போகும் இரண்டாவது கேள்வி எனக்குத் தெரியும். நள்ளிரவு நேரத்தில் மோட்டார் சைக்கிளில் ஏறி, தைரியமாக உன்னுடைய அறைக்கு வந்த பெண்ணின் கற்பைப் பற்றி உனக்கு சந்தேகம் வரவில்லையா என்று தானே. இந்த கற்பு என்பதே ஒரு ட்ராஷ் என்பது என்னுடைய கருத்து. ஒருக்கால் எனக்கு சந்தேகம் வருகிறது என்று வைத்துக் கொண்டாலும் நள்ளிரவில் ஒரு பெண்ணை அறைக்கு அழைத்துப் போன என் குணத்தின் மீது கூட அவளுக்கு சந்தேகம் ஏற்படலாம் இல்லையா? ஆண்களுக்குத் தேவையில்லாத கற்பு பெண்களுக்கு மட்டும் இருக்கணும் என்று இந்த சமுதாயம் சொல்வது ஏன்? இதுதான் எனக்குப் புரியவில்லை. நான் வெறும் வாய்சொல் வீரன் இல்லை என்று உனக்குத் தெரியும். நாங்க இருவரும் சேர்ந்து வாழப் போகிறோம். அவ்வளவுதான். இருபத்தி நான்கு மணி நேரம் பிசியாக இருக்கும் தினசரி நிகழ்ச்சி நிரலில் மூன்று நிமிடங்கள் பயாலஜிகல் தேவைக்காக ஒருவருக்கொருவர் ஒத்துழைத்துக் கொள்வோம். ஒரு ஐம்பது ஆண்டுகள் கழித்து இருவரும் சாகத்தான் போகிறோம். இந்த சின்ன விஷயத்திற்கு இத்தனை மனப் போராட்டமும், தீர்மானங்களும் எதற்கு? திருமணம் என்பதே ரிஸ்க் என்ற போது அந்த ரிஸ்க் யாரோடு இருந்தால் என்ன? என் பேச்சு உனக்கு சிரிப்பை வரவழைக்கலாம். ஆனால் வாழ்க்கையில் எத்தனையோ கஷ்டங்களை அனுபவித்தப்பிறகு நான் கற்றுக்

கொண்ட பாடம் இது. 'நான் ஏதோ கஷ்டங்களில் இருக்கிறேன். என் மனதை யாருமே புரிந்துகொள்ளவில்லை' போன்ற தன்னிரக்கம் நிறைந்த யோசனைகள் எனக்கு வராது. இதற்கு நீங்க மெடீரியலிசம்' என்று பெயர் வைத்துக் கொண்டால் எனக்கு ஆட்சேபனை இல்லை. ஏன் என்றால் ஆண் பெண் தங்களுடைய பரஸ்பர தேவைகளை தீர்த்துக் கொள்ளத்தான் திருமணம் செய்து கொள்கிறார்கள் என்பது என் கருத்து. என்னதான் காதல், நட்பு, ரசனை என்று வெளியில் சொல்லிக் கொண்டாலும் கடைசியில் விளைவு ஒன்றுதான். எல்லாம் யோசித்துப் பார்த்து விட்டுத்தான் இந்தக் கல்யாணத்திற்கு சம்மதித்தேன். நாளை மறுநாள் கல்யாணம். கண்டிப்பாக வந்து சேரு."

## 15

"ரொம்ப வித்தியாசமான ஆளாய் தோன்றுகிறானே." போனில் ரேவந்த் நடந்ததை எல்லாமே சொன்னபிறகு அவள் சொன்னாள்.

"நமக்குச் சரியாக நேர் எதிர்" என்றான் ரேவந்த். "நாம் ஒரு மாதமாக படும் பாட்டை அவன் இரண்டே நிமிடங்களில் தீர்த்துக் கொண்டு விட்டான்."

"ஆனால் அவன் வாதத்தில் எங்கேயோ சின்ன குறை இருக்கிறது. இருபத்தி நான்கு மணி நேரம் பிசியாக இருக்கும் வாழ்க்கையில் திருமணம் என்பது அற்பமான உடல் இச்சைக்கு மட்டுமே இல்லை. சின்னஞ்சிறு உணர்வுகளுக் காகவும் மனிதன் வாழ்கிறான். மனிதன் உழைப்பதே சந்தோஷமாக வாழ்வதற்காகதானே. அந்த சந்தோஷம் எங்கிருந்து வரும்? உணர்வுகளால் தானே. திருமணம் என்பது உணர்வுகள் நிறைந்த அனுபவம் இல்லையா?

வெறும் உடல் தேவை என்று எப்படிச் சொல்ல முடியும்? உண்மையைச் சொல்லுங்கள். நான் முதல் தடவை போன் செய்தபோது உங்களுக்கு என்ன தோன்றியது?"

"அன்று இரவு முழுவதும் உங்க குரல்தான் கேட்டுக் கொண்டிருந்தது. ஒரு பெண் கட்டிலில் ஒருக்களித்து படுத்துக் கொண்டு காவேரியைப் போன்று அடர்த்தியான கூந்தலை விரித்து முன்னால் போட்டுக் கொண்டு காதில் போனை பொருத்திக் கொண்டு பேசும் காட்சி கண் முன்னால் படமாக விரிந்தது."

"அவ்வளவு அழகான உணர்வை எந்த மெடீரியலிஸ்ட் கண்ணோட்டத்தில் அளக்க முடியும்? வாழ்க்கை என்பதே அழகான உணர்வுகள் நிறைந்த பூங்கொத்து போன்றது தானே."

"ஆமாம். அதனால்தான்..." சட்டென்று பாதியிலேயே நிறுத்திக் கொண்டான்.

"ஏன் நிறுத்திட்டீங்க? சொல்லுங்க."

"ஒன்றுமில்லை."

"எனக்குத் தெரியும். நீங்க என்ன சொல்ல வந்தீங்க என்று."

"என்ன?"

"சும்மா என்னை அழவைக்கணும்னு தான் என் போன் நம்பர் தெரியாது போல் நடிக்கறீங்க. உண்மையில் எப்போதோ அதைக் கண்டு பிடித்து விட்டீங்க. அதைச் சொல்லி விட்டால் இனி இதுபோல் கண்ணாமூச்சி ஆட முடியாதே என்றும், ஒரு மாத காலம் வரையிலும் இப்படியே ஜாலியாக பொழுது போக்கலாம் என்று நினைக்கறீங்க. சரிதானே?"

ரேவந்த் வியப்பால் வாயடைத்துப் போனான். உண்மையிலேயே அவன் நம்பரைக் கண்டுபிடித்து விட்டான். ஆனால் சொல்லவில்லை. அவனுக்கு அந்தப் பெண் வைக்கும் பரிட்சையில் தேர்ச்சி அடைவதை விட அவள் தன்னை அழவைப்பதே பிடித்திருந்தது. இதைக் கூட அவள் கண்டு பிடித்து விட்டாளே. "மைகாட்!" என்று ஆச்சரியப்பட்டான்.

"நான் கொஞ்சம் குழப்பமடைந்து விட்டேன்." ரேவந்த் சொன்னான்.

"எப்படி?"

"மூன்றாவது என் சைபர் என்று தெரிந்து விட்டது. ஆனால் கடைசி மூன்று எண்களையும் பெருக்கினால் **24** வரும் என்று சொன்னீங்க. ஆனால் ஒரு எண் சைபர் என்றாலும் விடையும் சைபர் தானே வரும்."

"ஆமாம். ஆனால் நீங்க சைபரை கணக்கில் எடுத்துக் கொள்ள மாட்டீங்கன்னு நினைத்தேன்."

"உண்மையில் எடுத்துக் கொள்ளவில்லை. எடுத்துக் கொள்ளாமல் போனால் தான் வரும். I Ate Nothing For Six க்கு சரியான அர்த்தம் **18046**. அந்த நம்பர் இல்லை என்றால் **18266** ஆக இருக்கணும். இந்த இரண்டு நம்பர்களையும் எட்டாவது வகுப்பு பையன் கூட நிமிடத்தில் கண்டு பிடித்துச் சொல்லியிருப்பான்."

"அந்த நம்பர்களுக்கு போன் செய்தீங்களா என்ன?

"செய்தேன்."

"யாருடைய நம்பர்களாம்?"

"பைத்தியக்கார ஆஸ்பத்திரியும், கேன்சர் ஆஸ்பத்திரியும்."

மறுமுனையில் அலைஅலையாக சிரிப்பு சத்தம் கேட்டது. சற்று நேரத்தில் சிரிப்பை அடக்கிக் கொண்டு அவள் சொன்னாள். "நீங்க உண்மையிலேயே ரொம்ப நெருங்கிட்டீங்க. பரவாயில்லை. முயற்சி செய்யுங்க. விரைவிலேயே கிடைத்துவிடும். எட்டாவது வகுப்புப் பையனைவிட கொஞ்சம் அறிவை அதிகமாக பயன் படுத்துங்கள். இன்னும் நான்கு நாட்கள்தான் இருக்கு."

"அது போதும்."

"என் மூன்றாவது கடிதம் கிடைத்ததா?"

"மூன்றாவது கடிதமா?" வியப்படைந்தான். "இன்னும் இரண்டாவது கடிதமே கிடைக்க வில்லையே?"

"எங்க மெகானிக்கிடம் கொடுத்து அனுப்பிய சீட்டும் கடிதம் போன்றது தானே."

"ஓ. அதுவா!" ரேவந்த் சிரித்தான்.

"நான் தான் எழுதணுமா? நீங்க எனக்கு எழுத மாட்டீங்களா?"

"நானா! கடிதம் எழுதி எந்த முகவரிக்கு அனுப்புவது?"

"நீங்க எழுதுங்க. நான் வாங்கிக் கொள்கிறேன்."

"அப்படியானால் இப்போதே எழுதுகிறேன். உங்களுக்கு எப்படி அனுப்புவது என்று ஒரு மணி நேரம் கழித்து போன் செய்து சொல்லுங்கள்."

"இது உங்கள் முதல் காதல் கடிதம் ரேவந்த். ஒரு மணி நேரத்தில் முடிந்துவிடும் என்று சொன்னால் என்னால் நம்ப முடியாது. ஆபீசில் மாலை ஐந்து மணி வரையிலும் நீங்க பேனாவுடன் போராட வேண்டியிருக்கும். அப்போ போன் செய்கிறேன்" என்று போனை வைத்து விட்டாள்.

அவள் சொன்னது போல்தான் ஆயிற்று. பியூனை அனுப்பி ரோஸ் நிறத்தில் லெட்டர் பேடை வரவழைத்தான். ஐந்தாவது நிமிடத்தில் அதிலிருந்த காகிதங்கள் எல்லாமே குப்பைக் கூடைக்குப் போய் சேர்ந்து விட்டன. முதலில் எப்படி தொடங்குவது என்றே புரியவில்லை. "அன்பார்ந்த உங்களுக்கு" என்று எழுதுவதா என்ற போராட்டத்திலேயே இரண்டு காகிதங்கள். வணக்கம் சொல்வதா வேண்டாமா என்ற சந்தேகத்தில் இரண்டு காகிதங்கள் வியர்த்தமாயின. இனி பயனில்லை என்று கருதி முதலில் மாதிரிக்காக எழுதிப் பார்க்க முடிவு செய்தான்.

'நான் உங்களைக் காதலிக்கிறேன்' என்று எழுத நினைத்தாலும் உலகிலேயே அதைக் காட்டிலும் முட்டாள் தனமான வாக்கியம் வேறு இருக்க முடியாது என்று பேப்பரைக் கிழித்துப் போட்டான்.

'என் வாழ்க்கையின் இறுதி நேரத்தில் யாராவது என்னிடம் "உன் வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்ச்சி எது?" என்று கேட்டால் "நிலாப் பெண்ணுடன் போனில் பேசியது தான்" என்று எழுத நினைத்தான்.

வெறுமே பேசிக் கொண்டிருந்தாலே போதுமே என்று அவள் தன்னைக் கேலி செய்யக் கூடும் என்று அந்த யோசனையை கை விட்டான். ஒன்றுமே தோன்றவில்லை. எழுதி எழுதி கிழித்துக் கொண்டே இருந்தான்.

எத்தனையோ உணர்வுகள்! எத்தனையோ காகிதங்கள்!

மூன்றடித்தது. நான்காயிற்று. ஐந்தும் ஆகி விட்டது. போன் ஒலித்தது.

"எழுதி விட்டீர்களா?"

"ஊம்." பொய்யைச் சொன்னான். "எப்படிக் கொடுத்தனுப்புவது?"

"நானே வந்து வாங்கிக் கொள்கிறேன்."

"எங்கே?" உத்வேகம் நிரம்பிய குரலில் கேட்டான்.

"உங்க அலுவலகத்திற்கு வருகிறேன்."

திடீரென்று ரேவந்தின் உடலில் ரத்தம் வேகமாக பாய்ந்தது. "நீங்களே வரீங்களா?"

"ஆமாம் நானே சுயமாக வருகிறேன்."

"எப்போ?"

"இப்பொழுதே கிளம்பி வருகிறேன். நீங்க அந்தக் கவரை உங்க ஆபீஸ் வராண்டாவில் விசிட்டர்கள் உட்காரும் இடத்தில் இருக்கும் நாற்காலியின் கீழே போட்டு வையுங்கள். நான் வந்து எடுத்துக் கொள்கிறேன். ஆனால் நீங்க மட்டும் அங்கே ஒளிந்து கொண்டு என்னைத் திருட்டுத் தனமாக பார்க்க முயற்சி செய்யக் கூடாது. இந்த நிபந்தனை உங்களுக்கு சம்மதமா?"

"ஓ.கே. உங்களைப் பார்க்கமாட்டேன். அந்த எல்லையிலேயே இருக்க மாட்டேன். உங்கள் மீது ஆணை."

"நீங்க கீழே இறங்கிவந்து உங்க காருக்கு பக்கத்தில் நில்லுங்க. உங்களை அங்கே பார்த்து உறுதிபடுத்திக் கொண்ட பிறகுதான் நான் விசிட்டர் ஹால் பக்கம் போவேன்."

"அப்படியே செய்கிறேன்." போனை வைத்துவிட்டு லெட்டர் பேட்லிருந்த கடைசி காகிதத்தை எடுத்துக் கொண்டான். ஒன்றுமே எழுதாமல் அதை கவரில் வைத்து ஒட்டினான்.

கவரின் மேல் மட்டும் "நிலாப் பெண்ணே! எத்தனையோ எண்ணங்கள்...எத்தனையோ செய்திகள்... சொல்ல நினைத்தவை மடைதிறந்த வெள்ளமாய் பாய்ந்து

வந்து மூழ்கடித்து விட எஞ்சி நின்றது தூய்மையான சூனியம் மட்டும் தான்...ரேவந்த்" என்று எழுதினான்.

பிறகு இண்டர்காமில் ஜேம்ஸை அழைத்தான்.

"ஜேம்ஸ் ஒரு முக்கியமான வேலையாக உன்னை அழைத்தேன். நீ எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்" என்று நடந்ததை எல்லாம் சொன்னான். "அவள் கொஞ்சம் அவசரப்பட்டு விட்டாள். என்னை அங்கே இருக்கக் கூடாது என்று சொன்னாளே தவிர என் நண்பர்கள் யாருமே அங்கே இருக்கக் கூடாது என்று சத்தியம் வாங்கிக் கொள்ள வில்லை. அதனால் நீ அங்கே மறைவாக இருக்கணும். அந்தப் பெண்ணை இன்னிக்கு எப்படியாவது கண்டு பிடித்து விட வேண்டும்."

ஜேம்ஸ் தலையை அசைத்தான். இருவரும் விசிட்டர்களின் ஹாலுக்குச் சென்றார்கள். ரேவந்த் நாற்காலியின் கீழே கவரை வைத்தான். மாலை ஐந்தடித்து விட்டதால் ஆபீஸ் முழுவதும் ஆளரவமற்று இருந்தது.

"நான் கார் அருகில் போய் நிற்கிறேன்" என்று சொல்லி விட்டு ரேவந்த் கீழே ஓடினான். ஜேம்ஸ் அங்கிருந்த தடுப்புக்குப் பின்னால் மறைவாக நின்றுகொண்டான். ஐந்தரை மணி ஆகி விட்டது போல் கடியாரத்தில் ஒரு தடவை மணி அடித்தது.

விசிட்டர்ஸ் ஹாலில் மறைவாக நின்று கொண்டிருந்த ஜேம்ஸுக்கும் வெளியே கார் அருகில் நின்றிருந்த ரேவந்திற்கும் பதட்டத்தில் வியர்த்துக் கொட்டியது. வந்து நின்ற ஒவ்வொரு காரையும் எட்டி எட்டி பார்த்துக் கொண்டே இருந்தான் ரேவந்த்.

ஐந்து நிமிடங்கள் கழிந்தன.

பத்து நிமிடங்கள்...

ஜேம்ஸ் சலித்துக் கொண்டே வாட்சைப் பார்த்துக் கொண்டான். அந்தப் பெண் தங்களுடைய திட்டத்தைத் தெரிந்துகொண்டுதான் வரவில்லையோ என்னவோ என்ற சந்தேகம் ஏற்பட்டது. அதற்குள் ரேவந்த் சந்தடியின்றி அங்கே வந்து, ஜேம்ஸின் காதருகில் "என்ன? இன்னுமா வரவில்லை?" என்று குசுகுசுத்தான்.

"வரவில்லை" என்றான் ஜேம்ஸ்.

சட்டென்று ரேவந்தின் பார்வை நாற்காலியின் கீழே இருந்த வேறொரு காகிதத்தின் மீது விழுந்தது. முதலில் அதைக் கவனிக்கவில்லை. சட்டென்று ஓடிப்போய் அந்த காகிதத்தை எடுத்துப் பார்த்தான். அந்தப் பெண்ணின் கையெழுத்துதான் அது.

"விசிட்டர்களின் நாற்காலியின் கீழே வேண்டாம். முதலாம் மாடியிலுள்ள தண்ணீர் டாங்கின் அருகில் வையுங்கள்" என்று இருந்தது. அதில் நண்பர்கள் இருவரும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள் "கவரை வைப்பதற்கு முன்னாடி இந்தக் கடிதத்தைப் பார்க்காதது நம் தவறுதான். பாவம் அந்தப் பெண்! அங்கே எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள். ஒன்றுமே தெரியாதது போல் நான் போய் இந்தக் கவரை அங்கே வைத்து விட்டுப் போகிறேன். நீ மறைவாக இருந்து அந்தப் பெண்ணைப் பாரு" என்று முதல் மாடிக்கு ஓடினான்.

தண்ணீர் டாங்கிற்கு அருகில் கவரை வைக்கப் போனபோது அங்கே இன்னொரு சீட்டு தென்பட்டது. "இங்கேயும் வேண்டாம். நாலாவது மாடியில் முதல் ஜன்னலில் வையுங்கள்" என்று இருந்தது. அங்கே போனால் மூன்றாவது மாடி என்று எழுதியிருந்தது.

பத்துநிமிடங்கள் வரையிலும் நண்பர்கள் இருவரும் மனம் தளராத விக்கிரமாதித்தன் போல் ஒரு மாடியிலிருந்து

மற்றொரு மாடிக்கு மூச்சிறைக்க ஓடிக் கொண்டிருந்தார்கள். அரை மணிக்குப் பிறகு கடைசிசீட்டு கிடைத்தது. "ரொம்பவும் கஷ்டப்பட்டு விட்டீர்கள். இனி உங்கள் அறைக்குப் போகலாம்" என்று எழுதியிருந்தது.

ரேவந்த் மனமொடிந்து போனான்.

"ஒருக்கால் நம்ப திட்டத்தைத் தெரிந்து கொண் டிருப்பாளோ என்னவோ" என்றான் ஜேம்ஸ்.

"அப்படி என்றால் அவள் தோற்று விட்டாற் போல் தானே?" என்று தன் அறைக்குள் நுழையப் போனான் ரேவந்த்.

ப்யூன் ஒருவன் ரேவந்தை நோக்கி ஓடிவந்தான். "அம்மா உங்களுக்காக இத்தனை நேரம் காத்திருந்து விட்டு இப்பத்தான் போனாங்க சார்" என்றான்.

ரேவந்த் வியப்போடு "எந்த அம்மா?" என்று கேட்டான்.

"உங்க மாமாவின் மகளாம்"

ரேவந்தும் ஜேம்ஸும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்த ரேவந்த் தன் அறையிலிருந்த குப்பைக் கூடை காலியாக இருப்பதைப் பார் விட்டு ஏதோ புரிந்தாற்போல் அப்படியே நின்று விட்டான்.

வினாடி நேரத்திற்குள் எத்தனையோ எண்ணங்கள்.

மாமாவின் மகள் என்று சொல்லிக் கொண்டு தன் அறைக்குள் நுழைந்து, தான் காதல் கடிதம் எழுதத் தொடங்கி கிழித்துப் போட்ட காகிதங்களையெல்லாம் அள்ளி மூட்டைக் கட்டிக் கொண்டு போயிருக்கிறாள். நேர்த்தியாக நகல் எடுக்கப்பட்ட கடைசி கடிதத்தை விட அதற்குமுன் எழுதி எழுதி கசக்கிப் போட்ட கடிதங்களில் தான் உண்மையான மனதைக் கண்டு பிடிக்க முடியும். அவைதான் உண்மையான

காதல் கடிதங்கள். அவள் அங்கே சாவகாசமாய் அவற்றை பொறுக்கிக் கொண்டிருந்த போது தான் பெரிய துப்பறியும் நிபுணன் போல் வெற்றுக் கவரை எடுத்துக் கொண்டு மாடியெல்லாம் சுற்றி வந்திருக்கிறான்.

முதல் முறையாக காதல் கடிதம் எழுதுபவன் கண்டிப்பாக இருபத்தைந்து கடிதங்களையாவது வீணடிப்பான் என்று தெரிந்துதான் "பரவாயில்லை. மாலை வரையிலும் எழுதுங்கள்" என்று பெருந்தன்மையோடு சொல்லியிருக்கிறாள். தானோ அப்பாவியாய் அந்த வலையில் விழுந்து விட்டான்.

"இடியட்!" என்று தன்னைத் தானே திட்டிக் கொண்டான் ரேவந்த்.

அதுவரை நடந்ததை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ஜேம்ஸ் இனி பயனில்லை என்பது போல் "இந்தப் பெண் யாரோ தெரியவில்லை. நாம் நினைத்ததை விட கெட்டிக் காரியாக இருப்பாள் போலிருக்கு. இந்தப் பெண்ணைப் பற்றிய விவரங்கள், டெலிபோன் நம்பரையும் கண்டுபிடித்துத் தரக் கூடிய ஆள் ஒருவன் இருக்கிறான்" என்றான்.

ரேவந்த் ஆர்வத்துடன் "யாரது?" என்றான்.

"அவன் ஒரு கம்ப்யூட்டர் டெக்னாலஜிஸ்ட். எலெக்ட்ரானிக்ஸ் கிராஜுவேட். அது மட்டுமே இல்லை. கணித மேதையும் கூட. அவனை எனக்குத் தெரியும். இந்த வேலைக்கு அவனை நாளைக்கே ஏற்பாடு செய்வோம்."

"யாரவன்?"

"பண்டிட் பிச்சையா சாஸ்திரி."

* * *

"வணக்கம். யாம் உள்ளே வரலாமா?"

வேலை செய்து கொண்டிருந்த ரேவந்த் நிமிர்ந்து பார்த்தான். கதவுக்கு அருகில் நின்று கொண்டிருந்தவன் நெற்றியில் குங்குமப் பொட்டுடன், தலையில் சின்ன குடுமி, கையில் மஞ்சள் பையுடன் காட்சியளித்தான்.

ஆபீசுக்கு இது போல் ஜோதிடம் சொல்பவர்கள் யாராவது வந்து யாருக்கு எப்போ பதவி உயர்வு கிடைக்குமோ என்றுள சொல்வது வழக்கம் தான். சிலர் கிளிகளையும் கொண்டு வருவது உண்டு.

"யார் நீங்க?" ரேவந்த் கேட்டான்.

"அடியேனை பண்டிட் பிச்சையா சாஸ்திரி என்று அழைப்பார்கள்."

ரேவந்த் அதிர்ச்சி அடைந்தவனாய் அந்த ஆளை ஏறிட்டுப் பார்த்தான். ஜேம்ஸ் சொன்னது போல் இவன் எலெக்ட்ரானிக் கிராஜுவேட், கம்ப்யூடர் டெக்னாலிஜிஸ்ட் இல்லையோ என்ற சந்தேகம் வந்தது.

"நீங்க?" என்றான் தயக்கத்துடன்.

"யாம் கணினி பயிற்சி பெற்று, கணித மேதையாகவும் இருக்கிறோம். ஜேம்ஸ் என்பவர் அழைப்பு விடுத்ததால் இங்கே வந்துள்ளோம். ஆங்கில மொழியில் கல்வியை மேற்கொண்ட போதும், எங்க வம்சத்தின் பெருமைக்குக் குந்தகம் வரக் கூடாது என்று இந்த தோற்றத்தை, மொழியை பின்பற்றி வருகிறோம். என் தந்தை மிகப் பெரிய பண்டிதர். என் தோற்றத்தைக் கண்டு என் திறமையின் மீது சந்தேகம் கொள்ள வேண்டாம். தைரியமாக உங்கள் பிரச்னையை சொல்லாம்."

"நான் ஒரு பெண்ணை காதலிக்கிறேன். அவள் ரொம்ப புத்திசாலி. அவள் வீட்டு தொலைபேசி எண்ணை கண்டு பிடித்துச் சொல்ல வேண்டும்" என்றான் ரேவந்த்.

அதற்குள் போன் ஒலித்தது. ரேவந்தை முந்திக்கொண்டு அவன் போனை எடுத்தான்.

"ஆமாம் பெண்ணே. இது ரேவந்தின் தொலைபேசியே தான். அவனும் இங்கேயே தான் இருக்கிறான். ஆனால் அவன் சார்பில் நான் சில கேள்விகளை கேட்கப் போகிறேன். தயங்காமல் பதில் சொல்லவும்."

அந்தப் பெண் என்ன பேசப் போகிறாளோ என்று ரேவந்த் மூச்சை அடக்கிக் கேட்டுக் கொண்டிருந்தான். அவ்விருவருக்கும் இடையில் சற்று நேரம் உரையாடல் நடந்தது. தன்னை அவளிடம் அறிமுகப்படுத்திக் கொண்டான் பிச்சையா சாஸ்திரி.

"இப்போ என் அபூர்வமான மேதா விலாசத்தைப் பயன்படுத்தி உன் தொலைபேசி எண்ணைக் கண்டுப் பிடித்து விடுகிறேன். இவை கொஞ்சம் கஷ்டமான கேள்விகள். கவனமாக பதில் சொல்லணும். சரியா?"

"சொல்கிறேன்" என்றாள் அவள்.

"ஆள்காட்டி விரலால் உன் தொலை பேசியை சுழற்றும் போது முதல் எண்ணை சுழற்றுவதற்குப் பிடிக்கும் நேரத்தை விட இரண்டாவது எண்ணை சுழற்றுவதற்கு பிடிக்கும் நேரம் எவ்வளவு மடங்கு அதிகம்?"

"இருமடங்கு அதிகம்."

"அப்படி என்றால் உன் உத்தேசம் முதல் எண் ஒன்றானால் இரண்டாவது எண் இரண்டு என்று அர்த்தமா?"

"யானைக்கும் அடிசருக்கும் என்பதை நிரூபித்து விட்டீர்கள். தொலைபேசி இயந்திரத்தில் ஒன்றாம் எண்ணுக்கு பக்கத்திலேயே இரண்டு இருக்கும். கடைசி வரையில் சுழற்றுவதற்கு பிடிக்கும் நேரமும்

அவ்விரண்டிற்கும் ஏறத்தாழ ஒன்றுதான். கொஞ்சம் தான் வித்தியாசம் இருக்கும். இருமடங்கு இருக்காது."

பிச்சையா சாஸ்திரி திடுக்கிட்டு பிறகு சமாளித்துக் கொண்டான். "அபூர்வ மேதா விலாசம் படைத்த எங்களைப் போன்ற மேதாவிகள் இது போன்ற சிறிய விஷயங்களை மறந்து விடுவதில் வியப்பு எதுவும் இல்லை."

"உங்களுக்கு என் போன் நம்பரை கண்டுபிடிக்கணும் என்றால் சிறிய கணக்கு சொல்கிறேன். எழுதிக் கொள்ளுங்கள்" என்றாள்.

பிச்சையா சாஸ்திரி காகிதம், பேனாவை எடுத்துக் கொண்டான்.

அவள் சொன்னாள். "டாஸ்டீடா பை ரூட் ஆஃப் ஒன் ப்ளஸ் டான் ஸ்கொயர் டீடா."

பிச்சையா சாஸ்திரி கலவரமடைந்து "இன்னொரு தடவை சொல்லு பெண்ணே" என்றான்.

அவள் மறுபடியும் சொன்னாள். டீடா எப்படி கண்டுபிடிக்க வேண்டும் என்றும் சொன்னாள்.

பிச்சையா சாஸ்திரி அவளுடன் பேசி முடித்து விட்டு ரேவந்த் பக்கம் திரும்பி "தெரிந்து விட்டது" என்றான்.

ரேவந்த் எரிச்சலுடன் "என்ன தெரிந்தது?" என்று கேட்டான்.

"காதலனே! அந்தப் பெண்ணின் தொலைபேசி எண்ணை கண்டுபிடிக்க வேண்டுமென்றால் நீ பெரிய கடைவீதி நாற்சந்தில் இருக்கும் நேரு சிலையிடம் போக வேண்டும்."

"போய் என்ன செய்ய வேண்டும்?"

"புறாவை பறக்க விட்டுக் கொண்டிருக்கும் நேருவின் வலது கையானது அவருடைய உடலிலிருந்து எத்தனை கோணத்தில் இருக்கிறதென்று கண்டுபிடிக்கணும்."

"கிழிந்தாற்போல் தான்."

"அந்தக் காலத்து ராஜகுமாரர்கள் காதலுக்காக ஏழு கடல்களையும் தாண்டுவார்களாம். இது கூட உன்னால் முடியாதா?"

ரேவந்த் யோசனையில் ஆழ்ந்தான்.

ஜேம்ஸ் ஊக்குவிப்பது போல் பார்த்தான். ரேவந்த் கொஞ்சம் தயங்கி விட்டு "சரி" என்றான்.

☆ ☆ ☆

**அ**ன்று இரவு பதினோறு மணிக்கு அவனும் ஜேம்ஸும் கருப்பு உடை அணிந்துகொண்டு நேரு சிலை அருகில் போய்ச் சேர்ந்தார்கள்.

நினைத்த அளவுக்கு எளிதாக அந்த வேலை முடிந்து விட வில்லை. டேப்பைப் பிடித்து அளந்துகொண்டிருந்த போது பீட் கான்ஸ்டேபிள் பிடித்துக் கொண்டான். தாங்கள் அரபு ஷேக்குகள் இல்லை என்றும் சிற்பங்களை கள்ளக் கடத்தல் செய்யும் கும்பலைச் சேர்ந்தவர்கள் இல்லை என்றும் எவ்வளவு சொன்னாலும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. சர்வே இலாக்காவைச் சேர்ந்தவர்கள் என்றும் சொல்லிப் பார்த்தார்கள். ஆனால் நள்ளிரவு நேரத்தில் அந்த இலாக்காவினர் எதற்காக வேலை செய்கிறார்கள் என்று எதிர்க் கேள்வியைத் தொடுத்தான் பீட் கானிஸ்டேபிள். கொஞ்சம் புத்திசாலியாக தென்பட்டான் அவன். தவறிப் போய் போலீஸ் இலாக்காவிற்கு வந்து விட்டான் போலிருந்தது. அவன் கையில் பத்து ரூபாயை அழுத்திவிட்டு தப்பித்துக் கொண்டு வருவதற்குள் போதும் போதும்

என்றாகிவிட்டது. இறுதியில் அந்த கோணம் எவ்வளவு என்று கண்டுபிடித்து இரவோடு இரவாய் பிச்சையா சாஸ்திரியின் வீட்டிற்குக் கிளம்பினார்கள்.

இரவெல்லாம் உறக்கம் இல்லாதது போல் பிச்சையா சாஸ்திரியின் கண்கள் சிவந்திருந்தன. சுற்றிலும் காகிதங்கள் சிதறிக் கிடந்தன. அவற்றில் கணக்குகள் போடப்பட்டிருந்தன. ஒயர்களும், எலெக்ட்ரானிக் சாதனங்களும், கால்குலேட்டர் களும் இறைந்து கிடந்தன. நேற்று அந்தப் பெண் சொன்னதை வைத்துக் கொண்டு இவ்வளவு கணக்குகளை போட்டிருப்பான் போலும் என்று ரேவந்த் நினைத்துக் கொண்டான்.

“நேருவின் கை எண்பத்தெட்டு டிகிரி கோணத்தில் உயரே எழும்பியிருக்கிறது. இதை வைத்துக் கொண்டு என்ன கண்டுபிடிக்க முடியும்?” ரேவந்த் கேட்டான்.

பிச்சையா சாஸ்திரி காகிதத்தில் மீது கணக்கைப் போட்டான். ‘டான் டீடா பை ரூட் ஆஃப் நன் ப்ளஸ் டான் ஸ்கொயர் டீடா.’

சிறிய கணக்கை இவ்வளவு போட்டுக் குழப்புவதைப் பார்த்து ரேவந்த் வியந்தான்.

மேலும் சில எண்களை கூட்டினான் பிச்சையா சாஸ்திரி. சிலவற்றை கால்க்குலேட்டரில் பெருக்கினான். கழித்தான். சற்று நேரம் கண்களை மூடி யோசித்தான். பிறகு கண்களைத் திறந்து “தெரிந்து விட்டது” என்றான்.

“என்ன தெரிந்தது?”

“ரேவந்த் காதலியின் தொலைபேசி எண்.”

நண்பர்கள் இருவரும் பரபரப்புடன் “என்ன நம்பர்?” என்று கேட்டார்கள்.

ரேவந்தின் கைகள் உணர்ச்சிவேகத்தில் நடுங்கிக் கொண்டிருந்தன.

"இளைஞனே! உன் காதலியின் தொலைபேசி எண் **76346.**"

திடீரென்று காற்றுப் போன பலூனைப் போல் ரேவந்தின் உற்சாகம் தணிந்து விட்டது.

"இது முட்டாள் தனம்!" என்று கத்தி விட்டான்.

பிச்சையா சாஸ்திரி கோபமாக "இது தவறாக இருக்க வழியே இல்லை" என்றான்.

"நீங்க எங்கேயோ தவறு செய்து விட்டீங்க."

"மூடனே! என் மேதா விலாசத்தையும், என் கால்குலேட்டரின் பயிற்சியையும், எலெக்டானிக் துறையில் விஞ்ஞானிகள் சந்தித்த முன்னேற்றத்தை... இவற்றை யெல்லாம் பரிகாசம் செய்யும் அளவுக்கு துணிந்து விட்டாயா?" ஆங்கில மொழியில் கடிந்து கொண்டான்.

ரேவந்த் பணிவோடு "அதைப் பற்றியெல்லாம் எனக்குத் தெரியாது. இந்த நம்பர் மட்டும் இல்லை. இருக்கவும் முடியாது."

"அத்தனை உறுதியாய் எப்படிச் சொல்கிறாய்?"

"இது என்னுடைய நம்பர் என்பதால்."

# 16

அன்பார்ந்த உங்களுக்கு,

நலம்தானா?

சில விஷயங்களை தவிர்க்க நினைத்தாலும் நம்மை துரத்திக் கொண்டே இருக்கும். அது போன்றுதான் உங்களுடைய நினைவுகள். அவற்றிலிருந்து தப்பிக்க முயற்சி செய்தும் பலன் இல்லாமல் முயற்சியை கை விட்டேன்.

நேற்றிரவு கார் கண்ணாடியை மேலே உயர்த்தி, உள்ளே உட்கார்ந்தபடி நேரு சிலை அருகில் இரண்டு இளைஞர்கள் கான்ஸ்டெபிளுடன் வாதாடிக் கொண்டிருந்ததை பார்க்க நேர்ந்தது வித்தியாசமான அனுபவம். ஏதோ ஆங்கிலப் படத்தில் நகைச்சுவை காட்சியைப் பார்ப்பது போல் இருந்தது.

நீங்க கசக்கி எறிந்த கடிதங்களை எல்லாம் படித்தேன். ஒவ்வொரு வாக்கியமும் எவ்வளவு நன்றாக இருந்தது தெரியுமா? எப்படி விளிப்பது என்று புரியாமல் பத்து தாள்களுக்கு மேல் வீணாக்கியிருக்கிறீர்கள்.

உங்கள் கடிதங்களில் இருந்த ஒரு வாக்கியம் எனக்கு ரொம்பப் பிடித்திருந்தது.

"என் இந்த உணர்வுகளை உன்னிடம் சொல்வதை விட எனக்குள்ளேயே மறைத்து வைத்துக் கொண்டால் அது என் மனதில் அடிவாரத்தில் புதையுண்டு போய் எனக்கு அதிக மகிழ்ச்சியைத் தரும்.

சொல்வதை விட சொல்லாயல் இருப்பதில்தான் மகிழ்ச்சி அதிகமாக இருகிறது சரிதானே" என்ற வாக்கியம்தான்.

என் கணிப்பு என்றுமே தவறியதில்லை. வெளியில் ரொம்ப மெடீரியலிஸ்டாக தென்படும் நீங்க உள்ளூர மிகவும் மென்மையான உணர்வுகளை கொண்டவர். அப்படித்தானே.

போன வாரம் அப்பா என் பிறந்த நாளுக்கு ஏதாவது வாங்கிக் கொள்ளச் சொல்லி கொடுத்த பணத்தில் ஸ்மக்லிங் போன் கருவிகளை வாங்கியதை வீட்டில் சொல்லவில்லை. பணத்தை அலட்சியமாக செலவழிப்பதாக அம்மா என்னைக் கடிந்து கொண்டாள். வர வர ரொம்ப குறும்புத் தனமாய் நடந்துகொள்கிறேன் என்று குற்றப் பத்திரிகை வேறு வாசித்தாள்.

குறும்புத்தனம் என்றதும் நினைவுக்கு வருகிறது. முந்தாநாள் உங்கள் ஆபீசுக்கு எதிரே இருக்கும் பிளாட் (நம்பரை சொல்லமாட்டேன்) ஜன்னல் வழியாக உங்கள் அறையை பைனாகுலர் மூலமாய் நானும் என் சினேகிதியும் ஒரு மணி நேரம் வாதவிவாதம் செய்துகொண்டே பார்த்தோம். விஷயம் என்னன்னு கேட்கிறீங்களா? அடிக்கடி நீங்க கிராப்பை சரி செய்து கொள்வது வலது கையால் என்று நானும், இல்லை இடது கையால் என்று என் சினேகிதியும் வாதம் புரிந்தோம். நீங்க யார் பக்கம்? (கோபம் வந்தால் ஏற்கனவே சிரிக்கலாமா வேண்டாமா என்றிருக்கும் உங்கள் முகம் மேலும் அழகாக தென்படும் என்பது உண்மை.) என் சினேகிதி சொல்கிறாள், உங்கள் நெற்றி விசாலமாக காவேரி படுகையைப் போல இருக்கிறதாம். நல்ல வேளை. கொள்ளிடத்தைப் போன்ற வாய் என்று சொல்லாமல் விட்டாள். இன்னொரு தடவை இந்த மாதிரி கமெண்ட் செய்தால் கொன்றுவிடுவேன் என்று எச்சரித்தேன்.

இனி என் தினசரி நிகழ்ச்சிக்கு வருவோம். இரண்டு நாட்களாய் அம்மா ஊரில் இல்லை. வீட்டில் நான் தான் சமையல். வீட்டின் நிர்வாகமும் என் கையில்தான். பெரிய

துணையாக பாட்டி இருக்கிறாள். பாட்டியிடம் பேசும் போது 'கடவுளே! காப்பாற்று' என்று ஓடிவிடத் தோன்றும். எப்போதும் கல்யாணம், குடுத்தனம் இதைப் பற்றிய பேச்சுதான். எங்கள் வீட்டு நவீனச் சூழலில் கொஞ்சமாவது தமிழ் பண்பாட்டை நினைவுப்படுத்துவது பாட்டிதான்.

ரேவந்த்...

நான் உங்களிடம் ரொம்பவும் உரிமையோடு பழகுகிறேனா? அன்று உங்களுக்கு 'இருட்டில் தந்த முத்தம்' கதையைச் சொன்ன பிறகு அப்படித்தான் எனக்குத் தோன்றியது. எங்கேயோ படித்தேன் "பெண்ணுக்கு தன்னை ஏதாவது செய்துவிடுவார்களோ என்ற பயம் செய்ய வேண்டும் என்ற குதூகலம் இரண்டுமே இருக்குமாம்." இது எந்த அளவுக்கு உண்மை என்று எனக்குத் தெரியாது. ஆனால் உங்களிடம் மட்டும் சிறகை விரித்துக் கொண்டு பறவையைப் போல் பறக்கத் தோன்றும். நம் நட்பு நினைவுக்கு வந்தால் குயில் பாட்டை கேட்பது போலிருக்கும்.

அன்று டாக்ஸியை விட்டிறங்கி டைப் இன்ஸ்டிட்யூடிற் குள் நுழைந்து மறைவாக நின்றுகொண்டேன். தொலைவில் எனக்காக நீங்கள் விசாரித்துக் கொண்டு இருந்ததை பார்த்ததும் ஓட்டமாக ஓடிவந்து உங்களைச் சந்திக்க வேண்டும் என்ற தவிப்பு ஏற்பட்டது. அரும்பாடுபட்டு அடக்கிக் கொண்டேன். ஏனோ தெரியவில்லை. கண்களில் துளிர்த்த கண்ணீர் கீன்னங்களில் வழிந்ததாக நினைவு.

எனக்குத் தோன்றுகிறது. நாள் ஒன்றுக்கு இருபத்தி நான்கு மணி நேரங்களை மட்டுமே வைத்திருக்கும் கடவுள் எவ்வளவு சுயநலவாதி என்று. இலக்கியம், கவிதை, ஓவியம், இசை... தென்னங்கீற்றின் சலசலப்பு...இத்தனை சிறிய வாழ்க்கையில் நம்மால் எந்த அளவுக்கு ரசிக்க முடியும்? ஒவ்வொரு துறையும் கடல் போன்றது. கொஞ்சம்

அனுபவிப்பதற்குள் வாழ்க்கையின் பெரும் பகுதி முடிந்து விடுகிறது. உண்மையில் கடவுள் பெரிய சாடிஸ்ட் தானே.

ரேவந்த்! இது மூன்றாவது கடிதம். நான்காவதும் கடைசியானதும் ஆன கடிதத்தை இரண்டு மூன்று நாட்களில் எழுதுகிறேன். நீங்கள் எழுதி என்னிடம் தர வெட்கப்பட்டுக் கொண்டு குப்பைக் கூடையில் போட்ட கடிதங்களிலிருந்து ஒரு வரியை இங்கே குறிப்பிட்டு இந்த கடிதத்தை முடிக்கிறேன்.

"நீங்க உண்மையிலேயே என்னை இந்த அளவுக்கு காதலிக்கிறீங்களா என்ற சந்தேகம் எனக்கு வருகிறது. என் எண்ணம் என்னவென்றால் ஒரு நபரை காதலிப்பதை விட காதலிக்கிறோம் என்ற உணர்வை அதிகமாக நேசிக்கறீங்க என்று. உண்மைதானா?"

படிக்கப் படிக்க எத்தனையோ அர்த்தங்களை உணர்த்தும் இந்த வரிகளை எத்தனை முறை படித்தேன் தெரியுமா? மனதில் இருக்கும் உணர்வுகளை அதிகமாக வெளிப்படுத்தாத உங்கள் சுபாவம் என்னை மிகவும் கவர்ந்தது. எப்போதும் மௌனமாக, கம்பீரமாக இருப்பவர்கள் எல்லோருமே புத்திசாலிகள் இல்லை. ஆனால் புத்திசாலிகள் எல்லோரும் பேச்சை அளந்து பேசுபவர்கள் தான்.

எங்கே அன்பு இருக்கோ அங்கே சந்தேகம் இருக்குமாம். உங்களுக்கு என் மீது சந்தேகம் வந்திருக்கிறது என்றால் அன்பு இருப்பதாகத்தானே அர்த்தம்.

ஏராளமான அன்புடன்

ரம்யா.

குறிப்பு : நீங்க இன்னும் என் முழுப் பெயரைக் கண்டு பிடிக்கவில்லை.

☆ ☆ ☆

அங்கே மக்கள் கும்பல் அதிகமாக இல்லை. ஆனால் இருந்தவர்கள் எல்லோரும் பரபரப்பாக இருந்தார்கள்.

ஜேம்ஸ் சூட் அணிந்திருந்தான். சுலோசனாவுக்கு கல்யாணக்களை வந்துவிட்டது. பட்டுப் புடவை அணிந்திருந்தாள். விரலில் ஜேம்ஸ் பரிசளித்த மோதிரம் இருந்தது.

பெனின்சுலா பிராடக்ட்ஸ் ஊழியர்களும், டெலிபோன் எக்ஸ்சேஞ்சில் பணி புரியும் பெண்கள் சிலரும் அங்கே இருந்தார்கள். திருமணம் முடிந்து ஒரு மணி நேரம் ஆகி விட்டது. பஃபே முறையில் பார்ட்டி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

எல்லோரும் கும்பலாக பேசிக்கொண்டே சாப்பிட்டுக் கொண்டிருந்ருந்தார்கள். ரேவந்த் மட்டும் தனியாக சற்று தொலைவில் பால்கனி சுவற்றில் சாய்ந்த நிலையில் கையில் தட்டைப் பிடித்துக் கொண்டு மௌனமாக சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

"என்ன இங்கே தனியாக நிற்கறீங்க?" என்று கேட்டுக் கொண்டே சுலோசனா அங்கே வந்தாள்.

ரேவந்த் முறுவலித்து விட்டு பேசாமல் இருந்தான். இருவருக்குமிடையே கொஞ்ச நேரம் மௌனம் நிலவியது. அந்த மௌனத்தை கலைப்பது போல் அவள் கேட்டாள்.

"ஜேம்ஸ் உங்களுக்கு எவ்வளவு நாளாகத் தெரியும்?"

"சுமார் பத்து வருஷமாய்."

மறுபடியும் நிசப்தம். அந்த நிசப்தத்தில் தடுமாற்றம், தர்ம சங்கடமான அவஸ்தை இருந்தது புரிந்தது. தொலைவிலிருந்த மக்களைப் பார்த்துக் கொண்டே அவள் கேட்டாள்.

"எங்கள் வாழ்க்கை எப்படி இருக்கப் போகிறது?"

திடீரென்று அவளிடமிருந்து இந்த கேள்வியை எதிர்பார்க்காததால் அதன் தாக்குதலில் ஒருவினாடி தடுமாறினான். தலையை உயர்த்தி அவளைப் பார்த்தான். அவன் முகத்தில் புதிதாக வந்து சேர்ந்த கல்யாணக் களையுடன் எதிர்கலத்தைப் பற்றிய கவலையும் சேர்ந்திருந்தது.

"திடீரென்று இதெல்லாம் நடந்து முடிந்து விட்டது. நினைத்துப் பார்க்கும் போது கனவா இல்லை நினைவா என்று புரியவில்லை." சுலோசனா சொன்னாள்.

அவனுக்குப் புரிந்து விட்டது. லேசாக முறுவலித்துக் கொண்டே சொன்னான். "உள்ளத்தில் ஒன்றை வைத்துக் கொண்டு வெளியில் நாசூக்காக, செயற்கையாக பேசும் பலரை விட ஜேம்ஸ் ரொம்ப நல்லவன். மனதிலிருப்பதை எந்த விதமான ஹிபோகிரஸீ இல்லாமல் சொல்லுவான். அதனால் தான் அவன் பேச்சு கடுமையாகவும், எண்ணங்கள் அபாயகரமானதாகவும் தோன்றுகின்றன. அவற்றை மூடிமறைத்துக் கொள்ளத் தெரியாது அவனுக்கு. சொல்லும் செயலும் ஒன்றாக இருப்பது ரொம்ப அபூர்வம் இந்தக் காலத்தில்."

"அவர் ரொம்ப ஃப்ரீயாக செக்ஸைப் பற்றியும், ஆண் பெண் உறவுகளைப் பற்றியும் பேசுவது எனக்கு பயமாக இருக்கிறது. எங்கள் திருமண வாழ்க்கையில் இதனுடைய பாதிப்பு எப்படி இருக்குமோ என்று அஞ்சுகிறேன்."

"அவன் வளர்ந்த சூழ்நிலை அப்படிப்பட்டது. ஒரு மனிதனின் மேல் அவனைச் சுற்றியுள்ள சூழ்நிலையின் பாதிப்பு அதிகமாகவே இருக்கும். அவற்றிலிருந்து மீண்டு வெளியே வந்து சரியான தனித்தன்மையை வளர்த்துக் கொள்ள அவனுக்குக் கொஞ்ச நாள் தேவைப்படலாம்.. சிலரால் ரொம்ப சீக்கிரமாகவே இந்த மாறுதலை ஏற்படுத்திக் கொள்ள முடியும். பெரும்பாலானவர்களால்

வாழ்நாள் முழுவதுமே இதை அடையமுடியாமல் போகலாம். இந்த இவல்யூஷன் பற்றி தாமஸ் ஹாரின் என்ற மனவியல் நிபுணர் விளக்கமாக எழுதியிருக்கிறார். முடிந்தால் "பார்ன் டு வின்" என்ற புத்தகத்தை படித்துப் பாருங்க. ஜேம்ஸ் மனதை புரிந்துகொள்ள உதவியாக இருக்கும். ஜேம்ஸ் இன்னும் குழந்தைப் பருவத்து மனோநிலையிலேயே இருக்கிறான். அவனை அடல்ட் நிலைக்குக் கொண்டு வருவதற்காக நீங்க தான் தாயாக மாற வேண்டும். ஆணின் வாழ்க்கைக்கு இது போன்ற பற்றுகோலை ஏற்படுத்து வதற்காகத்தான் கடவுள் பெண்ணை படைத்திருப்பார் போலும். தான் யாரென்று தெரிவிக்காமலேயே பாதிப்பை ஏற்படுத்தி என்னை இந்த அளவுக்கு மாற்றிய நிலாப் பெண்தான் இதற்கு உதாரணம்."

ஏனோ தெரியவில்லை. நிலாப் பெண்ணைப் பற்றிய பேச்சு வந்ததும் சுலோசனாவின் இதழ்களில் குறுநகை படர்ந்தது.

# 17

**அ**றை முழுவதும் மல்லிகை மலர்களின் நறுமணம் பரவியிருந்தது. வெண்மை நிறத்தில் படுக்கை விரிப்பு அந்த அறைக்கு புதிய அழகை சேர்த்தது. அறை ரொம்ப துப்புரவாக இருந்தது. கிடார் பரண் மீதும், டிராயிங் ஸ்டாண்டு கட்டிலுக்கு அடியிலும் தஞ்சம் புகுந்து கொண்டன.

இரவு பத்து மணி

சுலோசனாவும், ஜேம்ஸூம் கட்டில் மீது அமர்ந்திருந்தார் கள். கடந்த அரைமணி நேரமாக அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். வரும் சம்பளத்தைப் பற்றியும், குழந்தைகள் எப்போது வேண்டும் என்பது பற்றியும், புகைப்பிடிப்பது பற்றி அவள் அபிப்பிராயம்... இவற்றை எல்லாம் அவன் கேட்க கேட்க அவளுக்கு ஏமாற்றமாக இருந்தது.

முதலிரவில் பேசும் பேச்சா இது என்றெண்ணிக் கொண்டாள்.

கடியாரத்தில் பதினோரு மணி அடித்தது.

அவன் அவளை அருகில் இழுத்துக் கொண்டான். அவன் கழுத்தின் வளைவில் அவள் முகத்தை புதைத்துக் கொண்டாள்.

அவளுடைய அமைதியைச் சிதறடித்துக் கொண்டே அவன் கேட்டான்.

“ஆர் யூ குட் இன் பெட்?”

கேள்வியின் பொருள் விளங்கியதும் அவள் இளம்தளிறாய் நடுநடுங்கியவள், உடனே சமாளித்துக் கொண்டாள்.

"ஐயாம் நாட் ஓ.கே. யூ. ஆர் நாட் ஓ.கே." என்ற ஜேம்ஸின் மனநிலையை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.

எந்தப் பெண்ணாக இருந்தாலும் முதலில் காதலைத் தான் பகிர்ந்துகொள்ள விரும்புவாள். பிறகு அந்த அன்பையும், காதலையும் வெளிப்படுத்துவதற்காக படுக்கையை பகிர்ந்துகொள்ள நினைப்பாள். ஆனால் காதலின் சுவையே அறிந்திருந்த பெண்ணுக்கு கட்டிலைப் பற்றி என்ன தெரியும்?

அவன் அந்த வாதத்தைக் கேட்டதும் வியப்படைந் தவனாய் "அப்படியானால் உன்னைப் பற்றி நான் எண்ணியிருந்தது தவறு" என்றான்.

"என்ன நினைத்தீங்க என்னைப் பற்றி? நிறைய பேருடன் பழகுபவள் என்று நினைத்தீங்களா? அப்படி நினைத்த பிறகும் என்னைத் திருமணம் செய்து கொண்டீங்களா?"

அவன் ரொம்ப சாதாரணமாக குரலில் "பெண் என்பவள் எனக்கு புதிது இல்லை. அப்படி இருக்கும் போது என் மனைவி புத்தம்புது மலராக இருக்க வேண்டும் என்று கேட்கும் உரிமை எனக்கு இல்லை. இந்தக் காதல் இதெல்லாம் ட்ராஷ் என்று என் அபிப்பிராயம். ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளாமல் மணிக் கணக்காக போனில் பேசிக் கொண்டு பாசம் நேசம் என்று காதலை வளர்த்துகொள்ளும் எங்க ரேவந்த், அந்த நிலாப் பெண்ணை நினைத்தாலே எனக்கு சிரிப்புதான் வரும்."

"அப்படிப் பேசிக் கொள்வதில் எதுவும் இல்லை என்று சொல்றீங்களா?"

"ஆமாம்."

அவள் நிம்மதியாக மூச்சை விட்டுக் கொண்டாள். "நல்ல வேளை. நான் பிழைத்தேன்."

"ஏன்?"

"அந்த நிலாப் பெண் நான்தான் என்பதால்" என்றாள் ராஜ சுலோசனா.

ஜேம்ஸுக்கு ஒரு நிமிடம் அவள் சொன்னது புரியவில்லை. புரிந்த பிறகும் குழப்பத்துடனே இருந்தான். அந்த உண்மையை ஜீரணித்துக் கொள்ள முடியாமல் தடுமாற்றத்துடன் "என்ன?" என்றான். அவன் மூளை செயல்பட மறுத்தது. குரல் கம்மி விட்டது.

சுலோசனா இயல்பான குரலில் "உங்க நண்பன் ரேவந்திற்கு தினமும் போன் செய்வது நான் தான். முதலில் ஏதோ ஒரு ஜாலிக்காக போன் செய்தேன். நாம் இப்படி திருமணம் செய்து கொள்வோம் என்று நினைக்கவில்லை' என்றாள்.

அதற்குள் அவன் கட்டிலில் நிமிர்ந்து நேராக உட்கார்ந் தான். எப்போதும் இல்லாத விதமாக அவன் முகத்தில் உத்வேகம் வெளிப்படையாக தென்பட்டது. "மைகாட் ரேவந்த் உன்னை உயிருக்கும் மேலாக காதலிக்கிறானே' என்றான்.

"ஒரு முறை கூட கண்ணால் பார்க்காத பெண்ணை உயிருக்கும் மேலாக காதலிக்க முடியும் என்று நான் நினைக்க வில்லை."

"உனக்கு அவனைப் பற்றித் தெரியாது. நீ எவ்வளவு பெரிய தவறை செய்து விட்டாயோ உனக்குத் தெரியாது."

அவள் பதில் சொல்லவில்லை. சற்று நேரம் நிசப்தமாக இருந்துவிட்டு மறுபடியும் அவனே சொன்னான்.

"அப்போ ஆக்ஸ்ஃபோர்டில் படித்ததாகச் சொன்னது?"

"எல்லாமே பொய், "சுலோசனா சிரித்தாள். ஜேம்ஸ் சிரிக்க வில்லை. அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். ஏதோ சொல்ல நினைத்தான். ஆனால் வாயிலிருந்து வார்த்தை வெளியில் வரவில்லை. அவனுடைய போக்கு அவளுக்கு வியப்பை அளித்தது. "ஏன்? என்னவோ போல் இருக்கீங்களே?" என்று கேட்டாள்.

யோசனையிலிருந்து மீண்டவனாய் "ஒன்றுமில்லை" என்றான். மறுபடியும் ஏதோ சொல்ல நினைத்து அந்த எண்ணத்தை கை விட்டான். சிகரெட் பற்றவைத்துக் கொண்டு தனக்குத்தானே பேசிக்கொள்வது போல் "இந்த அடியை அவனால் தாங்க முடியாது" என்றான்.

சுலோசனா கனிவுடன் "இத்தனை சிறிய விஷயத்திற்கு நீங்க இவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. நண்பனின் மனைவி என்று தெரிந்த பிறகும் அவன் தன்னுடைய காதலைத் தொடருவான் என்று நான் நினைக்கவில்லை" என்றாள்.

"தொடருவதா? நான்சென்ஸ்! என் மனைவி என்று தெரிந்த பிறகு இனி அவன் இந்தப் பக்கம் ஏறெடுத்துக் கூட பார்க்க மாட்டான்."

"அப்பொ பிரச்னையே இல்லையே?"

"நான் சொல்லவந்தது அவனைப்பற்றி."

"அதற்கென்ன வந்தது? நான்தான் நிலாப்பெண் என்று அவனிடம் சொல்ல வேண்டிய அவசியம்தான் என்ன? சில நாட்கள் போன் வரவில்லை என்றால் அவனே மெள்ள மெள்ளமாய் இந்த விஷயத்தை மறந்து போய் விடுவான். நீங்க சொன்னது போல் இந்த காதல் கீதல் எல்லாம் வெறும் ட்ராஷ்தானே."

ஜேம்ஸ் சலிப்புடன் மனைவியைப் பார்த்துவிட்டு ஜன்னல் அருகில் சென்று வெளியில் பார்த்துக் கொண்டிருந்தான்.

"எப்படி? இப்போ என்ன செய்வது?" என்று அவன் முணுமுணுப்பது அவள் காதில் விழுந்தது.

அவள் எழுந்து அவன் அருகில் சென்றாள். சற்று நேரம் தயங்கிவிட்டு பிறகு தாழ்ந்த குரலில் சொன்னாள். "போகட்டுமே. நான் அதைத் தொடருகிறேன்."

குண்டு அடிபட்டவன் போல் விருட்டென்று திரும்பினான். "என்ன?" என்றான் புரியாமல்.

"நான் நிலாப் பெண்ணாக அவனுடன் போனில் பேசுவதை தொடருகிறேன். பார்த்தால் அடையாளம் தெரிந்து விடும் என்பதால் சந்திப்பதை ஏதோ விதமாக தவிர்த்துக் கொண்டே வருவேன். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக இந்த அறிமுகத்தை குறைத்துக் கொள்வேன். அவனும் மறந்து விடுவான்."

ஜேம்ஸ் கையிலிருந்த சிகரெட்டை கடைசி இழுப்பு இழுத்து தொலைவில் வீசினான். யோசித்தவாறு தாடியை தடவிக் கொண்டே "எல்லாவற்றையும் விட இந்த யோசனை கொஞ்சம் தேவலை போலிருக்கு" என்று சொல்லி விட்டு வந்து கட்டிலில் அமர்ந்து கொண்டான்.

அவளும் வந்த அமர்ந்தாள். "என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். முதலில் உங்களிடம் இதையெல்லாம் சொல்ல வேண்டாம் என்று தான் இருந்தேன். ஆனால் உங்களுக்கு ஃபிராங்க்னெஸ் பிடிக்கும் என்று தெரிந்ததால் சொல்லி விட்டேன்" என்றாள்.

"இல்லை. இல்லை. சொன்னதே நல்லதாகி விட்டது." அவள் கை மீது கையை பதித்துக் கொண்டே சொன்னான்.

அவனுடைய தோளில் தலையை சாய்த்துக் கொண்டு மெதுவாக உறக்கத்தில் ஆழ்ந்து விட்டாள். அவன் கையை நீட்டி விளக்கை அணைத்தான். அறையில் இருள் சூழ்ந்து கொண்டது. விடிவிளக்காய் இருளை விரட்டியடிக்க முடியவில்லை.

இரவு பதினோரு மணியைத் தாண்டி விட்டதால் ஊர் முழுவதும் நிசப்பத்தில் தோய்ந்து கிடந்தது. எங்கேயோ ஒரு நாய் மட்டும் நடுநடுவில் ஊளையிட்டுக் கொண்டிருந்தது.

ஜேம்ஸ் தலையைத் திருப்பி சுவற்றுப்பக்கம் பார்த்தான். கிடார் தென்பட்டது. அலமாரியில் இண்டியன் இங்க் பாட்டில் கண்ணில் பட்டது. அந்த இரண்டு தான் இது நாள் வரையில் தன்னுடைய தோழர்கள். தன் வேதனையை, மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்ட நண்பர்கள்.

தலையைத் திருப்பி மனைவியின் பக்கம் பார்த்தான். சுலோசனா உறங்கிக் கொண்டிருந்தாள். மேற்கூரையை நோக்கினான். விட்டில் பூச்சி ஒன்று விடிவிளக்கைச் சுற்றி சுற்றி வந்துகொண்டிருந்தது. அவனுக்கு ஏனோ தன்னைச் சுற்றியிருக்கும் உலகம் முழுவதும் சந்தோஷமாக இருப்பது போலவும் தான் ஒருத்தன் மட்டுமே வேதனையோடு இருப்பது போலவும் தோன்றியது. எல்லோருமாக சேர்ந்து தன்னை ஏமாற்றிவிட்டது போன்ற உணர்வு. போன் வந்ததும் ரேவந்த் முகத்தில் தென்படும் சந்தோஷமும், மணிக்கணக்காக பேசுவதும், தானும் நடுவில் ஒருமுறை பேசிவிட்டு 'சிஸ்டர்' என்று சொன்னதும்...

அப்பொழுதுதான் அவனுக்கு அந்தச் சந்தேகம் தோன்றியது. அன்று தன்னோடு பேசிய அந்தப் பெண்ணின் குரலுக்கும் சுலோசனாவின் குரலுக்கும் வித்தியாசம் இருப்பது போல்...

அந்த சந்தேகம் ஏற்பட்டதும் மகிழ்ச்சியாக உணர்ந்தான். ஆனால் அதற்குள் மற்றொரு எண்ணம். ஒருக்கால் இரண்டு குரல்களுமே ஒன்றாக இருந்தால் அதனால் வந்த நஷ்டம் என்ன? தான் இதுபோன்ற விஷயங்களுக்கு முக்கியத்துவம் தரப்போவதில்லையே. ஆண் பெண் சேர்ந்து வாழ்வது வெறும் உடல் தேவைகளை தீர்த்துக் கொள்வதற்காக மட்டும் தானே. தன்னுடைய தியரியின் படி காதல் என்பது வெறும் பிரமை. அந்த கொள்கையின் படி சுலோசனா...தன் மனைவி தனக்கு எந்த அளவுக்கு மகிழ்ச்சியைத் தருகிறாள் என்பது தானே தனக்கு வேண்டியது? அவளுடைய கடந்தகால வாழ்க்கையும் நிகழ்கால சம்பவங்களும் இதெல்லாம் எதற்கு?

அவன் திரும்பிப் பார்த்தான். ஒருக்களித்துப் படுத்திருந்த சுலோசனாவின் இடை மீது வெளிச்சம் பட்டு மின்னிக் கொண்டிருந்தது. இந்த இடையின் மீது முதல் முறையாக எந்த ஆணின் கைகள் படிந்தனவோ?

அவன் சங்கடத்தில் தெளிந்தான். தன்னுடைய உடைமையை யாரோ அபகரித்துக் கொண்டு போவது போன்ற உணர்வு. தூய்மையாக இருந்த ஓவியத்தை யாரோ பாழடித்துவிட்டாற் போன்ற பாவனை.

புரண்டு படுத்தவன் எழுந்து ஜன்னல் அருகில் சென்று மற்றொரு சிகரெட்டை பற்றவைத்துக் கொண்டான். அந்த ஓசைக்கு விழித்துக் கொண்ட சுலோசனா இரவு வெகு நேரமாகியும் அவன் விழித்துக் கொண்டிருந்ததை உணர்ந்து வியப்புடன் எழுந்து உட்கார்ந்து கொண்டாள். "இன்னுமா நீங்க தூங்கவில்லை?"

அவன் மெதுவாக திரும்பி மனைவியை கண் இமைக்காமல் பார்த்து விட்டு வந்து அவளருகில் உட்கார்ந்து கொண்டான்.

"என்னால் இந்த உண்மையை ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை" என்றான்.

"எந்த உண்மையை?"

"ரேவந்திற்கு போன் பண்ணியதை."

அவள் உடனே பதில் சொல்லவில்லை. அறையில் இருந்த நிசப்தம் கூட ஆர்வத்துடன் அவ்விருவரையும் கவனித்துக் கொண்டிருந்தது.

அவள் தொண்டையை கணைத்துக் கொண்டாள். மனதில் இருந்ததை மூடி மறைக்காமல் அவன் அப்படி வெளிப்படையாக பேசியது அவளுக்குப் பிடித்திருந்தது. கை விரல்களை பார்த்துக் கொண்டே தாழ்ந்த குரலில் அவள் சொல்லத் தொடங்கினாள்.

"எனக்கு மனோதத்துவமோ, பெரிய பெரிய ஆங்கில வார்த்தைகளோ தெரியாது. நீங்க என்னைக் கேட்டீங்க 'ஆர் யூ குட் இன் பெட்?' என்று. வேறு தொடர்புகள் இருந்தாலும் பரவாயில்லை என்று அலட்சியமாக சொன்னீங்க. ஆனால் அது நினைத்த அளவுக்கு சுலபமான விஷயம் இல்லை என்று நான் நினைக்கிறேன். வெளியில் அப்படிச் சொன்னாலும் உள்மனதில் ஏதோ ஒரு முலையில் நெருடல் இல்லாமல் போகாது. உங்கள் சிறுவயது நிகழ்ச்சிகளும், சூழ்நிலையும் உங்களுக்கு உலகத்தின் மீது வெறுப்பையும், துவேஷத்தையும் வளர்த்திருக்கலாம். அதனால் நீங்க உங்க விருப்பத்தை மனதிற்குள் மறைத்து வைத்துக் கொண்டு வெறுப்பை மட்டுமே வெளியில் காண்பிக்கிறீங்க. உங்களுக்கு எடுத்துச் சொல்லும் அளவுக்கு நான் பெரிய மனுஷி இல்லை. ரொம்ப படித்தவளும் இல்லை. எப்படிச் சொல்வது என்றும் தெரியவில்லை. பிற ஆண்களோடு உறவு வரையில் போவானேன்? வெறுமே சிரித்துப் போசினாலும் கணவனுக்கு வேதனையாகத்தான் இருக்கும். அப்படி

வேதனையும், பொறாமையும் இருப்பதுதான் காதல். நான் யாருடனோ போனில் பேசினேன் என்று தெரிந்ததுமே உங்களுக்கு இந்த இரவு முழுவதும் தூக்கம் வரவில்லை என்றால் எனக்கு அதை விட வேறு என்ன வேண்டும்?

"உங்க மனதின் அடித்தளத்தில் எங்கேயோ அன்பு இருக்கு என்றுதானே அர்த்தம். இல்லை என்று ரொம்ப காஷுவலாக அலட்சியமாக சொல்லிவிடாதீங்க. என் கணவர் அந்த மாதிரி வருத்தப்பட்டார் என்று தெரிந்தால் தான் எனக்குப் பெருமையாக இருக்கும். ஏன் என்றால் எனக்கு அது போன்ற அறிமுகங்கள் எதுவும் இல்லை என்பதால்."

அவள் கடைசியாக சொன்னது அவனுக்கு சட்டென்று புரியவில்லை. புரிந்ததும் "அப்படி என்றால் நீ...நீ..." என்று பாதியிலேயே நிறுத்தினான்.

அவள் சிரித்து விட்டு "நான் நிலாப் பெண் இல்லை" என்றாள்.

அவன் சூறாவளிக் காற்றால் அவளை சூழ்ந்து கொண்டான். அவளால் மூச்சுவிடவும் முடியவில்லை. ஆனாலும் பரவாயில்லை. இந்த உலகில் பெரும் மகிழ்ச்சிகள் எல்லாம் தொடக்கத்தில் துன்பத்தை கொடுப்பவைதான்.

சுலோசனா களைத்துப் போய் கணவனின் அணைப்பில் நிம்மதியாக உறங்க முயன்றவாறு நினைத்துக் கொண்டாள். 'பரவாயில்லை. மனதைச் சுற்றிலும் கடினமாக படிந்து விட்டிருந்த பாறையானது இளகத் தொடங்கி விட்டது. விரைவிலேயே அது இன்ப துன்பங்களுக்கு ஏற்றவாறு உணர்வுகளை வெளிப்படுத்த கற்றுக் கொள்ளும். உலகின் மீது நம்பிக்கை பிறப்பதற்கு இதுதான் முதல்படி. இனி, ஐ யாம் ஓ.கே. தாங்க்யூ ரேவந்த்.'

இனி அவர்களைப் பற்றிச் சொல்ல எதுவுமே இல்லை.

# 18

இரண்டு நாளாய் போன் வராதது அவனைக் கலவரப்படுத்தியது. கெடு முடியப் போகிறதே என்று இல்லை. அதற்கு இன்னும் இரண்டு நாட்கள் இருந்தன.

ஆனால் அன்றுதான் அவன் டில்லிக்குக் கிளம்ப வேண்டிய நாள்.

அன்று பதினோராம் தேதி. ரேவந்திற்கு அந்தப் பெண் ஒரு மாதம் கெடு வைத்திருந்தாள். பதிமூன்றாம் தேதிதான் அதற்குக் கடைசி நாள். அன்று மாலை ஐந்து மணிக்குள் கண்டு பிடிக்க முடியவில்லை என்றால் தோற்று விட்டாற்போல் தான்.

இரண்டு நாள் தான் இருக்கிறதே என்று சாவகாசமாய் யோசித்துக் கொண்டு இருக்கமுடியாது. மாலை ஐந்து மணிக்கு விமானம் புறப்படும். மறுநாள் டில்லியில் விளையாடி விட்டு பதிமூன்றாம் தேதி பிற்பகல் கிளம்பினால் திரும்பி வருவதற்கு மாலை நான்கு மணி ஆகலாம். ஐந்து மணியும் ஆகலாம். ஐந்து மணி ஆகிவிட்டால் கெடு முடிவடைந்து அவன் தோற்றுப் போனவனாகி விடுவான். வேறு விதமாக சொல்லணும் என்றால் இன்று ஒரு நாள் மட்டும்தான் நேரம் இருக்கிறது.

அதற்குள் அவளுடைய முழுப் பெயரையும், டெலிபோன் நம்பரையும், முகவரியையும் கண்டுபிடித்து விட வேண்டும். கண்டுபிடிக்க முடியாமல் போனாலும் திருமணம் நடக்கலாம். ஆனால் அவளுடைய பார்வையில் தான் என்றென்றும் ஒரு அறிவிலியாகவே எஞ்சி நிற்க வேண்டியிருக்கும் அதோடு கடைசி நாளாவது கண்டு பிடித்து விடுவதாக சவால் வேறு விட்டிருக்கிறான்.

பதினோரு மணி ஆகிவிட்டது. இன்னும் ஆறுமணி நேரம் கூட முழுசாக இல்லை. விமான நிலையத்திற்கு மாலை நாலரை மணிக்கெல்லாம் போய்ச் சேர வேண்டும்.

இன்னும் போன் வரவில்லையே? ஏன்?

தான் டில்லிக்குப் போகப் போவதாகச் சொன்னதை அவள் மறந்து விட்டாளா? அல்லது தன்னை தோற்கடிக்க வேண்டும் என்பதற்காக இந்த கடைசி நாளில் போன் செய்யாமல் இருந்து விட்டாளா?

அவனை மேலும் அலைக்கழிக்க விரும்பாமல் போன் ஒலித்தது.

அவளேதான்.

"ஹலோ!"

"இவ்வளவு நாளாக எங்கே போனீங்க?" அவன் கேட்டான்.

மறுமுனையில் அவள் சிரிக்கும் ஒலி கேட்டது. "சின்ன பிரச்னை."

அவன் கலவரமடைந்து "என்ன?" என்று கேட்டான்.

அதே சிரிப்பு மாறாமல் "அப்புறமாக சொல்கிறேன் நாம் சந்தித்துக் கொள்ளும் போது" என்றாள்.

"நான் இன்றைக்கு டில்லிக்குப் போகிறேன். தெரியும் இல்லையா?"

"தெரியும்."

"நாளை மறுநாள் தான் திரும்புவேன்."

"தெரியும்."

"நாளை மறுநாள்தான் நமக்குக் கடைசிநாள்."

"ஆமாம். அதான் இப்போ கடைசி முறையாக போன் செய்கிறேன்."

திடீரென்று அவன் பதட்டமடைந்து "அப்போ என்ன செய்வது?" என்றான்.

"இத்தனை க்ளுக்களை கொடுத்த போதும் வெறுமே இருந்துவிட்டு இப்போ கடைசி நேரத்தில் என்ன செய்வது என்று கேட்டால் என்னால் என்ன பதில் சொல்ல முடியும்?"

"கொடுத்த க்ளுக்கள் எதுவுமே சரியாக இல்லாத போது என்னால் எப்படிக் கண்டுபிடிக்கமுடியும்?"

"அதற்கு பதில் கூட சொன்னேனே. எனக்கு வேண்டியது கணக்கு வாத்தியார் இல்லை. எல்லாம் சரியாக சொல்லிவிட்டால் இரண்டாம் வகுப்புப் படிக்கும் பையன் கூட கண்டுபிடித்துவிடுவான்."

"இப்போ எங்கிருந்து போன் செய்றீங்க?"

"ஹோட்டல் அறையிலிருந்து."

"ஹோட்டல் அறையிலிருந்தா?"

"ஆமாம். நாள் நெருங்கிக் கொண்டு வருகிறது இல்லையா. அதான் சினேகிதிகளுக்கு பார்ட்டி தருகிறேன்."

அவன் புரியாமல் "எதற்கு நாள் நெருங்கிண்டு வருகிறது?" என்று கேட்டான்.

"நாம் சந்தித்துக் கொண்ட பிறகு எப்படியும் அவர்களை எல்லாம் விட்டுவிட வேண்டும் இல்லையா. அதான் பார்ட்டி தரச் சொல்லி கட்டாயப் படுத்தினாங்க."

"எந்த ஹோட்டலில்?" ரொம்ப காஷுவலாக கேட்டான், ஒருக்கால் அவள் வாய்த்தவறி சொல்லிவிடக் கூடும் என்ற எதிப்பார்பில்.

"ஆசையைப் பார்! நான் சொல்ல மாட்டேன்."

"அப்படியானால் எப்படி கண்டுபிடிப்பது?"

"இரண்டு நாள் பொறுமையாக இருங்கள். நானே சுயமாக எங்க வீட்டுப் போன் நம்பருடன் உங்களிடம் வருகிறேன்."

"அப்படி என்றால் எந்தக் குறிப்பும் தரமாட்டீங்களா?"

அவள் ஒரு நிமிடம் மௌனமாக இருந்துவிட்டு "பைத்தியக்காரத்தனமாய் யோசிக்காமல் நேர்மையாக நான் சொன்னது போல் செய்வீங்களா?" என்று கேட்டாள்.

அவன் ஆர்வத்துடன் முன்னால் குனிந்து "சொல்லுங்க. செய்கிறேன்" என்றான்.

"பிராமிஸ்?"

"பிராமிஸ்."

"நான் இப்பொழுதுதான் ஹோட்டலிலிருந்து கிளம்பி நேராக வீட்டுக்குப் போய்க் கொண்டிருக்கிறேன். அப்பா எதற்காகவோ வரச் சொல்லியிருக்கிறார். அங்கே ஐந்து நிமிடங்கள் இருந்து விட்டு மறுபடியும் புறப்பட்டு லம்பமாக திரும்பி நேரு சிலையருகில் வருகிறேன். மணிக்கு நாற்பது மைல் வேகத்தில் இந்தப் பயணத்தை மேற்கொள்ளப் போகிறேன். நீங்க சரியாக ஐந்து நிமிடங்கள் கழித்து கிளம்பி அதே வேகத்தில் வந்தால் நேரு சிலைக்கு அந்தப் பக்கமாய் நீங்க இந்தப் பக்கமாக நானும் ஒரே சமயத்தில் வந்து சேருவோம்."

"இருவரும் ஒரே தொலைவுதான் பயணம் செய்யப் போகிறோம் என்று சொல்லுங்க."

"இதைச் சின்னக் குழந்தைக் கூட சொல்லி விடுமே."

ரேவந்தின் முகம் சிவந்தது. "சரி. அப்புறம் என்ன? அதைச் சொல்லுங்க" என்றான்.

"நீங்க கார் ஓட்டுவதில் நிபுணன் என்று பெருமைப்பட்டுக் கொள்வீங்க இல்லையா. அதையும் பார்த்துவிடுவோம், என்னைப் பிடிக்க முடியுமா என்று. இதுதான் உங்களுக்கு தரப்போகும் கடைசி வாய்ப்பு. ஆனால் நீங்க தந்திரம் எதுவும் செய்யாமல் அதே வேகத்தில் வரணும். முதலில் வந்து விட்டால் மட்டும் நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். நம்முடைய ரேஸ் நேரு சிலை அருகிலிருந்துதான் தொடங்கும். நாம் பயணம் செய்யப் போகும் கிலோ மீட்டர்கள் எல்லாமே முழு எண்கள் கொண்டவை தான்."

அவனுக்கு அவள் சொன்ன கடைசி வாக்கியம் புரியவில்லை. அதை அவன் பொருட்படுத்தவும் இல்லை. அவளைச் சந்திக்கப் போகிறோம் என்ற மகிழ்ச்சியில் அவன் உள்ளம் வானத்தில் சஞ்சரிக்கத் தொடங்கியது. கார் ஓட்டுவதில் தன்னை யாருமே மிஞ்சி விட முடியாது என்று அவனுக்குத் தெரியும்.

"சரியாக ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு கிளம்புகிறேன்" என்றான்.

"விஷ் யூ ஆல் தி பெஸ்ட்" என்று போனை வைத்து விட்டாள்.

அவன் இந்த முறை எந்த தில்லுமுல்லும் செய்ய நினைக்கவில்லை. சரியாக ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு கிளம்பினான். மணிக்கு நாற்பது மைல் வேகத்தில் டிரைவ் செய்து கொண்டிருந்தான். எங்கேயாவது பிரேக் போட வேண்டியிருந்தால் அந்த நேரத்தை நினைவில் வைத்துக் கொண்டு அதற்கு ஏற்றாற்போல் வேகத்தை அதிகரித்தும், குறைத்தும் அட்ஜெஸ்ட் செய்தான்.

அவன் ஆபீசிலிருந்து நேரு சிலை இருபத்தி மூன்று கி.மி. தொலைவில் இருந்தது. அந்த தூரத்தை கடக்க மணிக்கு நாற்பது மைல் வேகத்தில் பயணம் செய்தால் எவ்வளவு நேரமாகும் என்பதை கணக்கிட்டு, சரியாக அதே நேரத்திற்கு போய்ச் சேரும் விதமாக டிரைவ் செய்துகொண்டிருந்தான்.

அவன் இந்தப் பக்கமாக போய்ச் சேர்ந்த அதே நேரத்திற்கு ஒரு கார் வந்தது. கருப்பு ஃபியட். அதில் உட்கார்ந்திருந்த பெண்ணின் உருவம் தெளிவற்று தென்பட்டது. ரேவந்தின் கார் முன்னால் இன்னொரு ஜீப் இருந்ததால் அந்தப் பெண் ரேவந்தின் காரை பார்த்திருக்க வாய்ப்பில்லை.

ரேவந்த் மூச்சை இழுத்து அடக்கிக் கொண்டான். சிலைக்கு இரு பக்கங்களிலிருந்தும் இரண்டு கார்களும் நெருங்கி வந்தன.

சிலைக்கு பின்னாலிருந்து ரேவந்தின் கார் நெருங்கி வந்தது. ஃபியட் காரில் இருந்த பெண் அதைக் கவனித்து சடாரென்று கியரை மாற்றி நேரு சிலையைச் சுற்றிக் கொண்டு வேகமாக போய் விட்டாள். அப்படி திரும்புவதில் போக்குவரத்து விதிகளையோ, எதிரே வந்த வாகனங் களையோ அவள் பொருட்படுத்தவில்லை.

இதை எதிர்பார்க்காத ரேவந்த் கலவரமடைந்தான். உடனே தேறிக்கொண்டு காரை அதே வேகத்தில் திருப்பினான். கிறீச்சிட்ட டயர்களின் சத்தத்தில் ட்ராஃபிக் கான்ஸ்டேபிளின் விசில் ஓசை கலந்துவிட்டது. வில்லிலிருந்து விடுபட்ட அம்பாய் அவனுடைய கார் காற்றில் பறந்தது.

ரேஸ் தொடங்கிவிட்டது. கண்களை விரித்து வியப்போடு பார்த்துக் கொண்டிருந்த ட்ராஃபிக் கான்ஸ்டேபிளைத் தாண்டிக் கொண்டு இரு கார்களும் ஓடத் தொடங்கின. கீழ் பற்களால் அழுத்திக் கொண்டே முன்னால்

போய்க் கொண்டிருந்த காரை துரத்திக்கொண்டிருந்தான். காற்று விர்ரென்று வந்து மோதியது.

இதுதான் கடைசி சான்ஸ் என்றும் இப்பொழுது கண்டு பிடிக்க முடியாவிட்டால் இனி முடியவே முடியாது என்று அவனுக்குத் தெரியும். கார் நேரு சிலை அருகில் சர்ரென்று சுற்றிக் கொண்டு போனபோது இமைக்கும் நேரம் அவள் அவன் கண்களில் பட்டு மின்னலாய் மறைந்தாள். ஆனால் தங்கப் பதுமையைப் போன்ற அவள் உருவம் அவன் மூளையில் பதிவாகும் முன்பே மறைந்துவிட்டது. வானத்தில் பளிச்சென்று மின்னல் மின்னி மறைந்தது போல் அவள் அழகு அவன் கண்களைப் பறித்து விட்டாற்போல் இருந்தது.

அம்முகம் முழுநிலவா... கண்கள் தாமரை இதழ்களா...தெரியாது. பார்த்த மாத்திரத்தில் சட்டென்று திருப்பிக் கொண்ட அந்த நயனங்களுக்காகவே படைக்கப் பட்ட மயிலிறகு போன்ற கண் இமைகள். அந்த புரட்சிக் கவிஞன் சொன்னது போல் மூக்கு சம்பங்கிதானோ.

மனதில் உவமை மட்டும் தெளிவாக இருந்தது. ஆனால் உருவமோ தெளிவின்றி இருந்தது. எவ்வளவுதான் நினைவு படுத்திக் கொண்டாலும் ஒரு அழகான சிற்பம்தான் நினைவுக்கு வந்ததே தவிர உருவம் நினைவில் நிற்கவில்லை.

யோசித்தவாறே காரை ஓட்டிக் கொண்டிருந்தான் ரேவந்த். இரு கைகளாலேயும் ஸ்டீரிங்கைப் பிடித்துக் கொண்டு பிடிவாதமாக அவளைப் பிடிப்பதிலேயே கவனம் செலுத்திக் கொண்டிருந்தான். பின்னால் கண்ணாடிகளுக்கு கட்டியிருந்த திரைச்சிலை வழியே அவள் கூந்தலிலிருந்த பூக்கள் தென்பட்டுக் கொண்டிருந்தன.

டிரைவ் செய்வதற்கு தான்பட்ட கஷ்டம் எதுவும் அவள் பட்டாற்போல் தெரியவில்லை. போக்குவரத்தை சுலபமாக கடந்து சென்று கொண்டிருந்தாள். அவனுக்குப் பிடிவாதம்

அதிகரித்தது. மணிக்கு நூறு கி.மி. வரையிலும் அனாயாசமாக ஓட்டும் திறமை படைத்தவன் என்று நண்பர்களுக்கு இடையே அவனுக்கு பெயர் இருந்தது. அதுவும் அவனுடையது புத்தம் புதிய அம்பாசிடர் கார்.

அப்பொழுதுதான் அவனுக்குப் புரிந்தது தான் பின்தங்கி விட்ட காரணம்.

அவளுடையது சின்ன ஃபியட் கார். தன்னுடையதோ பெரிய அம்பாசிடர். ட்ராஃபிக் இப்படி இருந்தால் தன்னால் அவனைப் பிடிக்கவே முடியாது. அதனால் தான் அவள் சிறிய சாலையாக பார்த்து தேர்ந்து எடுத்திருக்கிறாள். இந்த ரீதியில் இன்னும் நான்கு மணி நேரம் பயணம் செய்தாலும் பிரயோஜனம் இருக்காது.

அவள் புத்திசாதுரியத்தை எண்ணி வியக்காமல் இருக்கமுடியவில்லை அவனால். கூடவே இன்னொரு சந்தேகமும் வந்தது. அவள் இன்னும் குறுகலான தெருவை ஏன் தேர்ந்தெடுக்கவில்லை? அப்படிப் போயிருந்தால ஒரே நிமிடத்தில் தன்னை ஏமாற்றிவிட்டு போயிருக்கலாமே. அவ்வாறு செய்யவில்லை என்றால் தான் இந்த மாதிரி பின் தொடருவது அவளுக்கும் பிடித்திருக்கிறது என்று தானே அர்த்தம்!

வேகமாக போய்க் கொண்டே அவன் நேரத்தைப் பார்த்துக் கொண்டான். பன்னிரண்டடிக்கப் போகிறது. இன்னும் நான்கு மணி நேரம் தான் இருக்கிறது விமான நிலையத்திற்குப் போவதற்கு.

மேலும் ஐந்து நிமிடங்கள் கழிந்தன. கார்கள் ஹசேன் சாகரை நோக்கிப் போய்க் கொண்டிருந்தன. அதைக் கவனித்ததும் அவன் மூளையில் மின்னலாய் யோசனை வந்தது. அவளுடைய காரை எப்படியாவது பாங்க் பண்ட் சாலையை நோக்கி போகச் செய்ய வேண்டும். அங்கே

அவ்வளவாக ட்ராஃபிக் இருக்காது. ஒரு தடவை அது போன்ற ஒரு நேர்ப்பாதை கிடைத்துவிட்டால் போதும். தன்னுடைய அம்பாசிடர் அவளுடைய ஃபியட்டை இரண்டே நிமிடத்தில் பிடித்துவிடும்.

அவளுக்கும் இந்த யோசனை வந்திருக்குமோ?

ஹுசேன் சாகர் பக்கம் போகாமல் வேறு பக்கமாக போவதற்கு ஒரே ஒரு குறுகிய சாலை மட்டுமே இருந்தது. அந்த இடத்திற்கு வந்து சேர்ந்ததும் அவள் கவனத்தை வேறு பக்கம் திருப்பி நேராக போகும்படி செய்துவிட வேண்டும். அதற்குப் பிறகு அவளால் தப்பித்துவிட முடியாது.

அந்த குறுகிய சாலை அருகில் அவளுடைய கார் வந்து சேரும் போது ரேவந்த் வேண்டுமென்றே காரின் வேகத்தை குறைத்தான். கார் கண்ணாடி வழியாக அவள் கவனித்து வருவதையும் கண்டான். அவனுடைய கார் தென்படாததால் அவள் கலவர மடைந்தாள். அவனுக்கு வேண்டியதும் அதுதான். அதற்குள் அந்த குறுகிய சாலையை கார் தாண்டி விட்டது.

இனி நேரான அகன்ற பாதை மட்டும்தான். அவள் தான் செய்த தவறை உணர்ந்து விட்டாள் போலும். காரின் வேகத்தை கூட்டியதிலிருந்து புரிந்தது. ரேவந்தின் இதழ்களில் முறுவல் தவழ்ந்தது. அவள் எவ்வளவு வேகமாக போனாலும் பரவாயில்லை. தன் காருக்கு முன்னால் அந்தப் பழைய மாடல் நிற்காது. அவன் பெட்ரோல் இருப்பதைப் பார்த்துக் கொண்டான். அது ஃபுல்லாக இருந்தது.

விசாலமான அந்த சாலை சற்று மேடாக இருந்தது. மேட்டுக்குக் கீழே வேறொரு சாலை இருந்தது. இரண்டு சாலைகளும் சமமாக நீண்டு இறுதியில் மீண்டும் ஒன்றாக சேரும். கீழே இருந்த சாலை லாரிகளுக்காக ஏற்படுத்தப்பட்ட சாலை.

விசாலமான சாலையை வந்தடைந்ததும் அவளுடைய கார் தென்படாததைக் கண்டு கலவரமடைந்தான் ரேவந்த். ஆனால் மேட்டுக்குக் கீழே லாரிகள் போகும் சாலையில் அவள் கார் போய் கொண்டிருந்ததைப் பார்த்து நிம்மதி அடைந்தான். அந்த சாலையில் போவதற்காகத்தான் அவள் காரின் வேகத்தை அதிகப்படுத்தி இருக்கவேண்டும்.

இரு கார்களும் ஒரே திசையில் நோக்கி வேகமாக இரு வேறு சாலைகளில் பறந்து கொண்டிருந்தன. நடுவில் அவ்விரு சாலைகளும் அகலமாய் விரிந்திருந்ததால் ஒன்றையொன்று பார்க்க முடியாமல் போயிற்று. மரங்கள் உயரமாக வளர்ந்திருந்தன. அவற்றுக்கு அந்தப் பக்கமாக போய்க் கொண்டிருந்த கார் தென்படவில்லை.

அப்பொழுது ரேவந்திற்கு சந்தேகம் வந்தது. தான் வேகமாக வருவது தெரிந்தும் முன்னோக்கிக் காரை ஓட்டிக் கொண்டு போவதற்கு அவள் முட்டாள் ஒன்றும் இல்லை. அந்த மரங்களின் பின்னால் நிறுத்தி தன்னுடைய கார் முன்னால் சென்றதும் பின்னால் திரும்புவாளா? இந்த எண்ணம் வந்ததும் சடன் பிரேக் போட்டான்.

அந்தப் பெண் முன்னோக்கிப் போவாளா பின்னோக்கி திரும்புவாளா தெரியவில்லை. ரேவந்த் காரை வேகமாக ஓட்டினான். மரத்தைத் தாண்டி முனை திரும்பியதும் சடன் பிரேக்போட்டு ஓரமாக நிறுத்தினான். மரத்தின் பின்னாலிருந்து தன்னுடைய கார் போவதை அவள் கவனித்திருப்பாள் என்று அவனுக்குத் தெரியும்.

காரை பூட்டி விட்டு எதிர்பக்கமாக வந்து கொண்டிருந்த டாக்ஸியை நிறுத்தி ஏறிக்கொண்டான். தான் வந்த வழியிலேயே போகச் சொன்னான்.

. அவன் ஊகித்தது சரியாகி விட்டது. அவள் கார் வந்த வழியே திரும்பிப் போய்க் கொண்டிருந்தது. அந்த காரை

பின் தொடர்ந்து போகும்படி டாக்ஸிக்காரனுக்கு உத்தரவிட்டான் ரேவந்த். அந்தப் பெண் நிதானமாக காரை செலுத்திக் கொண்டிருந்தாள். பின்னால் வரும் டாக்ஸியில் ரேவந்த் இருப்பான் என்று கனவிலும் நினைத்திருக்க மாட்டாள்.

அவளுடைய கார் ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்குள் நுழைந்தது. சரியாக இரண்டு நிமிடங்கள் கழித்து ரேவந்த் பயணம் செய்த டாக்ஸி அங்கே வந்து சேர்ந்தது. டாக்ஸிக் காரனுக்குப் பணம் கொடுத்து விட்டு ரேவந்த் ஹோட்டலுக்குள் நுழைந்தான்.

பெரிய அரிஸ்டோகிரடிக் குடும்பங்களில் பிறந்த ஆண்களும் பெண்களும் ரெஸ்டாரெண்டுகளில் இல்லாமல் இதுபோல் அறைகளில் பார்ட்டி கொடுப்பது வழக்கம் தான்.

ரேவந்த் ரிசப்ஷன் அருகில் சென்று "எக்ஸ்க்யூஸ்மீ! மிஸ் ரம்யாவின் பார்ட்டி எந்த அறையில் நடக்கிறதோ சொல்ல முடியுமா?" என்று கேட்டான்.

"சற்று முன் இப்படிப் போனாங்களே அவங்களா?"

"ஆமாம். அவளேதான்."

"ரூம் நம்பர் **214**."

ரேவந்த் லிஃப்ட் வழியாக இரண்டாவது மாடியை அடைந்தான். ஸ்டார் ஹோட்டல் என்பதால் வராண்டா ஆளரவமற்று இருந்தது. காலடியில் கம்பளம் மெத்தென்று இருந்தது.

அவன் வரிசையாய் ஒவ்வொரு அறையாக தாண்டிக் கொண்டே **214**ம் அறைக்கு முன்னால் வந்து நின்றான். உடனே கதவைத் தட்டி விடவில்லை. சாவி துவாரத்தின் வழியே காதை வைத்துக் கேட்டான்.

"நன்றாக தண்ணிக் காட்டி விட்டாய் ரம்யா." யாரோ ஒரு பெண் சொல்லிக் கொண்டிருந்தாள்.

ரேவந்த் நிமிர்ந்து நின்றுகொண்டு மூச்சை பலமாக இழுத்துக் கொண்டான். ஒரு நிமிடம் பொறுத்து சட்டென்று பிடியைத் திருகி கதவை உள்ளே தள்ளினான்.

அறையிலிருந்த நான்கு பெண்களும் இந்த திடீர் விளைவிற்கு தலையைத் திருப்பி அவன் பக்கம் பார்த்தார்கள். அவர்கள் அந்த நிமிடம் அவனை அங்கே எதிர்பார்க்க வில்லை.

அந்த நால்வரில் இத்தனை நாளும் தன்னை அழவைத்துக் கொண்டிருந்த பெண் யாரென்று ரேவந்திற்கு தெரியவில்லை. அழகில் ஒருவரை ஒருவர் மிஞ்சிவிட்டார் கள். ஏறத்தாழ ஒரே வயது.

ரேவந்த் கொஞ்சம் புத்திசாலியாக நடந்துகொண்டான். 'நான் உன்னை காரில் பார்த்துவிட்டேன்' என்று நம்பவைக்கும் தோரணையில் "ஹலோ ரம்யா" என்றான் முறுவலுடன் எந்தப் பெண்ணையும் நேராக பார்க்காமல்.

நால்வரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அந்த அறையில் திடீரென்று நிசப்தம் சூழ்ந்து கொண்டது. தான் ஏதோ தவறு செய்திருக்க வேண்டும் என்று ரேவந்திற்குப் புரிந்து விட்டது. இனி பயனில்லை என்று எண்ணி "உண்மையைச் சொல்லுங்கள். உங்களில் ரம்யா யாரு?" என்றான்.

நால்வரும் ஒரே சமயத்தில் "நான்தான்" என்று சொல்லி விட்டு மற்ற மூவரும் அதே வார்த்தையை சொன்னதை உணர்ந்து நாக்கைக் கடித்துக் கொண்டு மறுபடியும் நான்கு பேரும் ஒரே நேரத்தில் "நான் இல்லை" என்றார்கள். பிறகு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு கொல்லென்று சிரித்தார்கள்.

ரேவந்தின் முகம் கன்றி விட்டது. "நானே கண்டுபிடித்து விடுவேன். ஆனால் முதலில் நீங்களே சொல்லி விடுவது நல்லது" என்றான்.

"ரம்யா எங்களைப் போல் சாதாரணமாக இருந்தால் போதுமா?" பழிப்பது போல் கேட்டாள் ஒருத்தி.

ரேவந்த் ஏதோ சொல்லப் போனபோது அட்டாச்டு பாத்ரூமின் கதவு கைப்பிடி அசைந்தது. கதவு மெதுவாக திறந்து கொள்ளப் போனபோது நால்வரில் ஒருத்தி சட்டென்று பாத்ரூம் அருகில் சென்று "ரம்யா! வெளியில் வராதே. ரேவந்த் இங்கே வந்திருக்கிறார்" என்று கத்தினாள். திறக்கப் போன கதவு உள்ளே மூடிக் கொண்டுவிட்டது. பிறகு உள்ளே தாழிட்டுக் கொண்ட ஓசை கேட்டது.

அந்த அறையில் ஊசிவிழுந்தாலும் கேட்கும்படியான நிசப்தம் சூழ்ந்துகொண்டது. ரேவந்த் சிலையாக நின்று விட்டான். சரியாக பத்தடி தொலைவில் உள்ள பெண்ணை தன்னால் சந்திக்க முடியவில்லை. இவ்வளவு நாளாக தேடிய பெண்ணை இத்தனை அண்மையில் வந்து சேர்ந்தும் தன்னால் பிடிக்க முடியவில்லை.

'எப்படியாவது இதைச் சாதித்தே தீருவேன்' என்று நினைத்துக் கொண்டே அந்தப் பெண்களைப் பார்த்தான். நால்வரும் அவனையே பார்த்துக் கொண்டு இருந்தார்கள். அவர்களின் கண்கள் குறும்பாக சிரித்துக் கொண்டிருந்தன.

ஒரே எட்டில் போய் பாத்ரூம் கதவை உடைத்து விடலாமா என்ற அளவுக்கு ஆத்திரம் வந்தது ரேவந்திற்கு. உள்ளே அந்தப் பெண் கதவில் சாய்ந்துகொண்டு உள்ளூர சிரித்துக் கொள்கிறாளோ என்னவோ. என்ன செய்வது என்று அவன் யோசித்துக் கொண்டிருந்த போதே ஒரு பெண் முன்னுக்கு வந்து "மிஸ்டர் ரேவந்த்! இனி நீங்க இந்த அறையை விட்டு போகிறீங்களா?" என்றாள் ஆங்கிலத்தில்.

அந்தக் குரலில் தென்பட்ட அதிகாரத்தை ரேவந்த் புரிந்துகொண்டான். உண்மைதான். தனக்கு இங்கே இருக்கும் அதிகாரம் இல்லை. இந்த அறை யாருடையதோ.

ஒரு முறை நால்வரையும் பார்த்துவிட்டு மௌனமாக அந்த அறையை விட்டு வெளியேறினான். ஆனால் அறையை விட்டு வெளியே வந்ததும் அவன் உடனே கீழே போகவில்லை. வராண்டா மூலையில் போய் நின்று கொண்டான். இத்தனை நாளும் தன்னை அழவைத்த பெண் வெளியே வரும் வரையில் எவ்வளவு நேரமானாலும் அங்கேயே காத்திருக்க முடிவுசெய்தான்.

அதற்குள் அந்த அறையின் கதவு திறந்து கொண்டது. ரேவந்த் மூச்சை அடக்கிக் கொண்டு மேலும் இருளில் மறைந்து கொணடான்.

அதற்குள் ஒரு பெண் தலையை வெளியே நீட்டி வராண்டாவை பார்த்துவிட்டு மறுபடியும் கதவை சாத்திக் கொண்டாள். ரேவந்திற்கு ஆயிரம் சந்தேகங்கள் எழும்பின. அவர்களுக்குத் தான் இங்கே இருப்பதாக சந்தேகம் ஏற்பட்டிருக்குமோ? உள்ளே என்னதான் நடக்கிறது? இந்தப் பெண்கள் உள்ளே என்னதான் செய்து கொண்டிருக் கிறார்கள்?

அவன் யோசனைகளைச் சிதறடித்தவாறு பின்னா லிருந்து காலடியோசை கேட்டது. நீக்ரோவைப் போலிருந்த வெயிட்டர் ஒருவன் வந்து "இங்கே என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டான். அவன் குரலில் மரியாதை கொஞ்சம் குறைவாக இருப்பதை ரேவந்த் உணர்ந்து கொண்டான்.

"ஒரு நண்பனை எதிர் பார்த்து கொண்டு இருக்கிறேன்."

"உங்களை மேனேஜர் அழைத்து வரச் சொன்னார்."

"எதற்கு?"

"தெரியாது."

"ஏதாவது பேச வேண்டுமானால் உங்க மேனேஜரை இங்கே வரச் சொல்லு."

"ரகளை செய்யாதீங்க சார். நீங்களே வந்து விட்டால் நல்லது." அவன் குரலில் கொஞ்சம் கூட பணிவு தென்படவில்லை. ரேவந்த் அவனோடு தகராறு வைத்துக் கொள்ள விரும்பவில்லை.

அவனுடன் சேர்ந்து கீழே போனான். மேனேஜரின் அறை ரிசப்ஷனுக்கு பின்னாலிருந்தது. முதலில் கோபமாக பேச வேண்டும் என்று எண்ணியிருந்த மேனேஜர் ரேவந்தைப் பார்த்ததும் கொஞ்சம் மரியாதையை வரவழைத்துக் கொண்டார். "நீங்க இரண்டாவது மாடியில் ஒரு அறைக்குள் நுழைந்து அங்கிருந்த பெண்களுக்கு தொல்லையைக் கொடுத்தீங்களாம். அந்த அறையிலிருந்து போன் வந்தது."

ரேவந்த்க்குப் புரிந்து விட்டது. தன்னை இந்த ஹோட்டலிருந்து வெளியேற்ற இந்த திட்டத்தை கையாண்டு இருக்கிறார்கள் அந்தப் பெண்கள்.

அவன் நேராக மேனேஜரின் முகத்தை பார்த்துக் கொண்டே கம்பீரமாக சொன்னான். "இரண்டாவது மாடியில் தனக்காக காத்துக்கொண்டு இருக்கச் சொல்லி பெரிய பிசிநெஸ் மாக்னெட் ஒருவன் நண்பன் என்ற முறையில் என்னை அழைத்திருக்கிறான். யாருக்கும் எந்த தொந்தரவும் கொடுக்காமல் நான் வராண்டாவில் நின்று கொண்டிருந்த போது உங்க வெயிட்டர் என்னை மரியாதைக் குறைவாய் பேசி இங்கே அழைத்துக்கிட்டு வந்திருக்கிறார். இப்போ நீங்க அனாவசியமாக என் மேல் குற்றத்தை சுமத்தறீங்க. இந்த விஷயத்தை உங்க மேனேஜ்மெண்டிடம் புகார் செய்யப் போகிறேன். கேவலம் ஒரு போன்காலை

ஆதாரமாக வைத்துக் கொண்டு நீங்க இது போல் என்மீது குற்றம் சாட்டியதற்கு உங்கள் மீது ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மான நஷ்ட வழக்குப் போடப் போகிறேன்."

அவன் எதிர்பார்த்தது போலவே மேனேஜரின் முகத்தில் பயம் வெளிப்படையாக தென்பட்டது.

"சாரி சார். ஆனால் ரூம் நம்பர் 214லிருந்து போன்..." என்று இழுத்தார்.

அவர் அப்படி தடுமாறியதும் ரேவந்த் குரலை மேலும் உயர்த்தினான்.

"யார் போன் செய்தாங்க? கீழே வந்து புகார் கொடுக்கச் சொல்லுங்க. எழுத்து மூலமாக வாங்கிக் கொள்ளுங்க. இல்லா விட்டால் நாமே போவாம். போனில் என்ன கம்பிளயிண்ட் வேண்டியிருக்கு?" என்று அதட்டினான்.

"நடந்தது என்னவோ நடந்துவிட்டது. நீங்க போய் லௌஞ்சில் உட்காருங்க சார்" என்றார் மேனேஜர்.

"அதெல்லாம் முடியாது. வாங்க. 214ம் அறைக்கு போவோம். அவர்கள் என்ன சொல்வார்களோ கேட்போம்" என்று எழுந்து கொண்டான். அவனுக்கு எப்படியாவது அந்த அறைக்குள் திடீரென்று நுழைந்து விட வேண்டும் என்று பலமாக தோன்றியது. தான் புறப்பட்டுப் போய் விட்டிருப்போம் என்று வெற்றி பெருமிதத்துடன் அவர்கள் இருக்கும் போதே இது நடக்க வேண்டும்.

அவனும் மேனேஜரும் சேர்ந்து இரண்டாவது மாடிக்கு போனார்கள். அறை உள்பக்கமாக தாழிடப் பட்டிருந்தது. மேனேஜர் கதவைத் தட்டினார்.

"யாரு?" உள்ளேயிருந்து குரல் கேட்டது.

"மேனேஜர்."

கதவைத் திறக்கும் சத்தம். ரேவந்த் சுவற்றுப் பக்கம் கண் மறைவாக நின்று கொண்டான். கதவைத் திறந்த அந்தப் பெண் முழுவதுமாக திறக்காமல் குறுக்கே நின்று கொண்டாள்.

"யாரோ, ஒரு ஆள் வந்து தொந்தரவு செய்வதாக புகார் செய்தது நீங்கதானே?" மேனேஜர் கேட்டார்.

வந்தது மேனேஜர்தான் என்று நிச்சயமாக தெரிந்ததும் "ஆமாம். உள்ளேவாங்க" என்று வழிவிட்டாள். மேனேஜர் உள்ளே நுழையும் போது சரேலென்று பாய்ந்து பின்னாலேயே அறையில் நுழைந்து விட்டான் ரேவந்த். கண்மூடி திறப்பதற்குள் இது நடந்து விட்டது.

அவன் திடீரென்று அப்படி உள்ளே நுழைவான் என்று ஊகித்திராத அந்தப் பெண் திகைத்துப் போய் விட்டாள். ரேவந்த் முறுலித்துக் கொண்டே ஒரு அடி முன்னால் வைத்தான்.

அறையிலிருந்த பெண்கள் எல்லோரும் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"மேடம்! உங்க அறைக்கு வந்து தொந்தரவு செய்த நபர் இவர்தானா?" மேனேஜர் கேட்டார்.

"மைகாட்! இல்லைங்க." பணிவு கலந்த குரலில் ஒருத்தி சொன்னாள்.

அருகில் குண்டு வெடித்தாற் போல் அதிர்ச்சி அடைந்தான் ரேவந்த். இந்த பதிலைக் கேட்டு.

"அவன் கருப்பாக, ரௌடியைப் போலிருந்தான். கதவைத் தட்டி உள்ளே வரலாமா என்று கேட்டான். அதான் பயந்து போய் உங்களுக்குப் போன் செய்தோம்" என்றாள். அதற்குள் மற்றொருத்தி ரேவந்தை அபிமானமாக பார்த்துக் கொண்டே "இவரைப் போன்ற ஆளாக இருந்தால்

உங்களுக்கு எதற்குப் போன் செய்கிறோம்?" என்றாள் குறும்புடன். அந்தப் பெண்கள் எல்லோரும் சேர்ந்து தன்னை கலாட்டா செய்வதை உணர்ந்தான் ரேவந்த். சீரியஸாக இருப்பது போல் நடிக்க முயன்றாலும் அவர்களால் இதழ்களில் சிரிப்பை மறைக்க முடியவில்லை. ஆனாலும் ரேவந்த் அதைப் பொருட்படுத்தவில்லை. பாத்ரூம்க்குள் எட்டிப் பார்த்தான். அங்கே யாருமே இல்லை.

அவன் அவ்வாறு பார்த்ததை கவனித்துவிட்டு "உங்களுக்கு பாத்ரூமை பயன்படுத்திக் கொள்ளணுமா? எங்களுக்கு ஆட்சேபனை இல்லை" என்றாள் மற்றொருத்தி.

கழுத்தை நெறித்து அவர்களைக் கொன்று விடவேண்டும் போல் கோபம் வந்தது ரேவந்திற்கு. வலுக்கட்டாயமாக அடக்கிக் கொண்டான்.

மேனேஜர் "சாரி மேடம். உங்களுக்கு எந்தப் பயமும் இல்லை. தைரியமாக இருங்க" என்று சொல்லிவிட்டு ரேவந்த் பக்கம் திரும்பினார். "சாரி சார். நீங்க உங்க நண்பருக்காக காரிடரில் வெயிட் செய்யுங்க. காபி அனுப்பி வைக்கட்டுமா?" என்று கேட்டார் மரியாதையுடன்.

ரேவந்திற்கு அவருடைய வார்த்தைகள் காதில் விழவே இல்லை. யோசித்துக் கொண்டிருந்தான்.

"என்னவானாள் அந்தப் பெண்? இந்த ஐந்து நிமிடங்களில் எங்கே போயிருப்பாள்?"

குழம்பியவாறே அவன் மேனேஜருடன் சேர்ந்து அறையை விட்டு வெளியே வரும்போது ,அவர்களில் ஒரு பெண். "பில் தயாரித்து அனுப்புங்க. விருந்துகொடுத்த அந்தப் பெண் போய் விட்டாள். நாங்களும் கிளம்பிக் கொண்டு இருக்கிறோம்" என்றாள்.

அதைக் கேட்டதும் காலுக்கு குறுக்கே ஏதோ தடுத்து விட்டது போல் ரேவந்த் நின்று விட்டான் ரேவந்த். விருந்து கொடுத்த அந்தப் பெண் போய் விட்டாள் என்றால்... நடந்தது என்னவென்று இப்பொழுது புரிந்துவிட்டது.

வராண்டாவில் நின்றுகொண்டிருந்த தன்னை இரண்டு நிமிடங்களுக்கு ஏதோ சாக்கு போக்கு சொல்லி மேனேஜரின் அறைக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். தான் அந்தப் பக்கமாக போனதும் இந்தப் பக்கமாக நழுவிட்டிருக்கிறாள்.

படியிறங்கிக் கொண்டிருந்த ரேவந்த் இப்பொழுது சாதாரண இருபத்தைந்து வயது அப்பாவி இளைஞனாக இல்லை. இண்டர்நேஷனல் செஸ் ஆட்டக்காரனாக இருந்தான். அடிபட்ட புலி போல் இருந்தான்.

சானை பிடிக்கப் பிடிக்க வைரம் பிரகாசிக்கும். டென்னிஸ் ஆட்டத்திலும் சரி, சதுரங்கத்திலும் சரி எதிராளியின் ஆட்டத்தை பொறுத்துதான் விளையாட்டு வீரனின் அசல் திறமை வெளிப்படும். ரேவந்த் விஷயத்திலும் அதுதான் நடந்தது.

கடைசி நிமிடத்தில் எப்படியாவது கண்டு பிடித்து விடலாம் என்றுதான் இவ்வளவு நாளாய் அலட்சியமாக இருந்து விட்டான். ஆனால் இன்று இவ்வளவு ஏற்பாடாக திட்டம் போட்டும் அவள் தன்னுடைய திட்டத்தை முறியடித்து விட்டாள். இத்தனை இக்கட்டான நிலையிலும், தான் அறைக்குள் வந்து நின்ற போதும் பந்தயத்தில் தோற்றுப் போகாமல் உடனுக்குடன் யோசித்து மேனேஜர் அறைக்கு அனுப்பி வைத்தாள் என்றால்...

இத்தனை நாட்களுக்குப் பிறகு தனக்கு சரிசமமாக போட்டி போடக் கூடிய நபர் கிடைத்து விட்டாள். இனி காயை நகர்த்த வேண்டியது தன்னுடைய முறை.

அவன் கௌண்டர் அருகில் நின்று உங்க போனை பயன்படுத்திக் கொள்ளலாமா?" என்று கேட்டான். ரிசப்ஷனிஸ்ட் தலையை அசைத்தான்.

நம்பரை டயல் செய்து "ஜேம்ஸ்!" என்றான்.

"ஸ்பீகிங்."

"நான் ஹோட்டல் ஆனந்திலிருந்து பேசுகிறேன். சொல்வதை கவனமாகக் கேட்டுக் கொள். உடனே உன் மோட்டார் சைக்கிளில் கிளம்பி இங்கே வா. காரணத்தை பிறகு சொல்கிறேன். டாங்கில் பெட்ரோல் இருக்கா பார்த்துக் கொள்" என்று போனை வைத்து விட்டான். இந்த ரீதியில் மேலும் மூன்று இடங்களுக்கு போன் செய்தான். பிறகு மேனேஜரிடம் போனான்.

புன்முறுவலுடன் "நீங்க எனக்குக் காபி தருவதாக பிராமிஸ் செய்திருக்கீங்க" என்றான்.

"ஓ.ஷ்யூர்."

ரேவந்த் எதிரே இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டே "வெறுமே வேண்டாம். பில்லைக் கொடுத்து விடுகிறேன்" என்றான் சிரித்துக் கொண்டே. அவரும் சிரித்து விட்டு "நோ...நோ. உங்களுக்கு நாங்க கொடுத்த சிரமத்திற்கு இது சின்ன பரிகாரம் தான்" என்றார்.

"உங்களை எங்கேயோ பார்த்தார் போலிருக்கு" என்றான் ரேவந்த்.

மேனேஜர் நிமிர்ந்து நோக்கினார்.

"எங்கே பார்த்தீங்க?"

"சரியாக நினைவுக்கு வரவில்லை. "ஆள்'காட்டி விரலால் நெற்றிப் பொட்டைத் தட்டிக் கொண்டான் ரேவந்த்.

"போகட்டும் விடுங்க" என்று நாற்காலியை விட்டு எழுந்து கொண்டார். "காபிக்கு சொல்லி விட்டு வருகிறேன்" என்று அறையை விட்டு வெளியேறினார்.

ரேவந்த் மேஜை மீது இருந்த பில் புத்தகத்தை எடுத்துக் காலடியில் போட்டான். பிறகு அதைக் காலால் குப்பைக் கூடைப் பக்கம் தள்ளி விட்டான்.

மேனேஜர் காபியை எடுத்து வரச் செய்தார். காபியை பருகிக் கொண்டே சாதாரணமாக கேட்பது போல் "அந்த அறையில் இருந்த பெண்கள் யாரு?" என்று கேட்டான்.

"எங்க மேனேஜிங் டைரக்டரின் மகளும் அவளுடைய சினேகிதிகளும். ஏதோ பார்ட்டி என்று சொன்னாங்க."

"யாரு? ரம்யாவா?" தனக்கு அதில் எந்த ஆர்வமும் இல்லாதது போல் விசாரித்தான் ரேவந்த்.

"இல்லை. அரவிந்தா என்று பெயர். நாம்ப போன போது முதலில் கோபமாக கதவைத் திறந்தாளே. அவள் தான்."

அதற்குள் ரிசப்ஷனிஸ்ட் வந்து தேடத் தொடங்கினான்.

"என்ன வேண்டும்?"

"பில் புத்தகம் சார்."

"இங்கே வரவில்லை" என்றார் மேனேஜர். ரிசப்ஷனிஸ்ட் போய் விட்டான்.

மறுபடியும் இருவரும் உரையாடலைத் தொடங்கி னார்கள். ஐந்து நிமிடங்கள் பொதுவாக பேசிய பிறகு "மேனேஜிங் டைரக்டரின் மகளுக்குக் கூட நீங்க பில் போடுவீங்களா?" என்று கேட்டான்.

"லிமிடெட் கம்பெனி இல்லையா. அதோடு யாரோ சினேகிதியின் பார்ட்டியாம்."

"யாரந்த சினேகிதி? ரம்யாவா?"

"எனக்குத் தெரியாது."

ரிசப்ஷனிஸ்ட் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு மறுபடியும் வந்தான். மேனேஜர் மேஜை மீது இருந்த காகிதங்களையும், புத்தகங்களையும் எடுத்து காண்பித்து விட்டு "இங்கே இல்லைன்னு சொன்னேனே" என்றார்.

அதற்குள் வெளியே மோட்டார் சைக்கிள் வந்து நின்ற ஓசை கேட்டது. அதற்காகவே காத்திருந்த ரேவந்த் குனிந்து "அட! இங்கே ஏதோ புத்தகம் விழுந்திருக்கே. இதுதானா?" என்று எடுத்துக் கொடுத்தான்.

ரிசப்ஷனிஸ்ட் முகம் மலர்ந்து விட்டது. "இது தான் சார்" என்று அதை எடுத்துக் கொண்டு போனான்.

காபியைக் குடித்து முடித்த ரேவந்த் எழுந்து நின்று "தாங்க்ஸ் ஃபார் யுவர் காபி" என்று கைகுலுக்கி விட்டு வெளியே போர்டிகோவிற்கு வந்தான். அவன் வெளியே வரும் போது மேலும் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் உள்ளே நுழைந்தன.

ஜேம்ஸ் அதற்கு முன்பே அங்கு வந்திருந்தான். நான்கு பேரும் ரேவந்த் அருகில் வந்தார்கள். அதில் இருவர் ஜீன்ஸ் உடையில் இருந்தார்கள். பார்ப்பதற்கு அலட்சியமாக இருப்பது போல் தென்பட்டார்களே தவிர நால்வருமே புத்திசாலிகள். சுறுசுறுப்பாக வேலை செய்பவர்கள். ரேவந்தின் கீழே வேலை செய்பவர்களாக இருந்தாலும் நெருங்கிய நண்பர்கள். அவர்களுக்கும் ரேவந்தின் காதலைப் பற்றியும், அதற்காக அவன் படும் பாட்டைப் பற்றியும் ஓரளவுக்குத் தெரியும்.

ரேவந்த் அன்று தான் போட்டிருந்த திட்டத்தை, கடைசி நிமிடத்தில் அந்தப் பெண் தப்பித்துக் கொண்டதையும் விவரமாக சொன்னான்.

"வலையில் சிக்கவிருந்த மீன் நழுவி விட்டது என்று சொல்" என்றான் ஜேம்ஸ் எல்லாவற்றையும் கேட்டு விட்டு, "சரி. இப்போ நாங்க என்ன செய்யணும்."

"அந்தப் பெண் போய் விட்டாள். ஆனால் சினேகிதிகள் நால்வரும் அந்த அறையில் தான் இருக்கிறார்கள். இன்னும் சற்று நேரத்தில் அவர்களும் கிளம்பிப் போய் விடுவார்கள்."

"அவர்களை சிறைப்படுத்தி ஆங்கிலப் படங்களில் வருவது போல் ரசகியத்தை தெரிந்து கொள்ளணுமா?

எல்லோரும் சிரித்தார்கள். ரேவந்த் சிரிக்கவில்லை. அந்தப் பெண்கள் வெளியே வரப்போகும் வாசலை பார்த்தபடியே சொன்னான் "இந்தப் பெண்கள் ஐந்து பேருமே நெருங்கிய சினேகிதிகள் போலிருக்கு. சாதாரணமாக இவ்வளவு நெருக்கமான நட்பு யாருக்கு ஏற்படும்? ஒரே கல்லூரியில் படிப்பவர்களுக்கு, ஒரே தெருவில் வசிப்பவர்கள், வீணை, டான்ஸ் போன்று ஒரே மாதிரியான ரசனைகள் இருப்பவர்கள்... இவர்களுக்குள் தான் நெருங்கிய நட்பு இருக்கும். சரிதானே. இந்த நால்வரையும் நீங்க நான்கு பேரும் தனித்தனியாக பின் தொடர்ந்து போகணும். நால்வரும் ஒரே தெருவைச் சேர்ந்தவர்கள் என்றால் அந்த ரம்யாவின் முகவரி நமக்குக் கிடைத்து விட்டாற் போல்தான். அப்படி இல்லாத பட்சத்தில் அந்த நால்வருக்கும் பொதுவான ரசனை ஏதாவது இருந்தால் அதைக் கண்டுபிடிக்கணும். அதன் மூலம் அந்த ஐந்தாவது பெண் யாரென்று நமக்குத் தெரிந்து விடும்."

அவனுடைய யோசிக்கும் திறமையைக் கண்டு அவர்கள் வியப்படைந்தார்கள்.

"இந்தப் பெண்கள் வெளியே போனபிறகு அந்த ரம்யா எப்படியும் இவர்களை சந்திக்காமல் இருக்க மாட்டாள். எது எப்படி போனாலும் அவளை இன்று பிடித்தே தீருவோம்." ஜேம்ஸ் உற்சாகத்துடன் சொன்னான்.

"எனக்கு ஐந்து மணிக்கு பிளைட். இன்னும் ஒரு மணி நேரத்தில் இந்த விவரங்கள் தெரிந்தாக வேண்டும்."

"ஒரு மணி நேரத்திலா? இம்பாசிபிள்!"

"ஏன் முடியாது?"

"ஒரே தெருவாக இருந்தால் பரவாயில்லை. ஆனால் ஏதாவது டான்ஸ் ஸ்கூல் மாணவிகள் என்றால் கஷ்டம்."

"அதற்காகத்தானே உங்களைத் தேர்ந்தெடுத்தேன்," அவர்களை உற்சாகப்படுத்துவது போல் சொன்னான் ரேவந்த். அதற்குள் வாசல் அருகில் அரவம் கேட்டது. ரேவந்த் தூணுக்கு பின்னால் மறைந்து கொண்டான்.

இரண்டு பெண்கள் ஒரு காரிலும், மற்ற இருவரும் ஆட்டோவிலும் கிளம்பிப் போனார்கள்.

"க்விக். கிளம்புங்கள். பத்து நிமிடங்களுக்கு ஒரு முறை எங்க வீட்டுக்கு போன் செய்யுங்க" என்றான் ரேவந்த். நான்கு மோட்டார் சைக்கிள்களும் பெருத்த ஓசையைக் எழுப்பிக் கொண்டே கிளம்பி விட்டன.

ரேவந்த் மணியை பார்த்துக் கொண்டான். இரண்டடிக்கப் போகிறது. வெயில் தீவிரமாக இருந்தது.

அவன் வீட்டை அடைந்த ஐந்து நிமிடங்களுக்கு ஜேம்ஸிடமிருந்து போன் வந்தது.

"ஒரு பெண்ணை காரில் திலக் தெருவில் இறக்கி விட்டு இரண்டாவது பெண் பிரசிடெண்ட் தெரு பக்கம் போய் விட்டாள். நான் இங்கேயே நின்றுவிட்டேன். இதிலிருந்து

அந்த நால்வரும் ஒரே தெருவைச் சேர்ந்வங்க இல்லைன்னு தெரிகிறது" என்றான் ஜேம்ஸ் துப்பறியும் சிங்கம் போல்.

"அந்த விஷயம் அவர்கள் தனித்தனியாக ஆட்டோ விலும், காரிலும் போனபோதே தெரிந்து விட்டது" என்றான் ரேவந்த் நிதானமாக குரலில்.

ஜேம்ஸ் திடுக்கிட்டான்.

"அது போகட்டும். இப்போ நீ என்ன செய்யப் போகிறாய்?"

"அந்தப் பெண்ணின் வீட்டுக்குள் நேராக நுழையப் போகிறேன்."

"மைகாட்! அவ்வளவு துணிச்சலான காரியத்தை எப்படி செய்யப் போகிறாய்?"

"சோஷல் செக்யூரிடீ ஆபிசராக."

"இது நிச்சயமாக உன் மூளைக்கு தோன்றிய யோசனை இல்லை."

ஜேம்ஸ் சிரித்தான். "ஏதோ நாவலில் படித்தேன். அதில் ஒரு மந்திரவாதி இதே போல் செய்து கதாநாயகியை கண்டு பிடிக்க முயற்சி செய்கிறான்."

"சமுதாய முன்னேற்றத்திற்கு உதவாத மூன்றாம்தர நாவல்களை படிப்பதால் இது போன்ற பயன்கள் கூட இருக்கா. கோ அஹெட்" ரேவந்த் போனை வைத்து விட்டான்.

இரண்டு நிமிடங்கள் கழித்து மற்றொரு போன் வந்தது.

"நான் பின் தொடர்ந்தது போலீஸ் கமிஷனரின் பெண்" என்றான் அந்த இளைஞன்.

"குட்."

"காரை விட்டிறங்கி அந்தப் பெண் நேராக வீட்டுக்குள்ளே போய் விட்டாள்."

"அப்புறம்?"

"தன்னை யாரோ பின் தொடர்ந்து வந்ததாக வீட்டில் சொல்லியிருப்பாள் போலும். உள்ளேயிருந்து இரண்டு போலீசார் வந்து என்னைப் பிடித்துக் கொண்டார்கள்."

"இப்போ எங்கிருந்து போன் செய்கிறாய்?"

"டூ டவுன் போலீஸ் ஸ்டேஷன் லாக்கப்பிலிருந்து."

## 19

மூன்றாவது போன் வருவதற்கு கொஞ்சம் தாமதமாகி விட்டது. ஆனால் அந்த இளைஞன் எல்லா விவரங்களையும் சேகரித்த பிறகு போன் செய்திருக்கிறான். ரேவந்த் போனை எடுத்ததும் விவரமாக எல்லாவற்றையும் சொன்னான்.

"நான் பின் தொடர்ந்து போன பெண்ணின் பெயர் அரவிந்தா. ஆனந்த் ஹோட்டலின் மேனேஜிங் டைரக்டரின் மகள். ரொம்ப புத்திசாலி. விசாலமான கண்கள். இதழ்களில் எப்போதும் மாறாத புன்னகை."

ரேவந்த் அலுப்புடன் "அந்த விவரங்கள் தேவையில்லை. மற்ற விஷயங்களைச் சொல்லு" என்றான்.

"அரவிந்தாவுக்கு கிதார் இசை பிடிக்கும். சிவாஜி கணேசன் என்றால் உயிரை விடுவாள். பி.எஸ்.ஸி. பாஸ் செய்திருக்கிறாள். அடிக்கடி சினிமாவுக்கு போவாள். அதுவும் சிவாஜி படம் என்றால் முதல் நாளே பார்த்துவிடுவாள். ஜீன்ஸ் உடை அணிவது பிடிக்கும். தந்தைக்கு ஒரே மகள்.

பணத்தை தாராளமாக செலவு செய்வாள். இப்போ கூட ஹோட்டல் பில்லை தானே தருவதாக பிடிவாதம் பிடிக்கிறாள்."

ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்த ரேவந்த் திடுக்கிட்டான். "ஹோட்டல் பில்லை?" என்றான்.

"ரெஸ்டாரெண்ட்லிருந்து பேசுகிறேன்."

"அந்தப் பெண் எங்கே இருக்கிறாள்?"

"என் பக்கத்தில்தான்."

"முட்டாளே! நான் சொன்ன விஷயம் என்ன ஆச்சு?"

"அந்தப் பெண்ணை நான் பின் தொடர்ந்து போன போது அந்தப் பெண் திரும்பிப் பார்த்து சிரித்தாள். பாஸ். உடனே நட்பு மலர்ந்து விட்டது. அந்தப் பெண்தான் இந்த விவரங்களை எல்லாம் சொன்னாள்."

"டேய் இடியட்! இந்த விவரங்கள் எல்லாம் எதுக்கு? ரம்யாவின் போன் நம்பரைத் தெரிந்து கொண்டால் வேலை முடிந்து விடும் இல்லையா."

"மன்னித்து விடு பாஸ். நானும் அரவிந்தாவும் ஆழமாக காதலித்து வருகிறோம். காதலில் மோசடிக்கே இடமில்லை. நான் உங்க காதலியைப் பற்றி விசாரித்தால் அரவிந்தாவுக்கு என் மீது சந்தேகம் வரலாம். அப்படி வந்து விட்டால் அப்புறம் என்னால் உயிரோடு இருக்க முடியாது."

"நான் உன் கை கால்களை முறிக்கப் போகிறேன்." கோபத்தை அடக்கிக் கொண்டே சொன்னான் ரேவந்த்.

"முறித்துவிடு பாஸ். காதலுக்கு தியாகம் தான் முக்கியம்."

"உன் காதலை தூக்கி உடைப்பையில் போடு. நீங்க சந்தித்துக் கொண்டு அரைமணி கூட ஆகவில்லையே?"

"சீதா பிராட்டியார் ஸ்ரீ ராமரை முதல் பார்வையிலேயே காதலித்தாள். சகுந்தலை து–, து....து....,

"துஷ்யந்தனை."

"ஆங். துஷ்யந்தனை முதல் சந்திப்பிலேயே காதலித்தாள். காதலுக்கு நேரம் காலம் தேவையில்லை. ஒருவர் கண்ணில் மற்றவர் பார்த்துக் கொண்டே எவ்வளவு நேரமானாலும் கழிப்பது காதலர்களின் முக்கிய லட்சணம். மன்னித்து விடு பாஸ். அரவிந்தா அழைக்கிறாள். நான் போகணும்" என்று போனை வைத்துவிட்டான்.

ரேவந்த் போனை வைத்து விட்டு தலைமுடியை பிய்த்துக் கொண்டான். தன் திட்டம் பலிக்கும் என்று தோன்றவில்லை. ஒருத்தன் ஜெயிலிலும், இன்னொருவன் பெண்ணின் அணைப்பிலும் சிறைப்பட்டு விட்டார்கள்.

என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்த போதே நாலாவது போன் வந்தது. அந்த இளைஞன் நேர்மையாக ஆங்கிலத்தில் தான் சேகரித்த விவரங்களை சொன்னான்.

"நான் ஃபாலோ செய்த பெண்ணின் பெயர் பானுமதி. வயது பதினெட்டு. இரண்டு நாவல்களும், ஐந்து சிறுகதைகளும் எழுதியிருக்கிறாளாம். பள்ளிப் படிப்பு ராமாவரத்தில் படித்தாளாம். ஸ்கூல் ஃபைனலுடன் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு இலக்கியத் துறையில் அடி எடுத்து வைத்தாளாம். இது தெரிந்ததும் அவளுடைய அபிமானி என்று சொல்லிக் கொண்டு நேராக வீட்டுக்குள் போய் விட்டேன். என் வேலை எளிதாகி விட்டது."

"அது சரி. உனக்கு தமிழ் எழுத படிக்கத் தெரியாதே!"

"அதனால் ஆபத்து எதுவும் வரவில்லை. அந்தப் பெண் பேசிக் கொண்டே இருந்தாள். நான் வெறுமே கேட்டுக் கொண்டிருந்தேன். அவ்வளவுதான். நடுவில் இரண்டு முறை காபி கூட கொடுத்தாள்."

"அது சரி நமக்குத் தேவையானதைச் சொல்லு. அந்தப் பெண்ணின் விருப்பு வெறுப்புகள், ரசனை என்னவாம்?

"வீணை என்றால் ரொம்ப பிடிக்குமாம். சிதார் இசையை மணிக்கணக்காக கேட்டுக் கொண்டு இருப்பாளாம். கவிதை, ஓவியத்தில் கொஞ்சம் திறமை இருக்கிறதாம். கிரிக்கெட் என்றால் விருப்பம். கோலம் போடுவாளாம் இன்னும் ஏதேதோ சொன்னாள். எல்லாம் கேட்டபிறகு அவளுக்கு எதில் தேர்ச்சி இருக்கு என்றும் எது அவளுக்கு விருப்பம் என்றும் எனக்குப் புரியவில்லை."

"இவற்றால் நமக்கு எந்த பிரயோஜனமும் இல்லை. வேறு ஏதாவது தகவல் உண்டா?"

"திருமணத்தைப் பற்றி இவளுக்கு வித்தியாசமான கருத்துக்கள் இருக்கு. திருமணமே செய்து கொள்ள மாட்டாளாம். அப்படியே செய்து கொண்டாலும் பிறகு கணவனை விட்டு விடுவாளாம். இந்த உலகத்தில் பெரிய மனிதர்கள் எல்லோரும் திருமணம் ஆகாதவர்களாகவோ, வாழ்க்கைத் துணையைத்தள்ளி வைத்தவர்களாகவோ அல்லது கல்யாணமான பிறகு வேறு பெண்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டவர்களாகவோ இருக்கிறார் களாம். இந்தப் பெண்ணுக்கு சீக்கிரமாக திருமணம் ஆனால் நன்றாக இருக்கும் என்று தோன்றுகிறது. ரொம்ப முற்போக்கான எண்ணங்கள் கொண்டவள். அப்புறமாய் போன் செய்கிறேன்" என்று போனை வைத்து விட்டான்.

ரேவந்திற்கு என்ன செய்வதென்று புரியவில்லை. திரும்பவும் பழைய இடத்திற்கே வந்து சேர்ந்து விட்டது

போல் தோன்றியது. ஜேம்ஸிடமிருந்து போன் வந்தது. இயலாமை தொனிக்கும் குரலில் அவன் சொன்னான். "அந்த வீட்டில் நுழைவதே கஷ்டமாக இருக்கு பாஸ். ஒரு மணி நேரமாக முயற்சி செய்கிறேன் முடியவில்லை. இவங்க ரொம்ப பழைமை வாதிகளாக இருப்பாங்க போலிருக்கு."

"பின்னே என்ன செய்யலாம்?"

"அதுதான் எனக்கும் புரியவில்லை."

"ஜேம்ஸ்! ஒரு வேலையைச் செய்."

"என்ன?"

"ஹைஸ்கூல் முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் சார்பில் கூட்டம் ஒன்று நடத்தப் போவதாக சொல்லு. மாணவர் தலைவனாக உள்ளே போ."

"ஆனால் அவள் எந்த பள்ளியில் படித்தவள் என்று நமக்குத் தெரியாதே. அதுவும் ஏழெட்டு வருடங்களுக்கு முன்னால்."

"ராமாவரம் பள்ளி என்று சொல்லு."

"ஆனால்..."

"இருட்டில் அம்பு விட்டு பார்ப்போம். இது தான் கடைசி அஸ்திரம். முயற்சி செய் ஜேம்ஸ்" என்று போனை வைத்து விட்டான்.

அதற்குப் பிறகு ஒவ்வொரு நிமிடமும் பதட்டத்துடன் கழிந்தது. முதல் இரண்டு பெண்களும் அந்தப் பள்ளியில் படித்திருக்கிறார்கள் என்பதால் மூன்றாவது பெண்ணும் அதேப் பள்ளியில் படித்திருக்கலாம் என்பது கொஞ்சம் வித்தியாசமான லாஜிக்...மணி மூன்று...மூன்றேகால்.

ரேவந்திற்கு முள் மீது அமர்ந்திருப்பதுபோல் தோன்றியது. போனையே பரபரப்புடன் பார்த்துக்

கொண்டிருந்தான். அவன் பொறுமையை சோதிப்பது போல் வெகு நேரமாகியும் போன் ஒலிக்கவே இல்லை.

நண்பனை காவல் நிலையத்திலிருந்து வெளியே அழைத்து வர வேண்டிய வேலை வேறு இருக்கிறது. அந்த விஷயத்தை ஜேம்ஸிடம் சொல்ல வேண்டும். நடுவில் விமான நிலையத்திற்கு போன் செய்து தெரிந்து கொண்டான். டில்லி பிளயிட் ஐந்து மணிக்கே கிளம்புகிறதாம். தாமதம் இல்லை என்று சொன்னார்கள்.

அவன் போனை வைத்ததுமே அது ஒலித்தது.

ஜேம்ஸ்!

"பாஸ்! நீ எப்படிக் கண்டுபிடித்தாயோ தெரியாது. அந்தப் பெண் படித்தது ராமாவரத்தில்தானாம்" என்றான் உத்வேகம் நிரம்பிய குரலில்.

ரேவந்த் போனை வைத்து விட்டான். உரையாடலை தொடரவில்லை. இனி ஒவ்வொரு நிமிடமும் மதிப்பு வாய்ந்தது. நாலரை மணிக்கெல்லாம் விமான நிலையத்தில் இருக்க வேண்டும். இப்பொழுதே மூன்றறையாகி விட்டது.

ராமாவரம் நகரத்திலிருந்து பதினைந்து கி.மி. தொலைவில் மிலிடரி கண்டோன்மெண்ட் ஏரியாவுக்கு அப்பால் இருந்தது. அப்பள்ளியில் ஆங்கில மீடியமும் இருந்தது. மிகவும் தரமான பள்ளி.

அந்தப் பள்ளிக்குச் சென்று ஏழெட்டு வருடங்களுக்கு முந்தைய அடென்டென்ஸ் ரிஜிஸ்டரை எடுத்து அதில் அரவிந்தாவின் பெயர் இருக்கிறதா என்று தெரிந்துகொண்டு பிறகு "ஆர்" என்ற எழுத்தில் தொடங்கும் பெயரைத் தேடவேண்டும்.

ஒரு மணி நேரத்தில் இதெல்லாம் முடியுமா? போய்ச் சேரவே கால்மணி நேரமாகி விடும். ரேவந்த் மேலும்

யோசிக்கவில்லை. சரியாக இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு அவனுடைய கார் ராமாவரத்தை நோக்கிப் பறந்து கொண்டிருந்தது. அவன் ராமாவரத்தை போய்ச் சேரும் போது நாலடிக்க கால்மணி இருந்தது. இன்னும் கால் மணி நேரத்திற்குள் வேலை முடித்துக் கொள்ள வேண்டும்.

அவனுக்கு அந்தப் பெண்ணை எப்படியாவது பிடித்தே தீர வேண்டும் என்ற ஆர்வம் எவ்வளவு பலமாக தோன்றி விட்டது என்றால் அதற்காக டில்லி பயணத்தைக் கூட விட்டு விடலாம் என்று நினைத்தான். போலன்ஸ்கீயுடன் ஆடுவதை விட இந்தப் பெண்ணுடன் பந்தயத்தில் ஜெயிப்பது சவால் ஆக இருக்கும் போல் தோன்றியது. தன் எண்ணத்தை நினைத்த போது அவனுக்கே சிரிப்பு வந்தது. தன்னுடைய சொந்த விஷயத்திற்காக இப்படி நினைப்பதே தவறு.

யோசித்தபடியே ஸ்கூல் காம்பௌண்டுக்குள் காரைக் கொண்டு போய் நிறுத்தினான். அன்று பள்ளி விடுமுறை போலும். விளையாட்டு மைதானமும், வராண்டாவும் ஆளரவமற்று இருந்தது. மாலை வெயிலுக்கு தூண்களின் நிழல் நீண்ட வராண்டாவில் நீளக் கோடுகளாய் விழுந்து கொண்டிருந்தன. அவன் நடந்து கொண்டிருந்த போது முகத்தில் வந்து விழுந்த நிழலும் வெளிச்சமும் அவன் உள்ளத்தில் ஊசலாடிக் கொண்டிருக்கும் ஆசை, நிராசைகளை போலவே இருந்தன. அவன் வெல்வானா? அதிர்ஷ்டவசமாய் ஆபீஸ் அறை திறந்தே இருந்தது. அவன் உள்ளே நுழைந்தான்.

விசாலமான ஹால் அது. ஏறத்தாழ பத்து மேஜைகள் இருந்தன. மூலையில் இருந்த ஒரு மேஜைக்கு முன்னால் மட்டும் அறுபது வயது கிழவனை போல் தோற்றமளிக்கும் நாற்பது வயது ஏழை இந்திய குமாஸ்தா ஒருவர் உட்கார்ந்து குனிந்த தலை நிமிராமல் வேலை செய்து கொண்டருந்தார். ரேவந்த் அவருக்கு முன்னால் போய் நின்று லேசாக இருமினான்.

பழக்கப்பட்ட குரலில் "உட்காரும்மா" என்றவர் தலையை உயர்த்தி ரேவந்தைப் பார்த்ததும் வியப்படைந்து "அட! நீ எப்படி உள்ளே வந்தாய்? மெயின் கேட் அருகில் கூர்கா ஆண்களைத் தடுத்து நிறுத்தி விடுவானே?" என்றார்.

"கேட் அருகில் யாரும் இல்லை சார்" பணிவுடன் சொன்னான் ரேவந்த்.

"சொல்லு தம்பி. உனக்கு என்ன வேண்டும்?"

ரேவந்த் உடனே பதில் சொல்லவில்லை. கைக்குட்டையை எடுத்துக் கண்களைத் துடைத்துக் கொண்டான். அவனுக்கு துக்கம் பொங்கி கொண்டு வந்தது.

கிழவர் கலவரமடைந்தார். "என்ன ஆச்சு தம்பீ? ஏன் இந்த துக்கம்?" என்று கேட்டார் நாற்காலியை விட்டு எழுந்து கொண்டே.

"என் தங்கை இறந்து விட்டாள் சார்" என்றான் ரேவந்த் விசும்பிக் கொண்டே.

அதற்காக இங்கே வந்து ஏன் அழுகிறாய்?' என்று அவர் கேட்கவில்லை. இரக்கம் ததும்ப ரேவந்தைப் பார்த்து "எப்போ இறந்து போனாள்?" என்று கேட்டார்.

"ஒரு வாரம் ஆகி விட்டது சார். ஒரே தங்கை."

அவர் ரேவந்தை இரக்கத்துடன் பாாத்தார். ரேவந்த் சற்று தேறிக் கொண்டு "மன்னிச்சுக்குங்க சார். உங்க வேலையைக் கெடுத்து விட்டேன்" என்றான்.

"உன் தங்கை யாரு தம்பி?"

"பெயர் அரவிந்தா. உங்க பள்ளியில் தான் படித்தாள்."

"அப்படியா" என்றார் அவர் 'என்னால் உனக்கென்ன உதவி செய்ய முடியும்?' என்பது போல் பார்த்துக் கொண்டே.

ரேவந்த் குரலை செருமிக் கொண்டு "ஒரே தங்கை சார். நாங்க எவ்வளவோ அருமையாக வளர்த்தோம். பீச்..விதியை வெல்ல யாரால் முடியும்?"

"வருத்தப்படாதே தம்பி. போனவங்க எல்லோரும் புண்ணியம் செய்தவர்கள்தான்."

"அரவிந்தா சாகும் போது தன் உயிர்சினேகிதிக்கு இந்த விஷயத்தைச் சொல்லச் சொன்னாள் சார். அந்த சினேகிதியின் முகவரி கிடைக்கவில்லை."

"யார் அந்த சினேகிதி?"

"முழு பெயரும் தெரியாதுங்க. அதற்குள் அரவிந்தா வுக்கு மேல் மூச்சு வாங்கத் தொடங்கியது. ர...ர...ரா என்று சொல்லிக் கொண்டிருந்த போதே உயிர் போய் விட்டது." ஹோவென்று அழப் போனவன் எப்படியோ கட்டுப் படுத்திக் கொண்டான்.

"பாவம். உயிர் போகும் தருணத்தில் கூட அவளைப் பற்றி நினைத்தாள் என்றாள் எவ்வளவு நெருங்கிய சினேகிதியாக இருக்கணும்?"

"ஆமாம் சார். அதுக்குத்தான் இவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கு. இந்த விஷயத்தை அந்தப் பெண்ணுக்கு தெரியபடுத்தாவிட்டால் நாளைக்கு பத்தாவது நாள் பிண்டத்தை காக்கை கூட தொடாது. என் தங்கையின் ஆத்மா துடிதுடிக்கும் சார்" என்று புலம்பினான்.

இங்கே தான் ஆடும் இந்த நாடகம் அங்க அந்த சினேகிதிகளின் கூட்டத்திற்குத் தெரிய வந்தால் வேறு வினையே வேண்டாம். தன்னைக் கண்டந் துண்டமாக வெட்டி காக்கைக்கு போடுவது உறுதி என்று எண்ணிக் கொண்டான்.

அவர் ரேவந்தின் தோளில் பரிவோடு கையைப் பதித்து "வருத்தப் படாதே தம்பீ. என்னால் என்ன செய்ய முடியுமோ சொல்லு" என்றார்.

"பிள்ளை குட்டியிருப்பவங்க. அதான் என் வேதனையை நன்றாக புரிஞ்சுகிட்டீங்க" என்றான் அவரைப் புகழ்வது போல்.

"ஆனால் எங்க குழந்தைகள் யாருமே இறந்து போக வில்லை. ஆறு பேரும் உயிரோடுதான் இருக்கிறார்கள்."

ரேவந்த் பதட்டத்துடன் "என் எண்ணம் அது இல்லை சார்" என்று கன்னத்தில் போட்டுக் கொண்டான்.

"சொல்லு தம்பி. என்ன செய்ய முடியும்?"

"ஐந்து ஆறு வருடங்களுக்கு முன்னால் அரவிந்தா இந்தப் பள்ளியில்தான் படித்திருக்கிறாள். அதனால் அந்த வருடத்து அடெண்டென்ஸ் ரிஜிஸ்டரை எடுத்துப் பார்த்து அதில் 'ர' என்ற எழுத்துடன் தொடங்கும் பெண்ணின் பெயரைத் தேடிப் பார்க்கணும். அந்தப் பெயரை வைத்துக் கொண்டு பழைய ரிகார்டை எடுத்து அந்தப் பெண்ணின் தந்தையின் பெயரையும், முகவரியையும் தேடணும். இதெல்லாம் ரொம்ப கஷ்டமான வேலைன்னு எனக்குத் தெரியும். ஆனால் பிண்டம்...காக்கைகள்." மேலும் செண்டி மெண்டுடன் நாடகமாடினால் நன்றாயிராது என்று எண்ணி பாதியிலேயே நிறுத்திக் கொண்டான்.

அவர் மனம் கரைந்து போய்விட்டது. "பரவாயில்லை தம்பி. இதில் கஷ்டமென்ன இருக்கு? வா பார்ப்போம்" என்று எழுந்து கொண்டார்.

இருவரும் ஸ்டோர் ரூமின் பூட்டைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தார்கள். இந்தியாவின் பொருளாதார நிலைமையைப் போலிருந்தது அந்த அறை.

சிறிய விளக்கைப் போட்டுக் கொண்டு பழைய ரிகார்டுகளைத் தேடத் தொடங்கினார்கள். ஏற்கனவே பத்து நிமிடங்கள் கழிந்து விட்டன. இன்னும் ஐந்து நிமிடங்களில் கிளம்பாவிட்டால் விமானத்தைப் பிடிக்க முடியாது.

"ஐந்து வருடங்களுக்கு முன்பா? ஆறு வருடங்களுக்கு முன்பா? உனக்கு சரியாக நினைவு இருக்கா?" அவர் கேட்டார்.

"இரண்டையும் பாருங்க." ஐந்து வருடங்களுக்கு முந்தைய ரிஜிஸ்டரை எடுத்துப் பார்த்தார்கள். அதில் அரவிந்தாவின் பெயர் இல்லை. அதற்கு முதல் வருடத்தின் ரிஜிஸ்டர் மேல் தட்டில் இருந்தது. கிழவர் ஸ்டூலைப் பிடித்துக் கொள்ள ரேவந்த் ஏறித் தேடி எடுத்தான். அவன் உடுத்தியிருந்த வெள்ளை ஆடைகள் தூசி படிந்து பழுப்பு நிறத்திற்கு மாறி விட்டன.

அந்த ரிஜிஸ்டரில் மட்டும் பெயர் இல்லாவிட்டால் இனி தோற்று விட்டாற்போல் தான். அந்த வருடத்து ரிஜிஸ்டர்கள் மொத்தம் நான்கு இருந்தன. நான்கு செக்ஷன்களின் ரிஜிஸ்டர்கள். கிழவர் 'ஏ' செக்ஷன் ரிஜிஸ்டரைப் பார்த்துக் கொண்டிருந்தபோது ரேவந்த் 'பி' செக்ஷன் ரிஜிஸ்டரைப் பார்க்கத் தொடங்கினான்.

"கிடைத்துவிட்டது." இருவரும் ஒரே சமயத்தில் சொல்லிக் கொண்டே தலையை உயர்த்தினார்கள்.

"ஏ செக்ஷனில் கே.அரவிந்தா என்று இருக்கு."

"பி செக்ஷனிலும் இருக்கு" என்றான் ரேவந்த் இயலாமையுடன்.

"அப்போ ஒரு காரியம் செய்வோம். அப்ளிகேஷன் பாரத்தை எடுத்துப் பார்த்தால் தெரிந்து விடும் இல்லையா? உங்க அப்பாவின் பெயர் என்ன?"

தொண்டையில் ஏதோ அடைப்பது போல் இருந்தது ரேவந்திற்கு. அவன் பதில் சொல்லும் முன்பே கிழவர் பழைய பைலை எடுத்து அதிலிருந்த அப்ளிகேஷனுடனும் புகைப்படமும் இருந்ததால் ரேவந்த் நிம்மதியாக மூச்சை விட்டுக் கொண்டு தானும் தேடத் தொடங்கினான்.

அவர் ஒரு அப்ளிகேஷனைப் புரட்டிக் கொண்டிருந்த போது அதிலிருந்த போட்டோவைப் பார்த்து ரேவந்த் திகைப்பும், வியப்பும் ஒன்றாக சேர "இதுதான்" என்று கத்திவிட்டான். அந்த கத்தல் அந்த அறையில் எதிரொலித்தது.

அவர் அதை வெளியே எடுத்து "இந்தப் பெண்ணா?" என்று கேட்டார்.

"ஆமாம். இந்தப் பெண்ணேதான்." உணர்ச்சிப் பெருக்குடன் சொன்னான் ரேவந்த்.

அவர் அப்ளிகேஷனை கவனமாக பரிசீலித்துவிட்டு "என்ன இது? இதில் பானுமதி என்று போட்டிருக்கே?" என்று கேட்டார்.

ரேவந்த் ஒரு நிமிஷம் அதிர்ச்சி அடைந்தாலும் உடனே சமாளித்துக் கொண்டு "இந்தப் பெண்ணின் பெயர் பானுமதிதான். எங்க வீட்டுக்கு அடிக்கடி வருவாள். கதையெல்லாம் கூட எழுதுவாள்" என்றான்.

மறுபடியும் போட்டோக்களை பரிசீலித்த போது இன்னொரு தெரிந்த முகம் கண்ணில் பட்டது.

"இவள் யாரு?" ரேவந்த் கேட்டான்.

"போலீஸ் ஆஃபீசரின் மகள் காத்யாயினி. இவளும் உங்க வீட்டுக்கு வருவாளா?"

ரேவந்த் சோர்வுடன் தலையை அசைத்தான். உண்மைக்கு இவ்வளவு அருகாமையில் வந்து விட்டதற்கு மகிழ்ச்சி அடைவதா வேண்டாமா என்று கூட அவனுக்குத்

தெரியவில்லை. இறுதியில் அரவிந்தாவின் பெயர் "ஏ" செக்ஷனில் தென்பட்டது.

"எல்லோரும் ஒரே செக்ஷனில் படித்திருக்கணும்னு சட்டம் எதுவும் இல்லை தம்பீ. சி செக்ஷனில் இருக்கும் பானுமதி ஏ செக்ஷனில் இருக்கும் உன் தங்கைக்கு சினேகிதியாக இருந்தால், இன்னொரு சினேகிதி அதே போல் வேறு செக்ஷனில் இருக்க வாய்ப்பு இருக்கே?" என்றார்.

"இருந்திருக்கலாம். செக்ஷன் என்ன? ஒரே ஸ்கூலில் வேறு வகுப்பில் கூட படித்திருக்கலாம்" என்றான் ரேவந்த்.

அவர் அதைப் பொருட்படுத்தாமல் "முதல் எழுத்து என்ன சொன்னாய்? "ஆ" தானே. எல்லா செக்ஷன்களிலும் சேர்த்து அந்த எழுத்தில் தொடங்கும் பெயர்கள் எவ்வளவு இருக்கு என்று பார்ப்போம். "ஏ" செக்ஷனில் ஐந்து, பி செக்ஷனில் மூன்று ...சி யில் ஆறு, டி செக்ஷனில்..." மேலும் ஏதோ சொல்லத் தொடங்கிய போது வெளியே கார் புறப்பட்ட ஓசை கேட்டது. அவர் நிமிர்ந்தபோது எதிரே ரேவந்த் இருக்கவில்லை.

காரை வேகமாக ஓட்டிக் கொண்டே ரேவந்த் தன்னைத் தானே "இடியட்" என்று திட்டிக் கொண்டான்.

# 20

பெருத்த ஓசையுடன் போயிங் முன்னால் போய்க் கொண்டிருந்தது. ரேவந்த் இருக்கையில் பின்னால் சாய்ந்து கொண்டு கண்களை மூடிக் கொண்டான். அழகான ஏர்ஹோஸ்டெஸ் ஒருத்தி விமானம் விபத்திற்குள்ளாகும் போது ஆக்ஸிஜன் மாஸ்கை பயன்படுத்துவது எப்படி என்று விவரித்துக் கொண்டிருந்தாள்.

தான் தோற்றுப் போய் விட்டோம் என்றும் அந்தப் பெண் ஜெயித்து விடப்போகிறாள் என்றும் ரேவந்துக்கு புரிந்து விட்டது. நாளை மறுநாள் வரையிலும் கெடு இருக்கிறது. ஆனால் என்ன பயன்? தான் டில்லியிலிருந்து கிளம்பிவரும் போது மாலை ஐந்து மணியாகி விடும்.

சாக்லேட்டுகளை எடுத்து வந்த ஏர்ஹோஸ்டஸிடம் "டில்லியிலிருந்து திரும்பி வரும் பிளைட் எத்தனை மணிக்கு வரும்?" என்று கேட்டான்.

"சரியாக மாலை **4.55**க்கு சார்."

தாங்க முடியாத சோர்வு ரேவந்தை ஆட்கொண்டது. தன் **ஊகம் உ**ண்மையானால் அந்தப் பெண் தன்னை வர வேற்பதற்காக அன்று விமான நிலையத்திற்கே வருவாள். வேறு விதமாக சொல்லணும் என்றால் "நீ தோற்றுவிட்டாய்" என்று தெரிவிப்பதற்காக.

உள்ளங்கையை மடக்கி ஓங்கிக்குத்திக் கொண்டான்.

காலையில் கார் ரேஸில் தொடங்கிய வேட்டை ஹோட்டலுக்கு போனது... நான்கு பெண்களைப் பார்த்தது... ராமாவரம் ஸ்கூலுக்குப் போனது...எல்லாவற்றையும் நினைவுபடுத்திக் கொண்டான். இத்தனை ஏற்பாடாக திட்டம் போட்டதை பந்தயம் தொடங்கிய நாள்லேயே செய்திருந்தால் அந்தப் பெண் மிக எளிதில் கிடைத்திருப்பாள். தன்னுடைய அளவுக்கு மீறிய தன்னம்பிக்கையினால் இத்தனை நாளும் வெறுமே கழித்துவிட்டான். சதுரங்கத்தில் கடைசி தருணத்தில் தோற்றுவிட்டாற் போலவே நடித்து கடைசி வினாடியில் ஜெயிக்கும் விதமாக காயை நகர்த்துவது தன்னுடைய வழக்கம். காதல் என்ற சதுரங்கத்தில் அதே தந்திரத்தை தன் மீது கையாண்டு இருக்கிறாள் அந்தப் பெண். தொடக்கத்திலிருந்தே கைக்கு அகப்படுவது போல் நம்பிக்கையை ஏற்படுத்திவிட்டு இறுதிவரை தன்னை

அலைக்கழித்திருக்கிறாள். கடைசியில் வெற்றியும் அடையப் போகிறாள்.

யோசனையில் சூழ்ந்திருந்தவனுக்கு விமானம் மேகங்களுக்கு இடையே கீழே இறங்கிக் கொண்டிருந்ததை கவனிக்கவில்லை.

விமான நிலையத்திற்கு தென்னிந்திய விளையாட்டுச் சங்கத்தின் காரியதரிசியும், தேசிய சதுரங்க போர்ட் அங்கத்தினரும் வந்திருந்தது ரேவந்திற்கு மகிழ்ச்சியை அளித்தது. தமிழனின் திறமைக்கு வெளியூரிலாவது மதிப்பு கிடைக்கிறதே.

எல்லோரும் சேர்ந்து ஹோட்டலுக்குப் போனார்கள். ரேவந்த் ஜேம்ஸுக்கு போன் செய்து லாக்கப்பில் இருந்த நண்பனின் நிலைமையைப் பற்றி விசாரித்தான். அவன் வெளியே வந்து விட்டதாக தெரிந்த பிறகு நிம்மதியாக மூச்சு விட்டான்.

அன்றிரவு ரொம்ப நேரம் உறக்கம் வரவில்லை. கண்ணாடி ஜன்னலுக்கு அப்பால் தென்பட்ட நகரத்தையும், விளக்குத் தோரணங்களையும் பார்த்தபடியே உட்கார்ந் திருந்தான். நள்ளிரவு ஒரு மணிக்கு மேல் ஏ.சியை ஆஃப் செய்து விட்டு கட்டில் மீது சாய்ந்தான்.

☆ ☆ ☆

**போ**ட்டி தொடங்க விருந்த ஹாலுக்கு வெளியே வராண்டாவில் மக்கள் ஏராளமாய் திரண்டிருந்தார்கள். செகரெட்ரி ரேவந்துடன் கைகுலுக்கி விட்டு "உங்களுக்கும் பிரபாகருக்கும் சச்சரவு ஏற்பட்டது எங்கள் அதிருஷ்டம். போலன்ஸ்கீ உங்களுடன் ஆடுவதை பார்க்கும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது" என்றார். ரேவந்த் முறுவலித்து விட்டு பேசாமல் இருந்தான்.

ஹாலுக்குள் நுழைந்ததும் போலன்ஸ்கீ எதிரே வந்து தன் நீண்ட கையை நீட்டி "ஹௌ ஆர் யூ மை பாய்?" என்றார் பரிவோடு. ரேவந்த் கை குலுக்கினான்.

சரியாக இரண்டு மணிக்கு போட்டி ஆரம்பமாயிற்று. ரேவந்த் டாஸ் ஜெயித்தான். ஒரு மணி நேரம் முடிவதற்குள் இரு அகில உலக விளையாட்டு வீரர்களும் தம் உலகத்தையே மறந்துபோய் ஆட்டத்தில் லயித்து விட்டிருந்தார்கள்.

தன்னுடைய ஏமாற்றத்தையும், கோபத்தையும் விளையாட்டில் செலுத்தி தீவிரமாக ஆடிக் கொண்டிருந் தான் ரேவந்த். போலன்ஸ்கீக்கு இந்த ஆட்டம் ஒரு வாழ்க்கைப் போராட்டம். இந்த ஆட்டத்தில் தான் தோற்று விட்டால் அகில உலகப் புகழிலிருந்து தான் ஒரு படி கீழே இறங்கி விட வேண்டியதுதான்.

சதுரங்கத்தில் ஆர்வம் இருந்தவர்கள் அவர்களுடைய ஆட்டத்தை குறிப்பெடுத்துக் கொண்டு இருந்தார்கள். மாலை நெருங்குவதற்குள் ரேவந்தின் ஒரு ரூக்கும், இரண்டு பான்களும் போய்விட்டன. போலன்ஸ்கீக்கும் பிஷப், பான், ரூக்கும் போய்விட்டன. யாருடைய காய்கள் எவ்வளவு போய் விட்டன என்பது பிரச்னை இல்லை. ரேவந்தின் இரு குதிரைகளும் எதிரியின் பா[illegible]க்குள் புகுந்து விட்டன. அவன் குதிரைகளுடன் [illegible]டி தாக்குவானோ எல்லோருக்கும் தெரியும்.

அன்றைய கடைசி ஸ்[illegible] [illegible]எழுதி கவரில் போட்டு சீல் செய்து ரெஃப்ரியிடம் தந்தான் ரேவந்த். ஹோட்டலுக்கு வரும் போது நன்றாக இருட்டி விட்டது. அன்று அவனை யாரோ டின்னருக்கு அழைத்திருந்தார்கள். மனம் ஒன்றாமலேயே அவர்களுடன் சேர்ந்து பொழுதை கழித்து உறங்கச் சென்றான். சீக்கிரமாக விழிப்பு வந்து விட்டது. மணியைப் பார்த்தான். ஐந்து. அதாவது இன்னும் சரியாக பன்னிரெண்டு மணி நேரம்.

எட்டரை மணிக்கு ஆட்டம் மறுபடியும் தொடங்கியது. ரெஃபரி வந்து சீலை பிரித்து அதில் குறிப்பிட்டது போல் காயை நகர்த்தினார். பத்தரை மணி ஆவதற்குள் ரேவந்த் எதிரியின் இன்னொரு பானை அடித்து விட்டு பிஷப்பையும், ரூக்கையும் தன்னுடைய குதிரையால் கட்டுப்படுத்தினான்.

போலன்ஸ்கீ தலையை சிலிர்த்துக் கொண்டே முறுவலுடன் "இந்த நைட்டை யார் கண்டு பிடித்தார்களோ தெரியவில்லை. எவ்வளவு அனாயாசமாக வெட்டித் தள்ளுகிறது? இரண்டு கட்டங்களை தாண்டி லம்பமாக (90°) எந்தப் பக்கம் குதிக்குமோ யாராலும் சொல்லமுடியாது" என்று வேடிக்கையாக சொல்லிக் கொண்டே பிஷப்பை எடுத்து ரேவந்தின் ராணிக்கு அருகில் வைத்தான்.

தான் ராணியை நகர்த்தினால் அடுத்ததாக போலன்ஸ்கீ ரூக்கை எப்படி நகர்த்துவான் என்பதைப் பற்றி ரேவந்த் யோசிக்க வில்லை. தான் வீசிய வலையிலிருந்து போலன்ஸ்கீ எப்படி நழுவினான் என்றும் அவன் யோசிக்கவில்லை.

போலன்ஸ்கீ சொன்ன வார்த்தைகள் அவன் ஆழ்மனதில் புதைந்து விட்ட நினைவுகளை குடைந்து எதையோ வெளியில் கொண்டு வந்துவிட்டது.

லம்பம்!

அதாவது பெர்பெண்டிகுலர். எவ்வளவு வித்தியாச மான சொல்?

இதே வார்த்தையை அவள் பயன்படுத்தி இருக்கிறாள். "நான் நேராக ஹோட்டலிலிருந்து வீட்டுக்குப் போய் அங்கிருந்து லம்பமாக திரும்பி நேரு சிலை அருகில் வருகிறேன்."

நேராக கிளம்பி வருவேன் என்று சொல்லாமல் லம்பமாக என்று ஏன் சொன்னாள்? அதற்குள்

பார்வையாளர்களில் யாரோ 'நேரம் ரன் அவுட் ஆகிக் கொண்டிருக்கிறது' என்று கத்தினார்கள்.

ரேவந்த் திடுக்கிட்டு போர்டை பார்த்தான். போலன்ஸ்கீ தன் ஆட்டத்தை ஆடி முடித்து வெகு நேரமாகி விட்டது. இன்னும் இரண்டு நிமிடங்களில் ரேவந்த் காயை நகர்த்தவில்லை என்றால் தோற்று விட்டாற்போல் தான். ரேவந்த் உடனே ஆட்டத்தில் கவனத்தை செலுத்தி ராணியை முன்னுக்குக் கொண்டு வந்தான்.

அடுத்தது போலன்ஸ்கீ ஆட வேண்டும் ரேவந்த் மறுபடியும் யோசனையில் ஆழ்ந்தான். "நேராக போய் அங்கிருந்து நேராக வருகிறேன்" என்று அவள் சொன்னது போன்ற நினைவு. 'நேராக' என்ற வார்த்தைக்கு அவ்வளவு முக்கியத்துவம் ஏன் தந்தாள்?

இங்கிருந்து நான் எந்த வேகத்தில் வருகிறேனோ அதே வேகத்தில் தான் நீங்களும் அங்கிருந்து வரணும். இருவரும் ஒரே சமயத்தில் சந்திக்கலாம்."

"அப்படி என்றால் நீங்களும் நானும் ஒரே தொலைவு தான் பயணம் செய்யப் போகிறோம் இல்லையா."

"இந்த விஷயம் ஒன்றாம் வகுப்பு படிக்கும் பையன் கூட சொல்லிவிடுவான்."

"கேலோ பாய்!" யாரோ ஹிந்தியில் கத்தினார்கள். உண்மையில் அந்த மாதிரி கத்தக் கூடாது. அவ்வாறு கத்திய பார்வையாளரை ரெஃபரி எச்சரித்துவிட்டு வெளியே அனுப்பிவிட்டார்.

ரேவந்த் போர்ட் பக்கம் பார்த்தான். போலன்ஸ்கீ ராஜாவுக்கு ஒபன் செக் வைத்திருந்தார். தன்னுடைய ராஜாவை நகர்த்துவதைத் தவிர ரேவந்திற்கு வேறு வழியில்லை. "இந்த ஸ்டெப்புக்காக இவ்வளவு யோசனை செய்வானேன்?" யாரோ முணுமுணுப்பது கேட்டது.

ரேவந்த் ராஜாவை நகர்த்தி விட்டு மறுபடியும் யோசனையில் ஆழ்ந்தான். தன் ஆபீசிலிருந்து கார் ரேஸ் ஸ்டார்ட் ஆன ஜங்ஷன் எவ்வளவு தொலைவோ அவன் ஏற்கனவே கணக்கிட்டு இருந்தான். அது இன்றும் நினைவில் இருக்கிறது. 23 கி. மீட்டர்கள். இருவரும் அந்த இடத்திற்கு ஒரே நேரத்தில் வந்து சேரும் விதமாக பயணம் செய்திருக்கிறார்கள்.

அப்படி என்றால் ஹோட்டலிலிருந்து அவள் வீடும், அங்கிருந்து ஜங்ஷனும் சேர்த்தால் இருபத்தி மூன்று கிலோ மீட்டர்கள். இதைத் தெரிந்து கொள்ள ஒன்றாம் கிளாஸ் படிப்பு போதும் என்று அவள் சொன்னது இந்த தூரத்தைப் பற்றித் தான் போலும்.

"இங்கிருந்து எங்க வீடும் அங்கிருந்து ஜங்ஷனும் முழு எண்கள் கொண்ட கிலோ மீட்டர்கள்.

அந்த வார்த்தைகளுக்கு அப்போ தான் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. ஆனால் இப்போ யோசித்து பார்க்கும் போது அர்த்தம் புரிந்தது. யோசித்தவாறே அடுத்த காயை நகர்த்தினான் ரேவந்த். நேரம் பதினொன்று அடிக்கப் போகிறது. இன்னும் இரண்டு மூன்று மணி நேரத்தில் ஆட்டம் முடிந்து விடும் போலிருக்கிறது. இரண்டரை மணிக்கு ஏர்போர்டில் இருக்க வேண்டும். ஆட்டம் முடிவடையாவிட்டால் பிரயாணம் ரத்தாகிவிடும்.

போலன்ஸ்கீ அடுத்த ஸ்டெப்பைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தார்.

ரேவந்த் யோசித்தது வேறொன்றைப் பற்றி, அவள் பயணம் செய்த மொத்த தூரம் தெரியும். நடுவில் 90° ல் திரும்பியதும் தெரியும்.

சட்டென்று அவன் இதழ்களில் குறுநகை படர்ந்தது. மிகச் சிறிய கணக்கு

பைதாகரஸ் தியரி!

$a^2 + b^2 = c^2$




தனக்கு இரண்டு பக்கங்களின் மொத்தம் எவ்வளவு என்று தெரியும். ஆனால் தனித்தனியாக எவ்வளவு என்று தெரியாது. எதுவும் தெரியாமல் எப்படி கண்டு பிடிப்பது? இன்னொரு விஷயம் நினைவுக்கு வந்தது. அவள் பயணம் செய்த கிலோ மீட்டர்கள் முழு எண்கள் கொண்டவை. நேரு சிலை ஜங்ஷனுக்கும் ஹோட்டல் ஆனந்துக்கும் இடையே உள்ள தூரம் எவ்வளவு?




தான் அந்த ஊரில் சுற்றிய அனுபவத்தை நினைவுபடுத்திக் கொண்டு அவன் யோசிக்கத் தொடங்கினான். ஏறத்தாழ பதினைந்து முதல் இருபது கிலோ மீட்டர் இருக்கலாம்.

போலன்ஸ்கீ தன் ஆட்டத்தை ஆடிவிட்டு சுருட்டை எடுத்து பற்ற வைத்துக் கொண்டார். ரேவந்த் பக்கம் இருந்த ஸ்டாப் வாட்ச் கிர்ரென்று வேகமாக சுழன்று கொண்டிருந்தது. ரேவந்த் தன்னுடைய ஆட்டமாக குதிரையை நகர்த்தி விட்டு கண்களை மூடிக் கொண்டான்.

மிகப் பெரிய கணக்கு. அவனுக்கு கணக்கில் அனுபவம் கிடையாது. ஆனால் சதுரங்கத்தில் இருந்த திறமை அவனுக்கு அளவுக்கு மீறிய நினைவாற்றலை தந்திடுகிறது. முதலில் **15** என்ற எண்ணை எடுத்து கணக்கிட்டுப் பார்த்தான். வரவில்லை. பிறகு **16** என்ற எண்ணை எடுத்துக்

கொண்டான். வரவில்லை. ஒவ்வொரு கணக்கிற்கும் பத்து நிமிடம் பிடித்தது. எல்லாவற்றையும் மனதிலேயே கணக்கிட்டு முடிப்பது சிரமமாக இருந்தது. ஆனாலும் அவன் உறுதியை விடவில்லை. காய்களை நகர்த்திக் கொண்டு இருந்தானே தவிர மனம் முழுவதும் கணக்கிலேயே லயித்திருந்தது. வெறும் 23 என்ற எண் மட்டும் தான் தெரியும். அதை மட்டும் வைத்துக் கொண்டு மற்றதை கண்டு பிடிக்க வேண்டும்.

அடுத்த எண் ஆக 17 ஐ எடுத்துக் கொண்டான். ஒருக்கால் அந்த தொலைவு 17 கி.மி. என்றால்...

$$17^2 = x^2 + (23-x)^2$$

$$289=x^2 +529+x^2 -46x$$

$$x^2 +120-23x = 0$$

$$(x-8)(x-15) = 0$$

$$x=8 \text{ or } 15$$

வந்து விட்டது. ஆனந்த் ஹோட்டலிலிருந்தோ அல்லது ஜங்ஷனிலிருந்தோ அவள் வீடு சரியாக 8 கி.மி. தொலைவில் இருக்கிறது.

அவன் யோசனைகளை சிதறடிப்பது போல் “செக் மிஸ்டர் ரேவந்த்” என்ற குரல் கேட்டதும் கண்களைத் திறந்தான். எதிரியின் காய்கள் எல்லாம் ஒன்றாக திரண்டு தன்னுடைய சாம்ராஜியத்திற்குள் படை எடுத்து வந்ததை கண்டு வேறு வழியில்லாமல் ராஜாவை நகர்த்தி விட்டு கண்களை மூடிக் கொண்டான். இந்த ஆட்டம் நட்புக்காக விளையாடப்படும் ஆட்டம். அந்தரங்கத்தில் விளையாடும் ஆட்டம் இதைவிட மதிப்பு வாய்ந்தது. அங்கே தோற்றுப் போனால் மனைவியாக வரப் போகும் அந்தப் பெண் வாழ்நாள் முழுவதும் தன்னை பழிக்கப் போகிறாள்.

ரேவந்த் தன் சக்தியெல்லாம் திரட்டிக் கொண்டான்.

பிளையிண்ட் ஃபோஸ்ட்!

கண்களை மூடிக் கொண்டு சதுரங்கத்தில் உள்ள அறுபத்தி நான்கு கட்டங்களிலும் எந்த காய்கள் எங்கெங்கு இருந்தன என்பதை நினைவுக்குக் கொண்டு வருவது. ஆனால் இப்பொழுது நினைவுபடுத்திக் கொண்டது சதுரங்க போர்டை அல்ல நகரத்து வரைபடத்தை.

அவன் மனப் பலகையில் சதுரங்க கட்டங்கள் மாயமாகி விட்டன. குதிரைகளும், யானைகளும், பிஷப்புகளும் ஓடி மறைந்தன. மூளையே வெள்ளைக் காகிதமாயிற்று. அதன் மீது நேர் கோடு ஒன்று வரையப்பட்டது. அதை முக்கோணமாக மாற்றினான். அதை அடிப்படையாக வைத்துக் கொண்டு மேலும் மூன்று முக்கோணங்களை வரைந்தான். நான்கு விதமான சாத்திய கூறுகள். இத்தனை நாளும் தான் பொழுது போக்காக ஊர் சுற்றியதை, பார்த்த இடங்களை நினைவில் கொண்டுவர அரும்பாடு பட்டான்.

மனதில் உருவான நகரத்தின் வரைபடத்தின் மீது இந்த முக்கோணங்களை பதித்தான்.




அந்தப் பெண்ணின் வீடு A. B. C. D என்ற நான்கு இடங்களில் ஏதோ ஒரு இடத்தில் இருந்தாக வேண்டும்.

A. சர்வோதயா காலனி B. காந்தீ காலனி

C. டாங்பண்ட் சாலை D. சேரிப் பகுதி

இதில் இரண்டை தள்ளிவிடலாம். அந்தப் பெண்ணின் கார் ஜங்ஷனுக்கு அந்தப் பக்கத்திலிருந்து வந்து டாங்கபண்ட் சாலையை நோக்கிப் போயிற்று. அதனால் A அல்லது D பகுதியில்தான் இருந்திருக்க வேண்டும். D என்பது சேரிப் பகுதி என்பதால் எஞ்சியிருப்பது A மட்டும்தான். நிலாப் பெண் இருப்பது சர்வோதயா காலனிதான்.

"செக்.மிஸ்டர் ரேவந்த். முடிந்துவிட்டது." அதற்குள் கைதட்டல்களின் ஓசை ஹாலை அதிரச் செய்தது. ரேவந்த் போர்டைப் பார்த்தான். தான் ஆட்டத்தை விட்டு விலக வேண்டிய சூழ்நிலை உருவாகியிருந்தது.

போலன்ஸ்கீ சின்னப் பையனைப் போல் மகிழ்ச்சியுடன் "நான் வென்று விட்டேன்" என்றார்.

ரேவந்து முறுவலித்து விட்டு "நானும் வென்று விட்டேன்" என்றான்.

# 21

**ஹோ**ட்டலுக்கு வந்ததுமே ப்ரீஃப் கேசில் உடைகளை கூட எடுத்து வைத்துக் கொள்ளாமல் ஜேம்ஸுக்கு லைட்னிங் கால் செய்தான் ரேவந்த். ஐந்து நிமிடங்களில் ஜேம்ஸ் லைனில் வந்தான்.

"ஜேம்ஸ்! நான் தான் ரேவந்த். இத்தனை நாளாக நம்மை அழவைத்துக் கொண்டிருந்த பெண் எங்கே இருக்கிறாள் என்று கண்டு பிடித்து விட்டேன்."

"எங்கே?"

"சர்வோதயா காலனியில்."

"எப்படித் தெரிந்தது?"

"அந்த விவரங்கள் எல்லாம் இப்போ போனில் சொல்ல வேண்டாம். நான் இன்னும் பதினைந்து நிமிடங்களில் கிளம்பி வருகிறேன். நான் வருவதற்குள் நீ அந்தப் பெண்ணின் வீட்டைக் கண்டு பிடித்து வை. அதை வைத்துக் கொண்டு போன் நம்பரையும் கண்டு பிடிக்கணும்."

"எப்படிக் கண்டு பிடிப்பது?"

"சர்வோதயா காலனி ரொம்ப பணக்காரர்கள் இருக்கும் ஏரியா. வீடுகள் அங்காங்கே அமைந்திருக்கும். எல்லாமாக சேர்த்தால் நூறு வீடுகளுக்கு மேல் இருக்காது. மோட்டார் சைக்கிளில் நீ ஒவ்வொரு வீடாக போய் முயற்சி செய். எந்த வீட்டில் நில நிறத்தில் ஃபியட் காரும் வெளி நாட்டு டொயோட்டாவும் இருக்கிறதோ அங்கே முயற்சி செய். இன்னும் இரண்டு மணி நேரம் தான் இருக்கிறது. ஆனால் இறுதி வரை முயற்சி செய்வது ஒரு சதுரங்க விளையாட்டு வீரனின் முக்கிய லட்சணம்" என்று போனை வைத்து விட்டான்.

செகரெட்ரி "போவோமா?" என்று கேட்டான்.

"இன்னும் ஒரு நிமிஷம்."

செகரெட்ரி நேரத்தை பார்த்துவிட்டு "விமான நிலையத்தில் ரிபோர்டிங் டைம் முடிந்துவிடும்" என்றான்.

மணி அதற்குள் இரண்டரை தாண்டிவிட்டது. விமானம் மூன்று மணிக்கு. உண்மையில் ஒரு மணி முன்னாலேயே ரிப்போர்ட் செய்ய வேண்டும். நல்ல வேளையாக கல்கத்தாவைப் போல் டில்லி விமானநிலையப் பாதை அவ்வளவு சிக்கலானது இல்லை.

ரேவந்த் மற்றொரு லைட்னிங் காலை செய்தான். சர்வோதயா காலனி முழுவதையும் வலைவீசியாவது அந்தப் பெண்ணின் போன் நம்பரை கண்டுபிடித்துவிட

எண்ணியிருந்தான். எந்த வழியையும் விட்டு வைப்பதாக இல்லை. அவன் இரண்டாவது முறை போன் செய்தது சுலோசனாவுக்கு.

விமானம் கிளம்ப சரியாய் இருபத்தி ஐந்து நிமிடங்களே இருந்தன. செகரெட்ரி கலவரத்தோடு மற்றொருமுறை வாட்சைப் பார்த்து விட்டு "போகட்டும். டிக்கெட்டை கேன்சல் செய்யட்டுமா? நாளைக்கு போய்க் கொள்ளலாம்" என்றான்.

ரேவந்த் பதட்டத்துடன் "எந்தச் சூழ்நிலையிலும் நான் இன்று மாலை ஐந்து மணிக்கெல்லாம் எங்க ஊரில் இருந்தாக வேண்டும்" என்று சொல்லும் போதே மறுமுனையில் தொடர்பு கிடைத்தது.

"ஹலோ! கொஞ்சம் சுலோசனாவைக் கூப்பிடுறீங் களா?" என்று கேட்டான் ரேவந்த்.

"எந்த சுலோசனா?" அசிரத்தையோடு கேட்டார்கள் மறுமுனையிலிருந்து யாரோ.

"ராஜசுலோசனா. ஆபரேட்டர்."

"என்னவோ தெரியாது" என்று போனை வைத்து விடப் போனபோது "டோண்ட் டிஸ்கனெக்ட்" ரேவந்த் கத்தினான். "இது டில்லியிலிருந்து வந்த லைட்னிங் கால் என்று உங்களுக்குத் தெரியும். அப்படியும் இவ்வளவு அலட்சியமாக எப்படி வைக்க முடிகிறது உங்களால்?"

"சுலோசனா என்ற பெயரில் இங்கே யாரும் இல்லை."

"அந்தப் பெண் உங்க எக்ஸ்சேஞ்சில் எட்டு வருடங்களுங்கு மேலாக பணி புரிந்து வருகிறாள். உங்க செக்ஷனில் இல்லாமல் இருக்கலாம். ஆனால் இது ரொம்ப முக்கியமான விஷயம். சக ஆபரேட்டருக்கு இந்த அளவுக்குக் கூட உதவி செய்யாத நீங்க உங்களுக்கு தேவையான போது

மற்றவங்க மட்டும் உதவி செய்யணும்னு எப்படி எதிர்பார்க்க முடியும்? டெலிபோன் ஆபரேடர் என்றால் பொறுமைக்கு மறுபெயர் என்று சொல்லுவார்கள். அப்படியிருக்கும் போது குறைந்த பட்சம் பக்கத்தில் இருப்பவர்களிடம் கூட கேட்காமல் இவ்வளவு அலட்சியமாக அவள் யாரோ தெரியாது என்று எப்படிச் சொல்றீங்க?"

அவன் சொற்கள் மறுமுனையில் இருப்பவள் மீது பாதிப்பை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அவனுக்கு பதில் எதுவும் சொல்லாமல் பக்கத்தில் இருப்பவளிடம் ஏதோ கேட்பது காதில் விழுந்தது. சற்று நேரத்தில் சுலோசனா லைனுக்கு வந்து "ஹலோ" என்றாள்.

☆ ☆ ☆

**த**டதடவென்று சத்தமிட்டுக் கொண்டே மோட்டார் சைக்கிள் அந்த சாலை வழியாக போய்க் கொண்டிருந்தது. தெருவின் இருபக்கங்களையும் பார்வையிட்டுக் கொண்டே ஜேம்ஸ் போய்க் கொண்டிருந்தான். ஃபியட் கார் பல வீடுகளில் இருந்தது. பெரும்பாலான வீட்டு கேரேஜ்கள் மூடியிருந்தன. அதற்குள் கார் இருக்கிறதா இல்லையா என்று தெரியவில்லை. ஃபியட் கார் இருக்கிற ஒவ்வொரு வீட்டுக்கும் போய் உங்க வீட்டில் இளம் பெண் யாராவது இருக்கிறாளா என்று கேட்டால் தர்ம அடி கிடைப்பது நிச்சயம்.

ஒரு வீட்டின் முன் டொயோடா கார் தென்பட்டது. ஆனால் இன்னும் நிறைய கார்களும் இருந்தன. மேலும் வீட்டின் முன்னால் ஷாயமியானா போடப்பட்டிருந்தது. நிறைய மக்கள் கூடியிருந்தார்கள்.

அந்த வீட்டைத் தாண்டிப் போய் விட்டான். சுமார் ஐந்து நிமிடம் கழித்து மற்றொரு டொயோடா கார்

தென்பட்டது போர்டிகோவில். அதைத் தவிர கேரேஜில் இன்னொரு கார் இருப்பது இடுக்கு வழியாக தென்பட்டது.

இருமுறை அந்த வீட்டைச் சுற்றி வட்ட மடித்துவிட்டு உள்ளே நுழைந்தான் ஜேம்ஸ். உள்ளே வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளைப் பார்த்து கூர்க்கா எழுந்து கொண்டான்.

☆ ☆ ☆

"**நா**ன் தான் ரேவந்த். டில்லியிலிருந்து பேசுகிறேன். உங்களுடன் ஒரு முக்கியமான விஷயம் பேசணும்.

"என்ன?"

"அந்தப் பெண் இருப்பது சர்வோதயா காலனியில் என்று தெரிந்துவிட்டது. அதை வைத்துக் கொண்டு அவள் போன் நம்பரைக் கண்டு பிடிக்க முடியும்னு நினைக்கிறேன்."

அவன் வேலைமெனக்கெட்டு இந்த விஷயத்திற்காக அவ்வளவு தூரத்திலிருந்து தனக்கு போன் செய்தது சுலோசனாவுக்கு வியப்பை அளித்தாலும் "எப்படி" என்று கேட்டாள்.

இந்த குறுக்குக் கேள்வியை அவன் எதிர்பார்க்க வில்லை. வியப்புடன் "ஏரியா தெரிந்தால் போன் நம்பரைக் கண்டு பிடித்து விடமுடியாதா?" என்று கேட்டான்.

"எங்களிடம் இரு விதமான விவரங்கள் இருக்கும். ஒன்று பெயரைச் சொன்னால் நம்பரைச் சொல்வது. இதை டைரக்டரி விசாரணை என்பார்கள். இதைத் தவிர நம்பரைச் சொன்னால் அது யாருடையது? அவங்க முகவரி என்ன என்பதை தெரிந்து கொள்ளலாம். இந்த இரண்டை தவிர வேறு வழிகள் இல்லை. ஏன் என்றால் ஒரு ஏரியாவில் இருக்கும் எல்லா போன்களும் அடுத்தடுத்த நம்பர்களாக இருக்காது."

"அந்தப் பெண்ணின் பெயர் "ஆர்" என்ற எழுத்தில் தொடங்கும்."

"ஆர் என்ற எழுத்தில் தொடங்கும் பெயர்கள் டைரக்டரியில் ஆயிரத்திற்கும் மேல் இருக்கும்."

"முதலில் அந்தப் பெண்ணின் பெயரில்தான் போன் இருக்கும்னு என்ன நிச்சயம்?" ரேவந்த் தனக்குத் தானே பதிலளித்துக் கொள்வது போல் சொன்னான்.

"அப்போ என்ன செய்யலாம்?"

ரேவந்த் உடனே பதில் சொல்லவில்லை. மோவாயைத் தடவிக் கொண்டான். ஜேம்ஸ் இந்த நேரத்தில் அந்த காலனியில் சுற்றிக் கொண்டு இருப்பான். ஆனால் அங்கொன்றும் இங்கொன்றுமாக வீடுகள் இருக்கும் அந்த காலனியில் அவன் அந்தப் பெண்ணை எப்படிக் கண்டு பிடிக்கப் போகிறான்? இனி அந்த நம்பிக்கையை விட்டு விட வேண்டியது தான்.

"ஹலோ!"

அவன் சுதாரித்துக் கொண்டு "சரி சுலோசனா. இனி நம்மால் எதுவும் செய்ய முடியாதுன்னு நினைக்கிறேன். தாங்க்ஸ்" என்று போனை வைத்து விட்டான்.

செகரெட்ரி வாட்சைப் பார்த்து விட்டு "இனி போய் பிரயோஜனம் இருக்காது. நேரம் ஆகி விட்டது" என்றான். மணி இரண்டே முக்காலாகிவிட்டது.

"உலகமே தலைகீழானாலும் சரி. இன்று மாலை நான் அங்கே இருந்தாக வேண்டும்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டே "சாவியை என்னிடம் கொடுங்க. நான் டிரைவ் செய்கிறேன்" என்றான். ப்ரீஃப் கேஸை காரில் வைத்து விட்டு ஸ்டீரிங்கின் முன்னால் வந்து அமர்ந்தான்.

தெருமுனையில் காரை திருப்பும் போது எழும்பிய கிறீச்சென்ற ஒலி உள்ளே இருப்பவர்களுக்கு கேட்கும் முன் அடுத்த முனையை அடைந்து விட்டிருந்தான். விமான நிலையத்திற்கு போய்ச் சேர்ந்த போது கடைசி வெயிட்டிங் லிஸ்ட் நம்பருக்கு டிக்கெட் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

செகரெட்டரி ஓட்டமாக ஓடிப்போய் போர்டிங் கார்டை பெற்றுக் கொண்டான். அதைப் பெற்றுக் கொண்டு விட்டால் போதும். பயணம் நிச்சயம் என்பது போல் தான். ஆயினும் ரேவந்திற்கு மகிழ்ச்சியாக இல்லை. தான் தோற்றுப் போய்க் கொண்டிருக்கிறோம் என்று அவனுக்குப் புரிந்துவிட்டது. அவ்விருட்டில் மினுக் மினுக்கென்று ஒளி வீசிக் கொண்டிருந்த ஒரே நம்பிக்கை... ஜேம்ஸ் ஒருவன்தான்.

## 22

"அவரை உள்ளே அனுப்பு."

கம்பீரமாக குரல் கேட்டதும் கூர்க்கா, ஜேம்ஸ் இருவரும் தலையைத் திருப்பிப் பார்த்தார்கள். பால்கனியில் ஒரு கிழவர் நின்றிருந்தார். கிழவராக இருந்தாலும் திடமாக இருந்தார். கடந்த ஐந்து நிமிடங்களாக கூர்க்காவுக்கும் ஜேம்ஸுக்கும் வாக்குவாதம் நிகழ்ந்து கொண்டிருந்தது. வீட்டுச் சொந்தக்காரர் அழைத்ததும் பெருமையுடன் கூர்க்காவைத் திரும்பிப் பார்த்துவிட்டு ஜேம்ஸ் அந்தப் பக்கம் நடந்தான்.

இருவரும் உள்ளே வந்தார்கள்.

"யார் நீ? உனக்கு என்ன வேண்டும்?"

"பழைய மாணவர்கள் அசோசியேஷனை சேர்ந்தவன். ராமாவரம் கான்வெண்ட். நான்தான் தலைவன். பழைய மாணவ மாணவிகள் சேர்ந்து ஒரு கூட்டம் நடத்த முடிவு செய்திருக்கிறோம். அதற்காக, ரம்யாவையும் அழைக்கலாம் என்று வந்தேன்."

"ரம்யா யாரு?"

ஜேம்ஸ் ஒரு நிமிடம் திகைத்து விட்டான். உடனே சமாளித்துக் கொண்டு "இந்த வீடு இல்லையா? சரிதான். இந்த காலனியில் தான் இருப்பதாக யாரோ சொன்னார்கள். அதான் தேடிக் கொண்டே வந்தேன்." இனி அங்கே இருப்பது வியர்த்தம் என்று நினைத்து ஜேம்ஸ் வெளியே வரப் போனான்.

"ஓஹோ! ரம்யாவை பற்றி கேட்கிறாயா?"

குண்டு அடிபட்டாற்போல் திரும்பினான் ஜேம்ஸ். முகத்தில் ரத்தம் வேகமாக பாய்ந்தது. பரபரப்பை கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு "ஆமாம். இருக்கிறாளா?" என்று கேட்டான். பெரியவர் உள்ளே எட்டிப் பார்த்து. "கண்ணம்மா... கண்ணம்மா" என்று உரத்தக் குரலில் அழைத்தார்.

"என்ன டாடீ?" உள்ளே எங்கிருந்தோ குரல் கேட்டது.

ஜேம்ஸ் உள் பக்கம் எட்டிப் பார்த்ததை கவனித்த பெரியவர் "உள்ளே வாப்பா" என்று உள்ளே அழைத்துச் சென்றார். வெண்டிலேஷன் கூட இல்லாமல் ரொம்ப இருட்டாக இருந்தது அந்த அறை.

உள்ளே நுழைந்ததும் மெல்லிய சிரிப்பொலி கேட்டது. சட்டென்று திரும்பிப் பார்த்தான் ஜேம்ஸ். அதற்குள் கிழவர் வெளிப்பக்கம் கதவை தாழிட்டுவிட்டார்.

"இரண்டுமுறை வீட்டை சுற்றி வந்த போதே சந்தேகப்பட்டேன். என்னை ஏமாற்ற யாராலும் முடியாது தம்பீ." அந்தப் பக்கத்திலிருந்து குரல் கேட்டது.

☆ ☆ ☆

"நீங்க ஏன் என்னவோ போல் இருக்கீங்க? விளையாட்டில் வெற்றியும் தோல்வியும் சகஜம். உங்களுக்கும் அது தெரிந்தது தானே" என்றான் செகரெட்ரி.

"அப்படி எதுவும் இல்லை" என்றான் ரேவந்த். "பின்னே எங்க உபசரிப்பில் ஏதேனும் குறை இருந்ததா?"

ரேவந்த் கலவரமடைந்தவனாய் "ச்செ.ச்செ... அந்த மாதிரி யோசனை எதுவும் வைச்சுக்காதீங்க" என்றவன் தாழ்ந்த குரலில் "ஒரு டெலிபோன் நம்பரைக் கண்டுபிடிக்க பலவிதமாக முயற்சி செய்தும் கண்டுபிடிக்க முடியவில்லை. அதான்" என்றான்.

செகரெட்ரிக்குப் புரியவில்லை. "உங்களுக்கு டெலிபோன் தொந்தரவு ஏதாவது இருந்தால் சொல்லுங்க. நான் அதில்தான் வேலை செய்கிறேன்" என்றான்.

"ஊஹூம். எனக்குத் தேவையான வேலை அது போன்றது இல்லை" என்று சொல்லும் போதே சட்டென்று அவன் மூளையில் மின்னலாய் ஏதோ யோசனை பளிச்சிட்டது. நிலாப்பெண் சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. "டைப் இன்ஸ்டிட்யூட் ஆள் எப்படியும் அங்கே தானே இருக்கப் போகிறான். முதலில் டாக்ஸிகாரரிடம் என்னைப் பற்றி விசாரித்திருக்க வேண்டாமா? கையிலிருந்த பறவையை விட்டுவிட்டு புதரில் இருக்கும் இரண்டு பறவைகளுக்காக முயற்சிப்பது புத்திசாலித்தனம் இல்லை. அப்படிப்பட்ட ஆண்களை பெண்கள் விரும்பவும் மாட்டார்கள்."

"டெலிபோன்ஸில் நீங்க எந்த டிபார்ட்மெண்ட்?"

"அகௌண்ட்ஸ்."

ரேவந்தின் உற்சாகம் வடிந்துவிட்டது. அப்படியும் மனதை தளர விடாமல் "உங்க டிபார்ட்மெண்டில் சில விவரங்கள் வேண்டும். யாராவது சொல்வார்களா?"

"எப்போ வேண்டும்?"

"இப்பொழுதே."

அதற்குள் மைக்கில் அறிவிப்பு கேட்டது. "ஐ.சி.306 பயணிகள் செக்யூரிடி செக் போவதற்கு இது தான் கடைசி அழைப்பு." ஐந்து நிமிடங்களுக்கு முன்பே போர்டிங் ஸ்லிப் கௌண்டரை மூடிவிட்டார்கள். பயணிகள் விமானத்தை நோக்கி நடந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

"இப்பொழுதேவா?" செகரெட்ரி கேட்டான்.

"ஆமாம்."

"ஆனால் மிஸ்டர் ரேவந்த்..." என்று ஏதோ சொல்லப் போனவனை இடைமறித்து "ஆபரேஷன்ஸ் பக்கம் உங்களுக்கு யாராவது தெரிந்திருந்தால் சொல்லுங்க" என்றான் ரேவந்த்.

"சரவணன் என்று..."தமிழ்காரர்தான். அசிஸ்டெண்ட் இஞ்ஜினியர்."

"அவர் நம்பர்?"

செகரெட்ரி சொன்னான்.

"வாங்க. போன் செய்வோம்."

செகரெட்ரி ரேவந்தை வினோதமாக பார்த்தான். 'நிச்சயமாக இவனுக்கு புத்திதான் பிசகிவிட்டது' என்று நினைத்துக் கொண்டான். ரேவந்த் அதைப் பொருட்

படுத்தாமல் டெலிபோன் பூத்தை நோக்கி வேகமாக நடந்தான்.

பயணிகள் சீட்டுகளில் உட்கார்ந்து விட்டார்கள். பெல்டுகளைக் கட்டிக் கொள்ளச் சொல்லி அறிவுறுத்தும் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன.

செகரெட்ரி போன் செய்ததும் சரவணன் லைனில் வந்தான். சுருக்கமாக ரேவந்தை போனிலேயே அறிமுகப் படுத்தி விட்டு போனை ரேவந்திடம் தந்தான். ரேவந்த் தனக்குத் தேவையான விஷயத்தைச் சொல்லிவிட்டு "டெலிபோன் டிபார்ட்மெண்டுக்கு லொகாலிடிவைஸ் புத்தகம் இல்லாமல் எப்படி? உதாரணமாக ஒரு இடத்தில் சாலையை சீரமைக்கும் பணி நடந்துகொண்டு இருக்கும் போது டெலிபோன் வயர்கள் அறுந்து போனால் ஒவ்வொரு கஸ்டமரும் புகார் செய்யும் வரையில் நீங்க அதை சரி செய்ய மாட்டீங்களா?"

"செய்வோம்."

"அப்படி செய்ய வேண்டும் என்றால் அந்த லொகாலிடியில் இருக்கும் போன் நம்பர்கள் தெரிந்திருக்க வேண்டும் இல்லையா."

"தெரிந்திருக்கணும் மிஸ்டர் ரேவந்த். ரொம்ப சிம்பிள் லாஜிக் இது. உண்மையில் ஒவ்வொரு எக்ஸ்சேஞ்சிடமும் இது போன்ற விவரங்கள் இருக்க வேண்டும். ஆனால் ஜூனியர் இஞ்ஜினியர்கள், அசிஸ்டெண்ட் இஞ்ஜினியர் களின் அலட்சிய மனப்பான்மையால் யாரும் இந்த விவரங்களை அப்டுடேட் ஆக வைத்துக் கொள்வதில்லை. ஒரே ஏரியாவிலிருந்து பத்து புகார்கள் வந்தாலும் ஒவ்வொன்றையும் தனித்தனியாக பரிசீலித்துவிட்டு அதற்குப் பிறகுதான் முக்கியமான வயர்கள் அறுந்து விட்டிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வருவார்களே தவிர பத்து போன்களும் ஒரே ஏரியாவைச் சேர்ந்தவை என்று புரிந்து

கொள்ளமாட்டார்கள்."

"அந்த மாதிரி இல்லாமல் ரிஜிஸ்டர் எழுதிவைத் திருப்பவங்க யாராவது இருக்காங்களா?"

"ஒன்று அல்லது இரண்டு எக்ஸ்சேஞ்சுகள் இருக்கலாம்."

ரேவந்த் என்றுமே கடவுளை வேண்டிக் கொண்டதில்லை. அப்படிப்பட்டவன் அந்த நிமிடம் பிராத்தனை செய்து கொண்டான். 'சர்வோதயா காலனியில் இருக்கும் டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் அந்த இரண்டிற்குள் ஒன்றாக இருக்கும் விதமாக செய் பகவானே!"

☆ ☆ ☆

**பை**லட் வந்து காக்பிட்டில் அமர்ந்து கொண்டான். விமானத்திற்குள் பயணிகள் வருவதற்கான ஏணி அகற்றப்பட்டது. கதவுகளை சாத்துவதற்காக ஏர் ஹோஸ்டஸ்கள் ஆயத்தமாகிக் கொண்டு இருந்தார்கள். கிரௌண்ட் கண்ட்ரோலர் வாக்கி டாக்கியில் ஆணைகளை தந்து கொண்டு இருந்தார்.

ஏற்கனவே நான்கு முறை தன் கையில் இருந்த போர்டிங் ஸ்லிப்புகளை கணக்கிட்டுப் பார்த்துவிட்ட ஆபீசர் சந்தேகத்துடன் மறுபடியும் எண்ணினார்.

எத்தனை முறை பார்த்தாலும் ஒன்று குறைவாக இருந்தது. இந்த விஷயம் பைலட்டுக்கு தெரிவிக்கப்பட்டது. ஏர்ஹோஸ்டெஸ்களும் பயணிகளை எண்ணினார்கள். அப்போதும் ஒன்று குறைவாக இருந்தது.

பைலட் அரவிந்த் கோஷ்க்கு நேரத்தை வீணாக்குவதே பிடிக்காத ஒன்று. இரண்டு மணி நேர பயணத்தை ஒன்னறை மணி நேரத்திலேயே முடித்துக்கொண்டு மேலிடத்திலிருந்து மெமோ வாங்குவது அவர் வழக்கம். எப்பொழுது போய்ச்

சேருவோம்? ஏர் ஹோஸ்டெஸை அழைத்துக் கொண்டு ஹோட்டலுக்குப் போய் விருந்து சாப்பிடுவோம் என்ற பரபரப்பு அவருக்கு. இந்த தாமதத்திற்கு எரிச்சல் அடைந்து காக்பிட்டை விட்டு வெளியே வந்தார்.

விமான நிலையத்து எல்லா மைக்குகளிலும் பயணி ஒருவனை காணவில்லை என்று அறிவிக்கப்பட்டது. அந்தப் பயணி மட்டும் அரசாங்கம் ஊனமுற்றோருக்காக ஏற்பாடு செய்திருந்த போனிலிருந்து எஸ்.டி.டி.யில் சுலோசனாவுடன் பேசிக் கொண்டிருந்தான்.

மூன்று மணி ஆகி ஐந்து நிமிடங்கள் கழிந்து விட்டிருந்தன.

☆ ☆ ☆

இன்னும் இரண்டு மணி நேரம் கூட இல்லை. இதற்குள் ரேவந்த் கிளம்பியிருப்பான். தானே இந்த இருட்டு அறையில் அடைபட்டுக் கிடக்கிறான், காரணம் என்னவென்று தெரியாமலேயே.

என்ன செய்வது என்று ஜேம்ஸுக்கு புரியவில்லை. ஜேம்ஸ்பாண்ட் போல் ஜன்னல் வழியாக வெளியே குதித்து விடலாம் என்றால் அதற்கும் வழியில்லை. வெண்டிலேடர் கூட இல்லை அங்கே.

அவன் யோசனையில் ஆழ்ந்திருந்த போது வெளியே தாழ்ப்பாளை நீக்கும் சத்தம் கேட்டது.

கிழவர்தான் உள்ளே வருகிறார் போலும். பின்னாலிருந்து மண்டையில் ஓங்கி ஒன்று கொடுப்போம் என்று நினைத்து கதவுக்கு மறைவாக நின்று கொண்டிருந்தான் ஜேம்ஸ். அவனுடைய உயரம் ஆறு அடி. உள்ளங்கைகள் பலம் வாய்ந்தவை. அவற்றின் தாக்குதலுக்கு எப்படிப்பட்ட பலமான மண்டையாக இருந்தாலும் சரி.

தேங்காயை போல் உடைய வேண்டியதுதான். ஆனால் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்த தலையில் பூக்கள் இருந்தன. தஞ்சாவூர் கதம்பம்! 'என்ன டாடீ?' என்று உள்ளேயிருந்து குரல் கொடுத்த பெண் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள்.

☆ ☆ ☆

"**க்**விக். நேரம் இல்லை சுலோசனா. நேராகவே இஞ்ஜினியரை சந்தியுங்கள். M.D.F. ரிஜிஸ்டர் என்பார்கள் அதை. லொகாலிடிவைஸ் மெயின் டிஸ்ட்ரிப்யூஷன் ஃப்ரேம் ரிஜிஸ்டர். அதை அவங்க ஆபீசில் வைத்திருந்தால் நம் வேலை எளிதாகிவிடும். எப்படியாவது அதைப் பெற்றுக் கொள்ளுங்கள். நான் பிளயிட்டில் வருகிறேன். உங்களுக்கு நம்பர் கிடைத்தால் ஏர் போர்ட்டுக்கு தகவல் சொல்லுங்க. அவங்க எனக்கு தெரிவிப்பார்கள். இதெல்லாம் ஐந்து மணிக்கு முன்னாடியே நடந்து விடணும். ஐந்து மணி தாண்டிவிட்டால் நாம் தோற்றுப் போனாற் போல் தான்" என்று போனை வைத்து விட்டான். பிறகு ப்ரீஃப் கேஸை எடுத்துக்கொண்டு செக்யூரிடியை நோக்கி ஓட்டமெடுத்தான்.

அங்கே போய்ச் சேர்ந்ததும் 'நான்தான் அந்தப் பயணி. மைக்கில் அறிவிப்பு வந்தது எனக்காகத்தான்' என்று சொல்லிக் கொண்டு ப்ரீஃப் கேஸை திறக்கப் போனான். முதலில் வியப்படைந்து பிறகு கோபமாக ஏதோ சொல்லப் போன இன்ஸ்பெக்டர் ரேவந்த் கையிலிருந்து தன்னுடைய கைக்கு வந்த சலவை நோட்டை பார்த்து விட்டு, ப்ரீஃப் கேஸை திறந்து பரிசோதிக்காமலேயே "போங்க சார். ஏற்கனவே ரொம்ப தாமதமாகி விட்டது" என்றார்.

அங்கிருந்து விமானம் வரையிலும் ஓட்டப் பந்தயத்தில் ஓடுவது போல் வேகமாக ஓடினான். விமானப் பணியாட்கள் எல்லோரும் அவனை வினோதமாக பார்த்தார்கள்.

விமானம் இன்னும் ஏன் கிளம்பவில்லை என்று புரியாமல் சலிப்படைந்த பயணிகள் அப்பொழுதுதான் உள்ளே நுழைந்த ரேவந்தைப் பார்த்துவிட்டு ஏதேனும் மந்திரியின் மகன் போலும் என்று நினைத்தார்கள்.

"போர்டிங் ஸ்லிப்பை எடுத்துக்கொண்டு இவ்வளவு நேரம் எங்கே போனீங்க?" கோபமாக கேட்டாள் ஏர்ஹோஸ்டெஸ், சீட்டில் அமர்ந்து பெல்டைப் பொருத்திக் கொண்டிருந்த ரேவந்தைப் பார்த்து.

"டாய்லெட்டிற்கு."

☆ ☆ ☆

**"எ**ங்களை மன்னித்து விடுங்க" என்றாள் அந்தப் பெண் கதவை முழுவதுமாக திறந்தவாறே," பணத்தை பிளாக்கில் சம்பாதித்து அப்பாவுக்குப் பைத்தியமே பிடித்துவிட்டது. சந்தேகத்திற்குரிய வகையில் யார் கண்ணில் பட்டாலும் உடனே அவர்களை இன்கம்டாக்ஸ் காரர்களோ இல்லை சி.பி.ஐ. காரர்களோ என்று நினைத்து பயந்து விடுவார். நீங்க தவறாக நினைக்காதீங்க."

"அவர் எங்கே இப்பொ?"

"தூக்க மாத்திரை கொடுத்திருக்கிறேன். தூங்குகிறார்."

ஜேம்ஸ் முறுவலுடன் "நான் சி.பி.ஐ.காரன் இல்லை என்று என்ன நிச்சயம்?" என்றான்.

அவள் ஒரு மாதிரி சிரித்துவிட்டு "இருந்துவிட்டு போங்களேன். ஏதோ நாவலில் இதே போல் நடக்கும்" என்றாள்.

அவன் ஒரு வினாடி யோசித்தவாறே அவளைப் பார்த்தான். கள்ளங்கபடமின்றி மனதில் தோன்றிய

எண்ணங்களை உடனுக்குடனே வெளிப்படுத்தும் அந்தக் கல்லூரி மாணவியின் கண்களில் "நாமிருவரும் நண்பர்களாக இருப்போமா?" என்று வரவேற்கும் பாவனை கலந்திருந்தது.

அவன் எப்போதும் போல் தன் பெயரையும், முகவரியையும் சொல்லி விட்டு அவளைப் பற்றிய விவரங்களையும் தெரிந்துகொண்டான். அறிமுகத்தை வளர்த்துக் கொள்ளும் எண்ணத்துடன் 'மறுபடியும் எப்போ சந்திக்கலாம்?' என்று கேட்க நினைத்து ஓரடி முன் வைத்து அவளை நெருங்கினான். சட்டென்று முதல் நாள் இரவு மனைவியுடன் நெருக்கமாக இருந்தது நினைவுக்கு வந்தது. அவனுக்குள் ஏதோ சங்கடம். அதற்கு சரியான காரணம் இல்லை.

ஓரடி பின்னால் வைத்து "உங்களுக்கு இந்த ஏரியாவில் இருக்கும் ரம்யா என்ற பெண்ணைத் தெரியுமா?" என்று கேட்டான்.

வேறு ஏதோ கேட்பான் என்று எண்ணியிருந்தவள் இந்தக் கேள்விக்கு வியப்படைந்து "ரம்யாவா? யாருமே தெரியாதே?" என்றாள்.

"அவங்க வீட்டில் டொயோட்டா கார் இருக்கும்."

"அடுத்த தெருவில்...ஆமாம் ஒரு பெண் இருக்கிறாள். டொயோட்டாவில் போகும் போது பார்த்திருக்கிறேன் அவளை."

ஜேம்ஸுக்கு நினைவு வந்தது. அந்த வீட்டில் தான் அவன் நிறைய கார்கள் நிற்பதையும், மக்கள் கூட்டமாக இருந்ததையும் பார்த்திருக்கிறான்.

அவன் வெளியே போக அடியெடுத்து வைப்பதைப் பார்த்துவிட்டு அவள் தயங்கிக் கொண்டே கேட்டாள். "மறுபடியும் சந்திப்போமா?"

ஒரு காலத்தில் அவனே பெண்களிடம் கேட்கும் கேள்வி அது...ஒரு வாரத்திற்கு முன்னால் வரையிலும். இப்பொழுதோ கல்யாணம் என்ற பெயரில் மனைவி வாழ்க்கையை புதிய கோணத்தில் அறிமுகப்படுத்தி யிருக்கிறாள். அதனை காதல் என்று ஒப்புக் கொள்ள அவன் சுபாவம் இடந் தரவில்லை. ஆனால் பழைய வழியில் போகவிடாமல் ஏதோ தடுத்துக் கொண்டிருந்தது.

வெறுமே சிரித்துவிட்டு மோட்டார் சைக்கிளை நோக்கி ஓட்டமெடுத்தான் ஜேம்ஸ். தாம் நம்பிய கொள்கையை மனபூர்வமாக கடைபிடிப்பவர்கள் இவ்வுலகில் ரொம்ப குறைவாக இருப்பார்கள். உலகமானது இவர்களை சரியாக புரிந்துகொள்ளாமல் கெட்டவர்கள் என்று முத்திரையைப் பதித்து விடுகிறது.

☆ ☆ ☆

டெஸ்ட் டெஸ்க் ரூம்.

பதினெட்டு அடி உயரமுள்ள பானெர்கள் அந்த அறையில் நிறுவப்பட்டு இருந்தன. நான்கு ஏர்கண்டிஷன் இயந்திரங்கள் அந்த அறையை குளிர்ச்சியாக வைத்திருந்தன.

நாலைந்து இளைஞர்கள் போனுக்கருகில் அமர்ந்து கொண்டு இடைவிடாமல் வந்து கொண்டிருக்கும் புகார்களை குறித்துக் கொண்டே இருந்தார்கள்.

சுலோசனா தன்னை இஞ்ஜினியரிடம் கொண்டு தனக்குத் தேவையான புத்தகத்தைப் பற்றி கேட்டாள். யாருமே கேட்காத ஒரு புத்தகத்தை ஆபரேட்டர் ஒருத்தர் கேட்டது அவருக்கு வியப்பை அளித்தது.

"அந்த மாதிரி ரிஜிஸ்டர்களை சமீபத்தில்தான் எழுத ஆரம்பித்து இருக்கிறோம். அதுவும் நான் வந்த பிறகு" என்றார் அந்த இஞ்ஜினியர் பெருமையுடன்.

அவள் இதயம் வேகமாக துடிக்கத் தொடங்கியது.

“எனக்கு ஒரு முறை அந்த ரிஜிஸ்டரை தருகிறீர்களா? பார்த்து விட்டுத் தருகிறேன்.”

அது ஒன்றும் சீக்ரெட் புத்தகம் இல்லை. அதோடு கேட்பவளும் தம் நிறுவனத்தில் வேலை பார்க்கும் பெண்தான். அதனால் அவர் மேஜை டிராயரில் இருந்த அப்புத்தகத்தை எடுத்துக் கொடுத்து விட்டு “சாதாரணமாக எல்லா எக்ஸ்சேஞ்சுகளிலும் இந்தப் புத்தகத்தை வைத்திருக்க மாட்டாங்க. இதன் முக்கியத்துவம் ரொம்பப் பேருக்குத் தெரியாது. ஒரு லொகலிடியில்....” என்று மேலும் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார்.

அவள் எதையும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. நடுங்கும் விரல்களால் பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருந்தாள். இன்னும் அந்த ரிஜிஸ்டர் முழுவதுமாக எழுதி முடிக்கப்படவில்லை. சில நாட்களுக்கு முன்புதான் எழுதத் தொடங்கியிருப்பார்கள் போலும். சில வட்டாரங்கள் இல்லை. தனக்குத் தேவையான ஏரியா இருக்கிறதோ இல்லையோ என்ற பதட்டத்தில் ஒவ்வொன்றாக பார்வையிட்டுக் கொண்டிருந்தாள். சந்தோஷ் நகர்... சமிர்புரா...சங்கரன் பேட்டை. அடுத்ததாக தென்பட்டது...

சர்வோதயா காலனி.

# 23

பெருத்த ஓசையுடன் இறங்கிய விமானம் சிறிய குலுக்கலுடன் நின்றது. அரவித் கோஷ் மகிழ்ச்சியோடு வாட்சைப் பார்த்துக் கொண்டான். ஐந்தடிக்க பன்னிரண்டு நிமிடங்கள் பாக்கியிருந்தன. பெருமையுடன் சிரித்துக் கொண்டே ஏர்ஹோஸ்டெஸைப் பார்த்து கண்ணடித்தான்.

"ஏதோ ஒரு நாள் எங்கள் எல்லோரையும் நீ கொன்று விடப் போகிறாய். உன் வேகத்திற்கு பெல்லி லாண்டிங்க கூட ஈடு கொடுக்க முடியாது" என்றாள் அவள்.

"ஆமாம். என் வேகத்திற்கு பெல்லியை கூட லாண்ட் ஆக விட மாட்டேன் நான்" என்றான். அந்த வார்த்தைகளில் மறைந்திருந்த பொருளை உணர்ந்து அவள் முறுவலித்தாள்.

சரியாக அதே நேரத்தில் ரேவந்த் "அரைவல்" என்று எழுதியிருந்த இடத்தை நோக்கி ஓடிக் கொண்டிருந்தான். விமானத்தின் கதவு திறந்து கொண்டதுமே வெளியேறிய முதல் பயணி அவன்தான்.

உள்ளே நுழைந்து கொண்டிருந்த போதே மைக்கில் அறிவிப்பு கேட்டது "மிஸ்டர் ரேவந்த்! பாசெஞ்சர் ஃபரம் டில்லி ஈஸ் ரிக்வெஸ்டெட் அட் என்கொயரி கௌண்டர்."

அவன் அதற்காகவே அப்படி ஓடிவந்தவனைப் போல் அதே வேகத்தில் என்கொயரி கௌண்டரை நோக்கி ஓடினான். அவனுக்காக போன் வந்திருந்தது, சுலோசனா விடமிருந்து.

அவன் சட்டென்று ரிசீவரை வாங்கிக் கொண்டு குரல் நடுங்கக் கேட்டான். "என்ன சுலோசனா? கிடைத்ததா?"

"இல்லை."

ஒரு வாளி பச்சைத் தண்ணீரை அப்படியே தலையில் கவிழ்த்தாற்போல் இருந்தது ரேவந்திற்கு. ஏமாற்றமும், சோர்வும் ஆட்கொள்ள பெருமூச்செறிந்தான்.

"இல்லையா?" என்றான்.

"ஊஹூம்."

☆ ☆ ☆

அந்தத் தெருவின் முனைவரையிலும் கார்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. தானும் மோட்டார் சைக்கிளை ஒரு ஓரமாக நிறுத்திவிட்டு கார்களைத் தாண்டிக் கொண்டே நடந்து போனான். அவனுக்கு அந்த வீட்டில் என்ன விழா நடந்து கொண்டிருக்கிறதென்று தெரியவில்லை. அந்த வீடு தானோ இல்லையோ? அதுவும் சந்தேகம் தான். ஒருக்கால் அவளுடைய வீடாக இருந்தால்!

அவனுக்குக் குறும்புத்தனமான எண்ணம் கூட வந்தது. மாலை ஐந்து மணியோடு பந்தயத்தின் கெடுவும் முடிவடைகிறது. அதனால் விமானநிலையத்திலிருந்து நேராக ரேவந்தை இங்கேயே வரவழைக்கத்தான் இந்த ஏற்பாடுகளை செய்திருப்பாளோ அந்தப் பெண்?

ஆனால் தன் யோசனையை நினைத்து அவனுக்கே சிரிப்பு வந்தது.

☆ ☆ ☆

"அந்த ஏரியாவில் சுமார் நூறு போன்கள் இருக்கும். ஏறத்தாழ எல்லா போன்களையும் செக் செய்து விட்டான். அவற்றில் இல்லை." சுலோசனா சொன்னாள்.

"எப்படி முயற்சி செய்தீங்க?"

"போன் செய்து மறுமுனையில் இருப்பவர்கள் எடுத்ததுமே 'ரம்யா இருக்கிறாளா?' என்று கேட்கத் தொடங்கினேன். நான் அவளுடைய சினேகிதி என்பது போல் பேசினேன். எல்லா இடங்களிலும் இல்லை என்ற பதில்தான் வந்தது."

ரேவந்த் ஏமாற்றத்துடன் தலையைச் சிலிர்த்துக் கொண்டான். தான் போட்ட கணக்குகள், பைதாகரஸ் தியரி எல்லாமே இருட்டில் இல்லாத பூனையைத் தேடுவது போல் தானோ. அந்தப் பெண் சொன்னது நினைவுக்கு வந்தது. 'பகுதறிவுடன் யோசிப்பவன் எந்த சின்ன வழியையும் விட்டு வைக்க மாட்டான்.'

"அந்த ஏரியாவில் எல்லா நம்பர்களையும் முயற்சி செய்தீங்களா?"

"செய்தேன். ஏன் கேட்கறீங்க?"

"அதில் ஒன்று கூட அவுட் ஆஃப் ஆர்டர் ஆனது இல்லையா?"

சுலோசனா நாக்கைக் கடித்துக்கொண்டு "இருந்தன" என்றாள்.

"அவை என்ன?"

சுலோசனா தனக்கு முன்னால் இருந்த காகிதத்தைப் பார்த்து விட்டு மூன்று நம்பர்களைச் சொன்னாள்.

"நம்பர்கள் தேவையில்லை. அவை யாருடையவை? அவர்களுடைய முகவரியைச் சொல்லுங்க."

சுலோசனா ரிஜிஸ்டரை புரட்டிப் பார்க்கத் தொடங்கினாள்.

அதற்குள் ரேவந்த் யோசித்துக்கொண்டு இருந்தான். சுலோசனா சொன்ன மூன்று நம்பர்களுமே ஒன்று என்ற

எண்ணில் தொடங்குபவை. ஆனால் நிலாப்பெண் விதவிதமாக சொன்ன கணக்குப்படி இறுதி மூன்று எண்களும் 046 ஆக இருக்க வேண்டும். இந்த மூன்றிலும் அது இல்லையே.

அதற்குள் சுலோசனா சொன்னாள். முதல் நம்பர் எலக்டிரிக் சப் ஸ்டேஷனைச் சேர்ந்தது.

"குட். இரண்டாவது?"

"டாக்டர் பராஞ்சபே."

இதயம் வேகமாக துடிக்க "மூன்றாவது?" என்று கேட்டான்.

"பகவான்தாஸ். புரொப்ரைட்டர் ஆஃப் ரம்யா இண்டஸ்ட்ரிஸ்" அவள் மேலும் சொல்லிக் கொண்டிருந்தாள்.

ரேவந்த் மகிழ்ச்சியுடன் "கிடைத்து விட்டது" என்று கத்திய கத்தலுக்கு பயணிகள் எல்லோரும் சட்டென்று அவன் பக்கம் திரும்பிப் பார்த்தார்கள். அவன் எதையும் பொருட்படுத்தவில்லை. மறுமுனையில் சுலோசனா "கங்கிராஜுலேஷன்ஸ்" என்று சொல்லிக் கொண்டிருந்தாள். அவளுக்குத் தெரியும் இவ்வளவு நாளாக ரேவந்த் பட்ட பாடு.

கையிலிருந்து ரிசீவர் நழுவிவிடாமல் அழுத்தமாக பிடித்துக் கொண்டான் ரேவந்த். எப்படியோ தன்னை சமாளித்துக் கொண்டு "அந்த நம்பர் என்ன?" என்று கேட்டான்.

"13733"

"I ATE NOTHING FOR SIX மணிகள்" என்றான் சிரித்துக் கொண்டே.

டென்ஸிங் இமயமலையை ஏறி வெற்றி அடைந்தபோது கூட அத்தனை சந்தோஷப்பட்டு இருக்க மாட்டான். மனதில் போட்ட கணக்குகள்...டிரங்கால்கள்...விமானப் பயணத்தின் போது அடைந்த பதட்டம் ...எல்லாமே அந்த நிமிடம் மறந்து விட்டான். சுலோசனாவுக்கு நன்றி சொல்லி விட்டு போனை வைத்தான். பிரீப் கேஸை பிடித்துக் கொண்டு வெளியே வந்தான். கண்ணாடிக் கதவைத் தாண்டிக் கொண்டிருந்த போது அவனுக்கு முன்னால் ஒரு கார் வந்து நின்றது. ரேவந்த் அதைப் பார்த்து அப்படியே நின்று விட்டான்.

டொயோட்டா!

தன்னை ஏற்றிக் கொண்டு போன அதே கார். அதே தான். அதிலிருந்து ஆஜானுபாகுவாக இருந்த மனிதர் இறங்கினார். ஃபுல் சூட் அணிந்திருந்தார். ரேவந்திற்கு அவர் யார் என்று தெரியும். ஒரிரு மீட்டிங்குகளில் பார்த்திருக்கிறான்.

பகவான்தாஸ்!

☆ ☆ ☆

**ஜே**ம்ஸ் கேட்டைத் தாண்டி உள்ளே நுழையும் போது மேலே தொங்கிய போர்டை பார்த்தான். "ரம்யா இண்டஸ்ட்ரீஸ்" என்று இருந்தது. அவன் இதழ்களில் குறுநகை படர்ந்தது.

இன்னும் கார்கள் வந்துகொண்டே இருந்தன. தொலைவில் போர்டிகோ தென்பட்டது. அங்கு நிறைய ஜனங்கள் கூடியிருந்தார்கள். அருகில் சென்றவன் அங்கே தென்பட்ட காட்சியைக் கண்டு சிலையாக நின்றுவிட்டான்.

☆ ☆ ☆

"**உ**ங்களுக்கு எல்லா விஷயமும் தெரியும்னு நினைக்கிறேன். என் பெயர் ரேவந்த்."

"தெரியும்." கம்பீரமாகச் சொன்னார். "என் மகள் எல்லாம் சொல்லியிருக்கிறாள்."

இருவரும் காரில் ஏறும்போது "ஒரு நிமிஷம்" என்றான் ரேவந்த். போர்டிங் ஸ்லிப்பின் பின்னால் நிலாப்பெண், போன் நம்பர் 13733. கேராஃப் பகவான்தாஸ் என்று முழுவிலாசத்தையும் எழுதினான். தலையை உயர்த்தி "உங்க வாட்சில் மணி என்ன?" என்று கேட்டான்.

"4.58 பி.எம்."

"அந்த நேரத்தை இங்கே எழுதுகிறேன். கெடு முடிய இரண்டு நிமிடம் இருக்கும் போதே உங்க மகளின் போன் நம்பரைக் கண்டுபிடித்து விட்டதால் பந்தயத்தில் வெற்றி அடைந்து விட்டேன். வீட்டுக்குப் போனதும் நீங்கள்தான் எனக்கு சாட்சியம் சொல்லவேண்டும்" என்று வெற்றிப் பெருமிதத்துடன் சிரித்தான்.

அவர் எதுவும் சொல்லவில்லை. இருவரும் காரில் உட்கார்ந்ததும் கார் புறப்பட்டது.

வானத்தில் மேகங்கள் சூழ்ந்திருந்தன. கொக்குகள் கூட்டம் கூட்டமாக தெற்கு திசையில் பறந்து கொண்டிருந்தன. வரப் போகும் புயலுக்கு அறிகுறியாக நகரம் இப்பொழுதே அமைதியில் ஆழ்ந்து விட்டிருந்தது. குளிர்ந்த காற்று விர்ரென்று வந்து காருக்குள் மோதியது.

ரேவந்த் தலையைத் திருப்பி பகவான்தாஸ் பக்கம் பார்த்தான். நெற்றியின் மீது கையை வைத்தபடி சீட்டிற்குப் பின்னால் சாய்ந்து கண்களை மூடியிருந்தார்.

மிகவும் களைத்துப் போய், எதையோ இழந்து விட்டாற் போல் தென்பட்ட அவரைப் பார்க்கும் போது ரேவந்திற்கு சந்தேகம் வந்தது, மகள் தன்னுடன் நட்பு ஏற்படுத்திக் கொண்டதை இவர் விரும்பவில்லையோ என்று.

பந்தயம் கெடுமுடிவடையும் நேரத்தில் ஏர்போர்ட்டுக்கு காரை அனுப்பியிருக்கிறாள் என்றால் தந்தையிடம் தன்னைப்

பற்றிய எல்லா விவரங்களையும் நிச்சயமாக சொல்லி யிருப்பாள். தான் தோற்றுவிட்டிருப்பேன் என்று எண்ணி காரை அனுப்பியிருக்கிறாள். உண்மைதான். ஆனால் கடைசி நிமிடத்தில் தான் ஜெயித்து விட்டதை அறிய நேர்ந்தால்...

அவளுக்கு ஏமாற்றமாக இருக்குமோ என்னவோ. மகிழ்ச்சியும் அடையலாம். யார் ஜெயித்தாலும் வெற்றி இருவருக்கும் சொந்தம் தானே.

ஏதோ இனிமையான நினைப்பு அவன் இதழ்களில் முறுவலை மலரவைத்தது. தனக்குத்தானே பேசிக் கொள்வதுபோல் "கடைசி நிமிடத்தில் நான் ஜெயிப்பேன் என்று யாரும் நினைக்கவில்லை இல்லையா?" என்றான். அந்த வார்த்தைகளுக்கு அவர் தியானத்திலிருந்து மீண்டவர் போல் கண்களைத் திறந்தார்.

"நீ வெற்றி பெறுவாய் என்று அவளுக்குத் தெரியும். மனிதர்களை எடை போடுவதில் அவளுடைய கணிப்பு என்றுமே தவறியதில்லை" என்று சொல்லிவிட்டு டிரைவர் பக்கம் திரும்பி, "சீக்கிரமாக போப்பா" என்றார். கார் வேகமாக போகத் தொடங்கியது.

விமான நிலையத்திலிருந்து சர்வோதயா காலனி ரொம்ப தொலைவில் இருந்தது. அவர் பேசும்போது குரல் கம்மியிருந்ததை அவன் கவனிக்கவில்லை.

ரேவந்திற்கு அவரிடம் நிறைய கேட்க வேண்டும் போல் இருந்தது. ஆனால் தன்னுடைய ஆர்வத்தைப் பார்த்து அவர் ஏதாவது நினைத்துக் கொள்வாரோ என்று தயங்கினான். இத்தனை நாளும் தன்னை அலைக்கழித்து ஆட்டம் காட்டிய அந்தக் குறும்பு பெண்ணை இன்னும் சற்று நேரத்தில் பார்க்கப் போகிறோம் என்ற எண்ணம் அவன் மனதை வானில் உலா வரச் செய்து கொண்டிருந்தது.

அவனுடைய எண்ணங்களை துண்டிப்பது போல் "உனக்காக இதைக் கொடுத்தாள்" என்று ஒரு கவர் கொடுத்தார் அவர். ரேவந்த் வியப்புடன் அதைப் பெற்றுக்

கொண்டான். ரொம்ப நீண்ட கடிதம் அது. கவரைப் பிரித்து படிக்கத் தொடங்கினான்.

"அன்புள்ள ரேவந்த்,

இது நான் உங்களுக்கு எழுதுவதாக சொன்ன நான்காவதும் கடைசியும் ஆன கடிதம். பந்தய கெடு முடிவடைவதற்குள் உங்களுக்கு சேரவேண்டும் என்று அப்பாவிடம் அனுப்புகிறேன். இன்று பதிமூன்றாம் தேதி. மாலை ஐந்து மணிக்குள் என்னுடைய போன் நம்பரைக் கண்டுபிடித்து விட்டீர்களா? ஒருக்கால் கண்டு பிடித்திருந்தால் என்னுடைய பாராட்டுகள். இல்லாவிட்டால் முன்பே சொன்னது போல் வெவ் வெவ் வே...

எது எப்படி இருந்தாலும் உங்களுக்கு நல்வரவு. தன் பொன் கிரணங்களால் பூமியை ஒளியில் ஆழ்த்துவதற்காக வெளிவரும் சூரியனைப் போல் என் வாழ்க்கையில் வரவிருக்கும் தங்கள் வருகைக்காக மௌனமாக காத்திருக்கிறேன். சீக்கிரமாக வந்து விடுங்கள். பச்சை வயல்களில் சந்தியா வெளிச்சம் வந்து பரவுவதற்குள், பறவைகள் தம் கூட்டிற்கு போய் முடங்குவதற்குள், சிவந்த கதிரவன் மேற்கு மலைக்கு பின்னால் போய் மறைவதற்குள் அமிர்த கலசத்தில் வெண்மதியின் தண்ணிலவை ஏந்திக் கொண்டு தங்களின் வருகைக்காக அல்லி மலரைப் போல் காத்திருப்பேன்.

காலையில் மலர்ந்து மாலையில் வாடிப்போகும் பூவைப் போல் கால வெள்ளத்தில் யுகங்களே அடித்துச் செல்லப் படும் போது மனிதவாழ்க்கை எந்த மூலைக்கு?

கவிஞர் ரவீந்திரநாத் டாகூர் சொன்னது போல்

"கால தேவன் என் கதவைத் தட்டும் போது
நான் என் வாழ்க்கையை ஒரு கலசமாக்கி
அவனுக்கு முன்னால் எடுத்து வைப்பேன்
வெறும் கையுடன் ஒருநாளும்
அவனை திருப்பியனுப்ப மாட்டேன்."

பகல் கழிந்து, பறவைகள் ஒடுங்கி விடும் நேரம், காற்றும் அசையாத போது இருளையே போர்வையாக்கி என்மீது போர்த்திவிடு. இந்த வாழ்க்கையில் உன்னைச் சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்காவிட்டாலும் கண்ணால் காண முடியாமல் போய் விட்டேனே என்ற ஏக்கத்தை என்னிடமிருந்து பறித்து விடாதே. தெய்வமே! நான் போக வேண்டிய தருணம் வந்து விட்டது. உங்கள் அனைவரையும் வணங்கி விடைபெற்றுக் கொள்கிறேன்.

படித்துக் கொண்டிருந்த ரேவந்திற்கு, ஏதோ சந்தேகம் ஏற்பட்டது. அதற்குள் பக்கத்திலிருந்து விசும்பல் சத்தம் கேட்டவே சட்டென்று திரும்பிப் பார்த்தான். அதுவரை உறுதியாக உட்கார்ந்திருந்த பகவான்தாஸ் கைக்குட்டையை வாயில் அடைத்துக் கொண்டு துக்கத்தை கட்டுப்படுத்த முயன்று கொண்டிருப்பது தென்பட்டது.

அவன் தன்னைப் பார்த்ததை உணர்ந்த அவர் கம்மி விட்ட குரலில் "நீ வரும் வரையில் பிணத்தை எடுக்கக் கூடாது என்பது அவளுடைய கடைசி விருப்பம். அதனால் தான் நானே சுயமாக..." அதற்குமேல் அவரால் பேச முடியவில்லை. தொண்டை அடைத்துக் கொண்டுவிட்டது.

மௌனத் தவத்தில் ஆழ்ந்திருக்கும் இமயமலை திடீரென்று எரிமலையாக மாறி வெடித்துச் சிதறியது போல்...சகல சராசரமும் ஒடுங்கி இயற்கையே ஸ்தம்பித்துப் போய் விட்டாற்போல்... வானமே இடிந்து மண்ணோடு மண்ணாகிவிட்டாற்போல்...

அவன் எவ்வளவு நேரம்தான் அப்படி இருந்தானோ தெரியாது. காருக்கு வெளியே ஓடி மறைந்த எந்தக் காட்சியுமே கண்ணில் படவில்லை. மனமும் செயல்பாட்டை இழந்து விட்டது. துக்கம் மடையைத் திறந்து கொண்டு வெளியே வரப் போன பொழுது கையில் இருந்த கடிதமே ஆறுதல் சொல்வது போல் இருந்தது. கண்ணீர் திரையிட்டு எழுத்துக்களை மறைக்க ஒவ்வொரு எழுத்தாக கூட்டி படிக்கத் தொடங்கினான்.

"திடீரென்று ஒரு நாள் நள்ளிரவு நேரத்தில் வயிற்றில் தாங்க முடியாத வலி ஏற்பட்டது. சாதாரணமான காஸ்ட்ரிக்ஸ்தான் என்றார் டாக்டர். ஆக்ஸ்ஃபோர்ட்லிருந்து வந்த பிறகு அந்த வலி மேலும் அதிகரித்தது. யாரோ ஸ்பெஷலிஸ்டுக்கு சந்தேகம் வந்து மேற்கொண்டு பரிசோதனைகளை செய்ய வைத்த போது வெளிப்பட்ட நோய்க்கு டாக்டர்கள் எல்லோரும் சேர்ந்து சூட்டிய பெயர் "ஹெப்டிக் டைப் இடர்மிடெண்ட் பாஃபெரியா," மரணம் வந்து தழுவும் வரையில் மனிதனை மிகச் சாதாரணமாகவே விட்டு வைத்திருக்கும் நோய்."

மரணம் உறுதி என்று தெரிந்த பிறகு வாழ்வது ரொம்ப கஷ்டம் ரேவந்த். உயிரோடு இருக்கப் போகும் ஓரிரண்டு மாதங்களையும் சந்தோஷமாக சிரித்துக் கொண்டு கழிக்க வேண்டும் என்று விரும்பினேன். என் மரணத்தைப் பற்றித் தெரிந்த ஒரே நபர் என் தந்தை ஒருவர் தான். அவர் எனக்கு தந்தை மட்டுமே இல்லை. நண்பன், குரு எல்லாமே அவர்தான். இந்த ஒரு மாத காலமும் எனக்கு நானே ஏதாவது வேலையை ஏற்படுத்திக் கொள்வதற்காகவும், சாவைப் பற்றிய எண்ணங்களிலிருந்து ஆறுதல் பெறுவதற் காகவும் எனக்கு ஒரு நட்பு தேவைப்பட்டது. அந்த சமயத்தில் தான் பேப்பரில் பார்த்தேன். இந்தியாவின் ஒரே கிராண்ட் மாஸ்டரான நீங்கள் தான் எனக்கு சரியான ஜோடி என்று தோன்றியது. நான் செய்வது தவறு என்றும், உங்களுக்கு வீண் ஆர்வத்தை ஏற்படுத்துகிறேன் என்றும் எனக்குத் தெரியும் ரேவந்த். ஆனால் என்னைச் சுற்றி வேலையை ஏற்படுத்திக் கொள்வதற்காக நான் தொடங்கிய இந்த சதுரங்க ஆட்டத்தில் என்னையும் அறியாமல் காதலில் மூழ்கி விட்டேன்.

வேண்டுமென்றே புத்திசாலித்தனத்தை வெளிப் படுத்தாமல் அப்பாவியைப் போல் போனில் நீங்க கேள்விகளை கேட்கும் போது உங்கள் மீது காதல் நாளுக்கு நாள் அதிகமாயிற்று. எந்த விஞ்ஞானியாவது என்னுடைய இந்த நோய்க்கு மருந்து கண்டுபிடித்தால் எவ்வளவு நன்றாக

இருக்கும் என்று நினைக்காத நாளே இல்லை. என் விருப்பத்தை ஏளனம் செய்வது போல் வலி மேலும் அதிகரிக்கத் தொடங்கியது. "நான் நெருங்கிக் கொண்டு இருக்கிறேன்" என்று கட்டியம் கூறுவது போல் மரண தேவதை இரத்தமாய் என் வாயிலிருந்து அவ்வப்போது வெளியேறி எச்சரிக்கத் தொடங்கியது.

வெளியில் மட்டும் எல்லோருக்கும் குறும்பு ரம்யாதான். இந்த குறும்புக்காரி இதற்கே பயந்து போய் விடுவாளா என்ன? மரண தேவதையிடமே நேரில் சொல்லி விட்டேன். "மரண தேவதையே! உனக்காக நான் காத்திருக்கப் போவதில்லை. நானே உன்னை வரவேற்க தயாராக இருக்கிறேன். அப்புறம் என்னை எப்படி வேதனைப்படுத்த முடியும் உன்னால்?" என்று.

இந்த நோய்க்கும், தூக்க மருந்துக்கும் ஒத்துப் போகாது. அதான் ஒரே ஒரு மாத்திரை இந்தக் கடிதத்திற்குப் பக்கத்திலேயே.

இன்னும் கொஞ்ச நாள் வாழ்க்கையுடன் போராட வேண்டுமென்று தான் நினைத்தேன் ரேவந்த்! ஆனால் ரொம்பவும் களைத்துப் போய் விட்டேன். வாழ்க்கை யிடமிருந்து விடைபெற்றுக் கொள்ளும் முன்பு ஒரே ஒரு நாளாவது உங்களோடு கழிக்க வேண்டுமென்று விரும்பினேன். குறைந்த பட்சம் என் நெற்றியில் ஒரு முத்தமாவது பதிக்க விடாமல் என் உயிர் தூய்மையாக பிரியப் போகிறது.

" How Delicious is the Winning of a Kiss at Loves Beginning."

என்று மட்டும் டைரியில் எழுதிக் கொண்டேன்.

எது எப்படியிருந்தாலும் காலமானது என்னை ஒரு நினைவாகவேனும் உங்கள் மனதில் தங்க வைக்க வேண்டுமென்று விரும்புகிறேன். என் குறும்புத்தனத்தால் உங்கள் ஒரு மாத காலத்தை வீணாக்கியதோடு

வேதனையைத் தந்து விட்டேனோ? நட்பு மூலம் துன்பத்திலிருந்து ஆறுதலை பெற்றேன். எத்தனை கனவுகளை கண்டிருப்பேன்? எதிர்காலத்தைப் பற்றி எத்தனை விதமாக ஊகித்திருப்பேன்? ஆனால் புயலில் சிக்குண்ட இந்த ஓட்டை படகுடன் வாழ்க்கை கடலில் எப்படி பயணம் செய்ய முடியும்? என் இந்த இருண்ட வாழ்க்கையில் கடைசி தருணத்தில் துணையாக இருந்ததற்கு உங்களுக்கு நன்றி சொல்லுவதா இல்லை ஆசைகளை வளர்த்துவிட்டு கைக்கு எட்டாமல் போவதற்கு மன்னிப்பு கேட்பதா?

ஆனாலும் நண்பர்களுக்கு இடையில் மன்னிப்பு என்ற பேச்சுக்கே இடம் இல்லை. நட்பு என்றதுமே எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது. இளவரசி ஒருத்தி சுயம்வரத்திற்காக வந்த அரசகுமாரர்களுக்கு பல விதமான பரீட்சைகளை வைப்பாள். அதில் ஒரு அரசகுமாரன் மட்டும் ரொம்ப கஷ்டப்பட்டு புலிகளுடன் சண்டைபோட்டு, பிசாசுகளை விரட்டியடித்து வழியைக் கண்டு பிடித்து இளவரசியை சந்திப்பான். அப்போது அந்த இளவரசி சொல்வாள். “நான் தொடக்கத்திலிருந்தே உன்னைக் கவனித்துக் கொண்டுதான் இருந்தேன். வலதுப் பக்க கதவு வழியாக வர அடியெடுத்து வைத்தவன் ஏன் பின் வாங்கி விட்டாய்? அந்த வழியாக வந்திருந்தால் எந்த கஷ்டமும் இல்லாமல் நேராக என்னிடம் வந்திருப்பாயே?”

சரியாக அந்தக் கதையில் வருவதுபோல் நீங்க என் நம்பரைக் கண்டு பிடித்து மிக அண்மையில் வந்ததும் கூட மயிரிழையில் தவற விட்டீர்கள். 18046 என்று கண்டு பிடித்த நீங்கள் அந்த கேன்சர் ஆஸ்பத்திரியில் கொஞ்சம் விசாரித்திருந்தால் இந்த புதிர் எல்லாம் பனிபோல் அன்றே விலகியிருக்குமே.

‘I Ate Nothing For Six’ என்ற வாக்கியத்தை தேர்ந்தெடுக்க நான் ரொம்ப பாடுபட்டேன். ஒரு விதமாக பார்த்தால் ஆஸ்பத்திரியின் நம்பரும் வேறு விதமாக பார்த்தால் என் வீட்டு நம்பரும் வருவது போன்ற வாக்கிய

அமைப்பு அது. அது சரி. என் வீட்டு நம்பரை கண்டு பிடித்தீங்களா இல்லையா? 13733. ஐந்து மணியாகி விட்டதே. நீங்க ஜெயித்தீங்களா அல்லது தோற்று விட்டீர்களா என்று தெரிந்து கொள்வதற்கு நான் இருக்க மாட்டேன்.

தூக்க மாத்திரையின் பாதிப்பு என் கண்களை மேலும் அழுத்துகிறது. இதுதான் கடைசி இரவு என்று இந்த நோய்க்கும் தெரிந்து விட்டது போலும். எப்படியாவது என் முகத்திலிருந்து சிரிப்பை பறிக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டு விட்டது. குடலை முறுக்கிப் பிழிவது போன்று வலி. ஆனால் நான் அதற்குப் பணிந்து போக மாட்டேன். மரணம் என்றால் என்ன? இல்லாமல் போவதுதானே? நாம் மட்டும் இருக்க மாட்டோம். மற்றதெல்லாம் இருக்கும். காவேரி நதியின் சலசலப்பு, பனி படர்ந்த புல்வெளிகள், பாயும் நீர் வீழ்ச்சிகள், ஆலய வளாகத்தில் தன்னிச்சையாக வளரும் புல்பூண்டுகள், தென்றல் காற்று, மயிலின் நாட்டியம் எல்லாமே இருக்கும்.

உலகம் சுழன்று கொண்டே இருக்கும். பார்வையாளர் களுக்கு இடையில் நம் இருக்கை மட்டும் காலியாக இருக்கும். அவ்வளவுதானே.

இரவு ரொம்ப நேரமாகி விட்டது. எதிரே ராமர் படத்தில் ஏற்றப்பட்ட விளக்கு இன்னும் எரிந்து கொண்டு தான் இருக்கிறது. புத்தர் பொம்மைக்கு முன்னால் மாலையில் வைத்த பூக்கள் இன்னும் வாடவில்லை.

காலமானது விரல்களின் இடுக்கு வழியாக பாதரசம் போல் நழுவிக் கொண்டே போகிறது ரேவந்த்.

மரணத்திற்குப் பிறகு மனிதன் மேல் உலகத்திற்குப் போவான் என்ற சொல்வழக்கு உண்மையென்றால் அந்த சுவர்க்கத்தின் வாசலில் தூணைப் பிடித்துக் கொண்டு உங்கள் வருகைக்காக கனவு கண்டவாறு காத்திருப்பேன். காற்றில் தவழ்ந்து வரும் உங்கள் காலடியோசை எனக்குக் கேட்கிறது என் இதயமானது உங்களுக்காக வழியெல்லாம்

மலர் படுக்கையை விரித்துக் கொண்டே வரும். காலம் நம் இருவரையும் ஒன்று சேர்க்க வல்லது என்றால் நாம் என்றாவது ஒன்று சேருவோம்.

இரவு மேலும் நிசப்தமாக இருக்கிறது. இனி பயன் இல்லை. நோய் என்னைவென்று விடும் போல் இருக்கிறது. கண்ணீரை அடக்கிக் கொண்டே எழுத வேண்டியிருக்கிறது.

அதென்ன? உங்கள் கண்களில் கண்ணீர் முத்துக்களா? உங்களுக்காக நான் பாட்டு பாடட்டுமா.

"உன் கண்ணில் நீர் வழிந்தால் என் கன்னத்தில் உதிரம் வழியும் கண்ணா"

போய் வருகிறேன் நண்பனே. விடை பெற்றுக் கொள்கிறேன்.

ரம்யா.

☆ ☆ ☆

**க**ண்ணிலிருந்து கண்ணீர் வழியாமல் போனதேன்? ஏன் இன்னும் வானம் இரண்டாக பிளந்து போகவில்லை?

பின்னால் சாய்ந்து கொண்டு கண்களை இறுக மூடிக் கொண்டான் ரேவந்த். இதெல்லாம் உண்மை இல்லை என்றும் வெறும் கனவுதான் என்றும் யாராவது சொன்னால் எவ்வளவு நன்றாக இருக்கும்? கண் மூடி திறப்பதற்குள் இதெல்லாம் எப்படி நடந்து முடிந்து விட்டது? தன் வாழ்க்கையில் எத்தனையோ இனிமையாக அடி எடுத்து வைத்துவிட்டு எவ்வளவு வேதனையோடு பிரிந்து சென்று விட்டாள் அந்தப் பெண்!

நிலாப் பெண்ணே! என்னையே உனக்கு அர்பணித்துக் கொள்வதற்காக நான் வந்த தருணத்தில் என் துக்கத்தில் மறு பிறவி எடுப்பதற்காக இறந்து விட்டாயோ! இந்தப் பந்தயத்தில் நான் வெற்றி அடைந்து தோற்றுவிட்டேனா இல்லை தோல்வி அடைந்து வெற்றி பெற்றேனா?

கார் வீட்டிற்கு முன்னால் வந்து நின்றது. அதற்காகவே காத்திருந்தது போல் அங்கிருந்த கும்பலில் சலசலப்பு ஏற்பட்டது. "இருட்டிக் கொண்டு வருகிறது. சீக்கிரமாக ஆகட்டும்." யாரோ சொல்லிக் கொண்டிருந்தார்கள். பகவான்தாஸ் துக்கத்தை தாளாதவராய் யாருடைய தோளிலேயோ சாய்ந்து கொண்டிருந்தார்.

தோளில் யாருடைய கையோ! பார்த்ததும் கண்களைத் திறந்தான் ரேவந்த்.

ஜேம்ஸ்!

இருவரும் பேசிக் கொள்ளவில்லை. மௌனமாக எண்ணங்களை, வேதனையை பகிர்ந்து கொண்டார்கள். மக்களுக்கு நடுவிலிருந்து உயரமாக அமைக்கப்பட்ட மேடையின் மீது கிடந்தாள் அவள். ரோஜா இதழ்களுக்கு நடுவே அவள் கை மட்டும் தென்பட்டது. ஊதுபத்திகளின் புகையினூடே அவள் முகம் தெளிவாகத் தெரியவில்லை. தாமரை இதழ் போன்ற கண்கள் கனவுலகில் சஞ்சரிப்பதற்காக ஓய்வு எடுத்துக் கொள்வது போல் மூடியிருந்தன.

எடுத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. ஒவ்வொருவராய் அருகில் சென்று இறுதி அஞ்சலி செலுத்திக் கொண்டிருந்தார்கள்.

"வா போகலாம்" என்றான் ஜேம்ஸ் அந்தப் பக்கமாக நகர்ந்து கொண்டே.

ரேவந்த் அசையாமல் "வேண்டாம்" என்றான்.

"ஏன்?" வியப்புடன் கேட்டான் ஜேம்ஸ்.

"ஒரு அற்புதமான கற்பனை சிற்பத்தை இத்தனை நாளாக மனதிலேயே செதுக்கிக் கொண்டிருந்தேன் நான். அந்த கற்பனை அப்படியே இருக்கட்டும் ஜேம்ஸ்."

"அவளைப் பார்த்தாலும் உனக்கு ஏமாற்றமாக இருக்காது ரேவந்த்."

"இல்லை. பார்த்தால் மேலும் வேதனை பெருகும். அவள் என் நினைவிலேயே நிலைத்திருக்கட்டும். ரம்யாவாகவே என் மனதில் இருந்துவிட்டு போகட்டும். முழு பெயர் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசை கூட எனக்கு இல்லை. சில சமயம் உண்மையை விட கற்பனையே உயர்வாக இருக்கும். என் நினைவுகளிலாவது அவள் உயிரோடு இருக்கட்டும்.

☆ ☆ ☆

**சூ**ரியன் கூட அந்தக் காட்சியைக் காண சகிக்காதவன் போல் அவசர அவசரமாக மேற்கில் மறைந்து கொண்டிருந்தான். பகவான்தாஸை தடுத்து நிறுத்துவது ரொம்ப கஷ்டமாக இருந்தது. மகள் மீது அவருக்கு இருந்த அன்பு அங்கிருந்த எல்லோருக்கும் தெரியும்.

யாரோடும் சேராமல் தொலைவில் தனியே உட்கார்ந்திருந்தான் ரேவந்த். ஜேம்ஸ் கூட அவனை பேச வைக்க முயற்சி செய்யவில்லை. கொள்ளி வைத்ததும் தீ நாக்குகள் மென்மையான அவ்வுடலை நிர்தாட்சண்யமாக எரித்து சாம்பலாக்கத் தொடங்கின. எல்லோரும் கலையத் தொடங்கினார்கள். ஜேம்ஸ் அவன் அருகில் வந்தான். "வா போகலாம்."

"ஊஹூம். என்னை சற்று நேரம் தனியாக இருக்க விடு ஜேம்ஸ். எனக்கு இன்னும் கொஞ்ச நேரம் இங்கேயே இருக்க வேண்டும் போல் தோன்றுகிறது."

ஜேம்ஸ் நண்பனின் தோளில் கையைப் பதித்து "வைராக்கியம் வேண்டாம் ரேவந்த். இங்கே எத்தனை நேரம் இருந்தாலும் வேதனை அதிகரிக்குமே தவிர குறையாது" என்றான்.

"நான் ஏதோ மயான வைராக்கியத்தில் இங்கேயே இருக்கணும்னு நினைப்பதாக எண்ணிவிடாதே. இந்த நிசப்தம் ஏனோ எனக்கு பிடித்திருக்கிறது. எனக்கு துக்கம்

கூட இல்லை ஜேம்ஸ். என்னுடைய இந்த உன்மத்த நிலையை கலைக்காதே. போய் வா."

ஜேம்ஸ் தயங்கிக் கொண்டே அந்த இடத்தை விட்டு அகன்றான்.

இருள் அமர்த்தியாக பரவிக்கொண்டிருந்தது. செந்நிற தீங்கொழுந்துகளுக்கிடையே புகை மேலே எழும்பிக் கொண்டிருந்தது. முழங்காலில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அந்த சிதையையே பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

காலமானது கடல் போன்று முடிவில்லாதது. அழகான முத்துச் சிப்பியைக் கரையில் கொண்டு வந்து சேர்க்குமோ என்று ஒவ்வொரு அலையையும் பார்ப்பதும், அது வேகமாக வந்து கரையில் அழகாக கட்டிவைத்த மணல் வீட்டை அழித்து விட்டுப் போவதும்...

கடவுளே! என் மணல் வீட்டை காப்பாற்று. இவ்வளவு புத்திசாலியாக இருந்த ஒரு பெண்ணை இத்தனை நிசப்தமாக எங்களிடமிருந்து பிரித்து அழைத்துப் போவதற்கு எப்படி உனக்கு மனம் வந்தது? இத்தனை கல்நெஞ்சுக்காரனாக எப்பொழுது மாறினாய்?

காற்றே! நீ பலமாக வீசாதே. அவளுடைய சாம்பலை யாவது கலைக்காமல் அப்படியே இருக்க விடு.

பூமியே! வேகமாக சுழலாதே. அந்த சாம்பல் பறந்து போய் எங்கே விழுமோ அங்கே ஒரு சின்னஞ்சிறு செடி முளைக்கும். அந்த மூங்கிலிலிருந்து உருவாக்கப்பட்ட தூரிகை ஒரு ஓவியன் கையை அலங்கரிக்கும். அழகான ஓவியம் உருவாக வழிவகுக்கும்.

"போயிட்டு வாப்பா. ரொம்ப இருட்டி விட்டது. நரிகள் உலா வரும் வேளையாகி விட்டது" என்றான் வெட்டியான்.

ரேவந்த் நிமிர்ந்து பார்த்தான். வெட்டியானுக்கு தொண்ணூறு வயதிருக்கும். கைத்தடியை ஊன்றிக் கொண்டு

நின்றிருந்தான். துக்கத்தையும், மகிழ்ச்சியையும் சரிசமமான கண்ணோட்டத்தில் பகிர்ந்துகொள்ள பழக்கப் பட்டிருந்த அக்கிழவனின் முகத்தில் சாவுகளையும் உறவினர்களின் அழுகையையும் கண்டிருந்த அனுபவம் வேதாந்தமாக மாற்றிவிட்டிருந்தது.

"எனக்கு இங்கிருந்து போகவே பிடிக்கவில்லை தாத்தா. அதோ பாரு. அவள் இன்னும் அங்கே படுத்துக் கொண்டிருப்பது போல் இல்லையா."

"பன்னிரண்டு நாட்களுக்கு ஆத்மா இங்கேயே சுற்றிக் கொண்டிருக்கும் தம்பி. பதிமூன்றாவது நாள் காக்கை களோடு சேர்ந்து பறந்து போய் சூனியத்தில் கலந்து விடும். நினைவுகள் மட்டும் நம்மோடு தங்கிவிடும்."

ரேவந்த் கண் இமைக்காமல் அவன் பக்கம் பார்த்தான். அஞ்ஞானம் தான் மனிதனுக்கு எவ்வளவு திருப்தியை அளிக்கிறது.

அது அஞ்ஞானம் தானா?

உண்மையிலேயே அவள் இறந்துவிட்டாளா?

இல்லையோ.

காதலில் உள்ள வேதனையே பனித்துளிகளாய் இமயமலை மீது படர்ந்து, மேகங்களின் மூலம் உருகி வழிந்து நதியாய் மாறி நீராவியாய் உலகம் முழுவதும் பரவும். அந்த நிலா வெளிச்சத்தில் ஒரு பெண் விடிவதற்கு முன்பே எழுந்து "மார்கழி திங்கள் மதி நிறைந்த நன்னாளில்" என்று பாடிக்கொண்டே வாசலில் கோலமிடுவாள். என்னுடனேயே இருப்பாள். என் வெற்றியில் மகிழ்ச்சியடைவாள். என் தோல்விக்கு பின்னால் நின்று கொண்டு உற்சாகத்தையும் தைரியத்தையும் அளிப்பாள். தனக்கு அவள் ஒரு இன்ஸ்பிரேஷன்.

தனக்காக கையை நீட்டிய தாத்தாவின் கையைப் பற்றிக் கொண்டு ரேவந்த் எழுந்துகொண்டான். இருவரும்

நடந்தார்கள் சிதையை விட்டு தொலைவாக...உலகத்தை நோக்கி.

சுடுகாட்டை விட்டு வெளியே வரும்போது அவன் நின்று பின்னால் திரும்பிப் பார்த்தான். செந்தீ மெள்ள மெள்ள அடங்கி எல்லாவற்றையும் தன்னுள் மறைத்துக் கொண்டு நீர் பூத்த நெருப்பாக.... உயிரோட்டத்துடன் இருந்தவளை எரித்துச் சாம்பலாக்கிவிட்டு.

அப்பொழுது வந்தது கண்ணீர் துளி அவன் கண்களிலிருந்து. வெளியே வரும்போது அவனிடம் சொன்னது

"அன்பான நண்பனே! இத்தனை நாளும் உன் இதயத்தில் ஆழமாக புதைந்திருந்தேன். உன் வேதனையை பகிர்ந்து கொண்டேன். இந்த நிமிடம் நீ படும் இந்த வேதனையை தாங்க முடியாமல் வெளியேறுகிறேன். என் இந்த பிரிவு உனக்குக் கொஞ்சமாவது ஆறுதலை தரும் என்றால் நண்பனே! எனக்கு அதை விட வேறு என்ன வேண்டும்? விடை பெறுகிறேன்."

------


மின்நூலாக்கம்
சுபாஷ் சண்முகா

# காதல் 'செக்'

## எண்டமூரி வீரேந்திரநாத்

தமிழில்: கௌரி கிருபானந்தன்



அல்லயன்ஸ்